# சுடர்

1967

## கல்கி மலர்




PN.A
13826

**தில்லித் தமிழ்ச் சங்கம்**

மலர் 16

40 காசு

Reliable News BALANCED VIEWS



*To report the news faithfully and fully and to publish only what is well-informed and trustworthy, has always been the policy of The Hindustan Times.*

**The Hindustan Times**

NEW DELHI

WITH THE BEST COMPLIMENTS FROM

*Manufacturers of*

CROWN (PURE ALUMINIUM ✤ THE CROWN ✤) BRAND

**Aluminium Wares & Anodised Articles**

For any specification, any quantity if it is on Aluminium,
You can RELY ON US

# JEEWANLAL (1929) LIMITED

Crown Aluminium House,

23, BRABOURNE ROAD, - CALCUTTA-I.

CALCUTTA ★ MADRAS ★ BOMBAY

RAJAMUNDRY ★ DELHI ★ ADEN

# THE MADRAS ALUMINIUM COMPANY LIMITED

The Biggest Basic Industry in Madras State
with the Technical Collaboration and
Finance Participation of

**Montecatini - Edison, Italy**

| | | |
|---|---|---|
| AUTHORISED CAPITAL | — | Rs. 10 Crores |
| ISSUED CAPITAL | — | Rs. 6 Crores |

★

13826

*Factory at:*

METTUR DAM : : SALEM DISTRICT

***Raw Material Bauxite Ore from the Mines owned by The Company At***

**SHEVAROY HILLS : : YERCAUD**

★

REGISTERED OFFICE:

**"JAYALAKSHMI"**

**Race Course, - COIMBATORE-18.**

★

*Managing Agents:*

**MESSRS SALCOE & COMPANY,**
**COIMBATORE.**



மிடுக்கான தோற்றத்துடன் பிரயாணத்திற்கு உதவும்

# பின்னியின் மார்ல்பரோ

'டெரினும்' பருத்தியும் கலந்த ஆடைகளில் சிறந்தது.

அடிக்கடி பிரயாணம் செய்பவர் மார்ல்பரோ அணிகிறார். அவை குளுமை, கசங்கா த்தன்மை, எப்போதும் புதுமைத்தோற்றம் கொண்டவை.

மார்ல்பரோ விலையில் சிக்கனமாகவும் பாது காப்பதற்கு எளிதாகவும் உள்ளது. பல அழகிய வண்ணங்களிலும், செக் டிசைன்களிலும் பின்னியின் புகழ் பெற்ற பக்ளின் 'ட்ரிப்-டிரை' முறையில் தயாரானவை.

காபர்டீன் மற்றும் புஷ்ஷர்ட்டிங் மோஸ்தர் களில் கிடைக்கின்றன.

மார்ல்பரோ—தோற்றத்தில் கவர்ச்சி அணிவதில் சுகம்

பக்கிங்ஹாம் & கர்னாடிக் கம்பெனி லிமிடெட், பின்னி & கம்பெனி லிமிடெட்,
மதராஸ் ஸ்தாபனத்தின் ஒரு கிளை

JWT-BY-3558

*With the Compliments of:*

# DALMIA CEMENT (BHARAT) LIMITED

DALMIAPURAM. TIRUCHIRAPALLI DISTT.

(MADRAS STATE)

*Manufacturers of:*

'ROCKFORT' Brand DALMIA Portland and Pozzolana Cement, DALMIA Refractories, DALMIA Sanitarywares, Salt Glazed Stoneware Pipes and R. C. C. Spun Pipes and Mine - Owners and Suppliers of High Grade Iron Ore for Export.

DALMIA ENTERPRISES

**H. O. 4. SCINDIA HOUSE.**

**NEW DELHI-1.**



PREVENT CHAPPING OF

PRETTY FACE!

LOVELY HANDS!!

★

*Use*

ALMOND BENZOIN

GLYCERINE HAND LOTION

★

# BLISS & COTTON

DISPENSING & FAMILY CHEMISTS,

12-E, CONNAUGHT PLACE. — NEW DELHI.

PHONE: 42170

# சுடர்

பிலவங்க ௵ | மலர் 16 | 1967

## பொருளடக்கம்

பக்கம்


நல் வாழ்த்துக்கள் ... 5
தமிழ் தாத்தாவும் கல்கியும்—கி. வா. ஜகந்நாதன் ... 12
ஸ்தாபனமாக விளங்கிய தனி மனிதர்—கி. ராஜேந்திரன் ... 17
நண்பர் கல்கி—பெ. நா. அப்புஸ்வாமி ... 32
மாணிக்கம்—ராஜாஜி ... 41
நான் கண்ட கல்கி—எஸ். எஸ். வாசன் ... 42
பத்திரிகை உலகப் பணி—முருகு. சுப்பிரமணியன் ... 45
கல்கி நினைவுகள்—பரதன் ... 49
மாலை பொழுதினிலே—'கல்கி' ... 60
கல்கியின் பாடல்கள்—சோமு ... 62
நானறிந்த கல்கி—நாரதர் ஸ்ரீநிவாச ராவ் ... 65
ரா. கி. என்னும் கல்கி—சாலை இளந்திரையன் ... 70
சிவகாமியின சபதம்—சாலினி இளந்திரையன் ... 81
நாவலாசிரியர் கல்கி—நா. பார்த்தசாரதி ... 94
தில்லி தமிழ்ச் சங்கம்—சுத்தானந்த பாரதியார் ... 97
'கல்கி'யுடன் ஒரு நாள்—தென்னவன் ... 102
பத்திரிகைகளின் சுதந்திரம்—வீ. செ. கந்தசாமி ... 109
பேராசிரியர் கல்கி—அழ. வள்ளியப்பா ... 116
இன்றும் நாளையும்—வீ. செ. கந்தசாமி ... 120
குதித்து வா—எஸ். ஸ்ரீநிவாஸன் ... 121
கல்கியின் நகைச் சுவை—கல்கி ... 122
எழுத்தாளர் நட்சத்திரம்—துமிலன் ... 125
தண்ணீர்—வண்ணை முத்து ... 127
கல்கி பேசுகிறுர்—கல்கி ... 129
இலக்கியச் சிறப்பு—டி. கே. சிதம்பரநாத முதலியார் ... 132
புலி ராஜா—கல்கி ... 133
சிறை வாசம்—ரா. கி. ... 145
மடுக்கரை நாடகம்—கி. ராமநாதன் ... 152
எத்தனை பிறவி எடுத்தாலும்—தூன் ... 154
என்னைக் கவர்ந்த கல்கி—கி. கஸ்தூரி ரங்கன் ... 161
ஐரூரத் ஹை—ஏ. வி. குப்புஸ்வாமி ... 163
? —பூர்ணம் விசுவநாதன் ... 166
உலா—எஸ். ரங்கஸ்வாமி ... 172
2-வது உலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்க—வே. கார்திகேயன் .. 177
தில்லித் தமிழர்களும், கோவில்களும்—டி. ஜி. அனந்தஸ்வாமி ... 181
கற்பக விநாயகர் பஞ்ச ரத்தினம்—காசி. நடேசன் ... 185
உத்தர சுவாமிகலைப் பதிகம்—துறைவன் ... 186

## PRESIDENT'S MESSAGE

The President is glad to learn from your letter of July 22, 1967, that the Delhi Tamil Sangam is bringing out a special issue of its magazine "Chudar" in memory of the late Shri R. Krishnamoorthi. He sends his best wishes for its success.

★

## PRIME MINISTER'S MESSAGE

The Prime Minister thanks you for your letter and wishes success to the annual number of the journal of your Sangam being brought out on Independence Day.

सत्यमेव जयते

VICE-PRESIDENT

INDIA

NEW DELHI

*July 28, 1967.*

Dear Sir.

I congratulate the Delhi Tamil Sangam on their proposed publication entitled "CHUDAR" dedicated to the sacred memory of late lamented Shri R. Krishnamoorthy—KALKI— whose is a household name in Tamilnad. 'Kalki' was the embodiment of erudition and patriotic fervour. The exemplary manner in which he enkindled the flame of national struggle for emancipation from foreign bondage through the medium of inspiring writings and evocative poetic compositions bears an eloquent testimony to the dictum : Pen is mightier than sword. His prolific works in Tamil have invariably strengthened the forces of emotional integration and national solidarity. One of the appropriate ways of paying homage to this eminent son of India will be to earnestly endeavour to imbibe 'Kalki's sterling qualities and to create a massive awareness about his thrilling writings.

I wish the Annual Number 'CHUDAR' every success.

Yours sincerely,

V. V. Giri

# சண்பகப் பூ

வி. சுப்பிரமணியம்

பருவ காலத்திற்கேற்ப இயற்கையிலே மாறுதல்கள் தோன்றுவதைக் காணலாம். இலையுதிர் காலமாக இருக்கும். மரங்களெல்லாம் மொட்டையாக பட்டுப்போய் உயிரே இல்லாதது போன்ற காட்சியளிக்கும். வசந்த காலம் வரும், எங்கிருந்தோ புத்தம் புதுத் தளிர்கள் தோன்றும். இலைகள் விரிந்து புது மணப்பெண் கோலத்துடன் மரங்கள் விளங்கி மனத்தைச் கவரும். புது மலர்கள்—புதிய காய்கள்—அவைகள் பழுத்து மனிதன் சுவைக்கும் கனிகள்—இது இயற்கையான விதி முறை.

மனித சமுதாயங்களும் இந்த இயற்கை விதிக்குட்பட்டவை என பல சரித்திர நிகழ்ச்சிகள் சான்று கூறும். ஒரு சமுதாயம் ஒரு காலத்தில் உலகத்திலேயே சிறப்புற்று விளங்குகிறது. பின்பு அதற்கு மங்குங் காலந் தோன்ற ஆரம்பிக்கிறது. சில சமுதாயங்கள் அப்படியே மங்கி மறைந்துவிடுகின்றன. வேறு சில சமுதாயங்களுக்குப் பருவ காலம் மாறுகின்றது. புதிய வசந்த காலம் ஆரம்பமாகிறது. உலகிலே அவை தலையெடுக்க ஆரம்பித்து மறுபடியும் உச்ச நிலைக்கு வருகின்றன. பாரத சமுதாயத்தின் பெருமை, மற்றச் சமுதாயங்கள் இவ்வாறு தேய்ந்து வளர்ந்து மறைந்து போய்க்கொண்டிருக்க, ஏற்றத்திலும், தாழ்விலும் மறையாது உயிர் பிடித்து பல்லாயிரக் கணக்கான வருடங்களாக இவ்வுலகில் நிலைத்து வந்திருக்கிறது. இச் சமுதாயத்திற்கு இலையுதிர்காலமாக ஏற்பட்டது—சென்ற நான்கைந்து நூற்றாண்டுகள அன்னியப் படையெடுப்புகளுக்கு ஆளாகி கடைசியாக பிரிட்டிஷ் ஆதிக்கத்தின்கீழ் வந்து அடிமை வாழ்வு வாழும் நிலை ஏற்பட்டது. அது அவ்வாறே நீடித்து விடுமா? இந்தியாவுக்கும் புதிய காலம் தோன்ற ஆரம்பித்தது. சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இந்த நூற்றாண்டின் முற்பகுதியிலும் தாழ்வுற்று வறுமை மிகுந்து நலிவுற்றிருந்த நாட்டை சீர்தூக்கிவிட பல வேறு துறைகளிலும் புதிய புதிய சக்திகள் தோன்ற ஆரம்பித்தன.

ஆத்மீகம், சமுதாய சீர்திருத்தம், அரசியல், பொருளாதாரம், கலை, இலக்கியம் ஆகிய ஒவ்வொரு துறைகளிலும் புதிய சக்திகளைத் தூண்டிவிட பல மகா புருஷர்கள் தோன்றினர்.

இந்த மறு மலர்ச்சியிலே இலக்கியப் பூங்காவிலே பூத்த ஒரு நறு மணப்பூ கல்கி எனக் கூறலாம். சிதைந்துபோய்—ஆங்கில மோகத்தில் மூழ்கிக் கிடந்த தமிழர்களாலேயே இழிவாகக் கருதப்பட்டு வந்த தமிழ்த்தாயை, மறுபடியும் அரியாசனத்தில் ஏற்ற பலப் பல கவிஞர்கள், அறிஞர்கள் தமிழ் நாட்டிலே தோன்றினர்கள். அந்தப் பரம்பரையில் தோன்றியவர் கல்கி.

கல்கியின் நூல்கள் நவீன இந்தியாவிற்கு வேண்டிய புதிய புதிய அறிவு நுட்பங்களையும் தமிழ் மூலமாகவே பெறமுடியும் என்பதை நிரூபிக்கின்ற முறையில் அமைந்திருக்கின்றன. எவ்வளவு சிக்கலான கருத்துகளையும் தமிழில் சொல்ல முடியும் என்பதை கல்கியின் கட்டுரைகள் விளக்கிக் காட்டின.

இலக்கியத்திற்குத் தனிப் பெருமை உண்டு—தன் வளர்ச்சியோடு மற்ற துறைகளுக்கும் ஆக்கம் அளிப்பது இலக்கியம். கல்கி அவர்கள் தன்னுடைய இலக்கியப் பணி மூலம் பல துறைகளிலும் புதிய சக்திகள் தோன்றி சமுதாயத்திற்கு புதிய ஆக்கம் தர உதவினர்.

டில்லி தமிழ்ச் சங்கத்தார் இவ்வருடச் சுடரை கல்கி நினைவு மலராகக் கொண்டுவர முடிவு செய்திருப்பதைப் பாராட்டி வரவேற்கிறேன். இதன்மூலம் கல்கி அவர்கள் செய்த தொண்டுக்கு நாம் நன்றி செலுத்துவதுடன்—தேசிய சக்திகள் பலம்பெற வழி ஏற்படுமென நம்புகிறேன்.

**DEPUTY MINISTER FOR HOME AFFAIRS**
புது தில்லி
ஜூலை 24, 1967.

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் 'சுடர்' இவ்வாண்டு அமரர் கல்கியின் நினைவு மலராக மலர்வதைக் கண்டு மகிழ்வடைகிறேன்.

கல்கி தமிழ் மறுமலர்ச்சியின் கர்த்தா. அவர் முயற்சியால் சிறு கதைகள், தொடர் கதைகள், கட்டுரைகள், எளிய, அழகான கம்பீரமான, நகைச் சுவை மிக்க நடையில் வெளிவரத் தொடங்கின. இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்தார்,

அமரர் கல்கியின் நினைவுச் சுடர் தில்லியிலிருந்து பார் முழுதும் தமிழ் ஒளி வீசிப் பிரகாசிக்கும் என நம்புகிறேன்.

C. N. அண்ணாதுரை
முதலமைச்சர்

கோட்டை
சென்னை-9
5—7—1967

தமிழ்ச் சங்கத்தின் "சுடர்" இதழ் இந்த ஆண்டு கல்கி மலராக வெளிவர இருப்பது அறிந்து மிக்க மகிழ்ச்சி. மலர் சிறந்த முறையில் வெளிவர என் நல் வாழ்த்துகள்.

அண்ணாதுரை.

# தில்லித் தமிழ்ச் சங்கம்

## (சத்தியமூர்த்தி நினைவு இலவச வாசகசாலை)

### ஓர் வேண்டுகோள்

தில்லி தமிழ்ச் சங்கம் 1946-இல் நிறுவப்பட்டது. தொடங்கிய நாளிலிருந்தே, சங்கம், தில்லியில் தமிழ்மணம் பரப்பி வருகிறது. தில்லிவாழ் மக்களும் தமிழர்களும் நெருங்கிப் பழகுவதில் தனிக்கவனம் செலுத்தி பணியாற்றி வருகிறது.

தில்லி நிர்வாகத்தினர் மனமுவந்து அளித்திருக்கும் ஓர் கட்டடத்தில் இது நாள் வரையில் சங்கம் பணியாற்றி வருகிறது. இந்தக் கட்டடத்தை அதிவிரைவில் இடித்துத் தள்ளத் தீர்மானித்திருப்பதால் வேறு இடம் தேட வேண்டியது அவசியம் உண்டு. சங்கத்தின் பணி விரிவடைந்து வருவதால் ஏற்ற முறையில் ஓர் இடம் வேண்டும் என்று சங்க நிர்வாகிகள் தீர்மானித்து இந்திய சர்க்காரை அணுகினார்கள். புது தில்லியிலுள்ள ராமகிருஷ்ணபுரத்தில் சங்கத்திற்காக அரை ஏகரா நிலப்பரப்பை, இந்திய சர்க்கார் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். இந்த இடத்தில் ஓர் அரங்கு, நூலகம், வகுப்பு அறைகள், கூட்டம் நடத்தும் அறைகள், நூலகம் இன்னோரன்னவை அடங்கிய ஓர் கட்டடத்தை நிர்மாணிக்க உத்தேசித்திருக்கிறோம். நிர்மாணப் பணிக்கு 6 லட்சம் ரூபாய்கள் தேவை, சங்கக் கட்டடப் பணிக்காக, சென்னை அரசாங்கம் ஒரு லட்சம் ரூபாய்களை கொடையாக வழங்கியிருக்கிறது, ஏறக்குறைய இதே போன்றதோர் தொகையை இந்திய அரசாங்கமும் வழங்கும் என்று எதிர்பார்க்கிறோம். எஞ்சிய தொகையை, தமிழன்பர்கள் மனமுவந்து அளிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

தாராளமாக நிதி வழங்க வேண்டுகிறோம். சங்கத்திற்கு அளிக்கும் நன்கொடைக்கு வருமான வரி விலக்கு உண்டு.

**கே. வி. வெங்கடாசலம்**
தலைவர்.

No. JE—3 (20) 62 / 4351

OFFICE OF THE COMMISSIONER OF
INCOME TAX, DELHI & RAJASTHAN

Dated, New Delhi, the 28th June, 1962
5th Asadha, 1814 (S).

To

The Hon. Secretary,
Delhi Tamil Sangam,
M. G. 1/3038, Parliament Street,
Connaught Circus, New Delhi.

Dear Sir,

Sub : EXEMPTION UNDER SECTION 11 & 88 OF THE INCOME TAX ACT, 1961, TO THE DELHI TAMIL SANGAM.

Donations made to 'The Delhi Tamil Sangam, New Delhi" will be exempt under Section 88 of the Income-Tax Act 1961 in the hands of donors subject to the limits and conditions prescribed in the said section.

Yours faithfully,
Sd. R. N. MUTTOO,
*Commissioner of Income Tax.*

PS. Original of this Certificate bears the seal of the Commissioner of Income Tax, Delhi.

# தமிழ்த் தாத்தாவும் கல்கியும்

கி. வா. ஜகந்நாதன்

அந்தக் காலத்தில் மயிலாப்பூர் பெ. நா. அப்புசாமி ஐயர் வீட்டில் வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமை ஒரு சிறு கூட்டம் கூடும். தமிழ் உலகத்தில் சிறந்த பெரியவர்களும், பத்திரிகைக்காரர்களும் கூடிப் பேசிக்கொண்டிருப்பார்கள். திட்டமாக இன்னது செய்யவேண்டும், இதைப்பற்றிப் பேசவேண்டும் என்ற வரையறையே கிடையாது. மனம் கலந்து பேசிக்கொண்டு பொழுது போக்குவார்கள். நல்ல சிற்றுண்டி கிடைக்கும். திரு. பெ. நா. அப்புசாமி ஐயர் அவர்களும் அவருடைய வாழ்க்கைத் துணைவியாரும் ஒவ்வொரு வாரமும் அலுக்காமல் சலிக்காமல் எங்களுக்குச் சிற்றுண்டிகள் தந்து மேலும் மேலும் வரும்படி வற்புறுத்துவார்கள். அந்தக் கூட்டத்திற்கு நான் சிலசமயங்களில் போவது உண்டு. அப்போதுதான் கலைமகளை ஆரம்பித்திருந்த காலம். டி. கே. சிதம்பரநாத முதலியார், எஸ். வையாபுரி பிள்ளை, கல்கி முதலிய பலர் அங்கே கூடுவார்கள். டி. கே. சி. கல்கியை முதன்முதலாகச் சந்தித்தது அங்கேதான். நானும் கல்கியை அந்தக் கூட்டத்தில்தான் முதலில் சந்தித்தேன். அவர் ஆனந்த விகடனில் கல்கி என்றும், 'ரா. கி.' என்றும் பெயரிட்டுக்கொண்டு கதை, கட்டுரைகள் எழுதுவார். அது மாதப் பத்திரிகையாக இருந்தகாலம், முதலில் திருச்செங்கோட்டில் இருந்தபடியே கட்டுரைகள் எழுதி வந்தார். பிறகு சென்னைக்கே வந்துவிட்டார்.

இலக்கியத்தைப்பற்றியும், தமிழ் நடை முதலிய அதனோடு சம்பந்தம் உள்ள விஷயங்களைப் பற்றியும் எல்லோரும் பேசுவார்கள். பெரும்பாலும் கம்பராமாயணத்தைப் பற்றி டி. கே. சி. யும், வையாபுரிப் பிள்ளையும் பேசுவது உண்டு. டி. கே. சி. யின் அற்புதமான கம்பராமாயணச் சொற்பொழிவுகளே அந்தச் சிறு கூட்டத்தில் தொடங்கியதுதான். அதன் பிறகே அவருடைய விரிவான பேச்சுக்களும், எழுத்துக்களும் வெளியாயின.

கல்கி எப்பொழுதும் வேடிக்கையாகப் பேசுவார். தமிழ் நடையைப் பற்றி ஒரு முறை பேச்சு வந்தது. பண்டிதர்களுடைய நடை,

பத்திரிகை எழுத்தாளர்களின் நடை ஆகியவற்றைப் பற்றி அவரவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். 'பேசுகிற மாதிரி எழுதினால்தான் எல்லோருக்கும் விளங்கும்' என்பது ஒரு கட்சி. கல்கிக்கு கொச்சை வார்த்தைகளைப் போட்டு எழுதுவது உடன்பாடு அல்ல. பண்டிதர்களைப் பற்றிப் பேச்சு வந்தபோது 'எழுதுகிறபடியே அவர்கள் பேசுகிறார்கள். அதில் என்ன தப்பு?' என்று சொல்லிச் சிரித்தார் கல்கி. "பேசுகிறதை அப்படியே எழுதுவது நியாயம் என்றால் எழுதுகிறபடியே பேசுவதும் நியாயம் தானே?" என்று அவர் தம்முடைய கருத்தைத் தெரிவித்தார்.

அந்தக் கூட்டத்தில் எனக்கும் கல்கிக்கும் ஏற்பட்ட பழக்கம் முதிர்ந்து வந்தது. ஆனந்த விகடனில் ஏதாவது எழுதவேண்டும் என்று சொல்வார். நானும் அவரிடமிருந்து கதைகளை வாங்கிக் கலைமகளில் வெளியிட்டது உண்டு. எழுத்தாளர்களை டாக்டர் ஐயர் அவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டுமென்பது என்னுடைய ஆசை. அநேகமாக எனக்குத் தெரிந்த நண்பர்களை எல்லாம் அவர்களிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தியிருக்கிறேன். கல்கியையும் அவர்களிடம் அழைத்துச்சென்று அறிமுகப்படுத்த வேண்டுமென்ற விருப்பம் உண்டாயிற்று. கல்கியிடமே என் விருப்பத்தைச் சொன்னேன். "எனக்கு அல்லவா அது லாபம்" என்று அவர் சொன்னார். ஒரு குறிப்பிட்ட நாள் பிற்பகலில் அவர் ஐயரவர்களைப் பார்க்க வந்தார். அவருடன் துமிலனும் வந்தார். இரண்டுபேரும் ஆனந்த விகடனில் இருந்தார்கள். ஐயரவர்களிடம் நெடுநேரம் இரண்டுபேரும் பேசிக்கொண்டிருந்தார்கள். ஐயரவர்கள் பல பழங்கதைகளைச் சொன்னார்கள். தமக்குக் கல்லூரியில் பல ஆண்டுகள் கிடைத்த சம்பளம் 50 என்று அவர்கள் சொன்னபோது "ஒன்றும் இல்லாத எனக்கே இப்போது 100 ரூபாய் தருகிறார்களே, உங்களுக்கு அதுதானா கிடைத்தது?' என்று கேட்டார் கல்கி. ஐயரவர்கள் 'நான் என் வாழ்நாளில் அரசாங்கக் கல்லூரியிலும் சரி, மீனாட்சி கல்லூரித் தலைவனாக இருந்தபோதும் சரி, அதிகமாக வாங்கிய சம்பளம் ரூபாய் நூறுதான்" என்று சொன்னபோது அவர்கள் மிகவும் ஆச்சரியப்பட்டார்கள்.

ஐயரவர்கள் பேசும்போது ஹாஸ்யச் சுவைபடப் பேசுவது வழக்கம். உலக அநுபவங்களையும் அறியாமையினால் பலர் செய்யும் குற்றங்களையும் எடுத்துச் சொன்னார்கள். கல்கியும் வயிறு குலுங்கச் சிரித்தார். அவர்களுடைய பேச்சில் வந்த சில விஷயங்களை கல்கியும் துமிலனும் பின்னால் தங்களுடைய

எழுத்தில் பயன்படுத்திக் கொண்டதாகக்கூட ஞாபகம். ஐயரவர்களிடம் கல்கி விடைபெற்றுக் கொண்டு வந்தார். என்னைப் பார்த்து, "ஐயரவர்கள் பெரிய தமாஷ்வாலாவாக இருக்கிறரே!" என்று சொன்னர். தமாஷ்வாலா என்ற பெயரில் நான் ஹாஸ்யக் கட்டுரைகள் எழுதி வந்தேன். அதனுல்தான் தமாஷ்வாலா என்ற தொடரை அவர் சொன்னர்.

அதன் பிறகு பலமுறை ஐயரவர்களைக் கல்கி சந்தித்துப் பேசியது உண்டு. ஒவ்வோர் ஆண்டும் ஆனந்தவிகடன் தீபாவளி மலரில் ஐயரவர்களுடைய கட்டுரை இருக்கும். அவர்களுக்குச் சதாபிஷேகம் நடந்தபோது ஒரு கட்டுரை எழுதினர் கல்கி, 'தமிழ்த் தாத்தா' என்று பெயரிட்டு. தமிழ் தா தா (கொடுங்கள், கொடுங்கள்) என்று சிலேடையாக எழுதி இருந்தார். அது முதல் தான் ஐயரவர்களைத் தமிழ் உலகம் தமிழ்த் தாத்தா என்று அழைக்கலாயிற்று. அரசாங்கத்தாரும், சென்னைப் பல்கலைக்கழகத்தாரும், மற்றவர்களும் அவர்களுக்குப் பல பட்டங்கள் கொடுத்திருக்கிறர்கள். அவை எல்லாவற்றையும் விடக் கல்கி தந்த தமிழ்த் தாத்தா என்ற பட்டம் மிகவும் பொருத்தமாகவும், அன்பை வெளியிடுவதாகவும் இருக்கிறது.

தனி நபர் சத்தியாக்கிரகத்தில் கல்கி சிறை சென்றிருந்தார். அப்போது ஆனந்தவிகடனில் ஐயரவர்கள் தம்முடைய சரித்திரத்தை எழுதிக் கொண்டு வந்தார்கள். அப்படி எழுதுவதற்குத் தூண்டுகோலாக இருந்தவர் கல்கி அவர்களே. சதாபிஷேகம் நடந்தபோதே அதைத் தொடங்க வேண்டுமென்று வற்புறுத்தி வேண்டிக் கொண்டார். ஆனல் அவர்களால் அப்போது எழுத முடியவில்லை. அதற்குப் பிறகே எழுதத் தொடங்கினர்கள். சரித்திரத்தின் அத்தியாயங்கள் பத்திரிகையில் வரவர டி. கே. சி., ராஜாஜி முதலியவர்கள் பாராட்டிக் கடிதம் எழுதுவார்கள். கல்கியும் அடிக்கடி வந்து உற்சாகமூட்டுவார். கல்கி சிறைக்குச் சென்றதனுல் ஐயரவர்களுக்கு மன வருத்தம் உண்டாயிற்று. 'நன்ருக எழுதக் கூடிய ஒருவர் சும்மா சிறையில் போய் உட்கார்ந்திருக்கிருரே' என்ற இரக்கமும் தோன்றியது.

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரின் பெண் வயிற்றுப் பேரராகிய வி. ஜி. சீனிவாசன் மதுரைச் சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் ஆசிரியராக இருக்கிறர். அவர் தமிழும், இந்தியும், ஆங்கிலமும் வல்லவர். அவர் ஒரு நாள் மதுரையிலிருந்து வந்திருந்தார். முன்பு அவரைப் பார்த்து நான் பழகியது இல்லை. கலைமகள் காரியாலயத்திற்கு வந்து என்னைப் பார்த்தார். அவரைக் கண்டவுடன் அவருடைய தோற்றத்துக்கும், கல்கியின் தோற்றத்துக்கும் ஒப்புமை இருந்ததாகத் தோன்றியது. அசப்பில் பார்த்தால் அவரைக்

கல்கி என்றே எண்ணும்படியாக அந்தக் காலத்துத் தோற்றம் இருந்தது. அதோடு அவர் குரலும் கல்கியின் குரலைப்போலச் சற்றுக் கீச்சுக் குரலாக இருந்தது. அவரைக் கண்டவுடனேயே 'இவர் கல்கியைப் போல இருக்கிறாரே!' என்ற எண்ணம் எனக்குத் தோன்றியது. என்னைப் போலவே மற்றவர்களும் நினைக்கிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பினேன். ஒரு சிறு நாடகம் ஆடலாம் என்று திட்டம் போட்டேன்.

வி. ஜி. சீனிவாசன், ஐயரவர்களைப் பார்க்க வந்தார். அப்போது பிற்பகல் 3 மணி இருக்கும். அலுவலகத்தில் இருந்து அவரை அழைத்துக் கொண்டு வந்தேன். ஐயரவர்கள் வீட்டுக்குச் சென்றேன். அவர்கள் மேல் மாடியில் ஹாலில் படுத்துக் கொண்டிருந்தார்கள். கதவுகளை ஒருக்களித்து சாத்திக் கொண்டு படுத்திருந்தார்கள். போகும்போது நான் சீனிவாசனிடம், "நீங்கள் ஒன்றும் முதலில் பேசாதீர்கள், நான் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருங்கள். ஐயரவர்கள் கேட்டால் ஆம் என்று மாத்திரம் சொல்லுங்கள்" என்று சொல்லி வைத்திருந்தேன்.

இரண்டுபேரும் ஹாலில் நுழைந்தோம். ஐயரவர்கள், யார் என்று கேட்டார்கள். "நான் தான்" என்று சொல்லிக் கொண்டு அவரை அழைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தேன். அவரும் நானும் உட்கார்ந்தோம். நான் 'அவர் வந்திருக்கிறார்,' என்று மாத்திரம் சொன்னேன். யார் என்று அவரை உற்றுக் கவனித்தார்கள் ஐயரவர்கள்,' சற்றே இருட்டாக இருந்தமையால் தெளிவாகக் காண முடியவில்லை. வி. ஜி. சீனிவாசன், "நான் தான், இப்போதுதான் வந்தேன்" என்று சொன்னார், உடனே ஐயர் அவர்கள், "என்ன ஐயா! இப்படிச் செய்துவிட்டீரே! அருமையாகக் கதைகளையும், கட்டுரைகளையும் எழுதுவதை விட்டுவிட்டு இப்படி ஜெயிலுக்குப் போகலாமா? "என்று பரிவோடு சொல்லத் தொடங்கினார்கள். நான் குறுக்கிட்டு, "அவர் அல்ல இவர்" என்று சொன்னேன், வி. ஜி, சீனிவாசனுக்கு விஷயம் புரியவில்லை. நான் சீனிவாசனை அறிமுகப்படுத்தினேன். "சூரியநாராயண சாஸ்திரியின் பேரனா? நான் உருவத்தையும், குரலையும் கண்டு கல்கி ஜெயிலில் இருந்து வந்துவிட்டார் என்றல்லவா எண்ணினேன்?" என்றார்கள் ஐயர் அவர்கள்,

நானும் அவரைக் கண்டவுடன் முதலில் கல்கியைப் போல இருக்கிறாரே என்று எண்ணினேன். என்னுடைய எண்ணம் சரி என்று இப்போது தெரிந்துவிட்டது. அதன் பிறகு சீனிவாசன் ஐயரவர்களுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு விடை பெற்றுச் சென்றார். செல்லும் போது "ஒரு நாடகமே ஆடிவிட்டீர்களே!" என்றார். "கல்கியிடம்

ஐயரவர்களுக்கு இருக்கும் அன்பு உங்களுக்கு விளங்குகிறது அல்லவா? உங்களைக் கண்டவுடன் நான் நினைத்தது போலவே ஐயரவர்களும் நினைப்பார்கள் என்று எண்ணினேன். அதைச் சோதனை செய்து பார்த்ததில் என் கருத்துச் சரி என்று புலப்பட்டது. அதோடு கல்கி அவர்களிடம் ஐயரவர்களுக்கு இருக்கும் உயர்ந்த அன்பும், ஆதரவும் தெளிவாயின" என்று சொன்னேன். இன்றைக்கும் வி. ஜி. சீனிவாசன் என்னைச் சந்திக்கும்போதெல்லாம் இந்த நிகழ்ச்சியைச் சொல்லிச் சிரிப்பார்.

கல்கி அவர்கள் சிறையிலிருந்து வந்த பிறகு கல்கிப் பத்திரிகையை ஆரம்பித்தார். அதற்குக் கட்டுரை எழுத வேண்டுமென்று ஐயரவர்களிடம் கேட்டார். ஐயரவர்களும் எழுதி தந்தார்கள், ஐயரவர்கள் காலமானபோது, 'வீழ்ந்த ஆலமரம்' என்ற தலைப்பில் ஒரு நீண்ட கட்டுரையைக் கல்கியில் அவர் எழுதி இருந்தார்.

புத்தம் புதிய எழுத்துப் படைப்பில் மன்னராக விளங்கிய கல்கியும், மிகப் பழைய நூல்களை மீண்டும் கண்டெடுத்துத் தமிழ்த் தாய்க்கு அணிந்த தமிழ் வள்ளலும் ஒருவரை ஒருவர் அன்பு செய்து பழகிய சமயங்கள் பல. அப்போதெல்லாம் ஐயரவர்களிடம் கல்கிக்கு இருந்த பெருமதிப்பும், ஐயரவர்களுக்குக் கல்கியிடம் இருந்த தாய் அன்பும் தெளிவாகப் புலப்பட்டன. ★



பாரதி மண்டபத் திரு விழா வில் திரு. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், எட்டயபுரம் மஹாராஜா ஆகியோர்களுடன்.



புதல்வனுக்கு 'உபநயனம் செய்விக்கிறார்.
பிரம்மோபதேசம் பெற்ற பிரம்மசாரிக்கு "ஸகல சாஸ்த்ர பாரங்கத தத்வ வித்திரஸ்து" என்று பெரியோர்கள் ஆசீர்வதிப்பது வழக்கம். அன்று ஆசி பெற்ற ராஜேந்திரன் மருந்தளிக்கப் பயிற்சி பெற்றவர் இன்று தமிழ் விருந்தளிக்கும் எழுத்தாளராய்த் திகழ்கிறார்—ஆசிரியர்

# ஸ்தாபனமாக விளங்கிய தனிமனிதர்

கி. ராஜேந்திரன்

**க**ல்கி அவர்கள் மறைந்து பதிமூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இன்று அவரது படைப்புகளைப் பற்றி விருப்பு வெறுப்போ, தயை தாட்சண்யமோ, விரோதமோ கோபமோ ஏதுமின்றி நடுநிலையில் நின்று ஆராயக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. கல்கி மறைந்த உடனேயே அவரது எழுத்துக்களும் செத்துவிடும் என்று எண்ணிய சிலர் இன்று நிமிர்ந்து உட்கார்ந்து வியப்புடன் பார்க்கத் தொடங்கலாம். காலத்தால் மடியாததை அமர இலக்கியம் என்று சொல்லக்கூடுமானால் இன்றளவும் கல்கியின் எழுத்துக்கள் உயிர்த் துடிப்புடன் திகழ்கின்றன என்பது மட்டுமல்ல, அவர் மறைந்த ஆண்டில் எந்த அளவுக்கு அவரது நூல்கள் அவருக்கு வருவாயைத்

தந்துவந்தனவோ அதே அளவுக்கு இன்றும் எனக்குச் கொடுத்து வருகின்றன.

ருஷ்யாவிலும், ஜெர்மனியிலும், அமெரிக்காவிலும், மலேசியாவிலும் கல்கி அவர்களது படைப்புக்களை மொழிபெயர்த்தும் கருத்தரங்கு நடத்தியும் பெருமையுற்ற பிறகும், இங்கே இன்னும் சிலர் அவர் என்னத்தை எழுதி விட்டார் என்று கேட்டுக் கொண்டிருந்தால் அவர்களை நாம் பொருட்படுத்தவேண்டியதில்லை. ஒதுக்கியே விடலாம்.

கல்கி அவர்களை ஓர் எழுத்தாளர் என்ற முறையில் பார்ப்பதைவிட ஒரு ஸ்தாபனம் என்ற வகையில் நோக்கும்போது அதிகமாக வியப்படைகிறோம். ஒரே ஒரு தனி மனிதன் எப்படி பத்திரிகாசிரியராகவும், எழுத்தாளராகவும், விமர்சகராகவும், பொதுவாழ்வில் ஈடுபட்ட தலைவராகவும், தொண்டராகவும், அரசியல்வாதியாகவும், மேடைப் பேச்சாளராகவும், நகைச்சுவையாளராகவும், நல்லதொரு குடும்பத் தலைவராகவும் விளங்க முடிந்தது என்று பார்க்கும்போது மலைப்பும் திகைப்பும் ஏற்படுகின்றன.

## எழுத்தாளர்

“கல்கி தோற்றுவித்த எழுத்தாளன் நான்” என்று பெருமையுடன் சொல்லிக்கொண்டு எத்தனை பேர்கள் இன்று எழுதுகிறார்கள் என்றால் அதனைக் கணக்கிட்டுச் சொல்வதே சாத்தியமல்லாத அளவுக்கு அதிகம். கல்கி இவர்களில் பலரை கண்டு பிடித்து பத்திரிகையில் இடம் தந்து ஊக்குவித்திருக்கிறார். வேறு பலர் கல்கி அவர்களை ஏகலைவனைப்போல் பின்பற்றி எழுதுகிறார்கள், அந்த வகையில் கல்கி இன்றைக்கும் கூட புதுப்புது எழுத்தாளர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார் எனலாம். ஆயினும் இவர்களில் பெரும்பாலோருக்குக் கல்கியை ஓர் எழுத்தாளன் என்ற முறையில் சரியாக ஆராய்ந்து நோக்க வாய்ப்புக் கிட்டியிராது. அருகில் இருந்து பார்த்தவன் என்ற உரிமையோடு உறுதியாகச் சொல்கிறேன், எழுத்தாளன் என்ற முறையில் கல்கி அவர்களது வெற்றிக்குக் காரணம் அவரது அடக்கம் தான். இதனை இன்றைய எழுத்தாளர்கள் தயவு செய்து புரிந்து கொள்ள வேண்டும். அடக்கம் என்னும்போது தன் மானத்தை ஒருவன் இழந்து விடவேண்டும் என்பது அர்த்தமல்ல.

கல்கி கதையோ, கட்டுரையோ, அரசியலோ, எதை எழுதுவதற்கு முன்னும் அதைத் தீவிரமாக விவாதிப்பார். காரியாலயத்தில் தமது சகாக்களுடன், வீட்டில் மனைவியாருடன், நண்பர்களுடன், ஏன் குழந்தைகளாயிருந்த என்னிடமும் என் சகோதரி ஆனந்தியிடமும் கூட, எழுதப் போவதைப் பற்றிப்பேசுவார். பிறகு சிந்திப்பார் செருப்புத்தேயும்; உதட்டின் புறத்

தோல் பிய்ந்து போகும். காரில் ஏறி, அருகாமையில் உள்ள மின்சார ரயில் நிலையத்தில் இறங்கிக் கொண்டு அங்கு முதல் வகுப்பில் இடம் பிடித்து தாம்பரம் வரை சென்று திரும்புவதுமுண்டு. தாம்பரத்தில் உள்ள கிறிஸ்துவக் கல்லூரியின் நிழல் விரிக்கும் மரங்களின் ஊடே அமைந்துள்ள நடைபாதைகள், அவருக்கு உலாவிவரப் பிடித்தமான இடம். அப்போதெல்லாம் ஆழ்ந்த சிந்தனையில் இருப்பார் அவர். பிறகு இரவில், அமைதிச் சூழ்நிலையில் எழுத ஆரம்பித்தாரென்றால் மறுநாள் காலை 5 மணிக்குள் தலையங்கம் தொடர்கதை, விமர்சனர் கட்டுரை எல்லாம் தயாராக இருக்கும் இதன் பிறகும் ஃப்ரூப் வரும்போது நிறையத் திருத்துவார். சகாக்களின் யோசனைகளை ஏற்று மாறுதல்களைச் செய்வார்.

எந்த ஒரு விஷயத்தையும்பற்றி தாம் ஒரு முடிவுக்கு வந்து அதையே பிறர்மீது திணிக்கும் பான்மை அவரிடம் இல்லை, முடிவுக்கு வருமுன் முதலில் விவாதமும் பிறகு சிந்தனையும் நடக்கும். முடிவுக்கு வந்தபின் அதில் உறுதியாக நிற்பார், எதுவும் அல்லது யாரும் அவரை அசைக்க முடியாது. கடைசி நிமிஷத்தில் பிறர் யோசனைகளை ஏற்றுச்செய்யப்படும் திருத்தங்கள் விஷயத்தை மேலும் தெளிவாக்க உதவியாக இருக்குமே ஒழிய கருத்து மாற்றத்துக்காக அல்ல.

எழுத்தாளர் என்ற முறையிலே கல்கி அவர்களின் சாதனைகளைப் பன்னிரண்டு நாவல்கள், நூற்றுப் பதினொரு சிறுகதைகள் என்று கணக்கிடுவதை விட தமிழகத்தில் தமிழர்களிடையே, தமிழின் மேன்மையையுணர்த்தி, தமிழார்வத்தை வளர்த்து, தமிழகத்தின் சரித்திரத்தில் பெருமை கொள்ளச் செய்து, தொன்மையான சிற்பக்கலை போன்றவற்றில் அவர்களுக்கு ஈடுபாடும் கொள்ளச் செய்ததைக் கணக்கிட்டால் அவரது சாதனை எத்தனை பெரிது என்பது புரியும்.

### பத்திரிகையாசிரியர்

திரு. வி. க. விடம் பாடம் கற்று, ராஜாஜியிடம் பண்பட்டு, விகடனில் அனுபவம் பெற்று, பிறகு கல்கியில் ஈடு இணையற்ற சிறப்பெய்தினர் 'கல்கி.' பத்திரிகாசிரியர் என்ற முறையில் அவரது கொள்கையை சத்தியம் என்ற ஒரே வார்த்தையில் வர்ணித்து விடலாம். மனப்பூர்வமாக தாம் சத்தியம் என்று கருதுவதையே அவர் செய்வார், எழுதுவார். எழுத்தை உன்னி உன்னிப் பார்ப்பாரேயன்றி எழுத்தாளரையல்ல. அஞ்சாநெஞ்சத்துடன் பெரிய பெரிய மனிதர்களின் படைப்புக்களை அவர்களிடமே திருப்பிக் கொடுத்திருக்கிறார் கல்கி. தமது உதவி ஆசிரியரை அழைத்து "ஸோமாஸ்கந்தன்! இவர் சில கதைகளைக் கொடுத்தாரல்லவா? வாசலிலே இவர் கார் நிற்கிறது; அதிலே கொண்டு போய்வைத்து

விட்டு வந்துவிடு. இவர் கிளம்பிக் கொண்டிருக்கிறார்." என்று பெரிய மனிதர்களிடம் ரொம்பவும் மரியாதையுடன் நடந்துகொண்டதும் உண்டு.

அரசியலிலும், கலை விமர்சனப் பகுதியிலும் இதே சத்தியத்தைக் கடைப்பிடித்துப் பத்திரிகையின் தரத்தை உயர்த்தியவர் கல்கி. தரமான முறையில் பத்திரிகை நடத்தினால் விற்பனை எண்ணிக்கை உயராது என்ற கருத்தைத் தவிடு பொடியாக்கிக் காட்டிய மேதை அவர். பத்திரிகையின் எந்தப் பகுதியை எடுத்துக்கொண்டாலும் சரி, எதையும் மக்கள் இரண்டாவது தடவை படிக்க வேண்டிய அவசியமில்லாமல் முதல்முறையிலேயே புரிந்து கொள்ளக் கூடிய தெளிவு, பக்கத்துக்கு பக்கம் ஒவ்வோர் அம்சத்திலும் இழையோடிய நகைச்சுவை, இந்த இரண்டு ஆயுதங்களையும் பயன்படுத்தி பத்திரிகையின் விற்பனை எண்ணிக்கையை உயர்த்தினார் அவர்.

கல்கி ஒரு சினிமாவைப் புகழ்ந்தால் கல்கி பாராட்டியிருக்கிறாரே படம் நன்றாகத்தான் இருக்கும் என்று மக்கள் எண்ணித் தியேட்டர்வாசலில் குழுமினார்கள். கல்கி, வேறு ஒரு சினிமாவைத் தாக்கினால், கல்கி இந்த அளவுக்கு மட்டம் தட்டும்படியாக அந்தப் படத்தில் என்னவெல்லாம் அபத்தங்கள் இருக்கின்றன பார்ப்போமே என்ற நெஞ்சக் குறுகுறுப்புடன் மக்கள் தியேட்டரில் நிறைந்தார்கள்.



நவாப் ராஜமாணிக்கத்தின் நாடகத்துக் கிடையில் பேசுகிறார். அருகிலிருப்பது நவாப்.

பத்திரிகை விமர்சனத்தால் சினிமாவும் நட்சத்திரங்களும் புகழ் பெறும் காலம்போய் இன்று சினிமா நட்சத்திரங்களின் தயவால் பத்திரிகைகள் பிரபலமடைய வேண்டிய நிலையைக் காண்கிறோம். கல்கி இருந்தால் கண்ணீர்வடிப்பார்!

### விமர்சகர்

உண்மையை எழுதும் விமர்சகர்கள், பலரது கோபாதாபங்களுக்கு ஆளாவதுண்டு. அப்படி கோபதாபங்களுக்கு ஆளாக நேருமே

என்பதற்காக உண்மையை எழுதாமல் விடும் விமர்சகர்களும் உண்டு. ஆனால் கல்கி, சத்தியத்தையே எழுதியும் அனைவருக்கும் உற்ற நண்பராக விளங்கும் சாமர்த்தியத்தைப் பெற்றிருந்தார். இதற்குக் காரணம், "அவர் ஒருவரைத் தாக்கினாலும் அந்தத் தாக்குதலின் உக்கிரகத்தை நகைச்சுவையினால் தணித்து விடுவதுதான்; தாக்கப்பட்டவர்களும் சிரிக்கும்படியாக அமைந்துவிடும் இது" என்பார்கள் சிலர். இதனை நான் அப்படியே ஒப்புக்கொள்வதற்கில்லை. நகைச்சுவையை ரஸித்துத் தாக்கப்பட்டவர்களும் சிரித்திருக்கலாம்; ஆனால் நகைச்சுவை காரணமாகத் தாக்குதலின் உக்கிரகம் தணிந்துவிடுவதில்லை. மாறாக அதிகவேகம் பெற்றுவிடுகிறது என்பதே என் அபிப்பிராயம்.

அப்படியானால் கல்கியினால் தாக்கப்பட்டவர்களும் கல்கியிடம் அபிமானம் கொண்டிருந்ததற்குத் காரணம் என்ன? அவர் தாக்கியது மனிதர்களையல்ல, அவர்களது கருத்துக்களை அல்லது செயல்களை என்பதே. ஒருவரது கருத்தை அல்லது செயலைக் கண்டித்த கல்கி பிறிதொரு சந்தர்ப்பத்தில் அதே மனிதரின் மற்றொரு கருத்தை அல்லது செயலை மனதாரப் பெருந்தன்மையுடன் பாராட்டிவிடுவார். இதனால் கல்கிக்குத் தங்களிடம் விரோதம் கிடையாது என்பது அவர்களுக்குத் தெளிவாகப் புரிந்து போகும். இதற்கு சங்கீத உலகிலும் திரை உலகிலும் எத்தனையோ உதாரணங்களைக் கொடுக்கலாம். ஜெமினியின் சம்சாரம் திரைப்படத்தைச் சக்கைப் போடாகத் தாக்கிய கல்கி, அதே ஜெமினியின் ஔவையார் திரைப்படக்காட்சியொன்றை அட்டைப் படத்தில்போட்டுக் கௌரவித்தது அனைவருக்கும் நினைவிருக்கக்கூடிய நிகழ்ச்சிகள்.

அவரது சங்கீத, திரைப்பட விமர்சனங்களால் திரை உலகம் வளர்ந்தது. சங்கீத வித்வான்கள் வித்வாம்சினிகள் பலர் முன்னுக்கு வந்தார்கள், நாடகக்கலை மேன்மையுற்றது; தொன்மையானதும் தனிச் சிறப்பு மிக்கதுமான பரதக்கலை புனர்வாழ்வு பெற்று ஒளிர்ந்தது.

### பொது வாழ்வு : தலைவர்

கல்கி அவர்கள் தலைமைதாங்கி நடத்திக்கொடுத்த பொதுக் கூட்டங்கள் கணக்கிலடங்கா. கல்கி மறைந்தபிறகு அவருக்கு ஒரு நினைவுச்சின்னம் தேவையென்று யாரோ குரலெழுப்பியபோது அவர் ஸ்தாபிதம் செய்த கல்கி பத்திரிகை ஒருபுறமிருக்க பாரதி மணிமண்டபமும், காந்தி மண்டபமும் இன்னும் வ. உ. சி. கல்லூரி போன்ற பல நிறுவனங்களும் அவரது நினைவை என்றும் போற்றிப் பாதுகாத்துவருமே என்றார் திரு. ம. பொ. சி. கல்கி அவர்களின் தலைமையில் இப்படிப்பட்டப்

பொதுக்காரியங்கள் பலப்பல நிறைவேறியிருக்கின்றன. இவற்றையெல்லாம் விட மகத்தான காரியம் ஒன்றை அவர் செய்திருக்கிறார். தலைவர் என்ற முறையில் உச்சாணிக் கொம்பில் ஏறிக்கொள்ளாமல் மனிதாபிமானத்துடன் இளைஞர்கள் பலரிடம் பழகியிருக்கிறார். பத்து கட்டிடங்களை எழுப்பிவிடலாம். ஆனால் ஒரு மனித மனத்தை உருவாக்குவதற்கு அவை இணையாகுமா?

### பொதுவாழ்வு: தொண்டர்

தொண்டர்களாகஇருந்து பயிற்சி பெறாமலே தலைவரானோர் உண்டு. இவர்கள் தொண்டை ஏற்பார்களேயன்றி தொண்டு புரிவது தலைவர் என்ற தங்கள் தகுதிக்கு உகந்ததாகாது எனக் கருதுவார்கள். கல்கி ஆரம்பமுதல் இறுதிவரை தலைவர் என்று கூறிக்கொள்ளக் கூடிய தகுதி பெற்றபின்னும்– தொண்டராகவே விளங்கியது அவரது பெருஞ்சிறப்பு. அரசியலில் காந்திஜியையும் ராஜாஜியையும் இரு கண்களெனப் போற்றி அவர்கள் காட்டிய பாதையில் சென்றது அனைவருக்கும் தெரியும். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு மூன்று முறை சிறை சென்றிருக்கிறார். எனினும் சுதந்திரம் பெற்ற பின்



சாந்தி நிகேதனில். ராஜாஜி மேற்கு வங்க கவர்னராயிருந்தபோது, திரு. டி. கே. சியும், கல்கியும் விசுவபாரதி நூலகத்துக்கு பல தமிழ் நூல்களைத் திரட்டி வழங்கினார்கள். ரவீந்திரநாத் தாகூரின் புதல்வர் ரதீந்திரநாத் தாகூரையும் ரஸிக மணி டி. கே. சியையும் படத்தில் காணலாம்.



பாரதி மண்டபத்துக்கு நிதி பெறுகிறார்.

தியாகிகளுக்கென நிலம் ஒதுக்கப்பட்டபோது தியாகம் என்ற சொல்லின் அர்த்தத்துக்கே இச்செயல் மாறுபட்டது எனக் கருதி தமக்கு வேண்டாமென்று மறுத்துவிட்டார் கல்கி. "நாடு உனக்காக என்ன செய்தது என்று கேட்காதே; நாட்டுக்காக நீ என்ன செய்தாய் என்று கேட்டுக்கொள்" என்று சமீபத்தில் கென்னடி கூறியபடி அன்று வாழ்ந்து காட்டியவர் கல்கி. அவரைப் பொருத்தவரை தேசம் என்பது அதன் மக்களைத் தான் குறிக்கும். குடும்பத்தைக் கவனிக்காதவன் தேசத்தைப்பற்றி உண்மையான அக்கறை காண்பிக்கப் போவதில்லை என்பதே அவர் சித்தாந்தம்.

க்ஷயரோகத்தினால் பீடிக்கப்பட்ட ஓர் அன்பர் கல்கிக்குக் கடிதம் எழுதினார். உடனே கல்கி அவருக்காக ஒரு நிதி திரட்டி அனுப்பி வைத்தார். அந்த மனிதர் பூரண நலம் பெற்றுத் தமது நன்றியைத் தெரிவிக்குமுகமாகத் தட்டு நிறைய ஆப்பிள்களும் ஆரஞ்சுகளும் கொண்டுவந்து கல்கிக்குச் சமர்ப்பித்து வணங்கினார். இந்தத் தட்டுப் பழங்களையும் நீங்கள்தான் சாப்பிட

வேண்டும் அப்போதுதான் நோயுற்றிருந்த உங்கள் தேகம் பலம்பெறும் என்று கூறி பழங்களுடனேயே அந்த அன்பரைத் திருப்பி அனுப்பி வைத்தார் கல்கி.

கல்கி வ.உ.சி. கல்லூரிக்கு நிதி திரட்டிய விதம் பற்றி திரு ம.பொ.சி. அடிக்கடி கூறி மகிழ்வதுண்டு. பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிக் கொண்டே இருக்கையில் தமது ஜிப்பா பையிலிருந்து ஓர் உறையை எடுத்தார் கல்கி "இன்று நண்பர்களின் வற்புறுத்தலின் பேரில் கிரிக்கெட்மைதானத்திற்குப் போயிருந்தேன். இப்படி ஈ மெய்ப்பதுபோல்மக்கள் குழுமுகிறார்களே என்னதான் நடக்கிறது அங்கே என்று பார்ப்போம் என்று நினைத்துக்கொண்டே போனேன். அங்கே ஓர் அன்பர், வ. உ. சி. கல்லூரி நிதிக்கு என்று சொல்லி இந்தக் கவரைக் கொடுத்தார். இப்போது இதைப் பிரித்துப் பார்க்கிறேன். அடடா! நூறு ரூபாயல்லவா இருக்கிறது! இத்தனை நாளாகக் கிரிக்கெட் என்றாலே எனக்குப் பிடிக்காமல் இருந்தது. ஐந்து நாட்களுக்குத் தொடர்ந்து இருபத்திரண்டு பேர்கள் விளையாடுவதை இருபத்திரண்டாயிரம் பேர்கள் வேலை மெனக்கட்டுப் பார்ப்பானேன் என்று எண்ணி வந்தேன். ஆனால் இப்போது எனக்கு கிரிக்கெட்மீது அபாரமோகம் ஏற்பட்டு விட்டது. கிரிக்கெட் அபிமானிகள் இந்த மாதிரி நல்ல காரியங்களுக்கும் உதவுவார்கள் என்றால் கிரிக்கெட் அடியோடு வாழ்க!"—கல்கி இப்படிக் கூறி முடித்த பிறகு அந்தக் கூடத்திலேயே வ.உ.சி. கல்லூரி நிதிக்காக ஐந்தும் பத்துமாக ஐந்நூறு ரூபாய் வரை சேர்ந்து விட்டது.

வீடு திரும்பும்போது ம.பொ.சி கேட்டார்: "கிரிக்கெட் மைதானத்தில் நூறு ரூபாய் கொடுத்தவர் யார்? உறை மீது ஏதாவது எழுதியிருக்கிறதா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை" என்றார் கல்கி. "நானுகவேதான் ஒரு நூறு ரூபாய் நோட்டை உறையில் போட்டு எடுத்துக் கொண்டு வந்தேன். எப்படியும் என்னுடைய காணிக்கையும் வ.உ.சி. கல்லூரிக்குச்சேரவேண்டியது தானே!"

### அரசியல்வாதி

கல்கி அவர்களுடைய அரசியல், ராஜாஜியைப் பின்பற்றுவதுதான், என்பதை அனைவரும் அறிவார்கள். நாடு சுதந்திரம் பெறும் வரையில் விடுதலை இயக்கத்திற்காகப் பத்திரிகாசிரியர் என்ற முறையில் மட்டுமின்றி சத்தியாக்கிரஹம் போன்ற நேரடி நடவடிக்கைகளிலும் பங்கு பற்றிய கல்கி, சுதந்திரத்துக்குப் பின் நேரடியான அரசியலிலிருந்து விலகி பத்திரிகாசிரியர் என்ற முறையில் மட்டும் அரசியல் பணி புரிந்து வந்தார். இதுபற்றி ஒருவர் வியப்புத்தெரிவித்துக் கேட்டார்; "எவ்வளவோ பிரபலமானவர் நீங்கள். தேர்தலில் நீங்கள்

றின்றால் எளிதில் வெற்றி பெற்று மந்திரி பதவிகூடப் பெறலாமே?" அதற்குக் கல்கி, "அப்படி நான் செய்தால் பத்திரிகாசிரியர் பதவியைவிட மந்திரி பதவி உயர்ந்தது என்பதை ஒப்புக்கொண்டவனு வேன். ஆகவே அது வேண்டவே வேண்டாம்" என்று பதிலிறுத்தார்.

பத்திரிகை மூலமாக அவர் நடத்திய அரசியல் பணி தொடர்ந்தது. தமிழகத்தின் எல்லைப் போராட்ட காலத்திலும், தமிழகத்துக்குச் சென்னையைச் காத்துத்தருவதிலும் கல்கியின் பங்கு முக்கியமானது. இதற்கும் மேலாக சுதந்திரம் பெற்று காங்கிரஸ் பதவிக்கு வந்துவிட்டாலும் உண்மையான ஜனநாயகத்துக்கு நல்லதொரு எதிர்க்கட்சி தேவை என்பதை உணர்ந்து, "சக்தி வாய்ந்த எதிர்க்கட்சி என்ற தலைப்பில் தலையங்கம் எழுதினர். இதைத் தொடர்ந்து காங்கிரஸுக்கு எதிராக இயங்கக் கூடிய அந்த எதிர்க் கட்சி சோஷலிட்டுக் கட்சியாகத் தான் இருக்க முடியும் என்ற நம்பிக்கையில் "சோஷலிஸம் வர வேண்டும்; அல்லது கம்யூனிஸம் வந்தே தீரும்" என்ற தலைப்பில் தலையங்கம் எழுதி "சோஷலிஸம் ஏன் வேண்டும்?" என்ற தலைப்பில் கருத்தரங்கமும் நடத்தினர். ஸ்ரீ ஜயப்பிரகாசநாராயணன் அவர்களுக்குத் தமது இல்லத்தில் விருந்து வைத்து அளவளாவி மகிழ்ந்தார்.



ஸோஷலிஸ்ட் தலைவர் ஆசார்ய நரேந்திர தேவுக்கு தேநீர் விருந்தளித்தார்

ஆனால் அன்று அவர் காங்கிரஸுக்கு ஓர் எதிர்க்கட்சி வேண்டும் என்ற முறையில் சோஷலிஸக் கருத்துக்களை வெளியிட்டபோது காங்கிரஸ் சோஷலிஸக் கொள்கைகளை மேற்கொண்டு இருக்கவில்லை. 1954-ல் கல்கி மறைந்தார். 195 -ல் ஆவடி காங்கிரஸின்போதுதான் சோஷலிஸக் கொள்கையை காங்கிரஸ் மேற்கொண்டது. கல்கி அவர்கள் அன்று விரும்பி ஒப்புக்கொண்டதும் இன்றைய காங்கிரஸின் சர்வாதிபத்திய சோஷலிஸக் கொள்கையை அல்ல.

இன்றைய அரசியல் சூழ்நிலையில் கல்கி இருந்தால்...... என்று சிலர் நினைத்துப் பார்க்கிறார்கள். என்னிடமும் கூடப் பேச்சுவாக்கில் சொல்லுகிறார்கள். இப்படி யூகிப்பதில் பொருள் இல்லை என்பது என் எண்ணம். ஏனெனில் இன்றளவும் கல்கி உயிருடன் இருந்திருப்பாரேயாகில் தமிழகத்தின் இன்றைய அரசியல் சூழ்நிலை இப்படி இருக்குமா என்பதே சந்தேகம் தான்!

### சொற்பொழிவாளர்

பொதுக் கூட்டங்களுக்குச் சென்றவர்களுக்கெல்லாம் நன்கு தெரியும். நன்றியுரையைக் கேட்க நாலு பேர்கள் கூட இருக்கமாட்டார்கள் என்று. இருக்கும் நாலு பேரும் ஏதாவது காரியார்த்தமாகத் தான் உட்கார்ந்திருப்பார்களேயன்றி நன்றியுரையைக் கேட்பதற்காக இருக்கமாட்டார்கள். ஆனால் கல்கி அவர்களைப் பொருத்தவரையில் அவரது நன்றியுரையைக் கேட்கவென்றே கூட்டம் அசையாது அமர்ந்திருக்கும். இதனாலேயே பலப்பல விழாக்களில், பொதுக்கூட்டங்களில் நன்றி நவிலும் பொறுப்பை கல்கி அவர்களிடம் நிர்வாகிகள் விட்டுவிடுவார்கள். கல்கி அவர்களின் பேச்சு அந்த அளவுக்கு மக்களை கவர்ந்ததற்கு முக்கிய காரணம் அதிலே இழையோடிய நகைச்சுவைதான். அந்த நகைச்சுவையும் முன் கூட்டியே தயாரித்துக்கொண்டு போனதல்ல; அந்தத் தருணத்தில் சூழ்நிலைக்கு ஏற்ப, அவர் கற்பனையிலே உருவானதால் அதன் மதிப்பும் மெருகும் கூடுதலாகி நிற்கும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, சென்னையில் கம்பனுக்கு விழா எடுத்தபோது கம்பனைப் பிடிக்காத கும்பல் ஒன்று கோகலே மண்டபத்தில் புகுந்துவிட்டது. நாற்காலிகளை உடைத்து ஆர்ப்பாட்டம் செய்தது. கல்கி பேசினார்:— "கம்பனைப் பிடிக்காத சிலர் கம்பன் மீதுள்ள தங்கள் கோபத்தையெல்லாம் திரட்டி நாற்காலிகளிடம் காட்டுகிறார்கள், கம்பன் தப்பித்தான்; பாவம் நாற்காலிகள்!"

ராஜதானிக் கல்லூரியில் கல்கியை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார் பேராசிரியர் ஒருவர். "கல்கி அவர்கள் தமது கதைகளுக்குக் கதாநாயகர்களையும் கதாநாயகிகளையும் தேடி எங்

கெங்கோ போகவேண்டாம். எங்கள் கல்லூரிக்கு வந்து விட்டால் போதும். இங்குள்ள 'வராந்தாக்'களில் எத்தனையோ பல கதாநாயகர்களையும் கதாநாயகிகளையும் அவர் காணலாம்!"

அடுத்தபடியாகக் கல்கி பேச எழுந்தார் "கதாநாயகர்களே! கதாநாயகிகளே!" என்று பேச்சைத் துவக்கினார். அவ்வளவுதான், மாணவர்களது உற்சாகம் விண்ணை மூட்டும் ஒலி அலையாக விம்மிப் பொங்கியது.

ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரின் கதை நடந்துகொண்டிருந்தது. கல்கியைப் பேசச்சொல்லிக் கேட்டார் திக்ஷிதர். "ராமபிரானுடைய பெயரை வைத்துக்கொண்டிருக்கும் எத்தனையோ பேர் மிகப் பிரபலமாகி பெரும் புகழும் செல்வமும் பெறுகிறார்கள். சர் ஏ. ராமஸ்வாமி முதலியாரைப் பாருங்கள். சர் சி. வி. ராமனை எடுத்துக் கொள்ளுங்கள். இதோ அனந்தராம திக்ஷிதர் உங்கள் முன்னால் அமர்ந்திருக்கிறார், ஏன் பெரியார் ராமசாமி நாயக்கரையே உதாரணம் காட்டலாமே" என்று குதூகலச் சிரிப்புக்கிடையே பேச்சைத் துவக்கினார் கல்கி.

இன்னொரு சந்தர்ப்பத்தில் பிரவசனகர்த்தா மிகவும் காலதாமதமாக வந்து சேர்ந்தார். அதற்குக் காரணமும் சொன்னார். "என்னுடைய குறிப்புப் புத்தகம் இல்லாமல் நான் எங்கும் போவதில்லை. இன்று மறந்து வீட்டில் வைத்து விட்டு வந்து விட்டேன். பாதிதூரம் வந்த பிறகு ஞாபகம் வரவே, வீடுதிரும்பி அதை எடுத்துக் கொண்டுவரும்படியாகி விட்டது" இப்படிக் கூறிய பிறகு கதை நடத்தினார். இறுதியில் "இன்று கதை சொன்னவர், கேட்டவர்கள், எல்லோரும் ரொம்ப புண்ணியம் செய்திருக்கிறோம். சொர்க்கபதவி நிச்சயம் உண்டு" என்றார். இதன்பிறகு கடைசியாகக் கல்கி பாராட்டுரை வழங்க எழுந்தார். "நாமெல்லாம் சொர்க்கத்துக்கு போகிறோமோ இல்லையோ, பிரவசனம் செய்த புண்ணியவான் நிச்சயம் சொர்க்க பதவியை அடைவார். அப்படி அவர் சொர்க்கத்துக்குப் போகும்போது மறந்து விடாமல் ஞாபகக் குறிப்புப் புத்தகத்தை உடன் எடுத்துச் செல்ல வேணும். சொர்க்கத்தை நோக்கிப் பாதி தூரம் போனபிறகு திடீரென்று நினைத்துக்கொண்டு வீடு திரும்ப முடியாதல்லவா?"

### நகைச்சுவையாளர்

சொற்பொழிவுகளில் மட்டுமல்ல; தமது எழுத்திலே மட்டுமல்ல; வாழ்க்கையையே நகைச்சுவைக் கண்ணோட்டத்துடன் அனுபவித்து மகிழ்ந்தவர் கல்கி. சிரிக்காமலும் சிரிக்கவைக்காமலும் ஒருநாள் கூட கழிந்ததில்லை அவர் வாழ்விலே. இதற்குச் சான்று தேவையானால் அவரது கடிதங்களில் காணலாம்.

அவர் எனக்கு 1946-ல் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி: "மாமல்ல

கல்கியின் கையெழுத்து


ANANDA VIKATAN
149, BROADWAY, MADRAS.

Dated 28. 6. 1937

புரத்துக்கு அவசியம் போகவேண்டியதுதான்; அதுவும் டி. கே. சி. மாமாவுடன்தான் போகவேண்டும். இந்த மாதத்தில் ரொம்ப குளிராக இருக்கும்; ஏப்ரல் மாதத்தில் கட்டாயம் போவோம். டி. கே. சி. மாமா ஏப்ரல் மாதம் (சென்னை) வருவதற்கு அது ஒரு காரணமாக இருக்கும் அல்லவா?"

24–12–46 தேதியிட்ட ஒரு கடிதம்: பரீட்சையில் அபாரமாக எழுதியிருப்பாய் என்று நம்புகிறேன். எழுதினவரையில் போதும். அதைப்பற்றி கவலைப் படாதே. டி. கே. சி. மாமா, பெரியப்பா இரண்டு பேரையும் நீ தான் கவனித்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு வேண்டிய தொண்டுகளைச் செய்யவேண்டும். அதுதான் நல்ல படிப்பு. தயவு செய்து ஆனந்தியுடன் அதிகம் சண்டை போடவேண்டாம்."

இன்னொரு கடிதம், 2-4-41-ல் எழுதியது: "தம்பி வா! புத்தகம் இருக்கிறதா? அல்லது கிழித்து ஓடம் பண்ணி விட்டுவிட்டாயா?"

11-3-47 ல் எழுதிய ஒரு கடிதத்தில் இப்படி கூறுகிறார். "நீ அவசரமாக எழுதிக் கொடுத்தனுப்பிய கடிதம் கிடைத்தது. அதில் அடங்கியிருந்த சந்தோஷச் செய்தியைத் தெரிந்து கொண்டேன். அதைப் பற்றி டி. கே. சி. மாமா என்ன சொன்னார்கள்? '(பள்ளியில்) பிரைஸ் எதற்காக வாங்கினாய்? உன்னோடு பேசமாட்டேன்' என்று சொன்னாலும் சொல்லியிருப்பார்கள். 'இந்தத்தடவை மன்னித்துக் கொள்ளவும். அடுத்த வருஷம் பிரைஸ் வாங்கவில்லை' என்று நீ பதில் சொல்லி இருக்கலாம்! மற்றப்படி இங்கே நடராஜன், குற்றாலம், அருவி, மலை, குரங்குகள் குமாரசாமி, செல்லையா எல்லாரும் சௌக்கியம்."

இந்த விதமாக எழுத்திலும், பேச்சிலும் மட்டுமல்ல, ஹாஸ்யத்தை உயிர்மூச்சாகவே கையாண்டவர் கல்கி.

## குடும்பத்தலைவர்

குற்றாலத்தில் நாங்கள் விடுமுறையை அனுபவித்துக்கொண்

டிருக்கும்போது சென்னையில் எங்கள வீட்டில் திருட்டுப் போய்விட்டது. என்னுடைய தாயார் பதறிப் போனார்கள். ஆனால் தகப்பனாரோ சற்றும் அமைதி இழக்காமல், "போனது போய்விட்டது; அதற்காகக் கலவரமடைந்து என்ன பயன்? நீ வேணுமானால் சென்னைக்குப் போய் திருடன் உடைத்த அலமாரிக்கு வேறு தாழ்ப்பாளும் பூட்டும் போட்டுவிட்டு வா" என்று கூறி என் தாயாரைத் தக்க துணையுடன் அனுப்பினார்.



வேலூர் ஆஸ்பத்திரியில், கல்கியின் வாழ்கைத்துணைவி ருக்மணி அம்மாளும் வைத்திய நிபுணர்களும். தரையில் புதல்வர் ராஜேந்திரன், புதல்வி ஆனந்தி.

இன்னொரு சந்தர்ப்பம்: தையல்காரர் கடைக்குச் சைக்கிளில் போய் விட்டுத் திரும்பிக்கொண்டிருந்தேன். திடீரென்று நல்ல மழை பிடித்துக்கொண்டது. தொப்பலாக நனைந்துபோனேன். வீட்டுக்கு திரும்பியதும் தகப்பனாரின் கடுமையான கோபத்துக்கு உள்ளாக நேர்ந்தது. "ஒன்று நீ இந்த வீட்டைவிட்டுப் போய்விடு; இல்லையானால் நான் தொலைந்து போகிறேன்" என்று கத்தினார் அவர். "ஜுரம் வந்து நீ படுத்துக் கொண்டால் யார் அவதிப்படுவது?"

இதற்கெல்லாம் ரொம்ப நாட்களுக்குப் பிறகு ஒருசமயம் அவரது பேத்தி, குழந்தை கௌரி, அவர் எழுதி வைத்திருந்த தலையங்கம், தொடர்கதை எல்லாவற்றையும் யாரும் பாராதபோது சுக்குச் சுக்காகக் கிழித்துவிட்டாள். அப்பாவுக்குக் கோபம் பொங்கப் போகிறது என்று நினைத்தபடி அருகில் நின்றுகொண்டிருந்தேன் நான். என்னைப் பார்த்து அவர், "குழந்தை எல்லாவற்றையும் கிழித்துவிட்டாள். கீழ கிடப்பதையெல்லாம் பொறுக்கி ஒன்றோடொன்று சேர்த்து ஒட்டமுடியுமா பாரேன்" என்றார் சாந்தமான குரலில்.

இந்த மூன்று சம்பவங்களையும் ஒப்பிட்டு நோக்கினாலே போதும். அவரது குடும்பப்பாசம் எத்துணை அழுத்தமானது என்பது புரியும். வீட்டிலுள்ள பொருள்கள் திருட்டுப்போனது குறித்து லவலேசமும் கவலைப்படாதவர் எனக்கு ஜுரம்

வந்துவிடுமோ என்ற கவலையால் அடக்க முடியாத கோபத்துக்கு உள்ளானார். அதே சமயம் பெரும் பிழையாயிருப்பினும் அதை அறியாமல் செய்திருந்தால் அதற்காக ஆத்திரப்பட அவர் தயாராக இல்லை. குடும்பத்தினரிடம் அவர் பழகும் முறையில் அன்பு அவர்களுக்கு உற்சாக மூட்டும், கண்டிப்பு அவர்களைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்.

மடியில் போட்டுக் கொண்டு கதை சொல்லி இருக்கிறார்; பள்ளிக்கூடப் பாடத்தை நிமிஷமாகப் புரிய வைத்திருக்கிறார்; தினமும் ஒரு ஹாஸ்யத் துணுக்குச் சொல்ல வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்து உற்சாகப்படுத்தியிருக்கிறார்; குழந்தைகளோடு குழந்தையாக அமர்ந்து விளையாடியும் மகிழ்ந்திருக்கிறார். எனினும் இத்தனைக்குமிடையில் அவரிடம் மரியாதை கலந்த ஒரு பயம் எங்களுக்கு இருக்குமாறு பார்த்துக் கொள்ளும் ஆற்றலையும் பெற்றிருந்தார்.

## தனி மனிதர்

ஒரு மாபெரும் ஸ்தாபனமாக விளங்கிய கல்கி, தனி மனிதனாக விளங்கவும் தவறவில்லை. ராஜாஜியிடம் அவர் கொண்டிருந்த பக்தியும் விசுவாசமும் எல்லாருக்கும் தெரிந்த ஒன்றுதான். ஆயினும் அவர் தமது தனித் தன்மைகளை இழந்து விடவில்லை. வெளிப்படையாக ஒரே ஒரு தடவையிலேனும் அவர் ராஜாஜியை மறுத்துரைத்திருக்கிறார். அது ராஜாஜி, "சினிமா பார்க்க வேண்டாம்" என்று மக்களைக் கேட்டுக் கொண்டபோது தான். "இந்த ஒரு தடவை நாம் ராஜாஜி சொல்வதை ஒப்புக் கொள்வதற்கில்லை; ராஜாஜி சொல்கிறாரே என்பதற்காகக் கூட ஜனங்கள் சினிமா பார்க்காமல் இருந்து விட மாட்டார்கள். படாதிபதிகள், ராஜாஜி சினிமா பார்க்கக் கூடாது என்கிறாரே என்று கோபப்படாமல், ஏன் அப்படிச் சொல்கிறார் என்பதை ஆராயவேண்டும். 'சினிமா பார்க்கப் போங்கள்' என்று ராஜாஜி அறிவுரை வழங்குகிற மாதிரியாகத் தரமான படங்களை எடுக்க முயலவேண்டும்"—இப்படிப் பொருள்பட எழுதினார் கல்கி.

ஸ்தாபனமாக விளங்கி எத்தனையோ மக்களை மகிழ்வித்த கல்கி, தனி மனிதன் என்ற முறையில் ரொம்பவும் துயருற்றார். துயருக்குக் காரணம் அவரைப் பீடித்திருந்த ஆஸ்த்துமா நோய். அந்த நோயையும் பொருட்படுத்தாமல், மறந்து, ஒதுக்கிவிட்டு ஒரு ஸ்தாபனமாக இயங்கியதே அவரது பெருஞ் சாதனை. இந்த நோயின் உக்கிரத்தைத் தணிக்க அவர் எவ்வளவோ மருத்துவ முறைகளைக் கையாண்டு பார்த்தார்; பலவித மருந்துகளை உட்கொள்ளவும் செய்தார். இதனால் அவருக்கு மருந்துகள் பேரிலேயே ஒரு வெறுப்பு ஏற்பட்டுவிட்டது எனலாம். அந்த வெறுப்பு ஒரு விசித்திரமான விதத்தில் வெளியாகியது. தமது மகன் மருந்து தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டு பல மருந்துகளைத் தயாரித்து விற்பனை செய்து லாபம் ஈட்ட வேண்டும் என்று பெரிதும் விரும்பினார் கல்கி. மருந்துகளுக்காகத் தாம் செலவழித்திருக்கும் ஆயிரக் கணக்கான ரூபாய்களைத் தம் மகன் மருந்து தயாரித்து விற்றே சம்பாதித்துவிடவேண்டும் என்று அவரது ஆசை.

இதை வெளிப்படையாகச் சொல்லியே என்னை மருத்துவக் கல்லூரி

யில் ஃபார்மஸி துறையில் சேர்த்தார். ரசாயனம் எனக்குப் பிடித்தமான பாடம் அல்ல; அதில் வெற்றி காண நான் சிரமப்பட்டுப்போய்வேன் என்று சொல்லியும் கேட்கவில்லை. "எல்லாம் கொஞ்சம் சிரமப்பட்டுப் படித்தால் பாஸாகிவிடும்" என்ற பதிலேகிடைத்தது அவரிடமிருந்து. எத்தனையோ சுதந்திரம் கொடுத்து வளர்த்திருந்த என்னை இந்த விஷயத்தில் அவர் கட்டாயப்படுத்தியதில் எனக்கு வியப்பு ஏற்படவில்லை. அவர் மனநிலையைப் புரிந்து கொண்டு அந்தத் துறையிலேயே சேர்ந்து படித்துப் பட்டம் பெற்றேன். ஆனால் நான் படித்துப் பட்டம் பெறுமுன்னரே அவர் வாழ்வு முடிந்து விட்டது; எனது காலமும் அவர் விருப்பத்துக்கு விரோதமாகவே எப்படியோ திசை மாறிவிட்டது. எனினும் இன்று இதனை அவர் அறியக் கூடுமானால் அவர் இதற்காக வருத்தப்பட மாட்டார் என்றே எனக்குத் தோன்றுகிறது.

செய்கின்ற காரியத்தில் அந்த ரங்க சுத்தியும் சத்தியமும் இருக்க வேண்டும் என்பதைத்தான் அவர் முக்கியமாகக் கருதுவார். ★



அலை ஓசை"க்கு ஸாஹித்ய அகாதமி அளித்த பரிசை டாக்டர். ராதாகிருஷ்ணனிடமிருந்து பெறுபவர் கல்கி அவர்களின் மகன் கி. ராஜேந்திரன்.

# நண்பர் கல்கி

## சில நினைவுகள்

———

பெ. நா. அப்புஸ்வாமி

கல்கியின் இயற்பெயரையோ, கல்கி என்னும் புனைபெயரையோ, நான் தெரிந்து கொள்வதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னமேயே, அவரை, எழுத்தின் திறமையின் மூலமாக, ஒருவகையில் அறிந்து கொண்டிருந்தேன். அப்பொழுது அவர் திரு.வி.க. நடத்திவந்த பத்திரிகையில், 'தமிழ்த்தேனீ' என்னும் புனைபெயரில், மிகச் சுவையாகப் பல விஷயங்களைப் பற்றி எழுதி வந்தார். 1917ம் ஆண்டு முதலே, பெஸன்டு அம்மையாரோடும், நீதிபதி சதாசிவ ஐயரோடும், திரு.வி.கவுக்கு, ஒத்த பல ஈடுபாடுகள் காரணமாக, நெருங்கிய தொடர்பு இருந்தது. அக்காலத்தில் நிறுவப்பட்ட 'தமிழர் கல்விச் சங்கம்', நடந்துவந்த 'தமிழர் நேசன்', என்பவைகளின் மூலமாகவும், வேறு சில காரணங்களாலும், நானும் சதாசிவ ஐயரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தேன். அக்காரணத்தாலும், தமிழில் எனக்கு இருந்த ஆசையாலும், திரு.வி.க.வோடு நான் பழகிவர நேர்ந்தது. அவர் திறமையோடு நடத்திய பத்திரிகையை நான் படித்து வந்தேன். ஆனால், அந்நாளில் நான் 'தமிழ்த்தேனீயை' நேரில் பார்த்ததாகவோ அல்லது பேசிப் பழகியதாகவோ எனக்குச் சிறிதுகூட நினைவு இல்லை. அவர் எழுதியவற்றைப் படித்ததும் சுவைத்ததும், நினைவு இருக்கிறது. இக்காலத்தில் போலவே, அக்காலத்திலும், எனக்கு அரசியலில் அவ்வளவு பற்று இல்லை. விஞ்ஞானத்தைக் கற்பதிலும், அதை என்னால் இயன்ற தமிழின் வாயிலாகத் தமிழர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்று முயல்வதிலுமே, என் கருத்து அதிகம் ஈடுபட்டிருந்தது. ஆகவே, தமிழ்த் தேனீயைக் காண நான் முற்படவில்லை.

* *

பல ஆண்டுகள் சென்றன. திருநெல்வேலியில் சின்னஞ் சிறு குழுக்களிடையே, தமிழ்மணம் கமழும் தமது புலமையை, வாய்ப்புக்

கிடைத்த அளவுக்குச்சற்றே பரப்பி வந்த டி.கே.சி. (டி.கே. சிதம்பரநாத முதலியார்) சென்னைக்கு வந்து, இந்து சமய அறக்கட்டளை ஆட்சித் துறை ஆணையாளராகப் பதவி ஏற்ருர். நண்பர் வையாபுரிப் பிள்ளையோடும் என்னேடும் தமிழ் இலக்கிய வளர்ச்சியைப் பற்றிப் பல கால் அவர் பேசுவதுண்டு, அப்போ தெல்லாம் 'ஆனந்தவிகடன்' பத்திரி கையில் 'கல்கி' என்னும்ஒருவர், மிக அழகான தமிழில், சுவைபட எழுதி வருகிருர் என்று, அடிக்கடி அவர் சொல்லுவார். சிற்சில வேளைகளில் சுவையான பகுதிகளை அவர் எங்க ளுக்குப் படித்துக் காட்டியதும் உண்டு. ஆதலால், எங்கள் இரு வருக்கும் அவரைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்னும் எண்ணம் தோன்றி, வளர்ந்து வந்தது.

ஒரு நாள் நண்பர் வையாபுரிப் பிள்ளையும் நானும் எங்கள் வீட்டில் பேசிக் கொண்டிருக்கையில், இரண்டு இளைஞர்கள் வந்தார்கள். தாங்கள் இன்னுர் என்பதை அறி வித்துக் கொண்டார்கள். ஒருவர் 'கல்கி', மற்ருெருவர் 'துமிலன்'.

அவ்விருவரும் அந்நாளில் இணை பிரியாத நண்பர்கள். இருவரும் ஆனந்த விகடனுக்குக் கட்டுரை எழுதி வந்தார்கள்; இருவரும் அதன் பத்திரிகைக் குழுவினராகச் சேர்ந்து கொண்டார்கள்; இருவரும் ஒரே வீட்டில் குடியிருந்தும் வந்தார்கள் —முதலில் சென்னை டவுனிலும், பின்பு மாம்பலத்திலும். அவர்கள் அன்று வந்தபொழுதுதான், உறுதி யாக, ஒருவரின் பெயர் கிருஷ்ண மூர்த்தி என்பதும், மற்ருெருவரின் பெயர் இராமஸ்வாமி என்பதும், யார் யார் என்பதும், எங்களுக்குத் தெரிந்தது. அதோடு, இராமனுக்கு ஓர் அவதாரமே பிற்பட்டிருந்த கிருஷ்ணன், புனைபெயரால் இன் ஞெரு படி பிற்பட்டதும் தெரிந் தது. அவர்களாக எங்களைத் தேடி வந்ததில், வையாபுரிக்கும் எனக் கும் இருந்த மகிழ்ச்சி அதிகம். அன்று தொடங்கிய நட்பு நெடுங் காலம் தொடர்ந்து நீடித்துவந்தது.

அந்நாளில் நான் குடியிருந்த சித்திரக்குளத் தெருவில் உள்ள வீட்டில் வாரம் தோறும், ஒரு கூட்டத்தை நடத்தி வந்தேன். தமி ழில் ஆர்வம் உடைய பலர் – புலவர் கள், எழுத்தாளர்கள், பேராசிரியர் கள், பத்திரிகையாசிரியர்கள், இசை வல்லுநர்கள் போன்றவர்கள்—ஒரு சில பெண்களும் கூட—அங்கே வந்து பல விஷயங்களைப் பற்றி இனிமையாக ஏழு, எட்டு மணி நேரம் பேசி விவாதிப்பதுண்டு. கருத்தொற்றுமைகள் பெரும்பகுதி; வேற்றுமைகள் சிறு பகுதி.

அக் கூட்டம் தொடங்கியபோது, சுமார் பத்துப் பேரே இருந்தோம். பின்பு, இருபது, முப்பதாக, அந்தத் தமிழ் அன்பர்கள் பெருகிவிட்டார் கள். வேறு பலரையும் போலவே, கல்கி, துமிலன், வாசன், ஆகியோ ரும் அந்தக் கூட்டத்துக்கு, வாரம்

தோறும், தவருமல் வருவார்கள். இவ்வாறு கல்கியை வாரக் கடைசியில் சந்தித்ததைத் தவிர வாரத்தின் இடைநாட்களிலும் எங்கள் வீட்டிலோ, அவருடைய வீட்டிலோ, ஆனந்த விகடன் காரியலாயத்திலோ நான் சந்திப்பதும் வழக்கமாக இருந்தது.

டி. கே. சி. முதலியோரைக் கல்கி நெருங்கப்பழகியதும், அவர்களோடு அத்துணை சிறப்பான நட்புக்கொண்டிருந்ததும், தமிழுலகம் நன்கு அறிந்த செய்திகள். அவ் இரண்டும் தொடங்கிய இடம் பச்சைப் பசேல் என்ற நீரை உடைய ஒரு சிறிய குளத்தின் கரையில் உள்ள எங்கள் வீட்டு மாடிதான் என்பதை நான் நினைத்துப் பார்க்கும்போது, அந்த நாளில் நாங்கள் வாழ்ந்த வாழ்க்கை எத்துணை சிறந்ததாக இருந்தது என்பதை எண்ணி மகிழ்கிறேன். தமிழின் வளர்ச்சிக்காக அப்போது அங்கே எத்தனையோ மனக்கோட்டைகள் கட்டப்பட்டன; எத்தனையோ கனவுகள் காணப்பட்டன. அவற்றுள் சில நன்கு உருப்பெற்று நனவாகியதை காணும்போது, என் மனம் பூரிக்கிறது. வேறு சில இன்னும் கனவு வடிவிலேயே இருந்து வருவதைக் காணும்போது, அவற்றையும் உருப்பெறச் செய்தவற்கு ஆவன எல்லாம் செய்ய வேண்டும் என்னும் ஆர்வம் பிறக்கிறது.

* * *

ஆனந்த விகடனை' வாசன் வாங்கியபோது, அது அத்துணை சிறப்போ, செல்வாக்கோ, வாசகர்ப் பெருக்கமோ, உடைய பத்திரிகையாக இல்லை. அதை மேன்மேலும் சிறப்பாக நடத்துவதற்குச் செய்ய வேண்டியதை எல்லாம் கல்கி, வாசன், துமிலன் என்னும் மூவருமாகச் சிந்தித்துச் செய்துவந்தார்கள். அவ்வாறுன முயற்சிகளில் ஒன்று அதில் ஒரு சிறுகதைப் போட்டியை நடத்தி, அதற்கு பரிசு அளிக்கவேண்டும் என்பது. சிறந்த கதை இன்னது என்று தேர்ந்தெடுக்க, மதிப்புள்ள குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. வையாபுரிப் பிள்ளை, டி.கே.சி., கல்கி, பேராசிரியர் கே. சுவாமிநாதன் நான் ஆகியோர் அப்போது 'சிறுகதை நீதிபதிகள்' (இன்னும் ஒருவர் இருந்தார் என்று தோன்றுகிறது.) போட்டிக்கு வந்த கதைகளை 'ஆனந்த விகடனின்' ஆசிரியர்-குழு வடிகட்டி முப்பது கதைகளைப் பொறுக்கிற்று. அவை எல்லாம் எங்கள் வீட்டு மாடியில் படிக்கப்பட்டு, மதிப்பிடப் பட்டன. அவற்றுள் மூன்று கதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன என்பதும், டி.கே.சி., கல்கி, சுவாமிநாதன் ஆகியோர் அவற்றை விவாதித்து, கடைசி முடிவை அறிவிக்க வேண்டும் என்று அவர்களிடம் பொறுப்புக்கட்டப்பட்டது என்பதும் நினைவு. முப்பது ஆண்டுகளுக்கு மேலாகி விட்டபடியால் இப்படிச்

சொல்லவேண்டியிருக்கிறது. அந்தப் போட்டியில் 'ராலி' எழுதிய 'ஊமைச்சியின் காதலுக்கு' முதற் பரிசு கிடைத்தது; பி.எஸ்.ராமையா வின் கதைக்கு இரண்டாவது பரிசு. இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நிகழும் போது. எங்களுக்குள்ள நட்பு மேன்மேலும் வளர்ந்து வந்தது. பல ஒற்றுமைகளைக் கண்டோம்.

அந்தப் போட்டிக்குப் பின்பு, சரித்திரக் கதைப் போட்டி ஒன்று ஏற்பாடாயிற்று. அதிலும் என்னை ஒரு நீதிபதியாக இருக்க வேண்டும் என்று கல்கி வற்புறுத்தினர். எனக்கு வேலை மிகுதியாக இருந்தது —வக்கீல் தொழில், விஞ்ஞானக் கட்டுரை, கலைமகளின் ஆசிரிய நிர் வாகம் போன்றவை. ஆகவே, நான் மறுத்து, நண்பர் பேராசிரியர் க.அ. நீலகண்ட சாஸ்திரியே அதற்கு மிகவும் தகுதி வாய்ந்தவர் என்று சொல்லி, அவருடைய இணக்கத்தை யும் வாங்கித்தருவதாக வாக்களிக்க வே, அந்தப் பொறுப்பு என்னை விட்டு விட்டு, அவரைப் பிடித்துக் கொண்டது. அது மிகவும் பொருத்தமானது.

பின்பு, மற்ருெரு போட்டியும் 'ஆனந்த விகடனுல்' நடத்தப்பட் டது. காந்தியின் வாழ்க்கையைப் பற்றி அழகாகப் பாடப்படும் பாட லுக்கு ஒரு பரிசு வழங்க வேண்டும் என்பதுதான் அந்தப் போட்டி விஷயம். அதற்கு ஏற்படுத்திய நீதி பதிக் குழுவிலிருந்து என்னுல் தப்ப முடியவில்லை. அந்தப் போட்டியில் நண்பர் வையாபுரிப்பிள்ளையும் கல்கியும் நானும் உறுப்பினர்கள். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளையின் நொண்டிச் சிந்தே சிறந்தது என்று நாங்கள் முடிவு செய்தோம். அவருக்கே பரிசு வழங்கப்பட்டது. அதற்கு முன்னு லும் பல தடவைகளில் நாமக்கல் கவிஞரை வழக்கறிஞர் எஸ். முத் தையா முதலியாரின் வீட்டில் நான் நேரில் பார்த்துப் பேசிப் பழகிய துண்டு.

அந்தக் காலத்தில் சித்திரக்குளத் தெரு வீட்டு மாடியில்கூடிய குழு வினர் (அதற்குப் பெயர் கிடையாது குழுவாகவும் அது பதிவு செய்யப் படவில்லை; அதற்குச் சந்தாவும் கிடையாது) முயற்சியால் திரு. கே. வி.கிருஷ்ணஸ்வாமி ஐயர் ஊக்கமூட் டியதன் பேரிலும் பெரும்பான்மை யோரின் விருப்பப்படியும், தமிழ் அன்பர் மகாநாடு என்னும் மாநாடு ஒன்று நடைபெற்றது. அதன் சூத் திரதாரர் திரு. கே. வி. கிருஷ்ண ஸ்வாமி ஐயர். அவர் தமிழில் பெரும்புலமை வாய்ந்தவர் அல்லர். ஆயினும் அவர் தமிழுக்குச் செய்த பணிகள் பல, பெரியவையும்கூட. தமிழ் அகராதிக் குழுவின் தலைவ ராக இருந்து, மிக நன்ருகவும் திறம்படவும் அந்தப் பொறுப்பை ஏற்று நடத்தி அகராதியை உரு வாக்கியது ஒரு பணி. மற்ருென்று மேலே குறிப்பிட்ட தமிழ் அன்பர் மகாநாடு. அதைத் தொடங்கு வதற்கான முதற்கூட்டம்,

திரு. கே. வி. கே. யின் வீட்டுமாடியில் 1933–ம் ஆண்டு, ஸெப்டம்பர் மாதம் 24-ம் தேதியன்று கூடிற்று. அந்த மகாநாட்டிற்கு மகாமகோ பாத்தியாய உ. வே. சுவாமிநாத ஐயர் தலைவராகவும், நான் காரிய தரிசியாகவும் பொக்கிஷதாரராகவும் இருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. அதை ஒட்டிநடந்த கூட்டங்களின்போது கல்கியும், பிற தமிழ் அன்பர்களும் கலந்து ஆலோசிக்க வேண்டியவை பல இருந்தன. அனைவரும் மன முவந்து துணை செய்தார்கள். தமிழின் மீதுள்ள ஈடுபாடானது பிற துறைகளில் வேற்றுமையுடைய அனைவருடைய மனங்களையும் ஒன்றுகப் பிணித்தது. தொடக்கக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கியவர் வடமொழிப் பெரும் புலவரான மகாமகோபாத்தியாய எஸ். குப்புஸ்வாமி சாஸ்திரியார். முதற் கூட்டத்தின் நிகழ்ச்சிக் குறிப்புக்கள், அக்கால வழக்கப்படி ஆங்கிலத்தில் பதிவு செய்யப்பட்டன. அடுத்த கூட்டம் முதற்கொண்டு தமிழே அவற்றுக்கு உரிய மொழியாக வழங்கத் தொடங்கி விட்டது. இந்த மகாநாடு சம்பந்தமாகக் கல்கியோடு எத்தனை விஷயங்களைப்பற்றி, எத்தனை நாட்கள் நான் பேசிவந்திருப்பேன் என்று மதிப்பிடவே முடியவில்லை.

அந்த மகாநாட்டின் போது, தமிழ்ப் புத்தகக் காட்சி, குழந்தைப் புத்தகக் காட்சி முதலியவை நடைபெற்றன. தொடக்க நாளன்று (23–12–1933) அரிகேசவநல்லூர் முத்தையா பாகவதரின் முழுத் தமிழிசைக் கச்சேரி நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. அன்று அவர் பாடிய இருபத்தேழு பாட்டுக்களும் தமிழ்ப்பாட்டுக்கள்.

இந்த நிகழ்ச்சிகளை எல்லாம் பற்றிப் பல பத்திரிகைகளும் புகழ்ந்து எழுதின. தமிழ் வளர்ச்சிக்காகக் , கூட்டப்பட்ட முதல் மகாநாடு என்று ஒரு பத்திரிகை எழுதிற்று. "ஆனந்த விகடன்" பத்திரிகையில் அதைப்பற்றி விரிவாக எழுதிய கல்கி, அம்மகாநாட்டில் பங்குகொண்டவர்கள் அனைவரையும் பாராட்டி எழுதினர் என்னைப்பற்றி, தம்முடைய தனி முறையில் அவர் எழுதியது பலரைத் திகைக்கவைத்தது. அந்த வாசகம் வருமாறு; "ஸ்ரீமான்கே.வி. கிருஷ்ணசாமி ஐயருக்கு வலதுகை போலிருந்து வேலை செய்த நண்பர் பெ. நா. அப்புஸ்வாமி அய்யரைப் பற்றி எழுத என் கை ஊறுகிறது. ஆனுல் ஒரு முக்கிய காரணத்தைக் கொண்டு இவ்விடத்தில் என் பேனுவுக்குத் தடை உத்தரவு போட வேண்டியவனுயிருக்கிறேன். அந்தக் காரணம் என்னவெனில், ஸ்ரீமான் அப்புஸ்வாமி அய்யரைப் பாராட்டுவதைக் காட்டிலும் என்னை நானே பாராட்டிக் கொள்ளலாம் என்பது தான்" நாங்கள் இருவரும் ஒருவரே என்பதுதான் அவரது கருத்து. அந்த மகாநாட்டுக்கு காந்தியடிகள்

ஆங்கிலத்தில் தமது கைப்பட எழுதிய ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பிருந்தார். அதில் தமது கையெழுத்தை 'மோ.க. காந்தி' என்று தமிழில் இட்டிருந்தார் (22-12-33). அந்தக் கடிதத்தின் நேர் படி உருவப் பிரதி ஆனந்தவிகடனில் வெளி வந்தது.

எனக்கு இருந்த விஞ்ஞானக் கிறுக்கினால் நான் ஓர் ஐம்பது ஆண்டுகளாக (1917-ம் ஆண்டு முதல்) எத்தனையோ தமிழ்ப் பத்திரிகைகளில் பெரும்பான்மையும் சற்றே சிக்கலான விஞ்ஞான விஷயங்களைப்பற்றி, சற்றே கடுமையான நடையில் எழுதி வந்தேன். இன்னும் எளிமையாகவும், பிற விஷயங்களைப்பற்றிச் சற்றே அதிகமான அளவிலும், எழுத வேண்டும் என்று என்னைத் தூண்டி எழுத வைத்தவர் கல்கி. ஆனந்தவிகடனில் என் முதல் கட்டுரை 1932-ம் ஆண்டில், 'அனைத்து அறிவிலி நாள்' என்று புகழ் பெற்ற ஏப்பிரல் மாதம் முதல் தேதியன்று வெளியிடப்பட்டது. அவர் அப்பத்திரிகையை நடத்தி வந்த நாட்களில், என்னுடைய கட்டுரைகளில் எழுபத்தைந்துபோல் அதில் வெளிவந்தன. அவற்றை பத்திரிகையின் இட அளவுகளுக்கு வேண்டியவாறு வெட்டியமைக்க முழு உரிமையையும் நான் அவருக்கு அளித்திருந்தேன். அது எங்கள் இருவருக்கும் உதவியாக இருந்தது.

விஞ்ஞானத்தைப் பற்றி நான் கதைபோல் விகடனில் எழுதி வந்தது அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. பின்னர், அவர் 'கல்கி' பத்திரிகையைத் தொடங்கி நடத்திய போது எனக்கு பின்வருமாறு கடிதம் எழுதினர். 'புதிய முயற்சியாகையால் குற்றங்குறைகள் இருக்கத்தான் செய்யும். அடுத்துவரும் இதழ்களில் அவை நிவர்த்தி செய்யப்படுமென்று நம்புகிறேன். குறைகளில் ஒன்று விஞ்ஞானக் கட்டுரை ஒன்று இல்லாதது. (1) நீர்முழ்கிக் கப்பல் (2) ஆகாய்விமானம்—இந்த இரண்டில் ஒரு விஷயத்தைப்பற்றி தாங்கள் கட்டுரை எழுதி அனுப்பக் கூடுமானல், அந்தக் குறை அடுத்த இதழில் நிவர்த்தி செய்யப்படும்'. கல்கிக்கு விஞ்ஞானத்தில் பற்று இருந்தது என்பதையும், தமிழ் நாட்டு வாசகர்களுக்கு இன்னும் விஞ்ஞானம் ஒரு பூச்சாண்டியாகவே இருந்துவருகிறது என்பதை அவர் உணர்ந்திருந்தார் என்பதையும், இக் கடிதம் காட்டுகிறது.

* * *

கலைமகள் பத்திரிகை 1932-ம் ஆண்டின் தொடக்கத்தில் தொடங்கப்பட்டது. அதன் முதல் பகுதி வெளிவந்ததும், ஆனந்த விகடனில் 'கலைமகள் விஜயம்' என்னும் மதிப்புரைக் கட்டுரை ஒன்றை கல்கி எழுதியிருந்தார். அதில் நான் எழுதியிருந்த 'செந்நிறப்பூ' என்னும் கட்டுரையை, அவருக்கு உரிய முறையில், பாராட்டியும் நையாண்டி செய்தும் எழுதியிருந்தார். அந்த மதிப்புரை சிலரைத்

திகைக்க வைத்தது. அவர் எழுதியது பாராட்டா, அன்று, என்று சிலருக்கு விளங்காமல் ஐயம் ஏற்பட்டு விட்டது. ஆரியூர் பதுமநாப்பிள்ளை அவர்களில் ஒருவர். அவர் கல்கிக்கு ஒரு கடிதம் எழுதி, தமது முகவரியிட்ட தபால் உறை ஒன்றையும் அதில் வைத்து, 'கலைமகளைப் பற்றி உங்கள் உண்மையான அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டுகிறேன்' என்று எழுதியிருந்தார். அதற்குக் கல்கி, 'என்னுடைய உண்மையான கருத்தைத்தான் அந்தக் கட்டுரையில் வெளியிட்டிருக்கிறேன்' என்று மறு தபாலில் பதில் எழுதி அனுப்பினார். அந்தக் கட்டுரையைக் கலைமகள் நிறுவனத்தார் கலைமகளின் வெள்ளி விழாவின் போது மீண்டும் வெளியிட்டனர். அது பாராட்டுத்தான் என்பதில் ஐயம் இல்லை. ஏனெனில் அம் மதிப்புரையின் கடைசி வாக்கியம் பின்வருமாறு உள்ளது; 'இத்தகைய பத்திரிகை தமிழ் நாட்டில் வெற்றியடையா விட்டால், தமிழுக்குச் சமீபத்தில் நல்ல காலம் பிறக்குமோ என்னும் சந்தேகம் யாருக்கும் வேண்டியதில்லை.'

மேலும், என் வேண்டுகோளுக்கு இணங்கி, கல்கியே கலைமகளுக்கு சில கட்டுரைகளை எழுதியிருக்கிறார். அவற்றுள் முதலாவது 'தப்பிலி கப்' என்னும் கதை.

* * *

நான் அரசியல் துறையில் ஆழமாக இறங்கியதில்லை, சுமார் நாற்பத்தெட்டு ஆண்டுகளுக்கு முன் அதில் அடி வைக்க முயன்றபோது அத்துறையில் பணிபுரியப் போதியன உறுதியும், அறிவும், எனக்கு இல்லை என்பதைக் கண்டு, பின் வாங்கி விட்டேன், அக்காலத்தில் அரசியல் துறையில் நான் கண்டிருந்த கோக்கலே, ஸ்ரீநிவாஸ சாஸ்திரி போன்ற பேரறிஞர்களோடும், பெஸன்டு அம்மையார் போன்ற தியாகிகளோடும், என்னை ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டதுதான் அப்படி நான் பின்வாங்கியதற்குக் காரணம்.

ஆனால், பிற்காலத்தில், அயல் நாட்டுப் பொருள் முதலியவற்றை வாங்கலாகாது என்று தடை செய்த நாட்களில் தொண்டர்கள் முரட்டுத்தனமாக தெருவில் இழுக்கப்பட்டு, அண்டையில் உள்ள கிரிக்கெட்டு மைதானத்தில் போட்டு அடிக்கப்பட்டதையும், அவர்களை விரட்டுவதற்காகப் பச்சை நிறம் தோய்த்த நீரை அவர்களின்மீது பாய்ச்சிப் பொழிந்ததையும் கண்டபோது, என் மனம் மிகவும் வருந்தியது, விலங்குகளுக்குக் கொடுமை செய்வதைத் தடுக்கும் சங்கத்தாரோடும், இளகிய மனமுடைய பிறரோடும், அதைப்பற்றிப் பேசினேன். ஒரு கட்டுரையை 'ஆனந்த விகடனில்' பிரசுரிப்பதற்காக எழுதிக் கல்கியிடம் கொடுத்தேன். அதைக் கண்டு அவர் சற்றே தயங்

பின்பு சில திருத்தங்களைச் செய்தார். அதன் பின்பு அதை வெளியிடுவதாகச் சொல்லி எடுத்துப் போனார். அது 'ஆனந்த விகடனில்' வெளிவரவில்லை. அந்த வரலாற்றைக் கல்கியே 'பாழடைந்த பங்களா' என்றும் தமது கதையில் கூறியிருக்கிறார். அதில் 'குப்புசாமி' என்று குறிக்கப்பட்டவன் நான் தான் என்று ஒப்புக் கொள்கிறேன்.

* * *

இவ்வாறு, எத்தனையோ துறைகளில், எத்தனையோ சந்தர்ப்பங்களில், நாங்கள் நெருங்கிப் பழகி வந்தோம். பின்னர், அவர் கீழ்ப்பாக்கத்துக்குச் சென்ற பிறகு, நாங்கள் சந்திக்க அத்தனை வாய்ப்புக்கள் ஏற்படவில்லை, இருவருக்கும் இருந்த பிற அலுவல்களும், அவற்றின் மிகுதியும், முன்னைப் போல் நாங்கள் நெருங்கிப் பழக இடங்கொடுக்கவில்லை,

அதற்குப் பல ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் காந்தி நகரில் வந்து குடியேறினார். இதற்கும் நான் ஓரளவு பொறுப்பாளி என்றே நினைக்கிறேன். அவருக்கு காசம் (ஆஸ்த்துமா) என்று சொல்லப்படும் மூச்சுத் தடையும் இருமலும் கலந்த நேரம் உண்டு. சற்றே உலர்ந்த இடத்தில் அது அதிகமாக வராது. காந்திநகருக்கு நான் குடி வந்த காலத்தில், அங்கே உள்ள காற்று உலர்ந்ததாக இருக்கக் கண்டேன். கல்கியையும் அங்கே வந்தால் நல்லது என்றேன், ஆனால் சில நாள் சோதனை பார்த்துவிட்டு, பின்பு வருவதே நலம் என்றேன்.

ஆதலால் அவர் காந்திநகர் நாலாவது ரோடில் ராஜாஜியின் மகளுக்குச் சொந்தமானதும், வடக்கைப் பார்த்ததுமான ஒரு வீட்டில் சிலகாலம் குடியிருந்து பார்த்தார். அதனால் குணம் இருந்ததாகத் தெரியவே, அந்த வீட்டுக்கு இரண்டு பர்லாங்குக்கு மேற்கே, தெற்குப்பார்த்த ஒரு வீட்டை விலைக்கு வாங்கி, அதில் குடியேறினார். நாங்கள் இடைக்காலத்தில் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டதைவிட அப்போது சற்றே அதிகமாகச்சந்திக்க வாய்ப்பு இருந்தது.

அவரைப்பற்றிய எத்தனையோ நினைவுகள், எத்தனையோ சுவையான அனுபவங்கள், பேச்சுக்கள், என் மனக்கண்ணின் முன்னேவந்து நிற்கின்றன. என் பேனாவை 'எழுது' என்று தூண்டுகின்றன. ஆனால் அவரே மற்றோர் இடத்தில் கூறியதுபோல், 'என் பேனாவுக்குத் தடை உத்திரவு போட வேண்டியவனாக இருக்கிறேன்.' அந்தக் காரணம் என்ன எனில், அவரைப் பற்றிய நினைவு ஒவ்வொன்றிலும், அவரும் நானும் ஒன்றாக இருந்த போது நிகழ்ந்த நிகழ்ச்சிகளையே கூறவேண்டியிருக்கிறது. அவரைப் பற்றிச் சொல்லும்போது, கூடவே என்னைப்பற்றிச் சொல்லுவதாகவும் அவை அமைந்துவிடுகின்றன.

ஒதுங்கி, மேலிருந்து மதிப்புரையாகவோ, கீழிருந்து பாராட்டுரையாகவோ, சொன்னால் அன்றி, உடன் இருந்து சொல்லும்போதெல்லாம், அவரைப்பற்றிச் சொல்லும்போது என்னையும் இணைத்தே சொல்லவேண்டியிருக்கிறது.

* * *

கடைசி நினைவு அவர் காலமான நாளை ஒட்டியது. அவர் காந்தி நகரில் குடியேறிய பின், சில காலம் இனிமையாக வாழ்ந்தார். நல்ல நூல்களை எழுதினார்; மேன்மேலும் புகழ் பெற்றார். ஆனால், சில காலத்துக்குப் பிறகு, அவருடைய உடல் தளர்ச்சியடைந்தது. சிகிச்சைகளால் அவர் நலம் பெறவில்லை. அந்த வீட்டில் அவர் காலமானார்.

அந்தச் செய்தி விரைவில் நகர் எங்கும் பரவியது. ராஜாஜி போன்ற நெடுங்கால நண்பர்களும், குடும்பத்தை நன்கு தெரிந்தவர்களும், அவரோடு ஒத்துப் பலதுறைகளில் உழைத்த நண்பர்களும், அவரைப் பாராட்டிய வாசகர்கள் பலரும், அங்கே கூடித் தங்கள் துயரத்தைத் தெரிவித்தார்கள். இது பெரிதன்று. அவரோடு கருத்தொற்றுமையே இல்லாதவர்களும், அவருடைய கூரிய பேனாவின் முனைக்கு இலக்காகியிருந்தவர்களும் கூட அங்கே கூடியது அவருடைய உண்மைப் பெருமையை உணர்த்துகிறது. அப்படி அவர்கள் கூடிய மரணத்தால் ஏற்பட்ட பெரும் துயர்நிலையில் தங்களுடைய சிறிய சச்சரவுகளை எல்லாம் அவர்கள் மறந்தார்கள் என்பதையும், தமிழில் அவர்களுக்கு மிக்க ஈடுபாடு இருந்தது என்பதையும் புலப்படுத்தியது. அவர்களுடைய மெய்யான பண்பாட்டை அது உணர்த்தியது.

அவருடைய ஈமக்கிரியைகள் நடந்த நன்காட்டில், அறிஞர் சிலர் பேசியபோது தங்களுக்குள்ள வேற்றுமைகளை எல்லாம் அறவே மறந்து, கல்கியின் கலைப்பணி, தேசத்தொண்டு, தமிழ் ஆற்றல், முதலியவற்றையே மனமாரக் கூறிப் புகழ்ந்ததும், அவருடைய ஆன்மாவை மேலும் திருப்திப்படுத்தியிருக்கும் என்பதில் ஐயம் இல்லை.

அவருடைய பூதஉடல் அன்றோடு அழிந்தது. அவருடைய பேரும் புகழும், அவர் தொடங்கி வைத்த நிறுவனங்களும், அவர் இயற்றிய நூல்களும், அவர் நெடுங்காலம் தொடர்பு கொண்டிருந்த ஆனந்த விகடனும், அவரே தொடங்கி நடத்திவந்த கல்கியும், இன்றும் நிலைநிற்கின்றன.

# மாணிக்கம்

ராஜாஜி

கல்கியின் எழுத்துப் பண்பை அனுபவித்தவர்கள் அதன் ரகசியத்தை உணர வேண்டும். தமிழின் சிறப்பு தமிழில் மறைந்து கிடக்கிறது. அது அனைவருக்கும் பொதுவான சொத்து. தோண்டி எடுக்கக் காத்திருக்கிறது. அது கல்கியோடு மறைந்து போக வேண்டியதில்லை. விஷயத்தைத் தெளிவான அறிவுடன் உணர்ந்து கொண்டே யாரும் எழுதவேண்டும். எழுதுபவர் உள்ளத்தில் முதலில் தெளிவு ஏற்பட வேண்டும். சந்தேகமின்றி, குற்றமின்றி, பொருளை உணர்ந்து கொண்டு, அதைத் தெளிவான தமிழில் விளக்கி வந்தார் கல்கி; மொழி அதிகமாக வளரவிடாமல் அடக்குவார். பத்து வார்த்தைகளில் சொல்லிக் குழப்பாமல் எதையும் நாலு வார்த்தைகளில் விளக்கி முடிப்பார். ஆடம்பரத்தில் விஷயம் மறைந்து போகாமல் காத்து எழுதுவார். உடை கொஞ்சமாகவும் மூர்த்தி அதிகமாகவும் ஜொலிக்கும். கல்கியின் எழுத்தில் நின்று தரிசனம் காட்டும் கலைமகளின் விக்கிரகம். அவர் வீட்டிலும் தெருவிலும் ஒலிக்கும் தமிழே தம் தமிழாக வைத்துக் கொண்டு நாவலர்தம் தமிழுக்கு கவுரவம் செலுத்தி வந்தார், புல்லும் தவிடும் புண்ணாக்கும் போட்டுக் கறவை மாட்டை வளர்ப்பது போல் வளர்த்தார். பால் நன்ருகக் கறந்தது.

கற்பனைச் செல்வம் வேறு, எழுத்தின் திறமையும் அழகும் வேறு. கற்பனைச் சக்தியானது வியக்தியின் தனிச் செல்வம். அது பிறப்புடன் வரவேண்டும். பண்பாட்டினுல் வளர வேண்டும். பயிற்சியினுல் உயிருடன் வடிவம் எடுத்துப் பிறருக்குத் தரிசனம் தரவேண்டும். இது படிப்பினுல் வராது. எந்த மொழியிலும் சில மகான்களுண்டு. இந்தச் செல்வத்தைப் பெற்று புகழடைந்து மக்களை மேன்மையடையச் செய்தவர்கள் எந்தக் காலத்திலும் உண்டு. இந்தக் காலத்தில் தமிழ் நாட்டில் கல்கி, அந்தச் சக்தியைப் பெற்றிருந்தார்.

செய்யுளுக்கு உரிய எதுகை மோனை இவற்றை வசனத்தில் அடுக்க மாட்டார். அது ஆணுக்குப் பெண் வேஷம் போடுவது போல் என்பது அவர் கருத்து. ஆனல் வசனத்துக்குரிய ஓட்டமும் லயமும் விடமாட்டார், விளங்க வேண்டிய பொருள் தங்குதலும் தடைபடுதலுமில்லாமல் ஆற்றெழுக்காகச் சொல்லுடன் செல்லச் செய்வார்,

தமிழ் நாட்டில் ஹாஸ்யத்துக்குத் தண்ணீர் வார்த்து வளர்த்த ஒரு பேராசிரியர் கல்கி, அவர், துன்புறுத்துவது ஹாஸ்யம் என்ற பொய்யை யகற்றி, உண்மை மகிழ்ச்சியுடன் கூடிய சிரிப்பைத் தமிழ் நாட்டில் பரப்பி வந்தார். சிரிப்பு எல்லாம் சிரிப்பல்ல, அறிவும் இரக்கமும் நிறைந்திருந்தது கல்கியின் சிரிப்பெழுத்தில். அது அவருடைய தனிச் செல்வமாகத் தமிழுலகம் கண்டது.

(கல்கி மறைந்ததும், 1954-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கல்கி வாரப் பத்திரிகையில் ராஜாஜி எழுதிய கட்டுரையில் ஓர் பகுதி)

# நான் கண்ட கல்கி

எஸ். எஸ். வாசன்

'அடவியில் எத்தனையோ நறு மலர்களும், ஆழ்கடலில் எத்தனையோ ரத்தினங்களும் தேடுவார் அற்றுக்கிடக்கின்றன' என்று பாடினார் ஓர் ஆங்கிலக் கவிஞர்.

இம்மாதிரி, எழுத்தாளர் உலகில் இருக்கும் அரிய மலர்களையும், அபூர்வ ரத்தினங்களையும், தேடிக் கண்டுபிடித்து வாசகர்களுக்குத் தருவதும் ஒரு பத்திரிகை ஆசிரியரின் கடமை. அப்போதுதான் எழுத்தில் புதுமையும், ஒளியும், கருத்தைக் கவரும் தன்மையும் இருக்கும்.

மேற்கண்ட கொள்கையை நான் முழுவதும் கடைபிடித்து வந்திருக்கிறேன் என்று கூறிக் கொள்ளவில்லை. ஆனால் இம்மாதிரி ஒரு சந்தர்ப்பம் கிடைத்தால், அதை மட்டும் நான் நழுவ விடுவதில்லை.

ஒரு நாள் ஒரு நண்பரைக்கூடவே அழைத்துக் கொண்டு என் இல்லத்திற்கு திரு நெல்லையப்பர் வந்தார். "இவர் 'தேனீ' என்ற புனைபெயரில் நவசக்தி பத்திரிகையில் கட்டுரைகள் எழுதிக் கொண்டிருக்கிறார். உங்களுக்கும் தெரிந்திருக்கும். 'ஆனந்த விகடன்' பத்திரிகைக்கு விஷயதானம் செய்ய ஆவலுடன் இருக்கிறார். அவரைத் தாங்கள் உபயோகப்படுத்திக் கொள்ள முடியுமா?" என்று கேட்டுவிட்டு, திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

"ஒரு கட்டுரை எழுதி அனுப்பச் சொல்லுங்கள், பார்க்கிறேன்" என்றேன் நான்.

இரண்டே நாட்களில் முதல் கட்டுரை வந்து சேர்ந்தது. அதன் பெயர், 'ஏட்டிக்குப் போட்டி!' 'கல்கி' என்ற புனைப் பெயரை முதன் முதல் அவர் சூட்டிக்கொண்டது இந்த கட்டுரையில்தான்.

ஆம்! அந்தக் கட்டுரையே ஏட்டிக்குப் போட்டியாகத்தான் இருந்தது.

"எழுத்தில் ஹாஸ்யமே வரக் கூடாது, படிப்பவர்கள் சிரித்து விட்டால் பாபம். தமிழை வளர்ப்பது ஒன்றுதான் பத்திரிகையின் கடமை' என்று கரடுமுரடாகப் பல கட்டுரைகள் வந்து கொண்டிருந்த காலம் அது. அதற்கு முற்றிலும் மாறுபட்டதாக இருந்தது. கல்கியின் 'ஏட்டிக்குப் போட்டி!' குழந்தைக்கும் புரியக் கூடியதாக இருந்

தது அவர் எழுதிய நடை. படிக்க முடிந்தது. படிக்கும்போதே சிரிப்பு வந்தது. அடிப்படைக் கருத்தும் ஆழமாக இருந்தது. 'ஆகா, இவ் வளவு நன்ருக எழுதுபவர் ஒருவர் இருக்கிருரே' என்று நான் ஆனந்த மடைந்தேன். கட்டுரையை இரண்டு மூன்று முறை படித்தேன். கூட இருந்தவர்களுக்குப் படித்துக் காட்டினேன். அவர்களும் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

முதல் கட்டுரை விகடனில் வெளி வந்துவிட்டது. சன்மானமாக ஐந்து ரூபாய் அனுப்பினேன் என்று ஞாபகம். பணம் எவ்வளவு என்பதுதான் மறந்து போய் விட்டது. ஆனல் "உங்களுடைய அடுத்த கட்டுரையை எதிர்பார்க்கிறேன்" என்று நான் கடிதம் எழுதியதை மட்டும் இன்னும் மறக்கவில்லை.

'பூரி யாத்திரை' எனும் தலைப்பில் அடுத்த கட்டுரை வெளியாயிற்று. அதற்குச் சன்மானத்தை இரட்டிப்பு ஆக்கினேன். பிறகு இருவரும் அடிக்கடி சந்தித்தோம்.

சில மாதங்களில் 'ஆனந்த விகடன்' ஆசிரியராகவே அவரை ஆக்கிக்கொண்டேன். அப்பொழுது அவர் திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் ராஜாஜிக்குத் துணையாயிருந்தார். ராஜாஜி இதற்கு அனுமதி கொடுத்தார்.

சிறந்த எழுத்தாளர் ஒருவர் தமிழ் நாட்டிற்குக் கிடைத்தார் என்று அவரை ஆசிரியராக அமைத்த விஷயத்தில் ஆனந்த மடைந்தேன். அவரைப் போல் இன்னொரு எழுத்தாளர் கிடைப்பாரா?' என்று நான் அப்போதே ஆச்சரியப் பட்டதுண்டு. அந்த ஆச்சரியம் இன்னும் தீரவில்லை.

* * *

அரசியலில் சிலர் சிறந்த எழுத்தாளராக இருப்பார்கள். கலை விமரிசனம், புத்தக விமரிசனம், இவற்றில் சில பேர் சிறந்தவர்களாக இருப்பார்கள். பொருளாதாரத்தையே ஒருவர் கரைத்துக் குடித்திருப்பார். சிலர் பிரயாணக் கட்டுரைகளைப் பிரமாதமாக எழுதுவார்கள். ஆனல் கிருஷ்ணமூர்த்தியோ, மேற்கண்ட எல்லா விஷயங்களிலுமே நிபுணராக விளங்கினுர். சிறு கதைகள், தொடர் கதைகள் எழுதுவதில் அவருக்கு நிகர் அவரே என்பதைச் சொல்லவா வேண்டும்?

பிரயாணக் கட்டுரைகளை எழுதுவதற்கென்றே அவர் பல ஊர்களுக்குப் போயிருக்கிருர். ஒரு முறை அந்தக் காலத்துக் காற்ருடி விமானத்தில் மாலி, கல்கி ஆகிய இருவரும் கொழும்புக்குப் போய்வந்தார்கள். மற்ருெரு முறை 'ஆனந்த விகடன்' காரியாலயத்தில் உள்ள அத்தனை பேரையும் அழைத்துக் கொண்டு மைசூருக்குச் சென்று வந்தோம். அவரும் மாலியும் ஆண்டுதோறும் நடைபெற்று வந்த காங்கிரஸ் கூட்டங்களுக்குப் போய் வந்திருக்கிருர்கள், அவர் மாத்திரம் போய்வந்த இடங்களும் உண்டு. அது சிறைச்சாலை.

சிறை அனுபவங்களைக் கலந்து அவர் எழுதிய கட்டுரைகளின்மூலம் நூற்றுக் கணக்கான தமிழ் நாட்டு இளைஞர்களைக் காங்கிரஸ் பணியில் ஈடுபடச் செய்து, தயங்காமல் சிறை செல்ல வைத்த பெருமை அவருக்கு உண்டு.

சங்கீத விழாக் காலங்களில் நிகழ்ச்சி நிரலில் அச்சிடாத ஓர் அரிய நிகழ்ச்சியாக விளங்கும் அவருடைய சங்கீத விமர்சனங்கள். 'கர்நாடகம்' எனும் பெயரில் ஆடல் பாடல்களை அவர் விமர்சனம் செய்துவந்தார். இன்றைக்கும்கூட அவர் கட்டுரையைப் படித்தால் ஒரு நல்ல கச்சேரி கேட்ட இன்பத்தை அதில் பெறலாம். பாராட்டவும், கண்டிக்கவும் அவர் தயங்கியதே இல்லை, ஆனால் அவரால் கண்டிக்கப்பட்டவர்களும், அவர் எழுத்துக்காக அவரைப் பாராட்டுவார்கள். தோடியை ராஜரத்தினம் ஒரு 'பிளேட்'டில் அடக்கினர்; அதையே 'கல்கி' ஒரு 'ஷீட்'டில் அடக்கினர். ரத்தினச் சுருக்கம் என்று சொல்வார்களே, அதை அந்த விமர்சனத்தில் காணலாம்.

பரதநாட்டியத்தைத் தமிழ் நாட்டினர் பாராத நாட்டியமாக ஆக்கி வைத்திருந்த காலம் அது. அதை மாற்றிப் பெரிய குடும்பங்களிலும் பலரை நாட்டியம் கற்றுக் கொள்ளும்படி செய்த பெருமையில் திருமதி ருக்மணிதேவி, திருமதி பாலசரஸ்வதி இருவருக்கும் எத்தனை பங்கு உண்டோ, அத்தனை பங்கு 'கல்கி'க்கும் உண்டு.

விசேஷக் கட்டுரைகளை எழுத, அவர் கையாண்ட முறைகள் எனக்கு இன்னும் நினைவிலிருக்கின்றன. வீடுகட்ட ஒருவர் முதலில் தகுந்த இடத்தைத் தேடுவதைப்போல், கட்டுரை எழுதத் தகுந்த விஷயம் ஒன்றை முதலில் அவர் தேடுவார். கூட்டத்திற்கு வேண்டிய செங்கல், மரம் முதலியவற்றைச் சேகரிப்பதைப்போல, எழுதும் பொருளைப் பற்றிய நூல்களைச் சேகரித்து ஆராய்வார். வேலையில் நிபுணர்களாகிய கொத்தனர், தச்சர் முதலியோரைத் தேடி வேலையைக் கொடுப்பதுபோல், எழுதும் விஷயம்பற்றித் தெரிந்த நிபுணர்களிடம் சென்று, கலந்து பேசுவார். கட்டடத்தை முடிப்பது போல் கட்டுரையை முடிப்பார். அதன்பிறகு தமக்கே உரித்தான ஹாஸ்யம் என்னும் வர்ணச் சித்திரங்களைத்தீட்டிக் கட்டுரையை வெளியிடுவார். அச்சு இயந்திரத்தில் 'பாரம்' ஓடிக்கொண்டு இருக்கும்போதுகூட, அதை நிறுத்தித் திருத்தங்களைச் செய்வார்.

இம்மாதிரி அவர் வெளியிட்ட சிறந்த கட்டுரைகள்தாம் 'ஸ்டெர்லிங் விஷயம்' 'ஓ, மாம்பழமே' போன்றவை.

இன்று அவருடைய நினைவுச் சின்னமாக நமக்கு நிற்பவை நான்கு செல்வங்கள்.

ஒன்று: அவர் பெயரில் வெளிவரும் 'கல்கி' பத்திரிகை. இரண்டாவது: எட்டையபுரத்திலுள்ள பாரதி மண்டபம். மூன்ருவது: அடையாற்றிலுள்ள காந்தி மண்டபம். நான்காவது: ஆனந்த விகடன்தான் என்று சொன்னல் அது மிகையல்ல. ★

உபயம்—ஆனந்த விகடன்

# பத்திரிகை உலகப்பணி

முருகு. சுப்பிரமணியன்

[மலாய பல்கலைக் கழகத்தில் மலாயா தமிழ் எழுத்தாளர் சங்கமும் மலாயா பல்கலைக் கழக இந்தியத் துறையும் சேர்ந்து 20 . 10 . 63இல் , கல்கி அவர்களின் எழுத்துத் திறனை ஆய்வதற்கு எழுத்தாளர் கருத்தரங்கு ஒன்றினைச் சிறப்புற நடத்தின. இதில் பங்கெடுத்துக் கொண்டு ஆய்வுரை வழங்கிய ஐவரில் ஒருவர் கோலாலம் பூரிலிருந்து வெளிவரும் 'தமிழ்நேசன்' பத்திரிகையின் ஆசிரியர் திரு. முருகு. சுப்பிரமணியன். அவருடைய ஆய்வுரையில் ஒரு பகுதியை இங்கு தருகிறோம்,]

தமிழ்ப் பத்திரிகை உலகத்தில், மக்களின் நெஞ்சில் நிலைத்துவிட்ட இதழ்களை வரிசைப் படுத்தினால் திரு. வி. க, நடத்திய நவசக்திக்கு முதலிடம் கிடைக்கும். பிறகு குறிப்பிடத்தக்க இதழ் ஆனந்த விகடன். அதற்குப் பிறகு கல்கி. இப்பொழுது மிகவும் செல்வாக்குள் பத்திரிகையான, விற்பனை எண்ணிக்கையில் முதன்மை வகிப்பது, குமுதம். வார இதழ்கள் என்று கொண்டால், மக்களைக் கவர்ந்த வேறு பத்திரிகைகள் நம் நினைவுக்கு வரவில்லை. தமிழகத்திலும், மற்றும் தமிழ் பேசும் வேறு பல நாடுகளிலும் இன்றும் பல தமிழ்ப் பத்திரிகைகள் இருக்கின்றன என்றாலும், எப்பொழுதும் மறவாது இருக்கக் கூடிய அரிய பணியை ஆற்றியிருப்பவை, நான் மேலே குறிப்பிட்ட ஒரு சில இதழ்களே ஆகும்;

ஒன்று நவசக்தி, மற்றொன்று ஆனந்த விகடன், இன்னொன்று கல்கி, வேறு ஒன்று குமுதம். இந்த நான்கு இதழ்களில் மூன்றுடன் கல்கி தொடர்பு கொண்டவர். கல்கியின் பத்திரிகைத்துறை வாழ்க்கை நவசக்தியில்தான் ஆரம்பமாயிற்று, திரு எஸ். எஸ். வாசனின் பத்திரிகையான ஆனந்த விகடனை உயர்ந்த நிலைக்கு ஏற்றியவர் கல்கி. பிறகு அவர், தம்பெயரிலேயே கல்கி என்ற பத்திரிகையை நடத்தி வந்தார்; ராஜாஜி நடத்திய விமோசனம் என்ற பத்திரிகையிலும் சில நாள் பணியாற்றி யிருக்கிறார். ஆகவே, தமிழ் மக்களிடம் செல்வாக்குப் பெற்று விளங்கிய, விளங்கிவருகிற மூன்று பத்திரிகைகளில் கல்கி, தம் எழுத்துப் பணியை நிகழ்த்தி யிருக்கிறார்.

நவசக்தியில் சேருவதற்கு முன்பு, 'தமிழ்ப் பேரறிஞர் திரு வி. க.வின் பத்திரிகையிலாவது, நாம் சேருவதாவது' என்று கல்கி அஞ்சினார். ஆனால் பிழையில்லாமல் தமிழ்நடை எழுதுவதாகக் கல்கியின் மொழி

பெயர்ப்பைப் பார்த்தமாத்திரத்தில் திரு வி க. கருத்துரைத்த பிறகே கல்கிக்குத் துணிவு பிறந்தது. திரு. வி. க.வை ராயப்பேட்டை முனிவர் என்று கல்கி சிறப்பித்து எழுதியிருக்கிறார். ஒரு சமயம் 'லார்டு சிவா' என்பதைச் சிவபெருமான் என்று மொழிபெயர்க்காமல் இறைவன் என்று கல்கி மொழிபெயர்த்து விட்டார், அந்த ஒரு நிகழ்ச்சியின் போது மட்டுமே திரு வி. க. கல்கியை அழைத்துக் குறுக்கு விசாரணை செய்தார். இந்த நான்கு வருடத்தில் திரு. வி. க. ஒரு தடவையாவது ஒரு வார்த்தையாவது கடிந்து பேசியதில்லை. முகத்தைச் சுளுக்கியதுகூடக் கிடையாது. "சிவபெருமான் சம்பவத்தைப்பற்றி குறுக்கு விசாரணைச் செய்ததை தவிர எனக்கும் அவருக்கும் எவ்விதமான தகராறும் ஏற்படவில்லை" என்று கல்கி திரு. வி. கவைப்பற்றி எழுதியிருக்கும் கட்டுரையில் கூறியிருக்கிறார். நவசக்தியை விட்டு கல்கி விலகியதற்குக் காரணம், பெரும்பாலும் மொழிபெயர் பு வேலையையே அவர் அங்கு செய்யவேண்டியிருந்ததே யாகும். பொன்னியின் செல்வனையும், சிவகாமியின் சபதத்தையும் இன்னும் நூற்றுக்கணக்கான கதை கட்டுரைகளையும் சொந்தமாக எழுதக்கூடிய ஆற்றல் படைத்த கல்கி, வெறும் மொழிபெயர்ப்பில் மன நிறைவு அடையாததில் வியப்பில்லை. திரு. வி. க.வின் தமிழ் நடையைத் தாம் கையாள முடியவில்லை என்பதையும் கல்கி வருத்தத்தோடு குறிப்பிடுகிறார். நவசக்தியை விட்டு அவர் விலகியதற்கு இதும் ஓர் காரணமாகும்.

நவசக்தியை விட்டு கல்கி விலகிய காலை, திரு. வி. க. அவருக்காக அந்த வேலையை ஆறுமாதம் வரையில் நிரப்பாமல் வைத்திருக்கப் போவதாகக் கூறினர் என்றால், கல்கியிடம் திரு. வி. க. எத்துணை அன்பு கொண்டிருந்தார் என்பது புலனாகும்.

கல்கி எளிய குடும்பத்தில் பிறந்தவர். பெரிய படிப்பாளி அல்லர். என்றாலும் தன் சொந்த முயற்சியால் முன்னுக்கு வந்த மேதை. சுப்பிரமணிய பாரதியார் தமிழ்க் கவிதையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தினர். மக்களை நோக்கி மக்களுக்காகவே பாட்டுக்களை அவர் இயற்றினர். பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்த பெருமை பாரதிக்கு உண்டு என்றால், தம் பத்திரிகைப் பணி மூலம் உலகத்தை ஆட்டிப் படைத்த பெருமை கல்கிக்கு உண்டு கல்கியின் எழுத்து அத்துணை சக்தி வாய்ந்தது.

சாவதற்கு முன்பு என் சக்தி முழுவதையும் உபயோகித்துவிட விரும்புகிறேன்; வாழ்க்கையை ஒரு சிறு மெழுகுவர்த்தியாக நான் கருதவில்லை. அதை ஓர் அற்புத ஜோதியாக மதிக்கிறேன். அதை எதிர் காலச் சந்ததியாருக்குக் கொடுப்பதற்கு முன்பு. எவ்வளவு பிரகாசமாக எரியவைக்க முடியுமோ அவ்வளவு பிரகாசமாக எரியவைக்க விரும்புகிறேன்" என்றார் கல்கி. அதை அப்படியே வாழ்க்கையிலும் கடைப்பிடித்தார்.

கல்கி, தம் எழுத்து மூலம் நாட்டில் தேசபக்தியை வளர்த்தார். அவர் கூலி எழுத்தாளர் அன்று. தனக்கென்று சில குறிக்கோள்களை வாழ்க்கையில் அவர் பின்பற்றினர். அவருடைய எழுத்தில் இந்த இலட்சிய வெறியைக் காண முடிந்தது. நாட்டுக்காக மூன்று முறை சிறை சென்றவர் கல்கி. 'மூன்று மாதக்

கடுங்காவல்' என்னும் தலைப்பில் தம் சிறை அனுபவங்களை அவர் சுவைபடத் தீட்டியிருக்கிறார்.

கல்கிக்கு தன்னம்பிக்கை அதிகம், தம் வாழ்நாள் முழுதும் மானத்தோடும் மரியாதையோடும் வாழ்ந்தார். அரசியல் தலைவர்களுக்கு மக்களிடம் எவ்வளவு செல்வாக்கு இருந்ததோ அவ்வளவு செல்வாக்கு அவருக்கு இருந்தது. தமிழ் நாட்டில் கல்கிக்கு முன்னும் பின்னும் எந்த ஒரு பத்திரிகை ஆசிரியரும் இத்தகைய மகோன்னத நிலையை அடைந்ததாகச் சொல்ல முடியாது. திரு. வி. க. போன்றவர்கள் மக்களிடையே செல்வாக்கு மிக்கவர்களாக விளங்கினாலும் பொருளியல் துறையில் முழுமையின் வெற்றியை அடையவில்லை. ஆகவே, பேராசிரியர் கல்கி வகித்துவந்த பதவி ஈடு இணையற்றது என்பது தேற்றம்,

கல்கி ஒரு தனி மனிதராக விளங்கவில்லை. ஒரு பெரிய இயக்கமாகவே அவர் திகழ்ந்தார். தமிழ் நாட்டில் நடந்த முக்கிய விழாக்களிலெல்லாம் அவர் பங்கேற்றார். 'எட்டையபுரம் பாரதி விழா' போன்றவற்றை அவரே முன்னின்று நடத்தினார். அறையில் உட்கார்ந்து எழுதியதோடு அவர் மனம் திருப்தி யடையவில்லை. நீண்ட பிரயாணங்களை மேற்கொண்டு, மக்களை நேருக்கு நேர் சந்தித்து, ஆங்காங்கு நடக்கும் கூட்டங்களில், உரை நிகழ்த்தி, மக்களின் உள்ளங்களை அறிந்தவர் கல்கி. எழுதுவதற்கு அவர் களைத்ததில்லை. அது போலவே, சொற்பொழிவு நிகழ்த்தவும் அவர் சளைத்ததில்லை. நகைச்சுவை மிளிரப் பேசுவதிலும் அவர் வல்லவராக இருந்தார். தமிழிசை இயக்கத்திற்கு அவர் ஒரு தளபதிபோலத் தொண்டாற்றினார். பெரிய பெரிய வித்வான்களின் மன வருத்தத்தைத் தமிழிசை இயக்கத்தினால் அவர் தேடிக்கொண்டார். என்றாலும் தமிழிசை இயக்கத்தை வேர் ஊன்ற வைத்து, அரியக்குடி போன்ற பிடிவாதக்காரர்களையும் தமிழ் பாட்டுக்களைப் பாடச் செய்த பெருமை கல்கியைச் சேரும்.

மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்களாயினும் திறமையுள்ளவர்களை, அவர் பாராட்டத் தயங்குவதில்லை. அறிஞர் அண்ணாதுரையின் 'ஓர்

"இந்தக் கலியில் எழுத்தாளர் தம்பெருமை
முந்திக் கொழுத்தேறி மொய்க்கவே—சொந்த
நடைசேர் எழுத்தால் இந்நானில மெல்லாம்
குடையுயர்த்தான் 'கல்கி' யெங்கோன்."

—புலவர் கோவிந்தசாமி
அண்ணாமலை பல்கலைக் கழகம்

இரவு' நாடகத்தைப் பார்த்துவிட்டு 'அண்ணாதுரை, தமிழ் நாட்டின் பெர்னாட்ஷா' என்று அஞ்சாமல் எழுதினார். அது போலவே, திருச்சிராப்பள்ளியிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த நகர தூதன் என்னும் வாரப் பத்திரிகையின் ஆசிரியரான திருமலைச் சாமியையும் கல்கி, ஒரு சமயம் புகழ்ந்து எழுதினார். திருமலைச்சாமி மாற்றுக் கட்சிக்காரர், 'பேனா நர்த்தனம்' என்று போட்டுக் கொண்டு எதிரிகளை வெளுத்து வாங்குவதில் திருமலைச் சாமிக்கு நிகர் திருமலைச்சாமிதான். கல்கி, திருமலைச்சாமியின் எழுத்தைப் புகழ்ந்து, 'குட்டுப்பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும். திட்டப்பட்டாலும் திருமலைச்சாமியால் திட்டப்படவேண்டும்'' என்று எழுதியிருந்தது எனக்கு நினைவு இருக்கிறது.

---

அரசியலிலும் சமூகப் பணியிலும் மொழித் தொண்டிலும் அவர் தீவிரமாக உழைத்தவர், தான் மேற்கொண்ட குறிக்கோள்களுக்காகப் பத்திரிகையை அவர் நன்கு பயன்படுத்தினார். பத்திரிகை என்பது சமுதாய சேவைக்குரிய சாதனம் என்பதை அவர் நன்கு உணர்ந்திருந்தார். அந்த அற்புத சாதனத்தை அருமையாகப் பயன்படுத்தி, பிரமிக்கத்தக்க எத்தனையோ காரியங்களை கல்கி சாதித்திருக்கிறார். எட்டையபுரம் பாரதி மண்டபத்திற்கு நிதி திரட்டினார். அடையாறிலுள்ள காந்தி மண்டபமும் கல்கியின் முயற்சியால் உருவானதே, தூத்துக்குடியில் வ. உ.சி. கல்லூரி ஏற்படுவதற்குப் பெரு முயற்சி எடுத்துக்கொண்டார். முதுபெரும் எழுத்தாளராகிய வ. ரா. அவர்களுக்கும் மற்றும் பல கலைஞர்களுக்கும் நிதி திரட்டி உதவியிருக்கிறார். கல்கியின் பேனா சாதித்த காரியங்களை வரிசைப்படுத்தினால் அது ஒரு பெரிய படலமாக விரியும்.

கல்கியிடம் மாறுபடுபவர்கள் கூட, கல்கி, தமிழ் மொழிக்குச் செய்திருக்கிற தொண்டை மறுப்பதற்கில்லை. கல்கி, ஒரு பெரிய ஆலமரம் போல பரந்து விரிந்து தழைத்துப் பல தமிழ்ப் பணிகளுக்கு முதல் கொடுத்து வந்தார். அந்த ஆலமரம் வீழ்ந்து விட்டது. அந்த இடத்தை நிரம்ப மற்றோர் ஆல் முளைக்குமா என்பதே தமிழ் மக்களின் ஆவல்.

கல்கியின் தமிழ் நடை தனித் தமிழ்நடை என்று குறிப்பிடத்தக்க சிறப்புடையது அல்ல என்றாலும், கூடுமானவரை வேற்று மொழிக் கலப்பில்லாமல் அது அமைந்திருந்தது. சொல்வதைத் தெளிவாகச் சொல்லவேண்டும். சிக்கலின்றிச் சொல்லவேண்டும். படிக்கிறவர்களுக்கு மயக்கம் வராமல் சொல்ல வேண்டும் என்பதிலே கல்கி மகத்தான வெற்றி கண்டிருக்கிறார். கல்கி, எப்பொழுதும் தமிழ்ப் பத்திரிகை உலகத்தில் ஒரு காந்த சக்தியாக விளங்கி வருவார் என்பது என் திண்ணமான எண்ணம். ★



# கல்கி நினைவுகள்

பரதன்

நாற்பது ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம். சட்டக் கல்லூரி படிப்பு முடிந்து உயர் நீதி மன்றத்தில் அரைமனதுடன் காலடிவைக்க காத்துக் கொண்டிருந்தேன். திருச்செங்கோடு காந்தி ஆசிரமம் ராஜாஜியின் தலைமையில் நிறுவப்பட்டு, அப்பொழுதுதான், சேலம் ஜில்லாவில் வறண்ட பிரதேசத்தில் வறுமையால் வாடிய மக்களுக்கு கைராட்டை மூலம் நிவாரணம் அளித்துத் தொண்டு புரிந்து வர ஆரம்பித்திருந்தது. பொருளாதார ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த என் நண்பர் அந்த வட்டாரத்துக்குச் சென்று நேரில் மக்களின் பொருளாதாரநிலையை ஆராய்ந்து அறிய வேண்டும் என்ற நோக்கத்துடன் கிளம்பினுர். என்னையும் துணைக்கு அழைத்துச் சென்றுர்.

திருச்செங்கோடு ஆசிரமத்துக்கு எங்கள் வருகையைத் தெரிவித்திருந்தோம். திருச்செங்கோட்டுக்கு ஐந்தாறு மைல்களுக்கப்பால் புதுப்பாளையம் என்னும் கிராமத்தில் ஆசிரமம் அமைக்கப் பட்டிருந்தது. நாங்கள் சென்ற சமயத்தில் ராஜாஜியும் அவருடன் தொண்டாற்றி வந்த சிலரும் ஆசிரமத்தில் இருந்தார்கள். ஆசிரமத்தில் எங்களை வரவேற்று உபசரித்தார்கள். அங்கும் சுற்றுப்புறங்களிலும் ஆசிரமம் நடத்திவந்த தொண்டுகளை நேரில் பார்த்தோம். வாடிவதங்கிய வயோதிகப் பெண்டிரும், நடுவயதினரும், சிறு பெண்களும் உற்சாகமாக கைராட்டைகளை குடிசைதோறும் சுற்றிக் கொண்டிருந்தார்கள். காலையிலிருந்து பிற்பகல்வரை கூட்டம் கூட்டமாக நூற்ற நூலை ஆசிரமத்தில் கொண்டுகொடுத்துவிட்டு அதில் கிடைக்கும் சிறு வருவாயைப் பெற்றுப்போன காட்சிகள் இன்னும் என் கண்முன் நிற்கின்றன. நாங்கள் ஆசிரமத்தை அடைந்த மறுதினம், ஆசிரமவாசிகளில் ஒருவரிடமிருந்து அவருடைய குடிலுக்கு சாப்பாட்டுக்கு அழைப்பு வந்தது. அழைப்பு நேரில்தான் வந்தது. வந்து அழைத்தவரும் சிறு வயதுதான்; ஆகிருதியும் சிறியதுதான்; குரலும் மெல்லிய சற்று கீச்சுக் குரல், சில சமயம் இரட்டை நாதத்துடன் ஒலிக்கும், "எங்கள் வீட்டில் இன்று சாப்பாடு வைத்துக் கொள்ளலாமே" என்றுர், அவர்

'அதற்கென்ன! பேஷாகவருகிறோம்' என்று ஒப்புக்கொண்டோம். அவர் வீட்டில் நல்ல விருந்தளித்தார். விருந்தைவிட நாங்கள் மேலாக ரஸித்தது, அவர் பேச்சில்இருந்த கலகலப்பும், நகைச்சுவையும்தான் ஏதோ அந்தப்பக்கத்து கிராமவாசி என்று எங்களுக்கு முதலில் அவரைப் பார்த்தபோது தோன்றி இருந்தால், அது ஒரு கணப்பொழுதில், மறைந்து அவர் ஓர் ஆழ்ந்த அறிவாளி, பண்பு படைத்தவர் என்று அவர் பேச்சிலிருந்து தெரிந்தது. அவர்தான் ரா. கிருஷ்ணமூர்த்தி என்று தெரிந்து கொண்டோம். அதுவே எங்கள் முதல் சந்திப்பு. அன்றே "கண்டதும் காதல்" தோன்றிற்று. பின்னர் தான் அவரைப்பற்றி நான் தெரிந்து கொண்டேன். அவர் திருச்சி தேசிய கல்லூரியில் கல்வி பயின்று கொண்டிருந்த போது மகாத்மா காந்தியின் ஒற்றுமையாமை இயக்கத்தில் சேர்ந்து கல்வியைத் துறந்து காந்திஜியின் இயக்கத்தில் சேர்ந்து சிறை சென்றார் என்றும், பிறகு திரு.வி.க. அவர்களின் நவசக்தியில் ஆலமரத்துப் பேச்சு என்ற சுவையான தொடரை எழுதி வந்தார் என்றும், பிறகு ராஜாஜி காந்தி ஆசிரமம் ஆரம்பித்து மதுவிலக்குப் பிரசாரம் தொடங்கிய போது அதில் ராஜாஜியின் அழைப்புக்கிணங்கி, ஆசிரமத்தில்சேர்ந்து, ராஜாஜி மதுவிலக்குப் பிரசாரத்துக்காக ஆரம்பித்த விமோசனம் என்ற பத்திரிகையை நடத்துவதில் உதவி புரிந்தார் என்றும் தெரிந்து கொண்டேன்.

பின்னர் ராஜாஜி தீவிரமாக மதுவிலக்குப் பிரசாரம் ஆரம்பித்த போது, சென்னையில் அவர் சங்கத்தைச் சேர்ந்த நாங்கள் சிலர் அந்த இயக்கத்தில் தொண்டு புரிய நேர்ந்தது. அப்பொழுது ரா.கி. அவர்கள் எழுதிய கட்டுரைகளும் மதுவிலக்குப்பாடல்களும் எங்களைக் கவர்ந்தன. அந்த சமயத்தில் தான் திரு. ரா.கி. அவர்கள் பாடல்கள் இயற்றுவதுடன் பாடவும் செய்வார் என்று தெரிந்துகொண்டேன். ஒரு சமயம் சில தொண்டர்கள் ஊர்வலம் செல்லும்போது ஸ்ரீ ரா. கி. அவர்களும் அதில் கலந்துகொண்டு பாரதியார் பாடல்களையும் தாம் இயற்றிய மதுவிலக்குப் பாடல்களையும் பாட, நாங்கள் அவரைப் பின்பற்ற, அது ஒரு குதூகலக் காட்சி — மங்கா நினைவு.

இன்னும் சில காலத்துக்குப்பின்பு: 'ஆனந்த விகடன்' மாத சஞ்சிகையாக இருந்தது, மாதம் இருமுறை மாறி, பின்னர் மாதம் மும்முறை வெளியிடப்பட்ட போது ஸ்ரீ ரா.கி. அப்பத்திரிகையின் துணை ஆசிரியராகச் சேர்ந்தார். அதற்கு முன்னரே அப்பத்திரிகையில் கட்டுரைகளும் சிறுகதைகளும் எழுதி பத்திரிகைக்கு ஒரு புத்துயிர் அளித்தார். ஆனந்த விகடன் துணை ஆசிரியராக ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி பொறுப்பேற்றதுமே, பத்திரிகை ஒரு புது ஒளியுடன் விளங்கிற்று, ஒவ்

வொரு இதழும் பிரதிகள் அதிகரித்துக்கொண்டே வந்தன. "ரா.கி." "கல்கி" என்ற புனைப்பெயர்களில் தோன்றிய கட்டுரைகளையும், கதைகளையும் ஆவலுடன் எதிர்பார்த்து, மக்கள் படிக்க ஆரம்பித்தனர். அம்மாதிரி ஆவலுடன் பத்திரிகை வெளியீட்டை எதிர்பார்த்து, ஆர்வத்துடன் 'ரா.கி.', 'கல்கி' கட்டுரைகளை படித்து மகிழ்ந்த எண்ணற்ற வாசகர்களில் அடியேனும் ஒருவன். அதுவரை "டாமில் மகஜீன்ஸ்" வாசனையே நுகராத பலரில் ஒருவனான நான், எனது பள்ளிக்கூடம், கல்லூரியில், கற்றறியாத தமிழ்க் கல்வியறிவை, 'ஆனந்த விகடன்' மூலமும், கல்கி எழுத்து மூலமும் தான் பெற்றேன்.

கல்லூரிப் படிப்பு, சட்டப் பயிற்சி எல்லாம் முடிந்ததும் என் மனம் நீதிமன்றத்தை நாடவில்லை. சிறு வயதிலிருந்தே எழுத்தாளனாக வேண்டும், பத்திரிகாசிரியனாக வேண்டும் என்றெல்லாம் பகற் கனவு கண்டு கொண்டிருந்தேன். வழக்கறிஞர் தொழிலில் நாட்டமில்லாததாலும், பள்ளிக்கூட நாட்களிலிருந்து காந்தி மகானின் இயக்கங்களில் மனம் சென்றதாலும், காந்தியடிகள் உப்பு சத்தியாக்கிரகம், ஆரம்பித்த போது இயக்கத்தில் குதிக்க மனம் துடித்தது. ஆனால் சந்தர்ப்ப வசத்தாலும், அந்தச் சமயத்தில் ராஜாஜியின் கட்டளைப்படியும் கதர்த் தொண்டில் ஈடுபட்டிருந்தேன். சென்னையில்


**MEET THE MITRAN WITH THE NEW LOOK**




MITRAN - OLDEST TAMIL DAILY

*Published by*

**THE SWADESAMITRAN LTD., Victory House, Madras-2**

சில பெரியவர்களுடைய உதவியால், ஒரு கதர்க்கடையும், நடத்தி வந்தேன்.

1933ம் ஆண்டு தீபாவளி சமயம், தீவிர கதர் பிரசாரம் நடந்தது. அப்போது கதருக்கு மக்களிடம் ஒரு 'மவுசு' இருந்தது. எங்கள் கதர்க்கடையில் ஒரே கூட்டம். தீபாவளி வியாபாரம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. கூட்டத்தைச் சமாளிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்தோம் நானும் என் தோழத் தொண்டர்களும்.

அப்போது கடைவாசலில் ஒரு கார் வந்து நின்றது; அதிலிருந்து இருவர் இறங்கிக் கடைக்குள் வந்தனர்... அவர்கள் ஸ்ரீ வாசனும், ஸ்ரீ கல்கி கிருஷ்ணமூர்த்தியும் தான். எனக்கு குதூகலம் தாங்க முடியவில்லை, இன்று நமக்கு நல்ல வியாபாரம் என்று மனதில் நினைத்துக் கொண்டேன். "வாருங்கள்! வாருங்கள் என்ன வேண்டும்... வேஷ்டி, ஒரு 50 ஜோடி போடட்டுமா? பஸ்ட்கிளாஸ் நைஸ் ஷர்ட்டிங்பீஸ், ஜரிகை அங்கவஸ்திரம்... இப்பத்தான் வந்து இறங்கிற்று..." என்று வியாபார கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தேன்..." "உங்கள் பத்திரிகைக் காரியாலயச் சிப்பந்திகளுக்கு இந்த வருஷம் கதரிலேயே தீபாவளி பரிசு கொடுங்களேன். ஒரு நூறு ஸெட் வேஷ்டி, டவல், ஷர்ட்.... எடுத்துவைக்கிறேன்!" என்று என் திறமையை மேலும் விளம்பரப்படுத்தினேன். ஸ்ரீ வாசன், மிகவும் அமைதியாக "ஓயெஸ்...அதற்கென்னஆகட்டும்" என்று சொல்லி வேஷ்டி முதலிய ஆடைகளை தங்களுக்கும் காரியாலய சிப்பந்திகளுக்கும் எடுத்துவைக்கச் சொன்னார். வெகு சந்தோஷமாக நானே எல்லாத் துணிகளையும் பொறுக்கி மூட்டைகட்டி, பில் போட்டுக் கொடுத்தேன். சுமார் 500 ரூபாய்அன்று பழுத்திருக்கும். அந்த சமயத்தில் எனக்கு ஏதோ பெரிய காரியத்தை சாதித்து விட்டதாக பெருமிதம் பொங்கிற்று. ஆனால் பின்னால் நடக்கப்போகும் நிகழ்ச்சி, அதைவிட என்னை மகிழ்ச்சி உச்சியில் கொண்டுபோய் வைக்கப்போவது, எனக்கு அப்போது என்ன தெரியும்?

பணத்தைக் கொடுத்ததும் துணிகளை காரில் வைக்கச் சொன்னேன். வந்த பெரிய "வாடிக்கை"களை வழியனுப்பக் குதூகலமாக முன்வந்தேன். அதற்குள் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி என்னைப் பார்த்து, "சரி, கொஞ்சம் இப்படி எங்களுடன் வாருங்களேன். பீச் வரை போய்விட்டு வரலாம்" என்றார். "இப்பொழுதா? இதோ பாருங்கள் கூட்டத்தை! நான் எப்படி வருவது?" என்று தயங்கினேன். "பரவாயில்லை! வாருங்கள். சீக்கிரம் திருப்பிக்கொண்டு வந்து விட்டுவிடுகிறோம். ஒரு முக்கிய விஷயம் உங்களுடன் பேசவேண்டும்" என்றார் ஸ்ரீ வாசன். தவிர்க்க முடியாமல் கூடச் சென்றேன்.

*With the compliments*

*of*

# ARBOR ACRES FARM INDIA LIMITED

"BREED BETTER BIRDS FOR BETTER BUSINESS"

★

**Regd. Office:**

**10, ALIPUR ROAD, : DELHI-6.**

★

*NORTHERN REGION*

**34/6, EAST PATEL NAGAR,**

**NEW DELHI-6.**

***Head Office & Farm:***

**TELEGAON (NEAR POONA)**

கடற்கரைக்குச் சென்றோம். ஓரிடத்தில் அமர்ந்தோம். ஸ்ரீ வாசன் கல்கியவர்களைப் பார்த்து, "நீங்கள் தான் சொல்லுங்களேன்" என்றார்.

நான் திகைத்தேன், சமீபத்தில் கதர்ப் பிரச்சாரத்தை மும்முரமாக நடத்தி வந்தபோது எல்லா பத்திரிகைகளின் உதவியையும் நான் நாடியதுண்டு. அதில் 'ஆனந்த விகடன்' மிகவும் உற்சாகமாக விசேஷ ஆதரவு காட்டியதற்குக் காரணம் முக்கியமாக கல்கி அவர்கள் தான்; நான் இது சம்பந்தமாக அவரிடம் பலமுறை சென்றதுண்டு. "நீங்களே நல்ல 'ஐடியா' கொடுங்களேன்" என்பார். நான் ஏதோ எனக்குத்தோன்றியதைச் சொல்லுவேன். உடனே அதை அவர் ஏற்று மாலி அவர்களைவிட்டு சித்திரம் வரையச் செய்வார். அல்லது ஒரு சிறிய சொற்றொடர் ('ரைட்அப்') விசேஷ பிராதான்யம் கொடுத்து கவர்ச்சியாக பத்திரிகையில் பிரசுரிக்கச் சொல்லுவார். இது விஷயமாக ஏதாவது பேசுவார்களோ என்று அன்று அந்தச் சமயம் கடற்கரையில் தோன்றிற்று. அதிக நேரம் என்னை சந்தேகத்துக்குட்படுத்தாமல், ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சொன்னார்: "அடுத்த மாதத்திலிருந்து ஆனந்த விகடன் பத்திரிகையை வாரப்பதிப்பாக வெளியிடப் போகிறோம். நீங்கள் எங்களுடன் சேர வேண்டும் என்றுமே கட்கத்தான் வந்தோம்". எனக்கு ஒரு கணம் ஒன்றுமே தோன்றவில்லை. கனவா நனவா என்று திகைத்தேன். பிறகு சமாளித்துக்கொண்டு, "உங்களுடன் சேர வேண்டுமா? எப்படி? எனக்கு விவரம் புரியவில்லையே!" என்றேன்.

"முதலில் ஸ்ரீ வாசன் உங்களை விளம்பர மானேஜராகச் சேரச் சொல்ல நினைத்தார்... ஆனால் நீங்கள் உதவி ஆசிரியராக வரவேண்டும் என்று என் விருப்பம்... சம்மதமா?" என்றார் கல்கி.

"திடீரென்று நான் எப்படிமுடிவு செய்வது! கதர்க்கடை பொறுப்பு...? எனக்கு உதவியாக நின்று கதர்க்கடை நடத்த ஊக்கமளித்த பெரியவர்களைக் கேட்க வேண்டும்..." என்றேன்.

"அதற்கென்ன? நீங்கள் அந்தப் பொறுப்பை விடவேண்டாம். பத்திரிகை அலுவல் நேரம்போக மற்ற நேரத்தில் இந்தப் பொறுப்பையும் கவனித்துக் கொள்ளலாம்" என்றார் அவர். கடைசியில் கதர்க்கடை டைரக்டர்கள் சம்மதத்துடன் 'ஆனந்த விகடனில்' உதவி ஆசிரியராக பொறுப்பேற்றேன். என் வாழ்க்கையில், ஒரு விசேஷ மனோரதம் அப்போது நிறைவேறியது. அதற்குக் காரணமாக இருந்தவர் கல்கி அவர்கள் தான். இது என்றும் மறக்க முடியாத ஒரு சிறந்த நினைவு... வாழ்க்கையில் மகிழ்ச்சி தந்த ஒரு நினைவு...

ஆனந்த விகடனில் சேர்ந்த புதிதில், நான் அதில் எழுதியதைப் படித்த சில நண்பர்கள், "அட! நீ

கூட தமிழில் எழுதுவாயா?'' என்று மூக்கில் விரல்வைத்தார்கள். எனக்கே இது முதலில் ஒரு அதிசயமாகத் தானிருந்தது. ஆனந்த விகடனில் சேருவதற்கு முன், ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு கதை கட்டுரைகள் சில சமயம் எழுதுவேன். கல்கி விசிறிகளில் நான் ஒருவன் என்று முன்னரே சொன்னேன். தமிழில் எழுத என்னை தூண்டியது கல்கியின் கட்டுரைகள், கதைகள் தான். அவற்றைப் படிக்கப்படிக்க என்னை அறியாமல் எனக்கு ஒரு அவா ஏற்பட்டது. தமிழில் எழுத முற்பட்டேன். அப்போது தான் என் நண்பர்கள் 'ஜயபாரதி' என்ற பத்திரிகை ஆரம்பித்திருந்தார்கள். அவர்கள் தூண்டுதலின் பேரில் அதில் ஒரு விசேஷப்பத்தி எழுதி வந்தேன். ''இது யார் எழுதுவது என்று கல்கி கேட்டாராம். நான் என்று தெரிந்ததும் அவர் மனதில் என்ன தோன்றிற்றோ...?

முதல் முதலாக சிறிய ஹாஸ்யச் சித்திரம் ஒன்று எழுதி கல்கி அவர்களுக்கு அனுப்பினேன். ''நம் கட்டுரையை எங்கே போடப்போகிறார்!'' என்று நினைத்து சும்மா இருந்தேன். திடீரென்று சில நாட்கள் கழித்து அக்கட்டுரை 'ஆனந்த விகடனில்' பிரசுரமானதும் என் ஆனந்தத்திற்கு கேட்கவேண்டுமா? கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்த்தேன்! இது என் கட்டுரைதானா என்று. அதில் நான் போட்டிருந்த புனைபெயரை எடுத்துவிட்டு, முழுப்பெயர், பட்ட விருதுகளுடன் பிரசுரமாயிருந்தது. முதல் முறை பிரசுரிப்பதை புனைபெயரில் மறைக்கக்கூடாது என்று கல்கியின் எண்ணம் போலும்!

சுமார் மூன்று வருஷங்கள் ஆசிரியர் கல்கியுடன் பத்திரிகைத் தொழிலில் ஈடுபட்ட அனுபவம் என் வாழ்க்கையிலேயே சிறந்தது. அவர் என்னையும் என் சக ஆசிரியர்களையும் அவருக்குக் கீழுள்ள உதவி ஆசிரியர்களாகவே நடத்தவில்லை. கல்கியவர்களும் ஸ்ரீ வாசனும் சகோதரர்கள்போல்தான் பாவித்து நடத்தினார்கள் எங்களை.

அந்த மூன்று ஆண்டு காலத்தில் தான் கல்கி அவர்களிடமிருந்து கற்றது எனது வாழ் நாளில் வேறு எங்கும் கிடைக்காத சிறந்த பொக்கிஷமாகத்தான் நான் கருதுகிறேன். எழுத்தாளர்களை, அதுவும் இளம் எழுத்தாளர்களை உற்சாகப்படுத்தி முன்னுக்கும் கொண்டு வருவதில் கல்கியைப்போல் யாரும் செய்யமுடியாது, ஒவ்வொரு சமயம் வார இதழில் நான் எழுதிக்கொடுக்க வேண்டியதற்கு ஒன்றுமே தோன்றாமல் கடைசியில் ஏதாவது எழுதிக் கொண்டுபோய் தயக்கத்துடன் கல்கியிடம் கொடுப்பேன்.. ''பாருங்கள்... எப்படி இருக்கிறதோ?...'' என்று சொல்வேன்... அவர் படித்து விட்டு... ''பேஷாக இருக்கிறதே! அப்படியே போட்டு விடலாமே!'' என்று தட்டிக்கொடுப்பார். அதுவே மேலும் மேலும் நன்றாக எழுத ஊக்குவிக்கும். வெளியிலிருந்து

எழுதும் புது எழுத்தாளர்களையும் இப்படித்தான் ஊக்குவித்து அவர்களில் எவ்வளவோ பேர் இப்பொழுது சிறந்த எழுத்தாளர்களாக விளங்குகிறார்கள்.

அவர் "கர்நாடகம்" என்ற புனை பெயரில், எழுதி வந்த "ஆடல் பாடல்" என்ற பகுதி சங்கீதம், கலை விமரிசனங்களிலேயே ஒரு புரட்சியையும் புதுமையையும் உண்டு பண்ணிற்று.

ஒரு சமயம், என்னிடம் கல்கி, "ஏன் நீங்கள் ஏதாவது இப்படி சங்கீதம் கலை விமரிசனம் எழுதுவதுதானே" என்றார். சங்கீதத்திலும் கலையிலும் விமரிசனம் எழுதும் அளவுக்கு எனக்கு ஞானம் போதாது என்று சொன்னேன்". "இதெல்லாம் ஆரம்பித்துப் பழகி விட்டால் தானே வரும்" என்றார். "நான் மட்டும் என்ன சங்கீத வித்வானா? அல்லது கலையில் கரை கண்டவனா......... ஏதோ கச்சேரிகள் நிகழ்ச்சிகளுக்கு போய் அடிக்கடி பார்த்துக் கேட்பதால் தான் எழுத முடிந்தது" என்றார். இருந்தாலும் நான் அந்தத் துறையில் புகத் துணியவில்லை.

எழுத்தில் மட்டும் இல்லை; வாழ்க்கையிலும் அக்கறைகொண்டு உற்சாகப்படுத்துவார் கல்கி. ஒரு சமயம் என் வரவுசெலவுதிட்ட விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொண்டு புத்தி புகட்டினார். நான் செலவாளி என்ற உண்மையை நாசுக்காக எடுத்துக் காட்டித் தம் வாழ்க்கை


ரிஜிஸ்டர்டு நெ. 111866.

தந்தி: ஸ்வஸ்திக்
போன்; நெ. 22

எல்லோரும் விரும்புவது

**ஸ்வஸ்திக் வேதாரண்யம்**

ஸ்பெஷல்

15 நயாபைசா பிளாஸ்டிக் பொட்டலங்கள்

ஜி. டி. ஈரண்ணு,
ஸ்வஸ்திக் புகையிலை கேன்வாஸிங் ஏஜண்டு,
மைசூர் ஸ்டோர்ஸ்,
நெ. 20 நியூ முனிசிபல் மார்க்கெட்,
லோடி காலனி நியூ டெல்லி - 3.

சேல்ஸ் டெப்போ,
559, பூந்தமல்லி ஹைரோடு,
மதராஸ் – 3.
போன்: நெ. 34913.

யனுபவத்தைச் சொன்னர். ராஜாஜியின் தலைமையில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் தாம் பணியாற்றிய போது தாம் பெற்று வந்த சிறிய வருமானத்திலிருந்து ஒரு ஐந்து ரூபாய், மாதாமாதம் தன்னுடையதல்ல என்று எப்படி சேமித்து வந்தார் என்பதைச் சொல்லி, பிற்காலத்தில் அந்த வழக்கம் எப்படி ஒரு பேருதவியாக இருந்தது என்பதையும் சொன்னர். அந்தக் காலத்தில் அவரது உபதேசத்தைப் பின்பற்றியிருந்தால் இப்போது நான் எவ்வளவு நிம்மதியாக வாழ்க்கை நடத்தலாம் என்று, காலம் மிஞ்சிப் போன பிறகு தோன்றி என்ன செய்வது? ஆனல் அது கல்கி அவர்களின் அன்பையும் அக்கறையும் காட்டும் ஒரு சிறந்த நினைவு.

கல்கி அவர்கள் இளம் எழுத்தாளர்களிடத்தில் மட்டும் பரிவு கொள்ளவில்லை; எல்லா எழுத்தாளர்களையுமே அவர் பெரிதும் மதித்தார். தம்மை எதிர்த்தவர்களிடத்திலும் அவருக்கு அன்பும் மதிப்பும் உண்டு. தமிழ் எழுத்தாளர்களில் சிறந்து விளங்கிய வ. ரா. அவர்களுக்கும் கல்கி அவர்களுக்கும் பல விஷயங்களில் அபிப்பிராய பேதங்கள் உண்டு. இருந்தாலும் அவர்களுக்குள் பரஸ்பரம் ஒரு தனி மதிப்பு இருந்து வந்தது. வ. ரா. காலமாவதற்கு சில காலத்துக்கு முன், அவரது அறுபதாவது ஆண்டு நிறைவுவிழா கொண்டாடிஅவருக்கு ஒரு கண்ணியமான பணமுடிப்புக் கொடுத்தபொழுது கல்கிதான் முன்நின்று அதை வெற்றிகரமாக நிறைவேற்றினர்.

கல்கிக்கும் ரஸிகமணி டி. கே. சி. அவர்களுக்கும் ஓர் ஒப்பற்ற நட்பும் அபிமானமும் இருந்து வந்தது. ரஸிகமணி கல்கியிடத்தில் அளவிலா அன்பும் பேரபிமானமும் உண்டு. கல்கிக்கு ரஸிகமணியிடத்தில் பெரும் மதிப்பும் கௌரவமும் விசுவாசமும் உண்டு. ரஸிகமணியவர்கள் 1954-ம் ஆண்டில் பிப்ரவரி மாதத்தில் மறைந்தார்கள். அப்போது கல்கி, சென்னை ராஜாஜி மண்டபத்தில் ஓர் அனுதாபக் கூட்டத்தில் பேசும்போது "இந்தக் கூட்டத்தை ஏன் இவ்வளவு அவசர அவசரமாக வைக்க வேண்டும் என்று ராஜாஜிகூட அபிப்பிராயப் பட்டார்கள். பெரியவர்கள் எல்லாம் திடீர்திடீரென்று மறைந்து விடுகிருர்கள். நாமும் அவர்களைப் பின்பற்றுமுன்னரே, நாம் உயிருடன் இருக்கும்போதே, நம் அஞ்சலியை செலுத்தலாம் என்றுதான் இக்கூட்டத்தை அவசரமாகக் கூட்ட வைத்தேன்" என்று சொன்னர். இந்த "ஹாஸ்யம்" சோகமாகவே முடிந்தது. கல்கி அவர்கள் அதே ஆண்டில் டிசம்பரில் தாம் அன்பும் அபிமானமும் வைத்திருந்த ரஸிக மணியுடன் உரையாடப்போவதுபோல மறைந்து விட்டார்.

கல்கி அவர்களுக்கு தமிழ் இலக்கியஉலகத்துடன் அக்கறையும் மதிப்பும் நின்றுவிடவில்லை. அவர் நமது

அருங்கலைகளையும் பேணி வளர்ப்பதில் ஆர்வம் கொண்டவர். சங்கீதம், நாட்டியம், நாடகம், ஓவியம்- இக்கலைகளில் அவருக்குப் பேரார்வம் உண்டு. இக்கலையில் வல்லுனர்கள் மட்டுமல்ல, இளம் கலைஞர்களும் கல்கியின் அபிமானத்தையும் ஆதரவையும் பெற்றார்கள். பல இளம் கலைஞர்களை கல்கி "கண்டு பிடித்து" பாராட்டி கலை உலகத்துக்கும் ரஸிகர்களுக்கும் அறிமுகப் படுத்தியிருக்கிறார். அவர்களில் பலர் இப்போது பிரபலமாக விளங்குகிறார்கள்.

சங்கீத உலகத்தில் பல பிரபல வித்துவான்கள் கல்கியவர்களின் அச்சமற்ற விமரிசனங்களால் பயனடைந்திருக்கிறார்கள். நாட்டியம், நாடகம் முதலிய கலைகளிலும் கல்கியின் ஒப்பற்ற விமரிசனங்களும் கருத்துக்களும் அக்கலைகளில் ஈடுபட்டிருக்கும் கலைஞர்களுக்கு, பெரியவர்களானாலும், சிறியவர்களானாலும் நல்ல வழிகாட்டியாக உதவின.

ஸினிமாக் "கலை"யிலும் கல்கிக்கு மிக்க ஆர்வமுண்டு. ஒரு காலத்தில் அவரது கதைகளில் சிலவற்றை திரைப்படமாக்க வேண்டும் என்றும் அவருக்கு எண்ணமிருந்தது. "சிவகாமியின் சபதம்", "கள்வனின் காதலி" இவற்றை அவர் முதலில் சினிமாவுக்கென்றே எண்ணி கற்பனை செய்தார். ஆனால் அவை அப்போது திரைப்படங்களாக வரவில்லை. பின்னர் நாடக மேடையில் வந்து அதன்பின் ஒன்று (கள்வனின் காதலி) திரைப்படமாயிற்று. "தியாக பூமி" அதற்கு முன்னரே தொடர்கதையாக வந்து திரைப்படமாயிற்று. கல்கியின் திரைப்பட விமரிசனங்கள் அவரது திரைப்படக் கதைகளைவிட பிரபலமாக விளங்கின. 'டப்பா சங்கீ'தத்தைப் பற்றி அவர் வெளியிட்ட துணிச்சலான அபிப்பிராயம் ஒரு பெரும் தொண்டு என்றே சொல்ல வேண்டும்.

அரசியலில் கல்கி நேரில் ஈடுபடாவிட்டாலும் அவரது அரசியல் கட்டுரைகளும், விமரிசனங்களும் ஆணித்தரமாக இருந்ததுடன் சாதாரண மக்களுக்கு அரசியல் கல்வி ஊட்டுபவையாகவே திகழ்ந்தன. இன்று கல்கி உயிருடன் இருந்திருந்தால்......தமிழ் நாட்டின் அரசியல் சரித்திரமே வேறுவிதமாக இருந்திருக்கலாம். ஆனால் கல்கி உயிருடன் இல்லையா? அமரர் கல்கி தமிழ் நாட்டுக்கு வைத்துப்போன இணையில்லா இலக்கிய பொக்கிஷம் அவரை அமரராக்கி விட்டதே!







# Cyanamid Means Better Living Everywhere...

In big cities and small. On the remotest farm. 'Achromycin', 'Ledermycin' and other famous Lederle pharmaceuticals for your well-being. Powerful 'Malathion', the safest insecticide, to rid homes and farms of pests. 'Sulmet' and other efficient veterinary medicines to keep pets and livestock healthy. 'Aurofac' animal and poultry feed supplements for better meat, milk and eggs. Cyanamid helps bring you better living, wherever you live.





## Cyanamid India Limited

CYANAMID

Lederle Division—Agricultural Division, 16, Queen's Road, Bombay 1

CMCI-1

# மாலைப் பொழுதினிலே

'கல்கி'

★

செஞ்சுருட்டி



மாலைப் பொழுதினிலே — ஒரு நாள்
மலர் பொழிவினிலே
கோலக் கிளிகளுடன் — குயில்கள்
கொஞ்சிடும் வேளையிலே
மாலை குலவு மார்பன் — மருவில்
மாமதி போல் முகத்தான்
வேலொன்று கையிலேந்தி — என்னையே
விழுங்குவான் போல் விழித்தான்

பெஹாக்

நீலக் கடலினைப் போல் என் — நெஞ்சம்
நிமிர்ந்து பொங்கிடவும்
நாலு புறம் நோக்கி — நாணி நான்
" யாரிங்கு வந்த " தென்றேன்
" ஆலிலை மேல் துயின்று — புவனம்
அனைத்துமே அளிக்கும்
மாவின் மருமகன் யான் — என்னையே
வேலன் ! முருகன் ! என்பார்

ஸிந்து பைரவி

சந்திரன் வெள்குறும் உன் — முகத்தில்
சஞ்சலம் தோன்றுவதேன்
சொந்தம் இல்லாதவளோ — புதிதாய்
தொடர்ந்திடும் உறவோ ?

முந்தைப் பிறவிகளில் — உன்னை நான்
முறையினில் மணந்தேன்
எந்தன் உயிரல்லவோ — கண்மணி
ஏனிந்த ஜால?'' மென்றான்

மோஹனம்

உள்ளம் உருகிடினும் — உவகை
ஊற்றுப் பெருகிடினும்
கள்ளத்தனமாக — கண்களில்
கனல் எழ விழித்தேன்
புள்ளி மயில் வீரன் — மோஹனப்
புன்னகைதான் புரிந்தான்
துள்ளி அருகில் வந்தான் — என் கரம்
மெள்ளத் தொடவும் வந்தான்

மாயாமாளவகௌளை

பெண்மதி பேதமையால் அவன் கை
பற்றிடு முன் பெயர்ந்தேன்
கண் விழித்தே எழுந்தேன் — துயரக்
கடலிலே விழுந்தேன்
வண்ண மயில் ஏறும் பெருமான்
வஞ்சனை ஏனோ செய்தான்?
கண்கள் உறங்காவோ — அக்குறை
கனவைக் கண்டிடேனோ?



# கல்கியின் பாடல்கள்

'சோமு'

பேராசிரியர் கல்கி ரா. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் எழுத்துலகிலே புகுவதற்கு முன்பு இசையுலகிலே உலவியவர் என்பது பலருக்குத் தெரியாது! அவருடைய இளமை நாட்கள் பாட்டும் பஜனையும் கலந்த இசைவாழ்விலே கழிந்தன என்பதை முதன் முதல் கேட்டபோது எனக்குமே வியப்பாகத்தான் இருந்தது!

பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தமையனார் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள் அந்த நிகழ்ச்சிகளை நினைவு படுத்திச் சொல்லிக் கொண்டிருந்தார், தம்பியும் தானுமாகச் சேர்ந்து சிறு வயதில் பஜனைப் பாடல்கள் பாடுவது வழக்கம் என்றும், பிற்காலத்தில் கல்கி அவர்கள் காங்கிரஸ் கட்சியின் பிரசாரத்தில் ஈடுபட்டபோது தேசியப் பாடல்கள் பலவற்றையும் உணர்ச்சிப் பெருக்கோடு பாடுவார் என்றும், தமையனார் ஆனந்தக் கண்ணீர் மல்க எடுத்துச் சொன்னார். தம்பியின் பாட்டுத் திறத்தில் அத்தனை ஈடுபாடு அவருக்கு!

தமையனாருக்கு மட்டும் என்ன? பிற்காலத்தில் கல்கி அவர்களின் எழுத்துத் திறமையைத் கண்டு வியந்து பாராட்டிய மற்ற நண்பர்களுமே, அவருடைய கவித் திறமையை எண்ணிக் களிப்படைவதுண்டு.

'மாலைப் பொழுதினிலே' என்ற பாடலைப் பார்த்து விட்டு ரசிகமணி டி. கே. சி. அவர்கள் அப்படியே மெய்ம்மறந்து போய் விட்டார்! கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் எழுதிய பாடலை அனுபவிப்பது போல இந்தப் பாடலையும் அனுபவித்து, ஒரு சுவை மிகுந்த மதிப்புரையும் அவருக்கே உரிய பாங்கிலே கல்கி இதழில் எழுதி வெளியிட்டார் டி. கே. சி.!

ஆம்; பேராசிரியர் கல்கி அவர்கள் தமது வாழ்நாளில் எத்தனையோ அருமையான கவிதைகள், பாடல்கள், எழுதியிருக்கிறார்கள். இவற்றில் சில இவருடைய பெயர் இல்லாமலேயே, இவர் இயற்றியவை என்ற அறிவிப்பு இல்லாமலேயே, வெளி வந்திருக்கின்றன, திரு. டி. கே. பட்டம்மாளும், திரு. எம். எஸ் சுப்புலக்ஷ்மியும் இந்தப் பாடல்கள் சிலவற்றைப் பாடி இசைத்தட்டுகளிலே பதிவு செய்திருக்கிறார்கள்.

கண்ணனைப் பற்றிய பாடல் ஒன்று, 1955-ம் ஆண்டில் நான் படித்துப் பார்க்க நேர்ந்தது, அந்தப் பாடல் அந்த ஆண்டு தீபாவளி மலரில் அழகிய படங்களோடு வெளியாயிற்று. கல்கி அவர்களின் சிறந்த பாடல்களிலே இதுவும் ஒன்று. தாளம் ஒலிக்கப் பாடிப் பாடி அனுபவிக்க வேண்டிய ஒரு நேர்த்தியான இசைப் பாடல் அது.

செங்கனி வாயில் ஒரு
வேய்ங்குழல் கொண்டிசைத்து
தேனிசைதான் பொழிவோன்
யார் யார் யார் கிளியே !

செந்தா மரை முகத்தில்
மந்த காசம் புரிந்து
சிந்தை திறையாய்க் கொள்வோன்
யார் யார் யார் கிளியே

என்று தொடங்குகிற இந்தப் பாடலிலே, காதலும் பக்தியும் விரவி நின்று யார் யார் என மந்தகாசக் கேள்விகளை எழுப்புகின்றன. பிறகு,

கண்ணன் என்றங்கே யொரு
கள்வன் உளன் என்று
கன்னியர் சொன்னதெல்லாம்
மெய்தானோ கிளியே

என்று, கிளியொடு தனது மதிமயக்கத்தைச் சொல்லிச் சொக்குவதிலே எத்தனை சுகம்! கடைசியில் ஏதேதோ நினைவுகளிலே சுழல்கிற மனம் திருவடியையே பற்றுகிறது!

தஞ்சம் எந்தனுக்கு அவன்
திருவடி யன்றி வேறே
தரணியில் இல்லை என்று
சொல் சொல் சொல் கிளியே

என்று அந்தக் கிளியையே சொல்லச் சொல்லிக் கேட்பதிலே முடிகிறது பாடல்!

இதுபோலவே கண்ணனைப் பற்றிய இன்னொரு பாடல், பலருக்கும் தெரிந்த ஒன்று,

காற்றினிலே வரும் கீதம்

என்றதும் மீரா நம் கண்முன் தோன்றுகிறாள் அல்லவா?

கண்கள் பனித்திடப் பொங்கும் கீதம்
கல்லும் கனியும் கீதம்
பட்ட மரங்கள் தளிர்க்கும் கீதம்
பண்ணொலி கொஞ்சிடும் கீதம்

என்றெல்லாம் அந்தக் கீதத்தை வியப்பது, ஒரு பெண்ணுள்ளத்தின் காதலாகிய பக்திதான், இந்த உள்ளத்தை அந்தக் கீதம் என்ன பாடு படுத்துகிறது?

நெஞ்சினில் இன்பக் கனலை எழுப்பி
நினை வழிக்கும் கீதம்

பிறகு; கண்ணனே அந்தக் கீதத்திலிருந்து தோன்றி வருகிறான் கண் முன்னே! எப்படி?

நிலா மலர்ந்த இரவினில் தென்றல்
உலா விடும் நதியில்

என்ன நேர்கிறது?

நீல நிறத்துப் பாலகன் ஒருவன்
குழல் ஊதி நின்றான்
காலமெல்லாம் அவன் காதலை எண்ணி
உருகுமோ என் உள்ளம்

அந்தக் கடைசி வரிகளிலேதான் எத்தனை உருக்கம், எத்தனை ஏக்



மகாமகோபாத்தியாய
வே. சாமிநாதையர்

கம்! கல்கி அவர்களின் சொல்லும், அவருடைய இதயத்திலே உள்ள இசையும் இணைந்து செய்கிற விந்தை அது!

கண்ணனைப் போலவே முருகனைப் பற்றியும் கல்கி அவர்கள் பல பாடல்கள் இயற்றியிருக்கிருர். டி. கே. பட்டம்மாள் அவர்கள் பாடிப் பரவியுள்ள ஒரு பாடல் தமிழ் மக்கள் பலருக்கும் நன்கு அறிமுகமானது.

**பூங்குயில் கூவும் பூஞ்சோலையில்**

பூஞ்சோலையில் என்ன நடக்கிறது? பூங்குயில் கூவுகிறது! எத்தனையோநாளாகத்தான் அந்தக் குயில் கூவுகிறது. ஆனல் ஒரு நாள் என்ன நடந்தது?

**பூங்குயில் கூவும் பூஞ்சோலையில் ஒரு நாள்**
**மாமயில் மீது மாயமாய் வந்தான்**

அந்தச் சோலையிலே பெரிய மயில் ஒன்று வந்தது; அதன்மீது முருகப் பெருமானே வந்து விட்டான்! எப்படி வந்தான் அவன்?

**பொன் முகம் அதனில் புன்னகை பொங்க**
**இன்னமு தென்ன இன்மொழி பகர்ந்து**

அப்படிப் புன்னகை பொங்கவும், இன்மொழி பகரவுமாக வந்த முருகன் என்ன செய்தான்?

**பொன் முகம் அதனில் புன்னகை பொங்க**
**இன்னமு தென்ன இன்மொழி பகர்ந்தொரு**
**மின்னலைப் போலே மறைந்தான்**

என்ருலும், அவன் மின்னலைப் போலே மறைந்து விட்டாலும், வரவின் விளைவு என்ன ஆயிற்று?

**பனிமலர் அதனில் புதுமணம் கண்டேன்**
**வானில் கடலில் வண்ணங்கள் கண்டேன்**
**தேனிசை வீணையில் தீஞ்சுவை கண்டேன்**

இம்மட்டோடு நிற்கவில்லை அந்த விளைவு! மேலும் ஒரு புதிய அனுவமும் கிட்டுகிறது காதலிக்கு!

**தனிமையில் இனிமை கண்டேன்**

அட்படியா? தனிமையில் இனிமை காணுவதா? இந்த இனிமை எப்படி உண்டாகிறது தெரியுமா? தனியாகத் தானே இருந்து உள்ளத்துக்குள்ளே புதிதாகப் பிறந்த நம்பிக்கையின் வயமாகித் தன்னை மறந்த இன்பத்திலே சொக்கி நிற்கிருள் காதலி, எப்படி?

**வீரவேல் முருகன் மீண்டும் வருவான்**
**வள்ளி மணளன் என்னை மறவான்**
**பேரருளாளன் எனக்கருள்வான் எனும்**
**பெருமிதத் தால்மெய் மறந்தேன்**

என்று காதலி சொல்லும் போது, பக்தனுடைய பரவசமும் இறையுணர்வும் சொற்களிலே எத்தனை நிறைவோடு விம்மி ஒலிக்கின்றன!

எத்தனையோ துறைகளில் வல்லவராக விளங்கிய கல்கி அவர்கள், பாடல் இயற்றுவதிலும் வல்லவராக விளங்கியதை எண்ணும் போது பெருமிதமே உண்டாகிறது. அந்தப் "பெருமிதத்தால்" ரசிகர்கள் அனைவரும் "மெய் மறக்கலாம்" என்று சொல்லும்படி அமைந்திருக்கிறது கல்கியின் இந்தப் பாடல்! ★

# நானறிந்த 'கல்கி'

நாரதர் ஸ்ரீநிவாச ராவ்

ஒரே காரியாலயத்தில், ஒரே மாடியில், ஒரே முதலாளியிடம், ஒரே சம்பளப் பட்டியலில் கையொப்பமிட்டுவிட்டுச் சம்பளம் வாங்கிக்கொண்டு. ஏழாண்டுகள் ஒன்ருக வேலை செய்தவர்கள் அமரர் கல்கி கிருஷ்ணமூர்த்தியும், அடியேனும்.

ஆனல் அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே. சிதம்பரம் ஸ்ரீஎன். தண்டபாணிப்பிள்ளையால் நான் அவருக்கும், எஸ். எஸ். வாசனுக்கும் அறிமுகப்படுத்தப் பெற்றேன். அது 1931ம் வருஷம். அப்பொழுது ஆனந்த விகடன் தங்கசாலைத் தெரு வடகோடியில் 244-ம் நெம்பர் வீட்டிலிருந்தது. 'கல்கி'யும் அதற்கு ஒரு ஆண்டுக்கு முன்தான், ராஜாஜியால் திருச்செங்கோட்டிலிருந்து ஆனந்தவிகடன் காரியாலயத்தில் பொறுப்பாசிரியராகப் பணியாற்ற அனுப்பப்பட்டு. வேலையில் வந்து அமர்ந்திருந்தார்.

அதற்கு முன் கல்கி, தமது கட்டுரைகளை ஸ்ரீ வாசனுக்கு வி. பி. பி. மூலம் அனுப்பிக்கொண்டிருந்தார். வி. பி. பி. என்ருல், அந்தமுறைத் தபாலில் வரும் கட்டுரையை, அதன்மீது குறிப்பிடப்படும் தொகையை முன்னுல் கொடுத்தே அக்கட்டுரையை வாங்கிக்கொள்ள வேண்டும். அது ஒரு காலம்.

1932-ல் நான் எழுதித்தந்த 'நம்பள்கிம் ஒண்ணு' என்ற ஹாஸ்யச் சிறுகதையை ஏற்ற 'கல்கி', 'ரொம்ப நன்ருக இருக்கிறதே!' என்று சொல்லி, விகடனில் அதைப் பிரசுரித்து, மூன்று ரூபாய் சன்மானம் அனுப்பித் தந்தார்.

1931-ல் தேசபக்தன், விகடக் கடல் ஆகிய இரு பத்திரிகைகளின் கூட்டு ஆசிரியராக இருந்து, 1932ல் முரசு என்ற தேசிய வாரப்பத்திரிகையின் ஆசிரியராக இருந்துவந்த சமயத்தில், 'கல்கி'யை, தங்கசாலை வழியே வட சென்னையில் பேசாப் படத் தயாரிப்புக் கம்பெனிகளில் நடந்த விசித்திர படப்பிடிப்புக்களை காணவும், பம்பாயிலிருந்து வரும் நடன நங்கையரைப் பேட்டி காணவும் போகும்பொழுதெல்லாம் சந்திப்பதுண்டு.

1933-ல் முரசு பத்திரிகையை விட்டுவிலகியதும், நான் சந்தித்தது

'கல்கி'யைத்தான். அப்பொழுது விகடன் காரியாலயம் பிராட்வேக்கு மிகப்பெரிய கட்டிடத்திற்கு இடம்மாறி ஓரிரு மாதங்களாகியிருந்தன. அப்பொழுது அது மாதம் இருமுறையாக இருந்தது.

மாடிக்குப் போனதும் முதலில் எதிரே வந்தவர் கல்கிதான். பிறகு ஸ்ரீ எஸ்.எஸ். வாசனும், ஸ்ரீ துமிலனும் வந்தார்கள். அந்த மூவரும் தான் அப்பொழுது ஆனந்த விகடன் ஆசிரியர் குழாமில் இருந்தவர்கள். அவர்கள் வழக்கமாக, டவுனிலிருந்து திருவல்லிக்கேணியில் உள்ள கோயமுத்தூர் கிருஷ்ணய்யர் காப்பி ஹோட்டலுக்குக் காரில் சென்று, பாதாம் ஹல்வா, ஸ்பெஷல் காபி எல்லாம் ரஸித்து சாப்பிட்டு வருவார்கள். அன்றே கேட்டார் கல்கி, 'நம்ப விகடன் ஆபீஸிலே சேர்ந்துவிடுகிறீர்களா என்று.

இரண்டுநாள் அவகாசம் கேட்டுக் கொண்டுபோய், அதன்பின் திரும்பிச்சென்று 'நீங்கள் கேட்ட கேள்விக்கு, 'எஸ்' என்று சொல்ல வந்திருக்கிறேன்' என்றேன்.

'சபாஷ்! வாங்கோ!' என்று வாஸனிடம் அழைத்துப் போனார். அன்று முதலே ஆனந்த விகடனில் உத்யோகம். ஆரம்பச் சம்பளம் மாதம் ரூ. 30 தான். அந்த உத்யோகம் 'கல்கி' விகடனை விட்டுப் போய் 17 வருஷங்கள், அதாவது மொத்தத்தில் கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் நீடித்திருந்தது.

* * *

அவரோடு நான் தவறாது சந்தித்து, உரையாடி, பாராட்டுக்களையும், ஊக்கத்தையும் பெற்றிருந்தது ஏழு ஆண்டுகள்.

அவர் ஒரு மேதை. ஹாஸ்யமாகவும், தெளிவாகவும், கடினமான விஷயங்களையும் பாமர மக்களுக்கும் புரியும்படியாக எளிமையாகவும், எழுதுவதற்கென்றே பிறந்தவர். நல்ல ஹாஸ்யங்களை நன்றாகப் புரிந்து ரஸிக்கும் தன்மையையும், வெள்ளிக்கிழமை இரவு எப்பொழுதுவரும் என்று பல்லாயிரம் பெண்மணிகள் காத்திருக்கும் நிலையையும், தமிழ்ப்பத்திரிகையை வாசிக்க வேண்டுமென்ற ஆர்வத்தையும் தமிழ் மக்களிடையே அதிவேகத்தில் பெருகச்செய்தவர் கல்கி.

அதேபோல, சங்கீதக் கச்சேரிகள், படங்கள் ஆகியவற்றை விமர்சிப்பதிலே ஒரு தனி வழியைக் கையாண்டவர் அவர். அவர் காலத்திற்குமுன் அம்மாதிரியான விமர்சனங்கள் தமிழ்ப் பத்திரிகைகளில் வந்ததே இல்லை.

திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் விகடனுக்குத் தலையங்கம் எழுத வேண்டும். அன்று சீக்கிரமே காரியாலயத்திற்கு வந்துவிடுவார். நாற்காலியிலிருந்து எழுந்து மேஜைக்கும் சுவருக்கும் இடையில் உள்ள வெளியில், புனுகுப் பூனை மாதிரி மணிக்கணக்கில் நடந்து கொண்டேயிருப்பார். தாம் எழுதப்போவதை, தமது மனப்

பலகையில் ஒழுங்குபடுத்தி எழுதிப் பார்த்துக்கொள்ளும் நேரம் அது. அப்பொழுது அந்த அறைக்குள் யாரும் போகமாட்டார்கள். சட்டென நாற்காலியில் உட்காருவார்; மளமளவென எழுதத் தொடங்குவார். காரசாரமான தலையங்கம் உருவாகிவிடும்.

என்னிடம் அவருக்கு ஒருதனி அன்பு உண்டு. நாரதரைத் தவருது வாசித்து வந்தவர்களில் அவரும் ஒருவர். ஓரிரு தடவைகளில் எனக்கு ஆத்திரம் ஏற்படும்படியான காரியங்களை அவர் செய்ததுண்டு.

திடீரென்று ஓரிரு சமயங்களில் அதிபர் வாசன் என்னை அழைத்து 'ராவ்! இனிமேல் நீ தலையங்கம் எழுதுமுன், எதைப்பற்றி எழுதப் போகிருய் என்று கல்கியிடம் சொல்லவேண்டும். அந்த விஷயத்தைப்பற்றி நீ எழுதவேண்டாமென்று அபிப்பிராயப்பட்டால், நீ அதைப்பற்றி எழுதக் கூடாது. அவர் எழுத விரும்பியுள்ள விஷயங்களை நீ முதன்றே நாரதரில் எழுதிவிடுகிருய் என்று புகார் செய்கிறவர் அவர்' என்று சொன்னல், கொஞ்சம் கோபம் வராதா?

'கல்கி' என்னிடத்தில் விசேஷ மதிப்பு வைத்திருந்தார் என்பது, அவர் எழுதும் தலையங்கம், கதைகள், விமர்சனங்கள் ஆகியவற்றைக் கொண்ட அச்சுப் பக்கங்களை எனக்கு அனுப்பச் சொல்வார் என்பதிலிருந்து தெரிந்தது. கலை விமர்சனங்களில் விஷயக்கோளாறு அல்லது கருத்துப்பிழை, இலக்கண பிழை ஏதாவது இருந்தால் திருத்த வேண்டுமென்பது அவரது அன்புக் கட்டளை.

என்னிடத்தில் தனக்குத் தனி அபிமானம் உண்டென்பதை அவர் பகிரங்கமாக ஒரு மேடை ஏறிக் கூறியதையும், எனக்குப் பாராட்டு கூறியதையும் நான் மறக்கவே முடியாது.

அச்சமயம் அவரது உடல்நிலை அவ்வளவாகச் சரியாக இல்லை. ஆனாலும் அன்போடு அவரும், காலஞ்சென்ற பிரபல சபாநாயகர் டாக்டர் யு. கிருஷ்ணராவும் 400 மைலுக்கு அப்பால் உள்ள தூத்துக்குடிக்குப் பிரயாணம் செய்து வந்தார்கள். நான் இளமையில் கல்வி பயின்ற தூத்துக்குடி எஸ். ஏ. வி. ஹைஸ்கூல் நூருண்டு ஞாபகார்த்தக் கட்டிட நிதிக்குப் பணம் சேர்க்கவென்று எம். கே. தியாகராஜ பாகவதர், புளிமூட்டை ராமஸ்வாமி ஆகியோரது நாடகங்களோடு, நான் நடித்த எனது சரஸா நாடகத்திற்குத் தலைமைதாங்க வந்தார் அவர். அந்தப் பள்ளியில் அமைக்கப்பெற்றிருந்த திறந்தவெளி அரங்கத்தில் நின்று, எனக்குப் பாராட்டுரை வழங்கினர். அது என் பாக்யம். அதுவே அவர் எடுத்துக்கொண்ட கடைசி நீண்டதூரப் பிரயாணம்.

* * *

நல்ல எழுத்தாளர்களைக் கண்டுபிடிப்பதில் திறமைமிக்க ஆசிரியர் அவர். அவர் கண்டெடுத்தவர்கள் தான் 'தேவன்', ராலி, கதிர், நாடோடி, பகீரதன் ஆகியோரெல்லாம்.

காரசாரமாக விமர்சனங்கள், வாதப் பிரதிவாதங்கள் ஆகியவற்றை எழுதுவதில் புலி அவர். விகடன் பிரதிகளின் எண்ணிக்கை, கணிசமாக உயராவிட்டால், வாசன் கல்கியின் அறையில் வந்து உட்காருவார்: "என்ன சார்! சர்க்குலேஷன் உயரவில்லையே! சும்மா இருக்கிறீர்களே ஏதாவது ஆரம்பியுங்களேன்" என்பார்.

தியாக பூமி படம் வெளியான பின், கல்கியைத் தாக்கி எழுதினர்கள் பலர். அதுமாதிரி சமயங்களில்தான் அவருக்குத் தனிக்குறி பிறக்கும். பிரமாதமாகப் பதில் தருவார். அதற்காகவே பத்திரிகை அதிகமாகச் செலவாகும்.

கே. பி. சுந்தராம்பாள் நடித்த நந்தனர், மு. ராகவய்யங்கார் எழுதிய நூலைத் தாக்கி எழுதிய கட்டுரை, ஏசு பைத்தியக்காரர் என்றெழுதிய தலையங்கம்—இவையெல்லாம் தமிழகத்திலே பெரும் பரபரப்பை உண்டாக்கி, விகடன் சர்க்குலேஷனை மேலே தூக்கின.

சங்கீதம் என்ருல் அவருக்கு உயிர். அக்காலத்தில் மங்கைப் பருவத்திலிருந்த ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாளின் சங்கீத ஞானத்தையும், சாரீர வசதியையும் பாராட்டி, அவர் முன்னுக்குவர அவரது எழுத்து பெரிதும் உதவிற்று. அவருக்கென்றே சில அருமையான பாட்டுக்களை இயற்றித் தந்தார். இவை இன்றும் பாடப்படுகின்றன. இசைத் தட்டுக்களிலும் இருக்கின்றன.

அவரது சங்கீத விமர்சனமும், 'மாலி'யின் சித்திரங்களும் பல வித்வான்களைப் பிரபலப்படுத்தின.

* * *

கலகலவென்று வாய்விட்டுச் சிரித்து, வேடிக்கையாகவும், பெருந்தன்மையோடும் பேசும் குணத்தவர் அவர். அவர் மேடை ஏறிப் பேசினுல், அவரது பேச்சு பேசும் தமிழில்தான் இருக்கும். ஆனுல், நகைச்சுவை நிறைந்திருக்கும்.

அத்தகைய தங்கமான மனிதரை இணையற்ற எழுத்தாளரை, விமர்சகரை, சரித்திர ஆராய்ச்சியாளரை சரித்திர சம்பந்தமான தொடர் கதைகள் எழுதும் சூரரை, ஆடம்பரமற்றவரை, கடைசிவரை ஒரு மாணவரைப் போலவே இருந்தவரை, தமிழுக்கும் தமிழிசைக்கும் அரிய தொண்டாற்றியவரை இனி எங்கு காணப் போகிருேம்? அவரைப் பற்றியும் அவரது பெருமையைக் குறித்தும் அவ்வப்போது தில்லித் தமிழ்ச் சங்கம் போன்ற சங்கங்கள் இக்காலத்தவர்க்கும், வருங்காலத்தவர்க்கும் எடுத்துச் சொல்லி வரவேண்டியது அவசியமாகும். ★

*With Compliments from*

★ ★ ★

★ ★

★

# Zenith Tin Works Private Ltd.

CLERK ROAD, MAHALAKSHMI

**BOMBAY-34.**

★

***Manufacturers of Tin Containers. Plain and Lithographed Collapsible Tubes, P. P. Roll-on Caps and O. T. S. Cans***

# ரா. கி. என்னும் கல்கி

சாலை இளந்திரையன்

ஏற்றப்பட்ட அகல்விளக்குப் போன்றது மனிதவாழ்க்கை. காலம், இடம் என்னும் அகண்ட தத்துவங்களை நோக்குகையில், ஒரு மனிதனின் வாழ்க்கை என்பது மிகச் சிறியது. சிறியது மட்டுமல்ல; கடுங்காற்று வீசும் வெட்ட வெளியில் ஏற்றி வைக்கப்பட்ட அகல்விளக்கைப் போல் விரைவிலேயே அணைந்து போகக் கூடியது. ஆனால், அணைந்து போவது நிச்சயம் என்றாலும், அது வரையிலே அகல்விளக்கு ஒளிவீசிக் கொண்டு தான் இருக்கிறது? தன் எல்லைக்கு உட்பட்ட பரப்பு முழுவதையும் ஒளி மயமாக்கிக் கொண்டுதான் இருக்கிறது. வாழ்க்கையை நன்கு புரிந்து கொண்டு வாழ்கின்றவர்களின் வரலாறும் இப்படித்தான் அமைகிறது. அந்த வாழ்வில் ஏற்பட்ட இன்னல்களை விட, அது சாதித்த ஒளியே பிறகு மனிதர்களின் மனத்தில் நிலைத்து நிற்கிறது.

## கருவூர் முதல் 'கரூர்' வரை

தமிழ்ப் பத்திரிகை உலகில் நிரந்தரமான ஓர் இடத்தைப் பெற்றிருப் பவர் ரா. கிருஷ்ணமூர்த்தி. இந்தப் பெயரை அறியாதவர்கள் கூட, "கல்கி" என்றால் முகம் மலர்ந்து நிற்பார்கள். அந்த அளவுக்குக் கல்கி என்னும் அவருடைய புனைபெயர் தமிழ் மக்களிடையே பரவியுள்ளது.

தஞ்சை மாவட்டம் புத்தமங்கலம் என்னும் கிராமத்தில், அவ்வூர்க் கர்ணம் இராமசாமி அய்யரின் இரண்டாவது குமாரராக 9–9–1899-ல் பிறந்தார் கிருஷ்ணமூர்த்தி. மிக இளமையிலேயே அவருக்கு ஹரிகதை நடத்துவதிலும் பஜனை செய்வதிலும் மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. சுமார் பதினேழு வயது வரையில் இத்துறைகளில் அவர் கவனம் சென்றது. திருச்சி தேசியக் கல்லூரியில் (அக்காலத்தில் நான்காவது பாரம் என்னும், ஒன்பதாம் வகுப்பு வரை படித்தார். அதன் பின்னர் அவருடைய கவனம் தேசிய இயக்கத்தை நோக்கித் திரும்பியது. காந்தி அடிகளின் ஒத்துழை யாமை இயக்கத்தில் ஈடுபட்டு 1921-ல் முதன் முதலாகக் கரூர் என்னு மிடத்தில் சிறை செய்யப்பட்டார்.

அது முதல் அவர் வாழ்வு முழுக்க முழுக்கத் தேசியப் பணிகளுக்கே உரியதாயிற்று. அது பல்வேறு வடிவங்கள் எடுத்து, மிக விரைவிலேயே அவரைப் பத்திரிகைத் துறைக்கு உரியவராக்கிற்று.

அக்காலத்தில் திரு. வி. க. அவர்களின் "நவசக்தி" இதழ் தமிழ்ப் பத்திரிகை உலகில் பெரிய புரட்சியை ஏற்படுத்தி, காந்தியத் தேசிய வெள்ளத்தைத் தமிழ் மக்கள் உள்ளங்களிலே பாய்ச்சி வந்தது. தமிழாசிரியரான திரு. வி. க. ஒரு தேசியப் பத்திரிகையின் ஆசிரியராகவும் அரசியல்வாதியாகவும் புறப்பட்டது தமிழக அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஆங்கில மோகத்தாலும் மிகுதியான சமஸ்கிருதக் கலப்பாலும் நொண்டி நொண்டி நடந்து கொண்டிருந்த "பத்திரிகைத் தமிழ்", திரு. வி, க. வின் வரவால் நிமிர்ந்த நடை போட்டது.

அப்போது திருச்செங்கோட்டில் இராசகோபாலாச்சாரியார் நடத்தி வந்த ஆசிரமத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தார் கிருஷ்ணமூர்த்தி, அவருடைய சுறுசுறுப்பு, உழைப்பார்வம், மொழிபெயர்ப்புத் திறன் முதலியவற்றை நன்கு அறிந்திருந்த டாக்டர் தி. சே. சௌ. இராஜன் அவரைத் திரு. வி. க. வின் "நவசக்தி" யில் சேருமாறு அனுப்பிவைத்தார். அது முதல் கிருஷ்ணமூர்த்தியின் பத்திரிகைப் பணி முழுநேரப் பணியாகத் தொடங்கியது.

நவசக்தியில் இவர் பணிபுரிந்தது சுமார் நான்கு ஆண்டுக் காலமே. இந்தக் குறுகிய காலத்தில், திரு. வி. க. வின் தொடர்பாலும் நவசக்தியின் தமிழாலும் அவர் உள்ளத்துள் நின்ற தேசியத் தமிழ் வீறு வெகுவாகத் தூண்டப் பெற்றது. ஆயினும், "நவ சக்தி" யில் பெரும்பாலும் மொழி பெயர்ப்பு வேலை மட்டுமே அவருக்குக் கொடுக்கப்பட்டதால், நாளடைவில் அப்பணியில் அவருக்குச் சலிப்புத் தட்டியது.

அவரே கூறுவது போல, "நவசக்தி காரியாலத்தில் எனக்கு ஒரு குறையும் இருக்கவில்லை. எந்தப் பத்திரிகாலயத்திலும் ஓர் உதவி ஆசிரியருக்கு அவ்வளவு உரிமையும் மரியாதையும் அளிக்கமாட்டார்கள்." ஆனாலும் அந்த உரிமையும் மரியாதையையும் பெற்றுக்கொண்டு மொழி பெயர்ப்பு மட்டுமே செய்து கொண்டிருக்க அவர் மனம் ஒப்பவில்லை. "ஏட்டிக்குப் போட்டி" யாகவும்' "சங்கீத யோக"மாகவும், பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம். அலையோசை முதலிய தொடர் நெடுங்கதைகளாகவும் பொங்கிப் பரவத் துடித்த எழுத்தார்வ வெள்ளத்தை மொழி பெயர்ப்புக்குக் கட்டிப்போட அவரால் முடியவில்லை. எனவே, நவசக்தியிலிருந்து விலகிக் கொண்டார்.

சிறிது காலத்துக்குப் பின் இவர் எழுதிய "ஏட்டிக்குப் போட்டி" என்ற நகைச்சுவைக் கட்டுரையும் பாரதி நண்பர் பரலி. சு. நெல்லையப்பரின் அறிமுகமும் இவரை "ஆனந்த விகடன்" வாசனுக்கு உகந்தவராக்கின. அதன் விளைவாக, ஆனந்த விகடனில் ஆசிரிய பதவி "கல்கி" கிருஷ்ணமூர்த்திக்கு வந்து கிடைத்தது.

ஆனந்தவிகடன் நகைச்சுவையையே முக்கியமாகக் கருதி நடத்தப்பட்டு வந்த பத்திரிகை. நகையும் சுவையுமாகப் பொழுதைப் போக்க உதவ வேண்டும் என்பதே அதன் நோக்கம். ஆதலால், கல்கிக்கு அது ஒரு நல்ல சோதனைக்களமாகப் பயன்பட்டது. தமது ஆற்றலின் பல்வேறு அம்சங்களையும் கதை, கட்டுரை, தொடர்கதை, அரசியல், விகடத் துணுக்கு, கலைத்துறை விமர்சனம் என்னும் பலமுனைகளில் பரவவிட்டு வளர்த்துக் கொண்டார் கல்கி.



திருக்கழுக்குன்றத்தில் சிவனடியார் திருக்கூட்ட மகாநாட்டில் மதுரை திருஞானசம்பந்தர் திருமடம் திருப்பெருந்திரு. சோமசுந்தர தேசிகர், திருமுருக கிருபானந்தவாரியாருடனும் கல்கி.

'விகடன்' கல்கியை வளர்த்தான்; கல்கி விகடனை வளர்த்தார் நெடுந்தூரம் பிரயாணம் செய்கிறவர்களும் உழைப்பால் அலுத்துக் களைத்தவர்களும் சிரமமில்லாமல் படித்துப் பொழுதைப் போக்குவதற்கு உதவியான ஒரு கருவியாக ஆனந்த விகடனை மாற்றினர் கல்கி. கனமான பொருள்களையும் அழுத்தமான நடையையும் விலக்கி, எளிய "பத்திரிகை இலக்கியப் பாணி" ஒன்றை ஆனந்த விகடனின் கதை, கட்டுரை, தொடர் கதை மூலம் ஏற்படுத்திய பெருமை அவருக்கே உரியது. அதனால் விகடனின் பெயர் மேலும் பரவியது; அதன் விற்பனையும் வெகுவாக உயர்ந்தது.

1941-ல் ஆனந்த விகடனிலிருந்து விலகித் தமது புனை பெயரிலேயே ஒரு பத்திரிகையைத் தொடங்கினர். அதுதான் "கல்கி'ப் பத்திரிகை.

## 'கல்கி'' முதல் கடைசி வரை

அன்று முதல், 5–12–1954-ல் அவர் காலமாகும் வரை அவருடைய பேனு புதியதோர் வீறுடன் எழுதி எழுதிக் குவித்துக் கொண்டே இருந்தது; "கல்கி'' இதழ், வாராவாரம் அவற்றை எல்லாம் அள்ளிச் சென்று ஆயிரமாயிரம் தமிழ் மக்களுக்கு வழங்கிக் கொண்டே இருந்தது.

'கல்கி' இதழின் தொடக்கத்தோடேயே, அவருடைய புகழும் பத்திரிகை ஆசிரியர் என்ற எல்லேக்கும் அப்பால் பரவத் தொடங்கியது, அதற்குத் துணையாக இராசகோபாலாச்சாரியார், டி. கே. சிதம்பரநாத முதலியார், எம். எஸ். சுப்புலட்சுமி, டி. சதாசிவம் ஆகிய நண்பர்களின் கூட்டு நல்லுறவும் உருவாயிற்று. 1954-ல் கல்கி கிருஷ்ணமூர்த்தி இறந்த போது, அரசியல், கலே, எழுத்துலகம், சமுதாயப்பணிகள் ஆகிய பலவற்றுடனும் பெருந்தொடர்பு கொண்ட ஒரு பெருமகனே இழந்துவிட்ட சோக உணர்ச்சி தமிழகம் எங்கும் பரவியது.

## 'போட்டி' முதல் 'சபதம்' வரை

ஏற்கனவே பல மொழிபெயர்ப்புக்களும் துண்டு துணுக்குகளும் எழுதியிருந்தாலும், 'ஏட்டிக்குப் போட்டி' என்னும் கட்டுரையே கல்கியின் சொந்தப் படைப்புக்களுக்குத் தொடக்கமாக அமைந்தது. நமது சமுதாயத்தில் மலிந்து கிடக்கும் மூட நம்பிக்கைகளேயும் அவைகளால் நமது மக்களிடையே ஊறி உரம்பெற்றுவிட்ட பழக்கவழக்கங்களேயும் நகைச் சுவையோடு குத்திக் காட்டுவது இக்கட்டுரை. இக்கட்டுரையில் ஒரு பகுதியைப் பாருங்கள் :

" நமது முன்னேர்கள் இருக்கும் திக்கு நோக்கி இரண்டு கரங்களேயும் கூப்பித் தண்டனிடுகின்றேன். ஆகா, அவர்கள் நமக்குச் செய்திருக்கும் நன்மைதான் என்ன? வருஷம் 365 நாளில் ஏறக்குறைய 300 நாள் நமக்கு விடுமுறை யளித்திருக்கிருர்கள்! இக்காலத்தில் வாரத்திற்கு ஒரு நாள் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை கிடைப்பதே கஷ்டமாயிருக்கிறது. ஆனல், நமது முன்னேர்கள் செய்து வைத்த ஏற்பாடு எவ்வளவு அழகானது பாருங்கள். மாதங்களிலே மார்கழியும் புரட்டாசியும் கெட்டவை. ஒரு மாதத்தை எடுத்துக் கொண்டால் அமாவாசை, பாட்டிமை, நவமி திதி இவை உதவா. பின்னர், பரணி, கார்த்திகை நட்சத்திரங்கள், வாரத்திலோ வெள்ளிக்கிழமை கலகநாள், சனிக்கிழமை, செவ்வாய்க்கிழமை ஆகா. செவ்வாயோ வெறுவாயோ என்று கேட்டதில்லேயா? பின்னர் மரணயோகமும் கரிநாளும். மாதம், திதி, நட்சத்திரம், கிழமை, யோகம் எல்லாம் கூடிய நாள் ஒன்றிருந்தால் அதில் ராகுகாலம், தியாஜ்யம், பிரதோஷம் இந்த வேளேகள் கூடா. இவ்வளவு விபத்துக்களேயும் கடந்து

ஒருவன் ஏதேனும் காரியம் செய்யப் போனால் யாரேனும் ஒரு சிறு தும்மல் தும்மி விட்டால் போதும் அன்று விடுமுறைதான். ஆகா, இவ்வளவும் பூரணமாக அமலிலிருந்த அந்தப் பழைய காலம் நினைத்தால் நாவில் ஜலம் சொட்டுகிறது. இப்போது வரவரக் கலியுகமல்லவா முற்றி வருகின்றது?''

இந்த நம்பிக்கைகளின் ஊடேயே வாழ்க்கை வண்டியை நடத்திச் செல்லும் நம்மவர்கள் இதைப் படித்தால் நிச்சயம் கோபப்பட மாட்டார்கள். ஆனாலும், தங்களை அறியாமல் சற்றே சிந்திப்பார்கள்.

இந்த நோக்கத்தோடேயே பேனாவைப் பிடித்த கல்கி, கட்டுரைகள், சிறுகதைகள், விமர்சனங்கள் முதலியவற்றின் மூலம் அதை ஓரளவு சாதித்தார். கேதாரியின் தாயார், விஷ மந்திரம் போன்ற அவருடைய கதைகள் சமூகக் கேடுகளை வெகு வண்மையுடன் சுட்டிக் காட்டுகின்றன. பொங்குமாங்கடல் என்னும் கதையில், அக்காலத்தில் நடந்த தேசியத் தீவிர இயக்கத்தைச் சுயநலவாதிகள், தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டவிதம் அழகாகச் சித்திரிக்கப்படுகிறது. அவருடைய சமூக நாவல்களான "தியாகபூமி"யிலும் "அலையோசை"யிலும் தேசியப் போராட்டம் தகுந்த பின்னணியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.



தமிழிசை இயக்கத்தில் பங்கு பற்றிய பிரபலஸ்தர்களுடன். கல்கி : திரு. டி. கே. சி., ஆர். கே. சண்முகம் செட்டியார், தி. அவிநாசிலிங்கம், திருப்புகழ் மணி, டி. எம். கிருஷ்ணஸ்வாமி ஐயர், 'கல்கி' அதிபர் டி. சதாசிவம் ஆகியோர்களைப் படத்தில் காணலாம்.

இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் டாக்டர் ஆர். கே. சண்முகம் செட்டியார் முதலியவர்களால் தொடங்கப்பட்ட தமிழிசை இயக்கம் கல்கியின் காலத்திய இயக்கங்களில் முக்கியமானது. இவருடைய நண்பர்களான இராசகோபாலாச்சாரியாரும், டி. கே. சி. யும் அதை ஆதரித்தார்கள்; கல்கியும் அதற்குப் பெரும்பலமாக நின்றார். தமிழ் நாட்டிலே இசைவாணர்கள் தமிழில்தான் பாடவேண்டும் என்ற கருத்தை நிலைநாட்ட கல்கி எழுதிய வேகம் தனிச்சிறப்புக்கு உரியது. "சங்கீதயோகம்" என்னும் புத்தகத்தில் அக்கட்டுரைகளை இப்போது படித்தாலும் அவருடைய எழுத்தின் வேகவீறு புலப்படுகிறது. கல்கியின், கேலியும் கிண்டலும் நிறைந்த வன்மை வாய்ந்த நடைக்கு இப்புத்தகம் இன்றும் தக்க சான்றாக உள்ளது.

கல்கி காந்தியத் தேசியவாதி, ஆயினும், எந்த நிலையிலும் இராசகோபாலாச்சாரியாரையே ஆதரிப்பது என்ற கொள்கை உடையவர். காந்தியடிகளின் வரலாற்றை "மாந்தருக்குள் ஒரு தெய்வம்" என்ற தலைப்பிலும் இராசகோபாலாச்சாரியார் வரலாற்றை "நாட்டுக்கொரு தலைவர்" என்ற தலைப்பிலும் விரிவாக எழுதியுள்ளார் கல்கி. அக்காலத்தில் பல துறைகளிலும் சிறப்புற்றோங்கிய பல பெரியோர்களிடமும் அவருக்கு உயர்ந்த மதிப்பு இருந்தது. சத்தியமூர்த்தி, டாக்டர் சாமிநாதய்யர், மறைமலையடிகள் முதலியோர் மறைந்தபோது 'கல்கி'யில் அவர் எழுதிய கட்டுரைகள் அவருடைய பெரியோர் வழிபாட்டுக்கும் போதிய சான்றுகள்.


**OUR FELICITATIONS**

TO

**DELHI TAMIL SANGAM**

ON THE RELEASE OF CHUDAR—1967

**GRAPHITE INDIA LIMITED**

*(Secretaries:* Bangur Brothers Limited*)*

***14, Netaji Subhas Road, Calcutta-1.***

*Manufacturers of :*

Graphite Electrodes, Anodes and other Miscellaneous
Graphite & carbon products.

எங்காவது வெளியிடங்களுக்குப் பிரயாணம் செய்து வந்தால், அதைப்பற்றி விரிவாகத் தமது பத்திரிகையில் எழுதுவது கல்கியின் வழக்கம். அவைகளுள் அஜந்தா யாத்திரை பற்றியும் இலங்கைப் பயணம் பற்றியும் அவர் எழுதிய கட்டுரைகள் குறிப்பிடத் தக்கவை. தேசியப் போராட்டத்தில் ஈடுபட்டு மூன்று முறை சிறை சென்றுர் கல்கி. அவருடைய சிறை அனுபவங்களை ''மூன்றுமாதக் கடுங்காவல்'' என்னும் புத்தகம் சுவையாக விவரிக்கிறது.

நாடகம், திரைப்படம், இசை முதலியவற்றில் விமர்சனங்களில் மிகவும் கண்டிப்பானவர் கல்கி. ஆயினும் அவருடைய விமர்சனத்தில் உள்ள துணிவுக்காகக் கலைஞர்கள் அவரைப் பாராட்டியே வந்தார்கள், விமர்சனத்தில் கட்சி பேதங்களை அவர் பொதுவாகப் பார்ப்பதில்லை; நந்தனர் என்னும் படத்தில் (தமது காங்கிரஸ் இயக்கத்தைச் சேர்ந்த) கே. பி. சுந்தராம்பாளின் நடிப்பு அவ்வளவு சுகமில்லை என்று கூறிய கல்கி, திராவிடக்கழகத்தைச் சேர்ந்த அறிஞர் அண்ணுத்துரையின் ''ஓர் இரவு'' நாடகத்தைப் பார்த்துவிட்டு அவரைப் 'தமிழ் நாட்டின் பெர்னுர்ட் ஷா' என்று பாராட்டினுர்...

பலதிசையிலும் பலதுறையிலும் முங்கி முக்குளித்துத் தம்மைப் புதுக்கிப் பெருக்கிக் கொண்டவர் கல்கி. இளமையில் அவர் உள்ளத்தில் ஊன்றப்பட்ட தமிழ்த்தேசிய உணர்ச்சி என்னும் விதை, பத்திரிகை, அரசியல், பொதுப்பணி என்னும் இந்த ஊட்டங்களால் பெரியதோர் நோக்கமாக உருக்கொண்டது. ஆமாம். பழந்தமிழர்களின் அரசியல்மாட்சி, கலைமாட்சி முதலியவைகளைத் தற்காலத் தமிழ்மக்களுக்கு எடுத்து விளக்க வேண்டும் என்ற பெருங்கனவில் அவர் மனம் திளைக்கத் தொடங்கியது.

''பல காலமாகப் பண்டைத் தமிழகத்தின் பெருமையைப் பற்றியும் பண்பாட்டின் சிறப்பைப் பற்றியும் கேள்விப்பட்டுக் கொண்டிருந்தேன்; படித்து மிருந்தேன். ஆனுலும் கேட்டது படித்தது எதுவும் உள்ளத்தில் நன்கு பதியவில்லை, நமபிக்கையும் அவ்வளவாக உண்டாகவில்லை.

''மகாபலிபுரம் என்று வழங்கும் மாமல்லபுரத்துக்குச் சென்று கண்ணுல் நேரிலே பார்த்த பிறகு நம்பிக்கை ஏற்பட்டது. ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னுல் நமது செந்தமிழ் நாட்டில் இவ்வளவு அற்புதமான சிற்பங்களைச் செய்த மகாசிற்பிகள் இருந்தார்கள். அவர்களை ஆதரித்துப் போஷித்து உற்சாகப்படுத்தி அவர்களுடைய கலைத்திறனைப் பிரகாசிக்கச் செய்த மன்னர்களும் இருந்தார்கள்.

''அப்படியென்றுல், அந்தக் காலத்தில் தமிழகத்தின் பண்பாடும் சமூக வாழ்க்கையும் எவ்வளவு மேம்பட்டிருக்க வேண்டும்? அத்தகைய மேம்பாட்டை ஒரு சமூகம் அடைய வேண்டுமானுல் அதற்கு எத்தனை நூற்றுண்டுகளுக்கு முன்னிருந்தே அச்சமூகத்திலே கலையும் கல்வியும்

நல்லரசாட்சியும் நல்லொழுக்கமும் வளர்ந்து வந்திருக்க வேண்டும்? இதையெல்லாம் நினைக்க நினைக்கப் பண்டைத் தமிழ்நாட்டில் வாழ்ந்த நம் மூதாதையர்களிடம் பக்தியும் மரியாதையும் பொங்கி வளர்ந்தன.

"தமிழகத்தின் பழம் பெருமையைப் பற்றிக் கேள்விப்பட்டதெல்லாம் உண்மை யென்பது மட்டுமல்ல; இதுவரை உண்மையை ஓரளவு குறைத்துச் சொல்லியே வந்திருக்கிறார்கள் என்று தோன்றியது.'' (சிவகாமியின் சபதம் முன்னுரை)

இந்த எண்ணம் ஏற்பட்டதும், அவர்கள் குறைத்துச் சொன்னதை ஓரளவாவது நிறைத்துச் சொல்லிவிட வேண்டும் என்ற ஆர்வத்துடிப்பு அவருக்கு ஏற்பட்டது. அந்தத் துடிப்பே கல்கியை வரலாற்று நாவல்துறையில் இறங்கச் செய்தது. அதன் விளைவாகப் பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் என்னும் மூன்று நாவல்களைப் பெற்றது தமிழ்.

## சோதனை முதல் சாதனை வரை

நவசக்தியில் ஒரு மொழிபெயர்ப்புத் துணையாசிரியராகத் தொடங்கிய கல்கி அவர்கள் தமிழ் வாரப் பத்திரிகைகளின் வரலாற்றில் முக்கியமான ஓர் இடத்துக்கு உரியவராக வளர்ந்து சிறந்தார். அது போல, ஒரு பஜனைப் பையனாகவும் ஆசிரமத் தொண்டனாகவும் சமூகத்துக்கு அறிமுகமான கல்கி, சுமார் 30 ஆண்டுகள் தமிழக வரலாற்றில் எல்லா அம்சங்களோடும் பெருந்தொடர்பு கொண்ட ஆற்றல் மனிதராக வளர்ந்து, பலரை வளர்த்து உருவாக்கிய பெருமையையும் பெற்றார். டாக்டர் இராஜனின் ஆதரவோடு திரு. வி. க. விடம் செஅறு பயிற்சி பெற்று அவருடைய அருமை பெருமைகளை உணர்ந்து வளர்ந்த கல்கியே, பல எழுத்தாளர்களை உருவாக்கி உயர்த்திவிட்ட ஓர் ஆசானாகத் திகழ்ந்ததையும் பார்க்கிறோம்.

இந்த வளர்ச்சிகளுக்குக் காரணமாக அவரிடம் சில இயல்புகள் அமைந்திருந்தன; தமிழக மக்களும் அந்த இயல்புகளைப் பெரிதும் விரும்பி மதித்தார்கள். அவர் காலத்தில் ஒரு பக்கம் தனித்தமிழ் இயக்கம் வளர்ந்தது; மறுபக்கம், "தமிழ் நாட்டிலோ முழுதும் தமிழ்நடையை விட்டு இங்கிலீஷ் நடையில் தமிழை எழுதும் விநோதமான பழக்கம் நமது பத்திராதிபதிகளிடம் காணப்படுகிறது'' என்று பாரதி குறிப்பிடும் போக்கு நிலவியது. தமிழ்மக்கள் பின்னதை விரும்பவில்லை; முன்னது அவர்களுக்கு விளங்கவில்லை. இந்த நிலையை நன்கு புரிந்து கொண்டு, அரசியல் முதல் எல்லாவற்றையுமே பேச்சுத் தமிழோடு ஒட்டிய ஓர் எளிய தமிழில் எழுதினார் கல்கி. இது நடுவழியாகையால், தமிழ் தெரிந்தவர்களையும் தமிழே படித்தறியாத ஆங்கிலமோகத் தமிழர்களையும் இது கவர்ந்தது. கல்கியின் வாசகர்கள் தொகையும் மிகுதியாகப் பெருகியது.



திரு டி. கே. சி., ராஜாஜி, சதாசிவம் குடும்பத்துடன் கல்கி குடும்பம்.

இலக்கியப்படைப்பிலும் இப்படிபட்டதோர் இடைவழியே கல்கியின் வழியாக அமைந்தது. புதுமைப்பித்தனுடையது போன்ற கனமான எழுத்தை மக்கள் புரிந்து கொண்டு வரவேற்கத் தொடங்காத காலம் அது; அதே சமயம், வெறும் பொழுது போக்குக் கதை இலக்கியத்தையும் மக்கள் பாராட்டவில்லை. அந்தச் சூழ்நிலையில் ஓரளவு, சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களையும் தேசிய எண்ணங்களையும் தமது எழுத்துக்களில் இழைய விட்ட கல்கியை மக்கள் மிகுதியாக விரும்பிப் படித்தார்கள்,

எதையும் தேவைக்குச் சற்று அதிகமாக விரித்து எழுதுவதே கல்கியின் எழுத்துப்பாணி. அவர் கையாளும்நகைச்சுவையும் பெரும்பாலும் கூர்மையற்ற "மாப்பிள்ளைக்கிண்ட"லாகவே இருக்கும், படித்த நடுத்தரக் குடும்பத்தினரில் பெரும்பாலோர் இந்த இயல்புகளையே வளர்த்துக் கொண்டிருந்தால், கல்கியின் பாணி அவர்களைக் கொள்ளை கொண்டு விட்டது. ஆயிரக்கணக்கான வாசகர்கள் அவருடைய தொடர்கதைகளுக்காகவும் நகைச்சுவைக் கட்டுரைகளுக்காகவும் வாராவாரம் ஆவலோடு காத்திருந்தார்கள்!

"எழுத்தாளன் என்றால் ஏழை" என்று காலங்காலமாக இருந்து வந்த நம்பிக்கையைத் தகர்த்தெறிந்த முதல் தமிழ் எழுத்தாளர் கல்கி. அந்த சாதனையை நிறைவேற்றுவதற்கு ஏற்ற ஒருவகையான "லௌகிக குணம்" அவரிடம் அமைந்திருந்தது. எந்தக் காரணத்தினாலாவது தம்மால் ஒருமுறை (எழுத்தில்) தாக்கப்பட்டவர்களைக் கல்கி அப்படியே விட்டு விடுவதில்லை; அவரைப் பாராட்ட ஒரு சிறு வாய்ப்புக் கிடைத்தாலும், அதைப் பயன்படுத்திக் கொண்டு அவரை ஒரேயடியாகப் புகழ்ந்து தள்ளிவிடுவார். இதனால் யாருக்கும் அவரிடம் நிரந்தரமான காழ்ப்பு ஏற்படுவதற்கு இடமில்லாமல் போகிறதல்லவா?

தென்னை, பனை முதலியவை போலத், தாம் மட்டுமே வளரவேண்டும் என்ற ஒண்டிக்குணம் கல்கியிடம் கிடையாது; எழுத்தாளர் குலத்திலே தாம் ஒருவர் என்பதிலேயே அவர் பெருமை கொண்டார். தமிழ் எழுத்தாளர் சங்கத்தை ஏற்படுத்தியதில் அவருக்கும் பெரும்பங்கு உண்டு.

திறமை வாய்ந்த எழுத்தாளர்களைக் கண்டறிந்து ஊக்கம் தருவதிலும் கல்கிக்குத் தனி ஆர்வம் இருந்தது. "தேவன்" என்னும் மகாதேவனை வளர்த்த பெருமை கல்கிக்கே உரியது என்று சொல்லுகிறார்கள். கல்கி அலுவலகத்தில் அச்சுக்கோப்பாளராக இருந்த கோவிந்தன் எழுத்தாற்றல் உடையவராக இருப்பதைக் கண்டு அவரைப் பாராட்டிக் "கல்கி"யின் துணையாசிரியராக்கினார் கல்கி, "என்னை மனிதனாக்கிய மனிதன் கல்கி" என்று எழுத்தாளர் 'விந்தன்' கூறும்போது கல்கியின் நல்லுள்ளமே நம் முன் விரிகிறது...

வ. ரா., பரலி. சு. நெல்லையப்பர், நாமக்கல்கவிஞர் முதலியோருக்கும் புதுமைப்பித்தன் குடும்பத்ினருக்கும் நிதி திரட்டுவதில் பெரும்பங்கு வகித்தார் கல்கி. இவர்களுள் புதுமைப்பித்தன் ஒருகாலத்தில் கல்கியின்

எழுத்துக்களைக் கண்டபடித் தாக்கி "அவர் கதைகள் எல்லாமே ஆங்கிலத்திலிருந்து திருடியவை" என்று குற்றம் சாட்டியவர். மற்றவர்களுக்குத் தம்மிடம் வெறுப்பு இருக்கக் கூடாது என்று விரும்பிய கல்கி, தாமும் மற்றவர்கள்மேல் காழ்ப்புக் கொள்ளாதிருந்தது மிகவும் பாராட்டத்தக்கது.




நாமக்கல் கவிஞர் திரு. ராமலிங்கத்துக்கு நிதி திரட்டி அளிக்கிறார்

இவை யாவற்றுக்கும் சிகரமான மற்றொரு வாய்ப்பும் கல்கிக்குக் கிடைத்திருந்தது: திரு. டி.கே.சியும், திரு. இராசகோபாலாச்சாரியாரும் இவருக்கு மிகவும் நெருங்கிய நண்பர்கள். இவரிடம் மிகுந்த மதிப்புக் கொண்டவர்கள். தமிழ் நாட்டின் உயர்தரக் குடும்பங்களிலும் உயர் நடுத்தரக் குடும்பங்களிலும் டி. கே. சி. யின் கலை இலக்கிய ரசனைக்குத் தனி ஒரு செல்வாக்கு இருந்தது. அரசியல் அறிஞர் என்ற முறையில் அக்காலத்தில் இராசகோபாலாச்சாரியாருக்குத் தமிழ் மக்களில் பெரும்பாலாரிடம் நல்ல செல்வாக்கு இருந்தது. இவர்கள் இருவரையும் இணைத்துக் கொண்டு சென்றதால் கல்கியின் செல்வாக்கும், அவர்கள் இருவருக்கும் மதிப்பிருந்த இடமெல்லாம் கொடிவீசிப் படர்ந்தது. "தற்காலத்தில் கல்கி ஒருவரே உரைநடை எழுத்தாளர்" என்று டி. கே. சி. தாம் போகுமிடமெல்லாம் சந்தித்த நண்பர்களிடமெல்லாம் பிரசங்கம் செய்து வந்ததும் குறிப்பிடத்தக்கது.

எடுத்த காரியத்தில் தளராத ஊக்கம், இடையறாத உழைப்பு, பகைவர்களையும் நண்பர்களாக்கிக் கொள்ளும் பண்பு, அணுக்கமான சில நண்பர்களைப் பெற்றிருத்தல், இயன்றவரை மற்றவர்களுக்கு உதவுதல், தான் மேற்கொண்ட தொழிலைப்பற்றிய ஒரு பெருமிதம்—இவைகளை ஒரு மனிதனை உயர்த்தக் கூடிய சாதனங்கள் என்பதற்கு இலக்கியமாக விளங்கியவர் கல்கி, அவருடை சாதனைகளில "அசகாய சூரத்தனம்" எதுவும் இல்லாதிருக்கலாம்; ஆனால் அவருடைய வாழ்க்கை ஒருவகையான நளினமும் முழுமையும் பெற்றுத் திகழ்ந்தது. அவருடைய எழுத்துக்கள் பல தலைமுறைகளுக்கு நீடித்து நிற்காமல் போகலாம்; ஆனால் அவருடைய வாழ்க்கை பலருக்கு உயர்வும் உரமும் ஒளியும் தந்தது என்பதைத் தமிழகம் நன்கு அறியும். அதனாலேதான், அண்மைக்காலத் தமிழகத்தில் எழுத்தாளரை நினைத்தாலும், அரசியல்வாதிகளை நினைத்தாலும், நினைவு மண்டபங்களை நினைத்தாலும் கல்கியின் நினைவே நம் நெஞ்சில் முன் வந்து நிற்கிறது. ★

# சிவகாமியின் சபதம்

சாலினி இளந்திரையன்

இருபதாம் நூற்றாண்டின் முற்பாதி தமிழ் நாட்டில் பல இயக்கங் களைத் தோற்றுவித்தது. அவைகளுள் பாரதியும் அவரது நண்பர் களும் தோற்றுவித்த தேசிய மொழியார்வ இயக்கம் முக்கியமானது நாட்டு விடுதலை இயக்கத்தின் ஒரு பகுதியான இந்த இயக்கம் தமிழ்மொழி, தமிழ்நாட்டுக் கலைகள் முதலியவற்றின் பெருமையை வெகுவாக விதந்து ஓதியது. இதன் ஒரு முக்கியமான அம்சம்தான் 'கல்கி'யின் வரலாற்று நாவல்களின் தோற்றம்.

1899-ல் பிறந்த ரா. கிருஷ்ண மூர்த்தி தற்காலத் தமிழ் இலக்கியத் தில் ஒரு சாதனை மனிதராவார். கதை, கட்டுரை, நாவல், கலைவிமர் சனம், வாழ்க்கை வரலாறு முதலிய பல துறைகளிலும் எழுதிக் குவித் தவர் கல்கி. 1954-ல் அவர் இறக் கும்வரை, அவருடைய பேனா ஓயாமல் எழுதிக்கொண்டே இருந் தது. அவருடைய வாழ்வின் பிற் பகுதியில், தமிழகத்தின் ஒவ்வொரு முக்கிய நிகழ்ச்சியும் அவருடைய தொடர்புடனேயே நடைபெற்றது. பணம், பெரும் பட்டப்படிப்பு, பதவி என்னும் எந்தப் பலமும் இல்லாமல் தொடங்கிய அவருடைய வாழ்வு அந்தப் பலங்கள் உடைய வர்களெல்லாம் பார்த்து மரியாதை செலுத்தத் தக்கதாக வளர்ச்சி பெற்றது. எழுத்துத் துறையில் கொண்ட ஒரு பேரார்வமும் அதற்கு ஏற்றதோர் அகன்ற பெரிய உள்ளமுமே அவருடைய சாதனை களுக்கெல்லாம் மூலமாக இருந்தன. அந்த இரண்டும் இருந்ததனாலேயே கல்கி 'மிகப் பிரமாண்டமான' வரலாற்று நவீனங்களைப் படைக்க முடிந்தது.

பாரதி, வ. வே. சு. ஐயர் போன்ற தேசியத் தீவிரவாதிகள், பழந் தமிழர்களின் வரலாற்று மாண்பு களைத் தற்காலத் தமிழர்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும் என்று பெரிதும் விரும்பினார்கள். வ. வே. சு. ஐயர் இதற்காகக் "கம்பநிலையம்" தொடங்கித் திட்டமிட்டு வேலை செய்ததும் உண்டு. ஆனாலும் அந்தக் கனவு "கல்கி"யின் வர லாற்று நாவல்கள் மூலமே நனவா யிற்று.

கல்கியின் பார்த்திபன் கனவும் சிவகாமியின் சபதமும் பல்லவர்

ஆட்சியைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டவை; பொன்னியின் செல்வன் (பிற்காலச்) சோழர்குலச் சாதனையைப் பின்னணியாகக் கொண்டது. பார்த்திபன் கனவு, வரலாற்று நாவல்துறையில் கல்கியின் முதல் முயற்சி. எனவே, அது போதிய அளவு விரிவும் விளக்கமும் பெறவில்லை. பொன்னியின் செல்வன், என்ன காரணத்தாலோ, மிக நீண்டு சென்றுவிட்டது; அந்தந்தப் பாத்திரங்களுக்கு உரிய முக்கியத்துவம் தனிப்பட்டுத் துலங்கும்படித் திட்டமிட்டு எழுதப்படாதது போன்ற ஒரு குறை இந்த நாவலில் உள்ளது. சிவகாமியின் சபதம்தான் கல்கியின் வரலாற்று நாவல்களில் தலைசிறந்து நிற்கிறது. ஒருவகையில் பார்த்தால், கல்கியின் எழுத்துத் துறைச் சாதனையில் சிவகாமியின் சபதமே முதன்மையானதென்று சொல்லலாம்.

மகேந்திரவர்மனும் மாமல்லன் என்னும் நரசிம்மவர்மனும் பல்லவ வம்சத்தின் இரண்டு முக்கியமான அரசர்கள். தந்தையும் மகனுமான இந்த இருவரும் கி. பி. ஏழாம் நூற்றாண்டில் காஞ்சியிலிருந்து ஆட்சி புரிந்த பேரரசர்கள். இவர்களின் காலத்தில் சிற்பம், சித்திரம், இசை, நாட்டியம் முதலிய நுண்கலைகள் செழித்தோங்கின. மாமல்லபுரமும் மற்றும் பல குகைக்கோயிற் சிற்பங்களும் இவர்கள் காலத்தில் உண்டானவைகளே. இவர்களின் காலத்திலேதான் சமண, பௌத்த சமயங்களின் செல்வாக்குச் சரிந்து சைவ, வைணவ பக்தி இயக்கம் தமிழ்நாட்டில் தலையெடுத்தது. பல துறைகளிலும் சாதனைகள் நிகழ்ந்த இந்தக் குறிப்பிட்ட காலக் கட்டத்தைப் பின்னணியாக்கிக்கொண்டு, அவை அனைத்தையும் அழகுபட விவரித்து, அவைகளுக்கிடையே சில வரலாற்றுப் பாத்திரங்களையும் பல கற்பனை பாத்திரங்களையும் கலந்து உறவாடவிட்டு, அந்த நிகழ்ச்சிகளின் கோவைக்குச் "சிவகாமியின் சபதம்" என்று பெயரிட்டுள்ளார் கல்கி.

இந்த நாவலின் முக்கியமான பாத்திரங்களான ஆயனர், சிவகாமி, நாகநந்தி ஆகிய மூவர், வரலாற்றில் இல்லாதவர்கள்; இவர்கள் மூவரும் கல்கியின் கற்பனையில் உருவானவர்கள். ஆனால் வரலாற்றுக்குப் பெரும்பாலும் பொருந்தவே அமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சிகளோடும் மற்ற வரலாற்றுப் பாத்திரங்களோடும் இவர்களின் வாழ்வு இணைந்து பொருந்திச் செல்லுமாறு அமைத்த கல்கியின் திறன் பாராட்டத்தக்கது. இந்த மூன்று பாத்திரங்களின் இயல்பும் துல்லியமான தனித்தன்மையுடன் விளங்குகிறது.

ஆயனச் சிற்பியின் கலைப்பித்து சிலபோது நமக்கு வியப்பை அளிக்கிறது. "இப்படியும் ஒரு மனிதர் இருப்பாரா?" என்று மூக்கின் மேல் விரலை வைக்கிறோம். அஜந்தா

சித்திரங்களின் வர்ண ரகசியத்தை அறிவதில் அவர் கொண்ட ஆசை எல்லை மீறிப்போகிறது. அதுவே நாகநந்தியின் சூழ்ச்சிகளுக்கும் நல்ல துணையாகி விடுகிறது. ஒன்பது ஆண்டுக்காலம் வாதாபியில் சிறையிருந்த மகளை மீட்டு வரும்போது கூட, 'இந்தச் சிற்பிக்கு வர்ண ரகசியத்தைக் காணப் போகலாமா' என்று சபலம் தட்டுகிறது! இப்பாத்திரத்தின் இயல்பு எல்லைக்கு அப்பால் போய்விட்டது போலத் தோன்றுகிறது. ஆனால், மயிலுக்குப் போர்வையும், முல்லைக்குத் தேரும், தமிழ்க்கவிஞனின் வறுமை போக்கத் தன் தலையையும் கொடுக்க முன்வந்த "பித்தர்"களைத் தமிழ் வரலாற்றில் சந்தித்திருக்கிற நமக்கு ஆயனரின் கலைப்பித்து அதீதமாகத் தோன்றவில்லை.

சிவகாமி நடனக்கலை அரசி. கலைஞர்களுக்கே உரிய (குறிப்பாகப் பெண் கலைஞர்களுக்கே உரிய) குண நலன்களோடு இவளை உருவாக்கியுள்ளார் கல்கி. கலைஞரின் செருக்கு, புகழ்ச்சியில் மயங்கும் தன்மை, பெண்ணின் இயல்புகளுள் ஒன்றான பிடிவாதம், கலைமனத்தின் கருணை ஆகியவற்றின் உருவமாக அமைந்துள்ளாள் சிவகாமி. இத்தனை குணங்களும் உடைய சிவகாமி இளமையின் அறியாமை காரணமாக, அரசியல் உலகின் சம்பிரதாயக் கட்டுப்பாடு என்னும் பலிபீடத்தில் கழுத்தை நீட்டிவிடுகிறாள்;


With the best compliments of:

**AMRUTANJAN LIMITED**

★

***Makers of:***

AMRUTANJAN PAIN BALM,

ANOLEUM, A NEW PAIN BALM FOR TENDER SKINS,

INHALER,

GRIPE MIXTURE,

DERMAL OINTMENT.

அது அவனைத் துண்டாக வெட்டி எறிந்துவிடுகிறது!

சிவகாமியின் முடிவிலேதான் ஆசிரியர் 'கல்கி' சற்றே தடுமாற்றம் அடைந்திருப்பதாகத் தெரிகிறது. மாமல்லச் சக்கரவர்த்தி பாண்டிய குமாரியை மணம்முடித்து இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான செய்தி ஒன்பது ஆண்டுக்காலம் வரை சிவகாமிக்குத் தெரியாமலே இருப்பது நம்பத்தக்கதாக இல்லை. நாகநந்தியும் பல்லவ ஒற்றர்களும் வேண்டுமென்றே இச்செய்தியை மறைத்திருந்தாலும், வாதாபியில் சிறைப்பட்டிருந்த பல்லவநாட்டு மக்களுக்கு இச்செய்தி தெரியவில்லை, அவர்கள் சிவகாமியிடம் சொல்லவில்லை என்பது நம்பத்தக்கதாக இல்லை. வாதாபியிலிருந்து திரும்பி வரும்போதும், திரும்பிவந்து கமலியைச் சந்திக்கக் காஞ்சிக்கோட்டைக்குள் சென்றுவந்த பிறகும் இச்செய்தி அவளுக்குத் தெரியவே இல்லை என்பது மேலும் நம்பத்தகாததாகவே உள்ளது!

காதலிலே தோல்வியுற்ற சிவகாமி தன்னையும் தன் கலையையும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்வதும், முறையாக வளர்ந்து பழுத்துக் கனிந்த முடிவாக இல்லாமல் திடீர் நிகழ்ச்சியாகவே இருக்கிறது. அவள் நடனக்கலையில் மிகு தேர்ச்சிபெற்றதும் நாளுக்குநாள் அது மெருகேறி வந்ததும் அவளுக்கு மாமல்லர் மீதிருந்த காதலாலேதான். அதை அவளே சொல்லுகிறாள்:

"சுவாமி! என்னுடைய நடனக் கலை இறைவனுக்கே உரியதாயிருக்கும் பட்சத்தில் அந்த உரிமைபூண்ட இறைவன் தாங்கள்தான். அந்த நாளில் நான் ஆர்வத்துடன் என் தந்தையிடம் நடனக் கலையைப் பயின்றதன் காரணம், அடுத்த தடவை தாங்கள் வரும்போது தங்களுக்கு ஆடிக்காட்டி மகிழ்விக்க வேண்டும் என்னும் ஆசையே. எனது நடனக்கலை கனிந்து உணர்ச்சியும் உயிரும் பெற்றதெல்லாம் தங்களுடைய காதலினால்தான். என்னை மறந்து ஆனந்த பரவசநிலையில் நான் ஆடும்போதெல்லாம், தங்களுடைய அன்புக்கு உரிமை பூண்டவள் என்னும் எண்ணமே அந்த ஆனந்த பரவசத்துக்கு ஆதாரமாயிருந்தது. திருநாவுக்கரசர் பெருமானின் இனிய தீந்தமிழ்ப் பாடல்களைப் பாடிக்கொண்டு நான் அபிநயம் பிடிக்கும்போது, தங்களுடைய திருவுருவந்தான் என் அகக்கண் முன்னால் நிற்கிறது. தங்களால் கிடைத்த இந்தக் கலைச்செல்வத்தை வேறொருவருக்கு உரிமையாக்க எனக்குப் பாத்தியதை இல்லை. நடனக்கலை தெய்வத்துக்கும் எட்டாத கலையாகவே இருக்கட்டும். தங்களைக்காட்டிலும் அது எனக்கு உயர்ந்ததல்ல. தாங்கள் வாய் திறந்து ஒரு வார்த்தை சொன்னால் போதும்; உடனே அந்த நடனக் கலையை இந்த நதிப் பிரவாகத்திலே விட்டுவிட்டு ஒரு முழுக்குப்போட்டு விடுகிறேன்." -சிவகாமியின் உறுதி வாய்ந்த பேச்சு இது.

மாமல்லர் வேறுமணம் செய்து கொண்டார் என்று அறிந்த மாத்திரத்தில் அவள் 'தலைவன் தாளே தலைப்படுவது' திடீர் நிகழ்ச்சியாகவே உள்ளது.

காவியங்களில் கனவு மூலமும், பின்னால் வரும் நிகழ்ச்சி முன்னாலேயே அறிவிக்கப்படும். அது போலவே, திருநாவுக்கரசர் அவளுக்குத் துன்பம் ஏற்படும் என்று முன்பு சொன்னதைக்கொண்டே நாம் இதற்கு அமைதி காணவேண்டியுள்ளது. மகேந்திரப் பல்லவரும் "அவளுடைய கலை இறைவனுக்கே உரியது" என்று ஆயனரிடம் சொல்லுகிறார். என்றாலும், அவர் 'தம்முடைய நோக்கத்தை" நிறைவேற்றவே அப்படிச் சொல்லுகிறார் என்று கருத இடம் உண்டல்லவா?

ஆனால் சிவகாமியை ஓர் இயல்பான பெண்ணாகவும் சிறந்த கலைவாணியாகவும் உருவாக்குவதில் கல்கி வெற்றிபெற்றுள்ளார். சிறைபட்ட பலநூறு பெண்களை விடுதலை செய்வதற்காகத் தன்னைச் சிறையிருத்தத் துணிகிறாள் அவள்; வாதாபியில் சிறைப்பட்ட மக்களின் தொல்லை தீர்க்க நாற்சந்தியில் நடனமாடவும் அவள் இசைகிறாள். கலைஞர்களின் இதயத்தில் உருவாகி நாளுக்குநாள் வலிமைபெறும் ஓர் அம்சம் இது. கடைசியில், 'மக்களின் துன்பத்தில் இன்பம் காண்பது கொடிது' என்று உணர்ந்து, தனது கொடிய சபதத்தையே

*With best compliments from:*

**VOLTAS LIMITED**

அவள் மாற்றிக் கொள்கிருள். இந்தக் கருணையும் தியாகமும் கலை உள்ளத்தின் இரண்டு ஊற்றுக் கால்கள்.

இத்தகைய பெருமாட்டி தன் காதலில் தோல்வியுற்று இறைவனையே "மணந்து" கொள்ளும் போது, அது, ஓர் உயிரின் முதிர்ச்சியாகத் தோன்ருமல், அரச குடும்பச் சம்பிரதாயத்தின் கொடூரமாகவே தோன்றுகிறது. தமிழ் வரலாற்றில் மாண்பைத் துவக்கப் புறப்பட்ட கல்கி சிவகாமியின் வாழ்க்கைக் கதையை இப்படி முடித்து வைத்தது கதையின் நோக்கத்தைத் தடம்பிரித்து விட்டுவிட்டதாகவே காட்டுகிறது.

சிவகாமியின் சபதம்மூலம் பல்லாயிரம் தமிழர்களின் நெஞ்சில் அழியாத இடம்பெற்ற பாத்திரம் நாகநந்தி. ஓர் இயக்கம் சரியத்தொடங்கும்போது அதிலே போலிகள் தலையெடுக்கிருர்கள்; அல்லது போலிகள் தலையெடுக்கத் தொடங்கும்போது ஓர் இயக்கம் சரிய ஆரம்பிக்கிறது. இந்த உண்மையை விளக்குவதாக உள்ளது நாகநந்தியின் பாத்திரம். தென்னுட்டில் பௌத்த சமயம் சரிந்துகொண்டிருந்த காலப் பின்னணியில் உருவான கதையில் ஒரு போலிப் பௌத்த பிக்ஷு முக்கிய இடம்பெறுவது மிகவும் பொருத்தமே.

இதற்கு நேர்மாருக, ஓர் இயக்கம் வளர்ச்சிமுகம் காட்டும் போது அதிலே உத்தமர்கள் தலை எடுக்கிருர்கள்; அல்லது உத்தமர்கள் தலை எடுப்பதால் அந்த இயக்கம் ஓங்கி வளர்கிறது. இதற்கு எடுத்துக்காட்டாகக் கதையிலே திருநாவுக்கரசர் வருகிருர். அவருடைய சிவபக்தியின் ஆழ்ந்த உண்மைத் தன்மை சைவசமயத்தின் தழைப்பை உணர்த்துகிறது.

நாகநந்தியின் பாத்திரப்படைப்பு அக்காலச் சூழ்நிலையை அளாவியதாக வளர்கிறது. துறவிகளுக்கு இருந்த தனிச்சலுகைகளைப் பயன்படுத்திக்கொண்டு தனது திட்டங்களை நிறைவேற்றுகிருன் நாகநந்தி. வாழ்வில் எதிர்ப்படும் பயங்கர "வில்லன்"களைப் போலவே, நாகநந்தியும் புத்திசாலியாக இருக்கிருன். ஆனல், "வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு" என்பதை நினையாததாலும் அவனுடைய நோக்கம் தீயது என்ற கலைநீதியின் தீர்ப்பாலும் அவன் தன் பெரு நிலையை இழப்பதோடு ஒரு கையையும் இழக்கிருன்.

நாகநந்தியில் பலத்துக்கும் பலவீனத்துக்கும் அவனுடைய சிற்பக் கலை ஈடுபாடே காரணம். அதன் காரணமாகவே அவன் ஆயனரைத் தன் திட்டத்துக்குக் கருவியாக்கிக் கொள்ள முடிந்தது; அவன் பல சமயங்களில் சிவகாமியின் அன்புக்குப் பாத்திரமானதற்கும் அதுவே காரணம், காஞ்சிக்கோட்டையில் சிறைப்பட்டுக் கிடந்த அவன் விடுதலையானதற்கு அவனது கலை ஈடுபாடும் அதை மகேந்திரபல்லவர் அறிந்திருந்ததுமே காரணம்.

அந்த ஈடுபாடு "சிவகாமி ஈடு பாடா"கத் தடம் புரண்டபோது அவனுடைய திட்டம் சரியத் தொடங்கியது. தன் "சொந்தத் தம்பி"யான புலிகேசியைப் பகைத் துக்கொள்ளவும் தன் நாட்டுக்கே அழிவு தேடவும் அதுவே அவனைத் தூண்டியது. மூலிகைகளால் உறுதி பெற்ற "வஜ்ரதேக"த்தை மாற்று மருந்துகளால் மென்மையாக்கிக் கொண்டதுபோலவே, தன் வாழ் வின் அடிப்படை உறுதியையும் அவனே தகர்த்துக்கொண்டான்...

"தம்பி"யின் மேலுள்ள அன்பும் அதனால் மேற்கொண்ட சூழ்ச்சிகளு மாக நம்முன் முதல்முதலாகக் காட்சியளிக்கும் நாகநந்தியைக் கண்டு வியக்கிறோம்; கலைஈடுபாட் டால் அவன் ஆயனரைக் காப்பாற்று வது, சிவகாமிக்குத் துன்பமில்லா மல் பார்த்துக்கொள்வது, முதலிய செயல்களைப் பார்க்கிற போது அவன்மீது ஓரளவு அனுதாபம் ஏற் படுகிறது; காமவெறிக்கு இடம் கொடுத்து அவன் கொடிய காரியங் களில் ஈடுபடும்போது அவன் மேல் அருவருப்புக் கொள்ளுகிறோம். எனவே அவனுடைய முடிவு நமக் குத் திகைப்பையோ வியப்பையோ ஏற்படுத்தவில்லை. 'இப்படி ஒரு மனிதன் இருப்பானா?' என்ற சந் தேகமே எழாத வகையில் நாகநந்தி யின் பாத்திரத்தை உருவாக்கியுள் ளார் கல்கி.

வரலாற்றுப் பாத்திரங்களுள் முதன்மையானவர் மகேந்திரபல்ல வர். அவருடைய பலவேறு திறமை களை நாவல் முழுவதும் காண் கிறோம். அவர் இறந்துபோன பிறகுகூட, சேனாதிபதி, ஒற்றர்கள், மாமல்லர் முதலியோர் மூலமாக அவருடைய பெருமை பேசப்படு கிறது. ஆனாலும் கலைக்கண்ட இடத்திலெல்லாம் கனிந்துகுழைந்த அவர் உள்ளம் ஒரு கலைவாணியின் காதலைப் பொருத்தவரை கல் லாகவே இறுகிவிட்டது வியப் பாகவே இருக்கிறது. இக்காலத் திலே பலர் 'பக்தி வேறு லௌகிக வாழ்க்கைவேறு' என்ற இரட்டைப் போக்கில் வாழ்கிறார்கள். "என்ன தான் கலைமோகம் இருந்தாலும் அரசகுடும்பச் சம்பிரதாயம் மீறத் தக்கதல்ல" என்ற நோக்கில் செயல் படும் மகேந்திரரைப் பார்க்கும் போது, இந்த இரட்டைப் போக்கே நமக்கு நினைவு வருகிறது.

விசித்திரசித்தர் என்ற பட்டப் பெயருக்கு ஏற்ப மகேந்திரரின் நடைமுறைகள் சித்திரிக்கப்படுகின் றன. திடீரென அவர் எங்கோ தோன்றுவதும் மறைவதும் வேடிக் கையாக இருந்தாலும் பொருத்த மாக இருக்கிறது. "இதனாலேதான் மகேந்திரஜாலம் என்ற தொடர் பிறக்குமோ?" என்று ஆசிரியர் கேட்கும்போது, 'இருக்கலாம்' என்றே சொல்லத் தோன்றுகிறது. மகேந்திரரின் மாறுவேடச் சாதனை' கதை ஓட்டத்துக்கு ஒரு தனிச்சுவை யைக் கொடுப்பதோடு, அவருடைய பாத்திரப் பண்புக்கும் ஒரு பெருமை யைத் தருகிறது.

மாமல்லநரசிம்மர் தொடக்க முதலே ஆத்திரக்காரராகக் காட்டப்பட்டிருப்பது, சிவகாமியைப் பற்றிப் பிறகு அவர் எடுத்த முடிவுக்குப் பொருத்தமாக உள்ளது. மாமல்லரும் மகேந்திரரும் மாறுபடும் இடங்கள் இருவருடைய குண நலன்களுக்கும் பொருத்தமாக உள்ளன. காஞ்சிக் கோட்டையின் வடக்கு வாசலில் மகேந்திரர் புலிகேசியை வரவேற்றுக் கொண்டிருக்கும் அதேவேளையில் மாமல்லர் தெற்கு வாசல் வழியாக வெளியேறும் காட்சி, தந்தைக்கும் மகனுக்கும் உள்ள உறவில் உச்சக் கட்டமாக அமைகிறது. மாமல்லர் பிடிவாதமாக வற்புறுத்தி இவ்வாறு வெளியேறுவதத்குத் தமது தந்தையிடம் அனுமதிபெறும் கட்டம், உண்மையிலேயே இரண்டு பேரரசர்களின் பண்புக்கும் பெருமைக்கும் ஏற்றதாக அமைகிறது. மாமல்லரின் இளமைத்துடிப்புக்குக் கடிவாளம் போட்டுக்கொண்டே வரும் மகேந்திரர் இந்த இடத்தில் விட்டுக் கொடுப்பது, வீரத்தின் கூர்மையை மதித்து வாழ்த்துவதாக உள்ளது. அந்த இயல்பு அரசகுலத்துக்கே பரம்பரைச் சொத்து அல்லவா?

கதையின் தீக்குணன் (வில்லன்) நாகநந்தியேயானாலும், புலிகேசிச் சக்கரவர்த்தியே பல இடங்களில் வில்லனாகக் காட்சியளிக்கிறான். அவனுடைய வெற்றிச் சிறப்பு எல்லாம் அவனை மேலும் மேலும் கொடுமைக்கே தூண்டுவதும், பல்லவநாட்டைச் சூறையாட ஒரு பட்டாளத்தை அவன் விட்டுச்செல்வதும் கொடூரத்தின் எல்லைக்கே அவன் சென்றுவிட்டதைக் காட்டுகின்றன. அவன் காஞ்சியில் விருந்தினனாக வந்திருந்த நாட்களில் ஏற்படும் நிகழ்ச்சி ஒவ்வொன்றும் அவனுடைய தோல்வியை இடித்துக் காட்டிச் சினத்தீயை எழுப்புவது போதாதென்று, அவன் விடைபெற்றுச் செல்லும்போதும் நாகநந்தியை மகேந்திரர் விடுதலை செய்யவில்லை என்பதைக் காட்டி அவனுடைய சினத்தீயிலே ஆயிரம் காலன் பெட்ரோலை ஊற்றிக்காட்டுகிறார் கல்கி. தான் விருந்துண்டு வீற்றிருந்த கோட்டைக்குள்ளேயே தன் அண்ணன் சிறைப்பட்டுக் கிடக்கிறான் என்ற செய்தி அந்தக் கொடியவனை அதிதீவிரக் கொடியவனாக்காமல் விடுமா?

தன் நாட்டையும் அரசுரிமையையும் தன் அண்ணனிடம் (நாகநந்தியிடம்) கொடுத்துவிடத் தயங்காத புலிகேசி, சிவகாமி தன் அண்ணனுடன் சிங்காதனத்தில் ஏறுவதைப் பொறுக்கவில்லை; "சத்யாச்ரயப் புலிகேசி வீற்றிருந்த சளுக்ககுலச் சிம்மாசனத்தில் ஒரு சிற்பியின் மகள் ஏறலாமா? அதற்கு ஒருநாளும் சம்மதிக்க முடியாது. உனக்கும் எனக்கும் மனவேற்றுமை உண்டுபண்ணிய அந்த மோகினிப் பிசாசைத் துரத்திவிடு. துரத்திவிட்டு, வாதாபி சிம்மாசனத்தில் ஏறி ஆயுள் உள்ளவரையில்

A NATIONAL PRODUCT
PROVIDING EMPLOYMENT FOR MORE THAN
30,000 WORKERS

★

*Made out of the finest Materials*

**MANGALORE GANESH BEEDIES**

*Smokers cannot afford to miss*

★

**DAILY PRODUCTION EXCEEDS THREE CRORES BEEDIES**

*Head Office:*

**MANGALORE GANESH BEEDI WORKS**
**VINOBA ROAD :: MYSORE-5**

★

*Telephone:* 421

*Telegrams:* AROMA

இராஜ்ய பாரத்தை நடத்து" என்கிறன் அவன். நால்வருண அமைப்பில் அசைக்க முடியாத பற்றுக் கொண்டிருந்த அக்கால அரசர்களின் இயல்பான மனப்பான்மை இது.

மகேந்திரர் மிகவும் முயன்று, மாமல்லர் சிவகாமியை மணக்காத வாறு தடுக்கும்போதும், வாதாபிக் கோட்டை முற்றுகையின்போது மாமல்லர், "என் வாழ்நாளில் இரண்டு தவறுகளை நான் செய்திருக்கிறேன். சிற்பியின் மகளைச் சிம்மாசனத்தில் ஏற்றிவைக்க முயன்றேன் அந்த முயற்சியில் தோல்வியுற்றேன். தமிழ் ஓதவும் சிற்பவேலை கற்கவும் வந்த உம்மைப் பல்லவ சாம்ராஜ்யத்தின் சேனாதிபதியாக்கினேன். அதுவும் நான் செய்த பெருந்தவறு ஆயிற்று. சிற்பியின் மகள் சிம்மாசனத்துக்குத் தகுதியற்றவள் என்பதை நிரூபித்துவிட்டாள். நாடி பார்க்கும் வைத்தியரின் மகன் நாடுபிடிக்கும் சேனைத் தலைவனாக யோக்யதை அடைய முடியாது என்பதை நீர் நிரூபித்து விட்டீர்..." என்று பரஞ்சோதியிடம் சீறும்போதும், காலம் தந்த அந்த மனப்பான்மையே குரல் கொடுக்கிறது. இந்தக் குரல் இப்போது நமக்கு அருவருப்பைத் தந்தாலும், சிவகாமியின் சபதம் ஒரு வரலாற்று நாவல் என்ற தோற்றத்தை முழுமைப்படுத்துவதற்கு இதுவும் பெரிய அளவில் உதவும் என்பதை மறந்துவிடக் கூடாது.

தளபதி பரஞ்சோதி கதையில் அறிமுகமாகும் காட்சியிலிருந்து அவர் மாமல்லரிடம் விடைபெற்றுக் கொண்டு சிறுத்தொண்டராகப் புறப்படும் வரை, அவருடைய பாத்திரப்படைப்பில் ஓர் அருமையான ஒழுங்கமைதி காணப்படுகிறது: முதுமையின் அனுபவ அமைதியே வடிவாகவும் அரசியல்தீரராகவும் காட்சியளிக்கிறார் மகேந்திரர்; இளமையின் துடிப்பும் வீரத்தின் மிடுக்கும் உடையவராக நிற்கிறார் மாமல்லர். இந்த இருவரையும் இணைக்கும் பாலம்போல் அமைந்து செல்லுகிறது பரஞ்சோதியாரின் பாத்திரம் பிற்காலத்தில் பக்தியில் அவர் கொண்ட ஈடுபாட்டுக்கு, இளமைக் காலத்தில் அவர் கொண்ட கடமை ஈடுபாடே பயிற்சிக்களமாக இருந்ததோ என்று கருதும்படி, பாத்திரப் படைப்பை அழகுபடக் கையாண்டுள்ளார் கல்கி.

ஒன்றோடு ஒன்று "குறுக்குச்சால் ஓட்டாத" தனித்தனிப் பண்புடைய பாத்திரங்களையே தூண்களாகக் கொண்டு எழுந்து நிற்கிறது சிவகாமியின் சபதம் என்னும் உரை நடை மாளிகை. அதன் சுண்ணம்புப் பூச்சாகவும் சிற்ப சித்திர வேலைபாடுகளாகவும், மற்றப் பாத்திரங்களையும், அக்காலச் சமயச் சான்றோர்களையும், பழக்கவழக்கங்களையும் சித்திரிக்கிறார் கல்கி. நாவுக்கரசரும் ருத்திராச்சாரியாரும் வரலாற் பாத்திரங்கள். அவர்களைக் கதையோடு இணைத்து விட்டிருக்கும்

அழகு நினைந்து நினைந்து மகிழத்தக் கது. சிவகாமி என்று ஒருத்தி இருந்ததே இல்லை. அப்படி இருக்க "முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்" என்னும் தேவாரத்துக்கு அவள் எப்படி அபிநயம் பிடித்திருக்க முடியும்? அரசசபையில் அவள் நாட்டியத்தை ருத்திராச்சாரியார் எப்படிக் கண்டுகளித்திருக்க முடியும்?... ஆனால் வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு இந்த நிகழ்ச்சிகள் எந்தக் குந்தகமும் விளைவிக்காததால், இவைகளை அப்படியே நடந்த நிகழ்ச்சிகள் போலவே மனநிறைவோடு ஏற்றுக்கொள்கிறோம்.

உழவாரப்படையுடனும் நீர்வாரும் கண்களோடும் திருநாவுக்கரசரைப் பார்க்கிறோம்; மண்ணடைப்பட்டு கிராமவாசிகள் நெஞ்சை ஆட்கொண்டுள்ள பக்திவெள்ளத்தையும் கலைஈடுபாட்டையும் பார்க்கிறோம்; பாண்டியன் நெடுமாறனை வசப்படுத்தச் சமணர்கள் செய்யும் மந்திரதந்திரங்களைக் காண்கிறோம்; இலங்கையில் அரசிழந்து வந்த மானவன்மனைக் காணுகிறோம்; நெடுமாறன் மனைவியாகிப் பிற்காலத்தில் அவனைச் சைவத்துக்கு மாற்றப்போகும் மங்கையர்க்கரசியைப் பற்றிப் படிக்கிறோம்; இளைச் சளுக்கிய மன்னன் விஷ்ணுவர்த்தனனையும் கங்கநாட்டு மன்னன் துர்விநீதனையும் கதையிடையே சந்திக்கிறோம்; உறர்ஷச் சக்கரவர்த்தியைப் பற்றிய பேச்சு அங்கங்கே வருகிறது; புத்ததேவனின் அமைதி மேற்கொண்ட உறூவான்சங்கைச் சந்திப்பதோடு, சிவகாமியிடமே அவர் பௌத்த தருமத்தை உபதேசிக்கும் (கற்பனைக்) காட்சியைக் காணுகிறோம். இத்தனை வரலாற்றுப் பாத்திரங்களோடும் தொடர்புபட்டு நடப்பதால் கதையில் வரலாற்று நறுமணம் நிரம்பிக் கமழ்கிறது.

போர்களத்துக்குப் போக முடியவில்லை என்பதால் கொழித்துக் குமுறும் தேர்வலவன் கண்ணபிரான் (சிவகாமியின் வாதாபி வீட்டில்) தன் தலைவனுக்காக உயிர் கொடுக்கிறான்; ஒற்றர் தலைவன் சத்ருக்னன் தன் ஒற்று வேலையில் தீர சாகசம் காட்டுவதோடு, ஓர் உயிர்த் தோழன் போல் மகேந்திரருக்குப் பாதுகாப்பாகத் திரிகிறான்; மற்றொரு ஒற்றனான குண்டோதரன் தன்கடமையிலேயே உயிர் கொடுத்துப்புகழ் கொள்ளுகிறான்; மகேந்திரரின் அமைச்சர்கள், அவர் கோட்டையில் இல்லாதபோது மாமல்லரிடம் தங்கள் கருத்தை உறுதியோடு எடுத்துரைக்கையில், "மும்மையும் உணரவல்லார் ஒருமையே மொழியும்நீரார்" என்றும்அமைச்சு இலக்கியம் நினைவுக்கு வருகிறது; காஞ்சிக் கோட்டையைச் சுற்றி அகன்று ஆழ்ந்த அகழி கிடக்கிறது. அதிலே முதலைகள் வாயைத் திறந்து கொண்டு தலையைத் தூக்குகின்றன கோட்டைக் கதவில் யானை மோதாதபடி வேல்கள் பதிக்கப்பட்டுள்ளன என்றும் செய்திகள் அடுக்கடுக்

காக வருகின்றன. இவைகளை எல்லாம் படிக்கும் போது பல்லவர்கால வரலாற்று நிகழ்ச்சிகளுக்குள்ளேயே நாம் உலவி வருவது போன்ற உணர்ச்சி ஏற்படுகிறது.

கதையில் ஒவ்வொரு கட்டத்திலும், அடுத்துக் காதலர்கள் சந்திப்பார்கள் என்பதை விட, "வாளும் வாளும் சந்திக்கும், ஒற்றரும் ஒற்றரும் சந்திப்பார்கள், மகேந்திரரும் நாகநந்தியும் சந்திப்பார்கள்" என்பது போன்ற உணர்ச்சியே நமக்கு ஏற்பட்டுக் கொண்டு வருகிறது. இந்த உணர்ச்சியை ஏற்படுத்துவதில்தான் வரலாற்றுக் கதையின் வெற்றி அடங்கி இருக்கிறது. அந்த வெற்றியை முழுமையாகப் பெறுகிறார் கல்கி.

சிவகாமியின் சபதம்—தொடர் கதையாக வந்த காலத்தில் மட்டுமல்லாமல் இன்றைக்கும் தமிழகவரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தை ஒரு புனிதப் பேருணர்ச்சியோடு தமிழ் நெஞ்சங்களிலே பாய்ச்சுகிறது. அக்காலத்தின் கலைமாண்பு, சமயமாண்பு ஆகியவற்றையும், அவைகளின் ஊட்டத்தால் மகேந்திரரிடம் உருவான ஒரு பரந்த பெருநோக்கையும் படிக்கின்ற எந்தத் தமிழன்தான் பெருமை கொள்ளான்? இந்தச் சாதனையைச் செய்துவிடவே தொடக்க காலத் தேசிய வாதிகள் துடித்தார்கள். அந்த ஆசை அவர்களுக்குப் பிறகு, சிவகாமியின் சபதம் மூலம் நிறைவேறியது.

சாதனைகளுக்கு எப்போதுமே வரலாற்றில் தனி இடம் உண்டு. தமிழ் இலக்கியத்தில் அந்தச் சிறப்பிடம் சிவகாமியின் சபதத்திற்கு உண்டு. தமிழில் வரலாற்றுநவீனம் என்ற துறைக்குச் சிவகாமியின் சபதமே வழிகாட்டியாகவும் கலங்கரை விளக்கமாகவும் அமைந்துவிட்டது. இன்று தமிழில் வெளிவந்துள்ள பல வரலாற்று நாவல்களுக்குச் சிவகாமியின் சபதமே தாய். தாய்மையில் எல்லாப் பெருமைகளுக்கும் உரிய "மகோன்னத" நிலையில் இதைப்படைத்து வழங்கிய கல்கிக்குத் தமிழ் இலக்கிய வரலாற்றில் அழியாததோர் இடம் உண்டு. ஒரு கலைஞன் தன் வாழ்வில் பெறத்தக்க பேறு வேறு என்னதான் உண்டு?

---

*With best compliments*

F
R
O
M

★

**SYNBIOTICS LIMITED, WADI WADI**

**BARODA**

*With b est compliments from*

**SUHRID GEIGY LIMITED**

**WADI WADI - BARODA**

★

*Manufacturers of optical whitening Agents (TINOPAL) Dyestuffs, Intermediates and 'Geigy' Pharmaceutical Specialities.*

# நாவலாசிரியர் கல்கி

ஆசிரியர் : தீபம்-நா. பார்த்தசாரதி

தமிழில் தோன்றிய முதற்கால நாவலாசிரியர்கள் பிரதாப முதலியார் சரித்திரம் எழுதிய வேதநாயகம் பிள்ளை, மாதவையா போன்றவர்களாக இருந்தாலும் நாவலுக்கு நவீனத் தன்மையை (*Modern sensibility*) உண்டாக்கியவர் கல்கிதான். இணையற்ற திறமையும் செயலாற்றலும் உடைய பத்திரிகை ஆசிரியன் ஒருவன் எதையும் செய்துகாண்பிக்க முடியுமென்பதற்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் கல்கி. அவருடைய நாவல்கள் யாவும் தொடர்கதைகளாக வந்து புகழ் ஈட்டியவை. முதன்முதலாகத் தமிழ் நாவலுக்கோ, தமிழ்க் கதைக்கோ பல்லாயிரம், பல்லாயிரம் வாசகர்களைத் தேடிக்கொடுத்த சாதுரியமும் கல்கிக்கே இருந்தது. ஆண்களும், பெண்களும், பாமரர்களும், படித்தவர்களும், இளைஞர்களும், முதியவர்களுமாக, இதழ்களில் வெளிவரும் தொடர்கதைகளைத் தேடிப் பிடிக்கச்செய்த பெருமை கல்கிக்கே உரியது. அந்தப் பெருமையை ஒப்புக்கொள்வதில் எவருக்கும் கருத்து வேறுபாடு இருக்கவே முடியாது.

**விமர்சகர்கள் கருத்து:**

ஆனல் கடுமையான தமிழ் இலக்கிய விமர்சகர்கள் என்று தங்களை அறிமுகப்படுத்திக்கொள்கிற சிலர் கல்கியின் நாவல்களையும் தொடர்கதைகளையும் சற்றே அழுத்தமாக உரைத்துப் பார்க்கத் தயங்குவதில்லை. ஆனல் நான் இங்கு ஒரு பரம ரசிகனாக இருந்து கல்கியின் நாவல்களில் நயங்காண முயலப் போகிறேனே ஒழிய அவைகளை எக்காரணத்தைக் கொண்டும் உரைத்துப் பார்க்கப் போவதில்லை. 'ரசத்திலே தேர்ச்சி கொள்'—என்று புதுமைக் கவி கூறியதைப்போல ரசத்தேர்ச்சி கொள்கிற அளவுக்கு அப்பாற்பட்ட விமர்சனக் கடுமை இலக்கிய வளர்ச்சிக்குப் பயன்படுவதில்லை என்பதாகக் கருதுகிறவன் நான். எனவே கல்கியின் நாவல்களை விமர்சகர்களாகி அணுகுவதைவிட இரசிகர்களாக அணுகுவதையே நாம் விரும்புவோம்.

**சரித்திர நாவல்கள்:**

தமிழில் இன்று வளர்ந்துகொண்டிருக்கிற சரித்திர நாவல்கள் என்ற

வகைக்கு அவர்தான் முன்னோடியாக இருக்கிறார். அவருடைய சரித்திர நாவல்களில் கதை ஓட்டமும் நளின மும், எழுதுகிறவர் இடர்ப்பட்டு எழுதுவதுபோல் வாசகனுக்குத் தோன்றாமல் சரளமாகக் கதை நடக்கிற போக்கில், பக்குவமாக அமைந்திருக்கும். யாரும் படிப் பதற்குத் தயங்குகிற விரசமோ, விகாரமோ இராது. படிக்கிறவர் களைப் புத்தகத்தைக் கீழே வைக்க விடாமல் படிக்கச் செய்யும் தன்மை யும் அவற்றுக்கு உண்டு. சரித்திரத் தின் மகோன்னதமான காலகட்டங் களை எல்லாம் அவர் எழுதிவிட்ட தால் பின்னால் பல எழுத்தாளர்கள் எழுதுவதற்கு அப்படிப்பட்ட கால கட்டங்கள் கிடைக்கவில்லை. சரித் திரத்தோடு பின்னிக்கிடக்கும் சைவ வைணவ சமய நிகழ்ச்சிகளை யும் பக்குவமாகக் கதைகளிலே இணைத்த பெருமை அவருக்கு உண்டு. வீரம், காதல், சோகம், நகைச்சுவை ஆகிய நிகழ்ச்சிகளையும் சுவைகளையும், சரித்திரகாலப் பாத் திரங்களுக்கு இயையப் பொருத்திக் கதை புனைந்தவர் கல்கி. நாகநந்தி முதல் ஆழ்வார்க்கடியான் வரை, படகோட்டி பொன்னன் முதல், பார்த்திபேந்திர பல்லவன் வரை அவருடைய சரித்திரக் கதாபாத்தி ரங்களைப் பலர் இன்னும் நன்றாக நினைவு வைத்துக்கொண்டிருப்பதே இதற்குச் சான்று. சமூக இயல்பு கள் விரவித் தண்ணீரில் எண்ணெய் கலந்ததுபோல் ஆகிவிடாமல் சரித் திர இயல்புகள் அழகாக உருவாக் கப்பட்ட நாவல்கள் அவருடை யவை. சரித்திர நாவல் என்ற வகைக்கு முன்மாதிரியாக நிற்பவை அவருடைய சரித்திர நாவல்களே.

**சமூக நாவல்கள் :**

கல்கியின் சமூக நாவல்களும் சரித் திர நாவல்களைப் போலவே மிகச் சிறந்த தொடர் கதைகளாக வெளி வந்து புகழ்பெற்றவை. சமூகத்தின் குமாஸ்தா முதல் கலெக்டர் வரையி லிருந்த பலதுறை மனிதர்களைப் பற்றிக் கல்கி அவர்களுக்கு இருந்த அநுபவ ஞானம் அவருடைய சமூக நாவல்களில் நன்கு தெரிகிறது. அவருடைய சமூக நாவல்கள் எல் லாம் பத்திரிகைகளில் நீண்டகாலம் தொடர்கதைகளாக வெளிவந்தவை ஆதலால் அதிகமான சிறிய பெரிய கதாபாத்திரங்களை உடையவையாக இருக்கும். அதிகக் கதாபாத்திரங் களும், அதிகமாகக் கதை நடக்கும் பிரதேசங்களும் உடையது அலை ஓசை என்று ஞாபகம். அலைஓசை யில் தேசிய வரலாறே அடங்கியிருக் கிறது. சுதந்திரப் போராட்டக் காலம், சுதந்திரம் கிடைத்த பின் னுள்ள சூழ்நிலை, ஆகியவற்றை அகிலபாரதம் முழுவதையும் கதை நடக்கும் களமாகக் கொண்டு படைத்திருக்கிறார் கல்கி. 'அலைஓசை' பாரத சமுதாயம் முழுவதுமே வியா பித்துள்ள ஓர் அகிலஇந்தியச் சமூக நாவல் என்பது என் அபிப்ராயம். 'பொய்மான் கரடு', மகுடபதி போன் றவற்றில் கொங்குநாட்டு வாழ்க்கை யின் சித்திரங்கள் நன்கு சமூகரீதி

யாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. திருவழுந்தூர் சிவக்கொழுந்து, அபலேயின் கண்ணீர் போன்ற சிறிய நாவல்களிலும் ஓர் எல்லைக்குட் பட்ட சமூகக் கண்ணேட்டம் இருக்கிறது.

ரசமான நடை:

எதை எழுதினலும் ரசமாக எழுதுகிற திறமை கல்கிக்கு இருந் தது. அது அவருடைய ஒப்பற்ற ஆற்றல். அதனுல் அவர் சரித்திர நாவல் எழுதினலும் சரி, சமூக நாவல் எழுதினலும் சரி, சிறிய நாவல் வடிவமான நெடுங்கதை அல்லது குறுநாவல் எழுதினுலும் சரி, வெற்றி பெறும்படியான விதத்தில் எழுதினர் என்பதுதான் முக்கியம். திருவழுந்தூர் சிவக் கொழுந்துபோல் ஒரு கலைஞனின் சமூகவாழ்வைக்கூட ஆற்றல்பெறப் படைக்கிற தன்மை அவரிடம் இருந்தது. கல்கியின் சரித்திர, சமூக, கதாபாத்திரங்கள் வாசகனை ஏமாற்ருத வடிவ அமைப்பில் வார்க்கப் பட்டவை. வாசகர்களு டைய இரசனை உணர்வைக் குன்றச் செய்யாத ஒரு நல்ல முன்னேடி நாவலாசிரியர் கல்கி. தமிழ் நாவல் களுக்கு இன்றிருக்கிற ஏராளமான வாசகர்களையும்கூடக் கல்கியின் வாசகர்களுடைய பரம்பரையினர் களாகவே கூறவேண்டும். இன் றுள்ள வாசகர்கள் குறை நிறை காண்பதில் வேண்டுமானுல் திவிர மாக இருப்பார்கள். ஆனுலும் இன்று இப்படி வளர்ந்துவிட்டிருக் கிற இந்த வாசகர்களுக்கு முன் தலைமுறை வாசக பரம்பரையாக இருந்தவர்கள் கல்கியின் நாவல் வாசகர்களே என்பதை நாம் நன்றி யோடு நினைவுகூற வேண்டியவர் களாகவே இருக்கிறேம்.

---

....புதினம் ஒன்றைப் படிப்பவர்கள் அது கற்பனை என்பதை மறந்து உண்மை நிகழ்ச்சியென எண்ணி ஈடுபாடு கொள்ளுமாறு கதை அமைய வேண்டும். கதை மாந்தர் உண்மை மனிதராகத் தோன்ற வேண்டும்; அவர்களிடம் விருப்போ வெறுப்போ படிப்பவர்களிடம் எழ வேண்டும். இத்தகைய உணர்வைக் கொடுக்கும் வகையில், கதை மாந்தரைப் படைக்கும் ஆற்றல் கல்கி அவர்களிடம் இருந்தது என்பதை 'அலைஓசை' காட்டுகிறது. . . .

—வை. திருநாவுக்கரசு.

# தில்லித் தமிழ்ச் சங்கம்

**8-5-67 தேதியில் ஏற்பாடு செய்த கவியரங்கத்தில் கவியோகி சுத்தானந்த பாரதியார் அவர்கள் கூறிய தலைமையுரை**

---

உளக் கோவிலில் உயிர்மேனியாக,
நெஞ்சந் தோறும் அஞ்சிலம் பொலிக்க
ஐந்தொழிலாட்டம் அயர்வறப் புரியும்
தில்லைப் பெருமான் தில்லிக் கெழுந்து
டமருக மிசைத்துத் தமிழ் பொழியுகவே!
மாம்பழ வாயிற் பூங்குழ லிசைத்தே
ஆயர் பாடியின் அன்பைக் கவர்ந்தே
யமுனைக் கரையில் எழுந்தருள் கண்ணன்
அதே யமுனையின் ஆரம்புனைந்த
தாய்பாரதியின் தலைமைப் பதியாம்
டில்லியில் வந்து தல்லியைப் போலக்
கருணை பொழிந்தெமைக் காப்பாற்றுகவே!

பாரத நாட்டுப் பண் பாடெல்லாம்
பருவுடலெடுத்துத் திருவுற விளங்கும்
தில்லியில் ஆண்ட வில்லியி ராமன்
மலரடி போற்றி மன்ற மேறுதுமே!
ஆயிரம் ஆயிரம் அணிசேர் வீரர்
தசரத ராமர் தருமபுத்திரர்
அசோகன் முதலோர் ஆண்ட அயோத்தி
முகலவர் ஆண்ட மூதூர்; ஆங்கிலர்
அரசு செலுத்திய முரசின் றடங்கி
ஜெனகணமன வெனும் ஜயகீதத்தில்
மூவிறக் கொடிவளர் முதலூரிதனில்

தன்னிகரற்ற "தமிழ்க்" கொடி பிடித்தே.
மன்றங் கண்டு வென்றிசேர் வீரர்
அனைவருக்குமென் அன்புரித் தென்பனே!

எத்தனை மன்னரோ இரத்தம் பெருக்கி
யுத்தத்தாலே உலகினைப் புரந்தார்!
கத்தியே யின்றிக் கைராட் டினத்தின்
ஓங்கா ரத்துடன் ஓம் ராம் என்ற
தாரக மந்திர ஜபத்தினாலே
சத்தியாக் கிரக சக்தியி னாலே
பகையும் நட்பாம் பண்பாட் டினாலே
உலகெலாம் வியக்க நலமெலாந் திரண்ட
குடியர சமைத்த கோப்பெரும் பெரியான்
மஹாத்மா காந்தியின் மாண்பை வணங்கி
காந்தியுகத்துக் கவிக்குயில் வீரர்
ஏறுக மன்றம் இளவேனில் இதுவே!

முத்திற் பிறந்த பாரத ரத்தினம்
வைர வுறுதியும் வழங்கு வகையும்
எளியவர்க் கிரங்கும் இளகிய நெஞ்சும்
கொண்டவன் உலகெலாம் கொண்டாடுகின்ற
ஜவஹர் நேருவை நவயுக நாயகன்
என்னப் போற்றி இசை பாடுதுமே
அன்னவன் அன்னம் அணிநடைச் செல்வி
இந்திரா புரக்கும் இந்தியா வாழ்கவே!
மலைமகள் அன்று மதுரைச் சொக்கனை
மணந்தது போலே மதுரைச் சங்கக்
கலைத் தமிழ்க் கன்னி கனிவொடிங் கெழுந்தே
தில்லியிலே தமிழ்ச் சங்கம் அமைத்து
கவிச்சுவை திளைக்கக் கண்டோம் யாமே!

மானிடப் புலமையின் மாபெறுந் திறமை
கவிதை யென்றே கட்டுரைப் போமே!
ஊனுட லுள்ளே உள்ளூற் றருவியின்
ஓமிசைக் குழலே நாமிசைக் கவியாம்.

கட்டிமாம் பழமும் கதலித் தேனும்
கருப்பஞ் சாறும் கறந்த பாலும்
கலந்தது போலே கற்கண் டுடனே
மிந்திரி கலந்த மிட்டாய் போலே
இனிக்கும் கவிச்சுவை அளிக்கும் புலவீர்
பருவ காலப் பவனியைப் போலே
பாண்வண் டிசைக்கும் தேன்பொழில் போலே
இடித்தெழும் எழினியில் வெடித்தெழு மின்போல்
அடித்தெழு மழையில் ஆர்த்தெழு முழவுபோல்
அருவியின் ஓமும் குருவியின் ஜிம்மும்
அலைகடல் முரசும் அந்தர வானில்
அணுச்செறி நடமும் அண்டகோளங்கள்
சுருசுருப்பாகச் சுழலும் வேகமும்
கும்மிருள் வானிற் கோடி நாண் மலர்கள்
அணிநடை போட்டே அருணச் சொக்கில்
கூடிக் குழையும் கொழுந்திருக் காட்சியும்
எழுங் கதிருலகின் இயற்கை வனப்பும்
போலக் கவிதை பொலிக பொலிகவே!

கலையிற் சிறந்தது கவிதை யாமே
வெள்ளத் துள்ளே மின்சாரம் போல்
உணர்வுக் குள்ளே மணவெறி பூத்தே
மணவெறிக் குள்ளே மயக்கமொன் றுண்டு
மயக்கிற் குள்ளே மகிழ்ச்சி யொன்று
மகிழ்ச்சியி லூறும் மதுவே கவிதையாம்.
அழகே சொற்கள் அமுதே பண்கள்
பழகிய வாழ்வே பண்புறு சுவைகள்
மழை மின் போலே மதியிற் பொலியும்
முழுமதி கொஞ்சி எழுகடல் போலே
அருள் கொஞ்சிடவே பொருள்சேர் கவியாம்

திருவா சகம்போல் உருகுளக் கவிதை
இளங்கோ போன்ற வளம்பெறு கவிதை
திருக்குறள் போன்ற தெய்வக் கவிதை
கம்பனைப் போன்ற கவின்பெறு கவிதை

பாரதி போன்ற பழரசக் கவிதை
காளிதாசன் போற் கனிதரு கவிதை
ஓமர் போன்ற ஒண்மணிக் கவிதை
விர்ஜில் போன்ற வியன்பெருங் கவிதை
தாந்தே போன்ற தனல்பெறுங் கவிதை
ராஸீன் போன்ற ரசமுள கவிதை
சேக்ஸ்பியர் மில்தன் ஷெல்லி போன்ற
இன்பக் கவிதைகள் இசைப்போம் யாமே
பாரத சக்தியின் வீறுகொண் டுலகம்
போற்றக் கவிகள் பொழிவோம் யாமே!

மருத யாழிசை மங்கலம் முரலவே
முல்லைக் குழலிசை மோகன மூதவே
நெய்தற் பறைகள் நீளிசை வீக்கவே
குறிஞ்சிக் குரவர் குரவை யாடவே
பாலைப் பண்கள் பம்பிப் பறக்கவே
பொதுகைத் தென்றல் எதுகை யளக்கவே
இமயக் கங்கையும் யமுனையும் கூடி
எக்களித் திடவே பக்குவக் கவிகள்
பண்பாடு யர்ந்த பைந்தமிழ்ச் கவிகள்
வான் முகடெட்ட வாரி வழங்கும்
இளந்தமிழ்ப் புலவர் வளம்பெற வருகவே!

அழகழகான அணிமலர் மணக்கவே
கொத்துக் கொத்தாய்க் கொழுங்கனி குலுங்கவே
குயில் குயிலாகக் குயிலவர் குயிலவே
கிளி கிளியாகக் கிள்ளையர் விள்ளவே
மயில் மயிலாக மயிலினர் அசைய
கண்கனி கொள்ளக் காதமு துகக்கவே
காதலும் வீரமும் கைகோத் தாடவே
பாட்டும் கூத்தும் போட்டிபோட் டியங்கவே
அரசியற் போரும் அமர்ந்து கேட்கவே
முழங்குக இளந்திரு முத்தமிழ்க் கவியே!

# A. & F. HARVEY LTD.

**MADURAI**

*MANAGING AGENTS FOR*

***MADURA MILLS CO. LTD.***

MADURAI — TUTICORIN — AMBASAMUDRAM (Madras State) and SERAMPORE (West Bengal)

*Manufacturers of*:

YARN, CLOTH and INDUSTRIAL FABRICS

★

# THE INDIAN TEXTILE PAPER TUBE CO. LTD.

**MADURAI (SOUTH INDIA)**

Pioneers in the manufacture of Paper Tubes and Cones for the Textile, Rayon and Sewing Thread Industries. All types of Paper Tubes, Cones and Containers to specification.

★

# FENNER, COCKILL LTD.

**MADURAI-1 (SOUTH INDIA)**

*Manufacturers of*: Oil Seals, 'O' Rings etc. Fan Belts; Industrial V-Belts, Woven Belting; Spindle Tapes, Synthetic Rubber Cots and Aprons for textile Industry; "Fenaplast" flame resistant belting.

# "கல்கி"யுடன் ஒருநாள்...

தென்னவன்

இன்றைக்குப் பதினாறு ஆண்டுகட்கு முன்னால்—கடந்த 1951-ம் ஆண்டு—யான் மாயூரம் நகராண்மைக் கழக உயர்நிலைப்பள்ளியில் எட்டாம் படிவம் படித்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது எனக்கு வயது பதினான்கு.

அப்பொழுது சென்னையிலிருந்து குழந்தைக்கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களைச் சிறப்பாசிரியராகக்கொண்டு "பூஞ்சோலை" என்னும் சிறுவர் திங்கள் இதழ் ஒன்று வெளிவந்துகொண்டிருந்தது. அவ்விதழில் திங்கள்தோறும் தமிழகத்துத் தலைசிறந்த எழுத்தாளர் பலரும், இதழுக்கு ஒருவராகத் தொடர்ந்து "சின்னஞ்சிறு வயதில் நான்" என்னும் தலைப்பில், இளமையில், தங்கள் வாழ்க்கையில் நடந்த பசுமையான இனிய நிகழ்ச்சிகள் சிலவற்றை நினைவில் கொண்டு வந்து சுவையாக எழுதிவந்தார்கள். அவர்களுள் தமிழ்ப் பெரியார் திரு. வி. க., கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, அரசரவைக் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை, சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப் பிள்ளை டாக்டர் மு. வரதராசனார் ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்களாவர். இப்படி ஒரு இதழில் நம்முடைய அமரர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் தம்முடைய இளமை நிகழ்ச்சிகள் சிலவற்றை சிறுவர் மனத்தில் என்றும் நிலைபெற்றிருக்குமாறு சுவையாகவும் வேடிக்கையாகவும் எழுதியிருந்தார்கள். அவற்றில் ஒரு நிகழ்ச்சி இன்று என் நினைவில் இருக்கிறது.

அவர் ஆறு அல்லது ஏழு வயது சிறுவனாக இருந்தபோது தம்முடைய தாத்தா, பாட்டி, அத்தை முதலியோரிடம் கதைகள் கேட்டதையும், அக்கதைகளைத் தம் போன்ற சிறுவர்களிடம் திருப்பிச் சொல்லும்பொழுது தம்முடைய சொந்த கற்பனைகளையும் சேர்த்துக் கூறியதாகவும், அவைகளைக் கேட்டுச் சுவைத்த அச்சிறுவர்கள் வியப்பில் ஆழ்ந்ததையும் மிக எளிய தமிழில் மிகச் சுவையாக-வேடிக்கையாக-எழுதியிருந்தார்கள். சின்னஞ்சிறு வயதில் தாம்பெற்ற இத்தகைய ஆற்றலால்தான், பெரிய வயதில் தம்மால் வரலாற்றுப்பின்

னணிகொண்ட கற்பனைகள் கலந்த பெரிய சரித்திரக் கதைகளை உருவாக்க முடிந்தது என்றும் குறிப்பிட்டிருந்தார்கள்.

இதனைப் படித்த நான் அவருடைய கதைகளை எல்லாம் படித்துவிடவேண்டும் என்று பெருவிருப்பு கொண்டு அவருடைய பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், மகுடபதி, சோலைமலை இளவரசி முதலிய கதை நூல்களை எல்லாம் விடுமுறை நாட்களில் படித்து முடித்தேன்.

பின்னர் 'கல்கி' இதழில் தொடர்ந்து வெளிவந்த "பொன்னியின் செல்வன்" என்னும் சரித்திரத் தொடர்கதையை வாரந்தோறும் தொடர்ந்து படித்துவந்தேன்.

இப்படி 'கல்கி' அவர்களுடைய எழுத்திலே-கதைகளிலே - உள்ளம் தோய்ந்து, ஆழ்ந்து, சுவைத்து இன்பம் கண்டுவந்த நான், கல்கி அவர்களை நேரில் பார்க்கவேண்டும்; சில மணித்துளிகளாவது அவருடன் உரையாடவேண்டும் என்று பெருவிருப்பம் கொண்டேன்.

இந்த வாய்ப்பு எனக்கு 1954-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19-ம் நாள் கிடைத்தது.

அன்று காலை சுமார் 10-மணி அளவில் சென்னை அடையாற்றில் உள்ள அவர்கள் இல்லத்தில் சென்று அவர்களைச் சந்தித்தேன். அப்பொழுது அவர்கள் இல்லத்தின் மேல் மாடியில் முதல் அறையில் எழுதிக்கொண்டிருந்தார்கள்.

*WITH COMPLIMENTS*
*FROM*

**CARBORUNDUM UNIVERSAL LIMITED**

*Manufacturers of Coated and Bonded Abrasives Super Refractories and Abrasive Grains.*

**MADRAS ★ BOMBAY ★ CALCUTTA**
**NEW DELHI.**

என்னைக் கண்டதும் அவர்கள் "வாருங்கள் ; அமருங்கள்" என்று கூறி, இருக்கை ஒன்றைக் காண்பித்தார்கள். தாம் எழுதிக்கொண்டிருந்ததை நிறுத்தி, பேனுவை மூடி பக்கத்தில் வைத்துவிட்டு "நீங்கள் யார்? எந்த ஊர்?" என்று அமைதியாகக் கேட்டார்கள்.

அப்பொழுது நான் மிக இளையோனுக இருந்தும், என்னை மதித்து அன்பு நிறைந்த சொற்களால் வரவேற்ற அவரது பெருங்குணத்தை எண்ணி, அன்பால் பிணைப்புண்டு அவர்களின் மலர்முகத்தைக் கண்டு உவப்பில் ஆழ்ந்து போனேன். முதலில் அவர்கள் தோற்றமே என்னைக் கவர்ந்துவிட்டது. அந்த முகப்பொலிவு, பல ஆண்டுகள் கழிந்துவிட்டாலும் இன்னும் என் கண்முன்னுல் தெற்றென ஒளி உமிழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆம்; அவர்கட்கு ஒல்லியான உடல் அமைப்பு. உள்ளத்தின் தூய்மையை வெளிப்படுத்துவனபோல தூய வெள்ளைக் கதராடை அணிந்திருந்தார்கள். கண்கள் அவர்களின் அறிவின் ஆழத்தை வெளிப்படுத்தின. அவற்றின்மேல் அணிந்திருந்த மூக்குக்கண்ணுடி அந்த அறிவின் ஆழத்தைப் பிரதிபலித்து ஒளிரச் செய்தது. அவர்களின் குரல் ஒலி வெண்கல நாதம்.

அவர்கள் அமர்ந்திருந்த மேசையில் "பாரதியார் கவிதைகள்" நூற்பிரதி ஒன்று இருந்தது. எழுதுவதற்கென்று ஒரு கட்டு வெள்ளைத் தாள்கள் இருந்தன. பின்புறச் சுவற்றில் காந்தியடிகள், இராஜாஜி பாபு இராஜேந்திர பிரசாத், ஜவாஹர்லால் நேரு, சுப்பிரமணிய பாரதியார், இரவீந்திர நாத தாகூர் ஆகியோரின் திருவுருவப் படங்கள் காட்சியளித்தன.

அவர்கள் தோற்றத்திலும், சுற்றுச் சூழ்நிலைகளிலும் மனத்தை ஈடுபடுத்திக் கொண்டிருந்த நான், பின்னர்தான் அவர்கள் கேட்ட கேள்விகளை நினைவுபடுத்திக் கொண்டேன்.

"உங்கள் கதைகளைப் படித்து அனுபவித்து மகிழும் ஆயிரக்கணக்கான உங்கள் நேயர்களுள் நானும் ஒருவன்; இயற்பெயர் தட்சிணுமூர்த்தி; இதனைத் தமிழ்ப் படுத்தி 'தென்னவன்' என்னும் பெயரில் கவிதைகள், கட்டுரைகள் எழுதுவது உண்டு. சொந்த ஊர் செம்பொன்னுர் கோவில்" என்று பதிலிறுத்தேன்.

அவர்கள் "கதைகள் எழுதுவது உண்டா?" என்று கேட்டார்கள்.

"உண்டு. ஆனுல் அவைகள் எதுவும் இதுவரை பத்திரிகைகளில் இடம் பெற்றதில்லை. அதனுல் கதைகள் எழுதுவதில் ஊக்கம் பிறப்பதில்லை", என்றேன்.

"என்னுடைய கதைகளைப் படித்து மகிழும் நீங்கள், கதைத் துறையில் ஊக்கம் குன்றிவிட்டதாகச் சொல்வதுகேட்டு வருந்தவேருசய்கிறேன். பத்திரிகைகளில்

கதைகள் இடம் பெறவில்லையே என்று ஊக்கத்தைக் கைவிடாதீர்கள். முயலுங்கள்; வெற்றி பெறலாம்'' என்றார்கள்.

''நீங்கள் 'கல்கி' இதழில் 'பார்த்திபன்கனவு' கதையைத் தொடர்ந்து இரண்டாண்டுகளும், சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் ஆகிய இரு கதைகளை மூன்று ஆண்டுகளும் தொடர்ந்து எழுதி வந்துள்ளதாக அறிகிறேன். இவற்றைத் தாங்கள் 'ஒரே மூச்'சில் எழுதிமுடித்து 'கல்கி'யில் தொடர் கதையாக வெளியிட்டீர்களா? அல்லது வாரம்தோறும் எழுதி வெளியிட்டீர்களா?'' என்று கேட்டேன்.

''பார்த்திபன் கனவு கதையை மட்டும் முதலில் தொடர்ந்து பாதி கதைவரை ஒரே மூச்சில் எழுதி முடித்தேன். பின் பாதியை வாரம் தோறும் எழுதி வெளியிட்டு முடித்தேன். சிவகாமியின் 'சபதமும், பொன்னியின் செல்வனும் அப்படி எழுதப்பட்டதல்ல; அவ்வப்பொழுது வாரந்தோறும் எழுதி வெளியிட்டு முடித்தவைகளே'' என்றார்கள்.

''அப்படியானால் மிக நீண்ட காலமான மூன்றாண்டுகளில் எப்படி முன்கதை நிகழ்ச்சிகளை மறவாமல், பின்கதை நிகழ்ச்சிகளில் நினைவுபடுத்தி கதைக் தொடர்பும் கதைச் சுவையும் குன்றாமல் தங்களால் எழுத முடிந்தது''. என்று கேட்டேன்.

*With best compliments from*

★

# M/s. Hindustan Motors Limited

15, INDIA EXCHANGE PLACE,

CALCUTTA-1.

"அதுதான் நீண்ட பெருங்கதை எழுதும் கலைஞர்கட்குள்ள கைவந்த ஆற்றல்", என்று கூறி மெல்லச் சிரித்தார்கள்.

இந்தச் சிரிப்பு அவர்களின் கதை எழுதும் ஆற்றலைக் கூறாமல் கூறியது.

"நான் தொடர்கதை ஒன்று தொடங்குவதற்கு முன்னால் கதைக் குறிப்புஒன்றைமுன் கூட்டி ஆழ்ந்து சிந்தித்து எழுதிவைத்துக்கொள்ளு வேன். இந்தக் குறிப்புதான் கலைஞனுக்கு உயிர் போன்றது. இந்தக் குறிப்பைத் தயாரிக்க பல மாதங்கள் கூட சிந்திப்பதும் உண்டு. ஒரு கதை ஆசிரியனின் வெற்றி அவன் எடுக்கும் குறிப்பில்தான் அடங்கி இருக்கிறது. சில சந்தர்ப்பங்களில் குறிப்பையும் விடுத்து, கதையை எழுதி மீண்டும் கதைக் குறிப்பிற்கு வருவதுண்டு"—என்று கூறி 'பொன்னியின் செல்வன்' கதை எழுதும் போது நேர்ந்த ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு (அந்நிகழ்ச்சி தற்போது எனக்கு நினைவில் இல்லை) "இப்படிக் குறிப்பை விடுத்தும் கதைத்தொடர் பாக வெளியில் சஞ்சாரம் செய்து விட்டு, பின்னர் கதையைத் தொடர்ந் தேன். இவையெல்லாம் கதை எழுதும் கலைஞனின் அவ்வப்போதைய உள்ளத்தையும், உணர்ச்சியையும் பொருத்தது"—என்றார்கள்.

நான் எழுதி வைத்திருந்த "வாழ்வே காதல்" என்னும் கவிதையை அவர்களிடம்தந்து "இதைத் தங்கள் 'கல்கி' இதழில் வெளியிடுவீர்களா?" என்று கேட்டேன்.

கவிதையைப் படித்துப் பார்த்த அவர்கள் "கவிதை நன்றாகத்தான் இருக்கிறது. இதுபோன்ற காதல் கவிதைகளை நாங்கள் 'கல்கி'யில் வெளியிடுவதில்லை. இயற்கை, தாய்மை, குழந்தை, மொழிச்சிறப்பு, நாடு, தேசத் தலைவர்கள்—பற்றிய கவிதைகளாக எழுதியனுப்புங்கள்; வெளியிடுகின்றோம்" என்றார்கள்.

இன்னும் எவ்வளவோ பேசி உரையாடினோம். எழுத்தாளர்களான 'விந்தன்', 'சோமு' — இவர்களின் எழுத்துக்கள் பற்றியும் உரையாடினோம். அப்பொழுது 'விந்தன்' அவர்கள் 'கல்கி' காரியாலயத்திலிருந்து விடுபட்டு 'மனிதன்' என்னும் திங்கள் இதழைத் தொடங்கி இருந்தார்கள்.

கடைசியாக, 'கல்கி' அவர்கள் "என்னை நாடி வந்ததன் நோக்கம் என்ன?" என்று குறிப்பாகவே கேட்டுவிட்டார்கள்.

"தங்களைக் காண வேண்டும்; கண்டு பேசவேண்டும் என்று எண்ணினேன். என் எண்ணம் நன்றே நிறைவேறியது. மீண்டும் நான் சென்னை வரும்போது தங்களை வந்து சந்திப்பேன்" என்று கூறினேன்.

"நீங்கள் தற்போது என்னசெய்து கொண்டிருக்கிறீர்கள்" என்று கேட்டார்கள்.

"இந்த ஆண்டுதான் பள்ளி இறுதி தேர்வு (S.S.L.C.) எழுதி முடித்

துள்ளேன். வேலை தேடும் பொருட்டே நான் சென்னைக்கு வந்தேன். தங்களைக் காணும் பேறு பெற்றேன்" என்றேன்.

நான் என்னுடைய "தலைவர்கள் கையெழுத்துப் புத்தகத்தை" அவர்களிடம் கொடுத்து, கையெழுத்திட்டு தருமாறு கேட்டேன். அவர் அப்புத்தகத்தில் "நாடு செழிக்கவேண்டும்" என்று எழுதி கையெழுத்திட்டு தந்தார்கள். அதனை நான் பொன்னே போல போற்றி வருகின்றேன்; காத்து வருகின்றேன்.

அப்புத்தகத்தின் பக்கங்கள் தோறும், யான் செயலாளனாக இருந்து பணியாற்றும் கலைமகள் நூல் நிலையத்தின் முத்திரையைப் பொறித்திருந்தேன். அதனைக் கண்ணுற்ற அவர்கள், "இந்த நூல் நிலையம்..." என்று கேள்விக்குறி தோன்ற ஏதோ கூறத் தொடங்கினார்கள். நான் இடைமறித்து 'இந்த நூல்நிலையத்தின் செயலாளன்தான் யான்' என்று கூறி "போய்வருகிறேன்" என்று விடை கூறினேன்.

"சற்று இருங்கள்" என்று கூறி, அவர்கள் தம்முடைய திருமகளார் ஆனந்தி அவர்களை அழைத்து புத்தகங்கள் சிலவற்றை கொண்டுவரப் பணித்தார்கள்.

அவர்களும் மொத்தம் எட்டு நூல்கள் அடங்கிய புத்தகக்கட்டு ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்தார்கள்.

'கல்கி' அவர்கள் "இந்த நூல்கள் அனைத்தும், உங்கள் நூல்நிலையத்திற்கு நான் அளிக்கும் அன்பளிப்புகள்" என்றார்கள். நான் அவர்கட்கு நூல்நிலையத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துவிடைபெற்றேன்.

அவர்கள் அளித்த அந்த எட்டு நூல்களுள் கல்கி அவர்கள் எழுதியவை இரண்டு இருந்தன. ஒன்று "இலங்கைப் பிரயாணம்"; மற்றொன்று "மூன்று மாதக் கடுங்காவல்".

நான் 'கல்கி' அவர்களைச் சந்தித்து நான்கு மாதங்கள் நிறைவு பெறவில்லை; திடீரென்று ஒரு நாள் 5-12-1954 அன்று விடியற்காலையில் அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்து விட்ட துயரச் செய்தியை அறிந்தேன். அவர்கள் தமிழகத்துத் தவச் செல்வம்! அவர்கள் மறைந்தாலும் அவர்கள் எழுதிய நூல்கள் நம்மிடையே இருந்து அவர்கள் நினைவை ஊட்டிக்கொண்டிருக்கின்றன.

'கல்கி' அவர்களின் வாழ்வு தமிழோடு — தமிழர்களோடு — தமிழ் நாட்டோடு-கலந்து நிறைந்து விட்ட வாழ்வு!

நான் 'கல்கி' அவர்களோடு ஒரு நாள்தான் பழகினேன். ஒரு நாள் என்பதைவிட ஒருமணி நேரந்தான் பழகினேன் என்று சொன்னால் அது பொருந்தும். என்றாலும் இந்தச் சந்திப்பை வாழ்நாளெல்லாம் எண்ணி எண்ணி அவர்களோடு பழகி வருகின்றேன்.

அவர்கள் புகழ் வாழ்க!

அவர்கள் நூல்கள் வாழ்க!

With best compliments

From

**TATA INDUSTRIES PRIVATE LIMITED**

# பத்திரிகைகளின் சுதந்திரம்

வீ. செ. கந்தசாமி

அச்சம், ஆதரவு பெறும் நோக்கம் ஆகியவற்றின் காரணமாக அல்லாமல் நாட்டின் நலனை முன்னிட்டு, சரி எனக் கருதப்படும் கருத்துரைகளையும், செய்திகளையும் வெளியிடும் உரிமைதான் பத்திரிகைச் சுதந்திரம். மக்களாட்சி வெற்றியுடன் இயங்குவதற்குப் பத்திரிகைச் சுதந்திரம் இன்றியமையாதது. மக்களின் இதயத் துடிப்புகளையும், எண்ணங்களையும் அரசு அறிவதற்கும், அரசின் கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் பொதுமக்கள் தெரிந்து கொள்வதற்கும் பத்திரிகைகள் பயன்படுகின்றன. தவிர, விளக்கக் குறிப்புகள், கட்டுரைகள், தலையங்கங்கள் மூலம் மக்களுக்கு அரசியல் விழிப்புணர்ச்சி உண்டாக்கி, மக்களின் அரசியல் அறிவும், பொது அறிவும் வளரவும் அவை பெரிதும் துணைபுரிகின்றன.

பத்திரிகைகளின் முதற் கடமை மக்களுக்குச் சேவை செய்வதே ஆகும். ஆகவே, அரசுக்குப் பிடிக்காது என்ற காரணத்தாலேயே, மக்கள் நலனை பத்திரிகைகள் புறக்கணிப்பதில்லை. மக்களின் எண்ணத்தை ஒரு குறிப்பிட்ட திக்கில் திருப்பவும், வளர்க்கவும் பத்திரிகைகள் வல்லமை வாய்ந்தவை. ஆகவே, பத்திரிகைகளின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெருவதில் எல்லா நாடுகளிலும் அரசுகள் பெரு முயற்சி எடுத்துக் கொள்கின்றன. இரண்டாவது உலகப் பெரும் போரில், பொது மக்களுக்கு வெளியிடக் கூடாததான பல போர் சம்பந்தமான இரகசியங்களைக்கூட, இங்கிலாந்து நாட்டு அரசு, அந் நாட்டில் அப்போது நியமிக்கப் பட்டுப் பணியாற்றி வந்த நெருக்கடிக் காலத்தின் பத்திரிகைகள் ஆலோசனைக் குழுவிற்கு மட்டும் தெரிவித்து, அதன் மூலமாக பத்திரிகைகளின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் தனது போர் முயற்சிக்குத் தேடியது. நம் நாட்டிலும், 1962-ம் ஆம் ஆண்டில் நெருக்கடி நிலை பற்றிய பிரகடனம் செய்யப்பட்டபின், இந்திய பாதுகாப்பு விதிகளின் கீழ், தீங்கு விளைவிக்கக் கூடிய செய்திகளை வெளியிட்டதற்காக சில பத்திரிகைகளின் மேல் நடவடிக்கை எடுக்கும் முன், நெருக்கடிக் காலப் பத்திரிகை ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகளை முதலில் கேட்டு, அவைகளை

அறிந்து அதன் அடிப்படையிலேயே தனது நடவடிக்கையை எடுத்தது அரசு.

மேல் நாடுகளில் பத்திரிகைகள் நடத்துதலையே முக்கியத் தொழிலாகக் கொண்ட தாம்சன் கோமகன் போன்ற பல பெரிய மேதைகள் உள்ளனர். அவர்களுடைய பத்திரிகைகளில் வெளியாகும் கருத்துரைகளும், கொள்கை விளக்கங்களும் அந்த நாடுகளின் அரசுகளாலும், மிகவும் மதிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆயின், நம் நாட்டில் வெளியாகும் பல முக்கியமான, பத்திரிகைகளின் ஆசிரியர்கள் கூட அவற்றின் உரிமையாளர்களாக இல்லாமல், வெறும் ஊழியர்களாக மட்டும் இருப்பதனுல், பொது நலனுக்கு உகந்தது என்று அவர்களுக்குத் தோன்றுகிற கருத்துக்களை, அப் பத்திரிகைகளில் வெளியிடுவதற்குத் தடையாக இருக்கும் என்ற எண்ணம் வெகுவாக நிலவிவருகிறது. ஏனென்றுல், ஒரு நிறுவனத்தின் ஊழியர்கள், தமக்கு ஊழியம் தருவோரின் குறிக்கோள்களுக்கும், கருத்துக்களுக்கும் தகுந்தபடி தானே தங்கள் எழுத்துக்களில் விஷயத்திற்கு முக்கியத்துவம் தரமுடியும்!

பத்திரிகை தர்மம் என்று சொல்லப் படுவதை அடிக்கடி நாம் கேள்விப்படுகிறோம். பத்திரிகை தர்மம் என்றுல் என்ன? செய்திகளைத் திரித்து வெளியிடாமை; ஐயத்துக் கிடமான சம்பவங்களைப் பற்றி பொய்ச் செய்திகளைப் பரப்பாமை; ஒரு நிகழ்ச்சி பற்றிய உண்மையைக் கூடுமான வரை அறிந்து, மாற்றுமல், திரிக்காமல் வெளியிடுதல்; நேர்மையான விளக்கக் குறிப்புகளையும், கருத்துரைகளையும் வழங்குதல்; தனிப்பட்டோரின் நடத்தையைப் பற்றிச் சீர் கேடாகத் தாக்கி எழுதாமல், கொள்கையளவில் மட்டும் எதிர்ப்புத் தெரிவித்தல்—இத் தகைய நல்ல பண்புகளைக் கடைப் பிடித்து நடப்பதே "பத்திரிகை தர்மம்" எனப்படுகிறது.

பத்திரிகைச் சுதந்திரம் பற்றி, இந்திய அரசியல் சட்டத்திலோ, அல்லது வேறு எந்தச் சட்டத்திலோ குறிப்பிடப்படவில்லை. குடி மகனின் பல அடிப்படை உரிமைகளை விவரிக்கும் இந்திய அரசியல் சட்டத்தின் 19-ஆம் பிரிவில், பேச்சுச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியன பற்றிக் குறிப்பிட்டுக் கூறியிருப்பது போல், பத்திரிகைச் சுதந்திரம் பற்றியும் அரசியல் சட்டத்தில் குறிப்பிடாதது ஓர் குறை எனப் பலர் கருதுகிறுர்கள். பத்திரிகைச் சுதந்திரம் பற்றி அரசியல் சட்டத்தில் குறிப்பிடத் தேவையில்லை என்று வேறு சிலர் கருதுகிறுர்கள். அவர்களுடைய கூற்றுப்படி, பத்திரிகை என்பது ஓர் குடி மகனின் மற்றொரு உருவம் தான். ஆகவே குடி மகனுக்கில்லாத எந்த சிறப்பான உரிமையும் பத்திரிகைக்கு இருக்க வேண்டிய தேவை இல்லை. பத்திரிகையில் ஆசிரியர், அதன்

பதிப்பாளர், அச்சகத்தின் உரிமை யாளர் ஆகிய அனைவரும் குடி மக்களே. அவர்கள் பத்திரிகை களில் எழுதும்போது அவரவர்களு டைய பேச்சு, சுதந்திரத்தையும், கருத்துரிமையையும் தான் பயன் படுத்துகிறார்கள். இவ்வாறு, குடி மக்களின் கருத்துச் சுதந்திரத்திற் கும், பேச்சுச் சுதந்திரத்திற்கும் உருவளிப்பதற்குக் கருவியாக பத்திரிகைகள் பயன்படுகின்றன. எனவே, பத்திரிகைச் சுதந்திரம் என்று தனியாகக் குறிப்பிட வேண் டியது தேவை இல்லை என்பது அவர்கள் கூற்று.

விரும்பத்தகாத அல்லது வெறுக் கத்தக்க செய்திகளையும், கருத்துரை களையும் வெளியிடும் சில பத்திரிகை களின் பேரில் நடவடிக்கைகள் எடுப்பதற்கென்று மத்திய அரசின் சட்டங்கள் எதுவுமில்லை. 1951-ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட, பத் திரிகை (விரும்பத்தகாத செய்திச்) சட்டமும் தற்போது அமலில் இல்லை. இந்தியன் பீனல் கோடு, குற்றவியல் நடவடிக்கைக் கோப்பு (*Cr. P.c.*) ஆகியவற்றில் உள்ள சில பிரிவுகளின் கீழே தான் விரும் பத் தகாத செய்திகளையும், கருத் துரைகளையும் வெளியிடும் பத்திரி கைகள் மீதும் நடவடிக்கைகள் தற் போது எடுக்கப்படுகின்றன. இந் தியன் பீனல் கோடில் உள்ள சில பிரிவுகள், பத்திரிகைகளை மட்டு மல்லாது திங்கு விளைவிக்கும் தகாத செயல்களைப் பரவச் செய்யக் காரண

★

*WITH THE COMPLIMENTS OF*

**AUTOMOBILE PRODUCTS OF INDIA LIMITED**

**BHANDUP : : BOMBAY-78.**

★

மாயுள்ள பல்வேறு சக்திகளையும் தண்டிக்க மேற் கொள்ளப்படுகின்றன. வல்லடிச் செயலை மேன்மைப் படுத்திக் கூறும் கேலிச் சித்திரங்கள் கொண்ட வெளியீடுகள், எவ்விஷயமும் எளிதில் பதிவாகிவிடும் மனம் படைத்த இளமைப் பருவத்தினருக்குத் தீங்கு விளைவிக்குமாதலால், அத்தகைய வெளியீடுகளைத் தடை செய்வதற்கென்று ஒரு சட்டம் உள்ளது. இச் சட்டத்தின் மூலம், அஞ்சத்தக்க அல்லது அருவருக்கத் தக்க கேலிச் சித்திரங்கள் கொண்ட அத்தன்மையான வெளியீடுகளை மட்டும் தடுக்க முடியும்.

இங்ஙனம், பத்திரிகைகளில் வெளியாகும் செய்திகளையும், கருத்துரைகளையும் அரணுக்குள் வைப்பதற்கென்று நம்மிடையே தனியாகச் சட்டங்கள் ஏதும் இல்லாததால், எப்படிப்பட்ட பத்திரிகைகளில், யாரும் எதையும் எழுதத் தலைப்பட்டு அதன் காரணமாக தற்போது நம் பத்திரிகைச் சமூகத்தில் விரும்பத் தகாத ஓர் சூழ் நிலை உருவாகிக் கொண்டு வருவதாகச் சிலர் கருதுகிறார்கள். ஆபாசமாகவும், சீர் கேடாகவும், அவதூறாகவும் எழுதும் பத்திரிகைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அதனால் பொதுவாகச் சமூகத்தில் கண்ணியக் குறைவு ஏற்பட்டு, குறிப்பாக இளைஞர்களின் உள்ளங்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன. சில பத்திரிகைகள், ஆபாசக் களஞ்சியமாகவும் சீர் கேடான முறையிலும் செய்திகளையும், கருத்துக்களையும் படங்களையும் தங்கள் விற்பனை அதிகரிப்பிற்காக வெளியிட்டு வருகின்றன. விற்பனை நோக்கத்தை மட்டும் கருதுவதால் பல பத்திரிகைகள் கூட கீழ் நிலைக்கு இறங்கிக் கொண்டு வருகின்றன என்றும் பேசப்படுகிறது. இந்தக் குற்றச்சாட்டுக்குக் காரணம், தனி மனிதனின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் கட்டுதிட்டத்தில் வைக்கப் பயன்படும் நம் நாட்டின் சட்டங்கள், பத்திரிகைகளின் செயல் முறை பற்றிய மட்டில் அவ்விதமான எந்தக் கட்டுதிட்டமும் வகுக்க முடியாமல் இருப்பதனால்தான். அப்படியானால், தீங்கு விளைவிக்கும் செய்திகளையும், கருத்துரைகளையும் பரவச் செய்யும் பத்திரிகைகளின் மேல் தக்க நடவடிக்கை எடுப்பதற்கென்று தனியாக ஓர் சட்டம் இயற்ற வேண்டியது தேவைதானா என்பது யோசிக்கப் படவேண்டும்.

நடைமுறையில், தனி மனிதனை விட அதிகமாகச் சுதந்திரத்தைப் பத்திரிகைகள் துய்க்கின்றன. பத்திரிகைகளின் சீற்றத்திற்கும் சிறு பிள்ளைத்தனமான போக்கிற்கும் இப்போது சற்று சலுகை தரப்படுகிறது. காரணம்; பத்திரிகைகள் மக்களுக்குச் சேவை செய்யும் நோக்கத்தைக் கொண்டவை என்பதால் தான். பத்திரிகைச் சுதந்திரம் நிலவும் சமுதாயங்களில், அவை பக்குவமடைந்த, பண்புள்ள சமு

தாயங்களாகக் கருதப்படுகின்றன. பண்புள்ள சமுதாயத்தில் வாழும் மக்கள் சுதந்திரத்தைத் தவருகப் பயன்படுத்த மாட்டார்கள் என்று நம்பப்படுகிறது. ஆகவேதான், பத்திரிகைகள் தன்னடக்கத்துடன் நடந்து கொள்ளவேண்டியது மிக முக்கியமாகும். ஏனெனில், பத்திரிகைச் சுதந்திரத்தைத் தவருகப் பயன்படுத்துவது மிக எளிது, எழுத்தின் மூலம் எதிர்ப்பையும் மறுப்பையும் தெரிவிக்கும்போதும், அவதூருகத் தாக்குதல்கள் நடத்தும்போதும், ஆபாசத்தைச்சித்திரிக்கும்போதும், பத்திரிகைகளின்மீது வழக்குத் தொடர்ந்து வெற்றிகாண்பது எளிதல்ல.

மக்களாட்சி முறை இயங்கும் நாடுகளில், ஆட்சிப் பொறுப்பில் உள்ளோர், அல்லது பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளோர் பற்றி பத்திரிகைகளில்வெளியாகும் கண்டனம், குற்றச்சாட்டு, பழிப்புரை ஆகியவைகூட பெரும்பாலும் புறக்கணிக்கப்படுகின்றன. பொதுப் பணியை மேற்கொள்வோர் பொதுமக்களின் தாக்குதல்களுக்கும், கண்டனத்திற்கும் ஆளாகும் நிலையில் இருக்கிருர்கள் என்று திரு. கேட்லீ கூறியிறுக்கிருர். பொதுப் பணியை மேற்கொண்டுள்ளோரின் நடத்தையைப் பற்றித் துருவி ஆராய்வது பொது நலனுக்கு நல்லது என்பதும் அவர் கருத்து. மேலும், எதிர்ப்பையும், வெறுப்பையும் தருகிற கருத்துரைகளையும் கூட வெளியிட உரிமை உள்ளபோதுதான் பத்திரிகைச் சுதந்திரம் உள்ளது என்பதற்கு அத்தாட்சி கிடைக்கிறது. ஆனல், அப்பட்டமான அவதூற்றையும், தூய்மையைக் கெடுத்து, சீர் கேட்டை விளைவிக்கும் ஆபாசத்தையும் வெளியிட அச்சுதந்திரத்தைப் பயன்படுத்தக்கூடாது.

பத்திரிகைகள் தவறிழைக்கும் போதெல்லாம் சட்டத்தின் துணை கொண்டு அவற்றைத் தண்டிக்க முயல்வது விரும்பத்தக்கது அல்ல. தொட்டதற் கெல்லாம் சட்டத்தின் துணையை நாடினல், அரசுக்கும் பத்திரிகைகளுக்குமிடையில் நல்லுறவு குறையும். என்ருலும், தீங்கு விளைவிக்கும் வகையில் செய்திகளும் கருத்துக்களும் பத்திரிகைகளில் வெளிவருவதைப் பார்த்துகொண்டு அரசு வாளா இருப்பதும் பொதுநலனுக்கு உகந்தது அல்ல. ஆகவே, பத்திரிகைகள் தாமாகவே தன்னடக்கத்தைக் கடைப்பிடிப்பதுதான் நல்லது. இந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே 1953-ஆம் ஆண்டில் அகில இந்திய பத்திரிகை ஆசிரியர்களுடைய மாநாடு, பத்திரிகைகள் கடைப்பிடிக்கவேண்டிய ஒழுக்க விதிக்கோப்பு (*Code of Ethics*) ஒன்றைத் தயாரித்து, அதை நடைமுறைக்குக் கொண்டுவரவும் இசைந்தது. இந்த ஒழுக்க விதிகளை பின்பற்றுவது பத்திரிகைகளின் விருப்பத்தையே பொறுத்தது. இவற்றைப் பத்திரிகைகள் இன்றும் நடைமுறையில் அநுஷ்டிக்கவில்லை.

பத்திரிகைகளின் தரத்தை உயர்த்தவும், அவைகளின் சுதந்திரத்தைக் காக்கவும் 1966-ஆம் ஆண்டு இந்திய பத்திரிகை அவை (*Press Council of India*) ஏற்படுத்தப்பட்டது. பத்திரிகைகள் தங்களுக்கான ஒழுக்க விதிகளையோ அல்லது பொதுநலனையோ மீறினாலும், பத்திரிகை ஆசிரியர் அல்லது பத்திரிகையாளர் தம் தொழிலில் நெறிதவறி நடப்பதாகத் தோன்றினாலும், அதுபற்றி விசாரணை செய்து, தகுந்த காரணங்கள் இருப்பதாகத் தெரிந்தால், பத்திரிகைகளையோ அவைகளின் ஆசிரியர்களையோ அல்லது பத்திரிகையாளர்களையோ கண்டிக்கும் அதிகாரம் இந்திய பத்திரிகை அவைக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த அவை சென்ற ஆண்டிலிருந்துதான் செயல்பட்டு வருகிறது. உயர்நீதி மன்றத்தின் நீதிபதி ஒருவர் இந்த அவையின் தலைவராக நியமிக்கப் பட்டிருக்கிறார். இந்த அவையின் சாதனையைப் பற்றி இவ்வளவு விரைவில் நாம் அறிய முடியாது. எனினும், பத்திரிகைகளின் தரத்தை உயர்த்தவும், அவைகளின் சுதந்திரத்தைப் பாதுகாக்கவும் இந்த அவை சிறப்பான முறையில் பணியாற்றி வருகிறது. ★




With best compliments

of

ESCORTS LIMITED

AUTOMOTIVE DIVISION

*Block H, Connaught Circus*

NEW DELHI-1

# பேராசிரியர் கல்கி

அழ. வள்ளியப்பா

'பேராசிரியர் கல்கி' என்றதும், "கல்கி என்ன, பட்டம் பெற்றவரா? அல்லது பல்கலைக்கழகத்தில் பதவி வகித்தவரா?" என்று சிலர் கேட்கலாம். அவர் பட்டம் பெற்றவருமில்லை; பல்கலைக்கழகத்தில் பதவி வகித்தவருமில்லை. ஆனால், அவர் பல கலைகளையும் அறிந்தவர்; உணர்ந்தவர்; பலர் உணரச் செய்தவர்.

சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சங்கத்தில் கல்கியின் நினைவு நாள் கொண்டாட ஏற்பாடு செய்தார்கள். விழாவை எப்படிக் கொண்டாடுவது என்பது பற்றி ஒரு கட்டத்தில் ஆலோசனை நடந்தது. அப்போது ஒரு நண்பர், 'கல்கி ஒரு நாவலாசிரியர்,' 'கல்கி ஒரு கதாசிரியர்—இப்படித் தலைப்புக்கள் கொடுத்துப் சிலரைப் பேசச் சொல்லலாம் என்றார், உடனே மற்றொரு நண்பர், "ஆம், 'கல்கி ஒரு பத்திரிகாசிரியர்' என்றும் பேசச் சொல்லலாம்" என்றார். இன்னொருவர், "கல்கி ஒரு விமர்சகர்!" என்றார், அடுத்த ஒருவர் "கல்கி ஒரு கட்டுரையாளர்" என்றார், இப்படியே, 'கல்கி ஒரு சமூக ஊழியர்.' 'கல்கி ஒரு தேச பக்தர்,' 'கல்கி ஒரு மேடைப் பிரசங்கி' என்று சொல்லிக் கொண்டே போனார்கள், இறுதியில் பதினான்கு தலைப்புக்களில் பதினான்கு பேரைப் பேசச் சொல்வது என்று முடிவாயிற்று. அதே போல், நினைவு நாளில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கூட்டம் சிறப்பாக அமைந்தது, கல்கி ஒரு சர்வகலா வல்லவர் என்பதை வந்திருந்த பலரும் நன்குணர்ந்தனர்.

கல்விக்கூடத்திலிருந்து அவர் படிப்புச் சொல்லிக்கொடுக்கவில்லையே தவிர, எத்தனையோ ஆயிரமாயிரம் மக்களைப் படிக்கத் தூண்டினார். படித்தவர்களில் பலர் - குறிப்பாகப் பெண்களில் பெரும்பாலோர் பள்ளியுடன் படிப்பை நிறுத்திவிடாமல் தொடர்ந்து படித்துவரப் பெரிதும் துணைபுரிந்தார். இப்படிப் பல்கலையும் அறிந்து, பலருக்கும் ஆசிரியராக விளங்கிய கல்கியைப் 'பேராசிரியர்' என்று கூறுவது எவ்வளவு பொருத்தமானது!

பூஜை அறையிலே ஒரு விளக்கு எரிந்து கொண்டிருக்கின்றது. அந்த விளக்கு இருளை ஓட்டி நாலாபக்கமும் ஒளியைப் பரப்பி பேரொளி

யாக விளங்குகின்றது. அந்த ஒளியின் உதவியால் பல அகல் விளக்குகளை ஏற்றுகின்றோம். அவற்றைப் பல இடங்களிலும் வைக்கின்றோம். அந்த விளக்குகளும் நன்கு சுடர் விட்டுப் பிரகாசிக்கின்றன. பூஜை அறை விளக்கு, தானும் பிரகாசமாக எரிந்து இருளை ஓட்டுகின்றது; மற்ற விளக்குகளையும் பிரகாசமாக எரிந்து இருளை ஓட்டச் செய்கின்றது. பெருங்கவிஞர் ஒருவரின் கருத்திலே தோன்றிய அந்தப் பூஜை அறை விளக்கைப் போலத் திகழ்ந்தார் கல்கி என்பதில் ஐயமே இல்லை. அவர் தாமும் பிரகாசித்தார். பிறரையும் பிரகாசிக்கச் செய்தார். அவர் காட்டிய அன்பால், ஆதரவால், அவர் அளித்த உதவியால், ஊக்கத்தால், உற்சாகத்தால் இன்று பிரகாசிக்கும் எழுத்தாளர் பலர்.

சிலர் நகைச்சுவை ததும்ப பேசுவார்கள், எழுத வராது. சிலர் நகைச்சுவையுடன் எழுதுவார்கள், பேச வராது. கல்கியவர்கள் இரண்டிலுமே நிபுணர். மேடையில் பேசினாலும் சரி, தனிப்பட நண்பர்களுடன் பேசினாலும் சரி, நகைச்சுவை ததும்பப் பேசிச் சிரிக்க வைப்பதில் அவருக்கு ஒரு தனிப்பிரியம்.

ஒரு சமயம், அவர் சில நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அவர், "இப்போதெல்லாம் நம் தமிழ்ப் பண்டிதர்கள் மிகவும் முன்னேறி விட்டார்கள்" என்றார்.


**THIRU AROORAN SUGARS LTD.**

VADAPATHIMANGALAM, TANJORE DIST.

(MADRAS STATE)

*Manufacturers of :*

BEST QUALITY
WHITE CRYSTAL
SUGAR

*Managing Agents :*

**VENKATESA TYAGARAJAN (Private) Ltd.**

56A/1 PETERS ROAD,
MADRAS-6.

Telegrams : "FINESUGAR", Madras. Telephone : 85273

ஒவ்வொரு ஜில்லாவிலும் ஜில்லா கலெக்டரும், ஜில்லா விவசாய உத்தியோகஸ்தரும் பிரபல விவசாயிகளும் சேர்ந்து நாளது வருஷத்தில் நூற்றுக்குப் பதினைந்து பங்குவீதம் உணவு உற்பத்தியை அதிகமாக்குவதற்குத் திட்டம் போட்டால் 10 பங்காவது காரியத்தில் நிறைவேறும். போட்ட திட்டத்தில் படிக்குப் பாதியாவது நிறைவேறுகிறதா என்று பார்த்துக் கொள்வது மாகாண சர்க்காரின் பொறுப்பு. எந்த ஜில்லாவில் போட்ட திட்டப்படி காரியம் நிறைவேறுகிறதோ அந்த ஜில்லாவில் ஒரு பெரிய திருவிழா நடத்தி அந்த ஜில்லாவின் சர்க்கார் உத்தியோகஸ்தர்களையும் விவசாயிகளையும் பாராட்டிக் கௌரவிக்க வேண்டும். உணவு உற்பத்தியைப் பெருக்க இரண்டு வழிகள் இருக்கின்றன ஏற்கனவே பண்பட்டுத் தானியம் விளையும் நிலங்களில் இன்னும் அதிகமாக விளையும்படி செய்தல் முதல்வழி; தரிசாக கிடக்கும் நிலங்களைப் புதிதாகச் சாகுபடிக்குக் கொண்டு வருவது இரண்டாவது வழி. இந்த இரண்டு துறைகளிலும் கவனம் செலுத்த வேண்டும்.

"விவசாயி"

"பட்டினி என்னும் பகைவன்" என்ற கட்டுரையிலிருந்து

உடனே ஒரு நண்பர், "எதை வைத்துச் சொல்லுகிறீர்கள்?' என்று கேட்டார்,

"நான் ஒரு பள்ளிக்கூடத்திற்குப் போயிருந்தேன். அங்கு இருந்த எல்லா ஆசிரியர்களும் ஜிப்பா, முழுக்கைச் சட்டை, அல்லது அரைக்கைச் சட்டை போட்டுக் கீழே வேட்டி கட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால், ஒரே ஒருவர்மட்டும் 'டிப்டாப்பாக 'புல்சூட்'டுடன் இருந்தார். அவர் யார் என்று விசாரித்தேன், அவர்தான் தமிழ்ப் பண்டிதர் என்று தெரிய வந்தது, ஆஹா, ஆங்கில ஆசிரியர்கூட சூட் போடவில்லை, தமிழ்ப் பண்டிதர் எவ்வளவு தூரம் "முன்னேறி விட்டார் என்று வியந்தேன்" எனக் கூறினார், கல்கி,

இன்னொரு சம்பவம், ஒரு புத்தகத்தின் வெளியீட்டு விழா நடைபெற்றது. கல்வி மந்திரி சி. சுப்பிரமணியம் அவர்கள் விழாவைத் துவக்கிவைக்க வந்திருந்தார். வெளியிடும் புத்தகத்தில் ஒரு பிரதியை பட்டு நாடாவால் சுற்றிக் கட்டி ஒரு முடிச்சுப் போட்டு வைத்திருந்தார்கள். மந்திரி, புத்தகத்தை வெளியிடுவதற்கு அறிகுறியாக அந்த நாடாவை அவிழ்க்க வேண்டும். அந்த விழாவிற்குத் தலைமை வகித்த கல்கி அவர்கள், "அரசியல் முடிச்சுக்களை அவிழ்ப்பதில் கைதேர்ந்த நம் மந்திரியை, இந்தப் புத்தகத்திலுள்ள முடிச்சையும் அவிழ்த்து, வெளியீட்டு விழாவைத் துவக்கி வைக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றார்.

நல்கி அவர்கள் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவராயிருந்த போது, தமிழ் எழுத்தாளர் மாநாடு ஒன்று சென்னையில் நடந்தது. மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு, இரண்டாம் நாள் மாலை இலவசமாகத் திரைப்படக் காட்சிஒன்றைக் காட்ட முன் வந்தார். திரைப்பட அதிபர் திரு. நாகிரெட்டி. காட்சி முடிந்ததும், கல்கியவர்கள், "எழுத்தாளர் நிலை உயரவேண்டும்,

உயர வேண்டும் என்று நேற்றும் இன்றும் மாநாட்டில் பலர் பேசினார்கள். இப்போது, திரு. நாகி ரெட்டி அவர்கள், நாம் பேசியதைச் செயலிலே காட்டிவிட்டார். நம்மையெல்லாம் பால்கனியில் உட்கார வைத்ததன் மூலம் என்றார்.

கல்கியவர்களின் நகைச்சுவைப் பேச்சினால், காரசாரமான விவாதங்களும் கூட இருந்த இடம் தெரியாமல் மங்கி மறைந்து விடுவதுண்டு. எழுத்தாளர்கள் அடங்கிய கூட்டம் ஒன்றில் ஒரு நண்பர் "இப்போது சிலர் எழுத்தாளர்கள் கதைகளை எழுதித் தங்கள் மனைவிமார் பெயர்களில் வெளியிடுகிறார்கள், அப்படி அனுப்பிய கதை ஒன்றுக்குச் சமீபத்தில் பரிசும் கிடைத்திருக்கிறது. இப்படிச் செய்வது ஒழுங்கல்ல" என்ற பேசினார்.

அவர் எவரையும் குறிப்பிடாமல் பேசியிருக்கலாம், ஓர் எழுத்தாளரின் பெயரைக் குறிப்பிட்டுப் பேசியதால், சிலருக்குக் கோபம் வந்துவிட்டது. பேச்சாளர் கூறியது தவறு என்றும், அவர் உண்மை அறியாமல் பேசுகிறார் என்றும் குறுக்கிட்டு அவர்கள் பேசினர், விவாதம் முற்றி மனக்கசப்பு வளரும் போல் தோன்றியது. அப்போது தலைமை வகித்த கல்கியவர்கள் எழுந்தார். "நண்பர் பேசியதில் உண்மை இருக்கிறதோ இல்லையோ, ஆனாலும், எல்லா எழுத்தாளர்களுமே தாங்கள் எழுதுவதை தங்கள் மனைவிமார் பெயரிலும் வெளியிட்டு வந்தால் நன்றாகத்தானிருக்கும். எழுத்தாளர் பெயரைப் போலவே அவரது மனைவி பெயரும் பிரபலமாகுமல்லவா? துரதிர்ஷ்டவசமாக ஓர் எழுத்தாளர் மறைந்துவிட்டால் கூட, அவரது மனைவி அதிகமாகக் கஷ்டப்படவேண்டாம். ஏதோ தனக்குத் தெரிந்ததை எழுதி கொஞ்சம் வருமானத்துக்காவது வழி செய்துகொள்ளலாம். நிதி திரட்டவேண்டிய பொறுப்பும் நமக்குக் குறையுமல்லவா?" என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

இதைக்கேட்டு, கூட்டத்திலிருந்த அனைவருமே சிரித்தனர். சம்பந்தப்பட்ட இரு தரப்பினரும் சிரிப்பிலே கலந்துவிட்டனர்!

★

'ஏ' என்பவன் 'பி' என்பவனுக்கு 'ஸி' வட்டிவீதம் 'டி' ரூபாய் கடன் கொடுத்தான். 'எப்' வருஷத்தில் வட்டியும் முதலும் 'ஜி' ஆனால் 'டி' எவ்வளவு?

இரண்டாவது பாரத்துக்குரிய கணக்குப் புத்தகத்தில் முதல் அத்யாயத்தில் முதல் கணக்கைக் கேளுங்கள்.

"6747315ல் 'ஏ' ஆயிரங்களும் 'பி' பத்துகளும் 'சி' ஒன்றுகளும் இருகின்றன ஏ., பி., சி.யின் மதிப்பு என்ன?"

இம்மாதிரிக் கணக்குகளையெல்லாம் போட்டும் நம் குழந்தைகள் மூளை குழம்பிப் போகாமல் இருக்கிறார்கள் என்றால், ஏதோ நம் தமிழ்நாட்டுப் பெரியோர்கள் செய்த புண்ணியந்தான்.

'ஸிம்பல்' மூலமாக ஒரு விஷயத்தை அறிவதோ உணர்த்துவதோ மிகவும் கஷ்டமான விஷயம். அதெல்லாம் வயது முதிர்ந்தவர்களுக்கே உரியது அல்லது மூளை ஒரு பக்கமாக வளர்ச்சி அடைந்த கிறுக்குப் பிடித்த குழந்தைகளுக்கு உரியது. சாதரணக் குழந்தைகளை இப்படியெல்லாம ஏன் வதைக்கவேண்டுமோ கடவுளுக்குத்தான் தெரியும்.

"பெற்றோன்"

"எத்தனை நாள் இந்தக் கொடுமை" என்ற கட்டுரையிலிருந்து.

# இன்றும் நாளையும்

(வி. செ. கந்தசாமி)

விண்ணில் கறங்கும் பறவையினம்
வேலையில் திரிகின்ற உயிர்வகைகள் ;
மண்ணுள் வாழும் புழுவகைகள்
மற்றதன் மேலுறை விலங்கினங்கள் ;
கண்ணே இல்லா சிற்றுயிர்கள் ;
கருத்தே சமைக்கா பிராணிகளும் ;
மண்ணும் நீரும் தனதாக்கி
மற்றதர்க் கில்லா தாக்கவில்லை. (1)

தேடிய உணவைக் காக்கை இனம்
திரட்டியே உண்ணும் தன்போன்றூர் ;
கூடியே வாழும் தேனீக்கள்
கொணரும் தேறல் பிறர்க்காக ;
வாடிய ஒன்றின் துயர்கண்டால்,
வந்திடும் துணைதர வானரங்கள் ;
நாடிடும் இந்த நற்தகைமை
நரனிடம் இன்னும் நண்ணவில்லை. (2)

அறவோர் பெறுவோர் திருவாளர்
அன்பினுக் கேங்கும் வறியோர்கள் ;
மறமடி அடிமை கொடுந்தன்மை
மதமெனும் வெறியால் மயங்குபவர் ;
திறலோர் தியோர் திக்கெட்டும்
திடுக்கிடும் ஆதிக்க வெறியோர்கள்,
பிறவா றின்ன பிணக் குகளால்
பிறிந்திடும் வேற்றுமை இன்றுளது. (3)

வாடிய மனிதரைக் கண்டதுமே
வருந்தார் தேற்றும் வகைகாணூர்,
ஓடிக்கதவை யடைத்திடு வார்தம
துளத்திற் கமைதியை தேடிடுவார்.
மூடிய மனதுடை மனிதர் இனி,
மூண்டநல் அன்பராய் தேர்கின்ற
நாடிடும் நாளை நாம் காண
நல்வினை நாடுவோம் தோழர்களே ! (4)

# குதித்து வா!

( கன்னட மொழியின் 'கங்காவதார'த்தைத் தழுவியது )

(S. ஸ்ரீநிவாஸன்)

குற்றுலத் தருவியேநீ குதித்து வா!
அமிழ்திலுஞ் சிறந்த தமிழ்மொழி பிறந்த
மலையத்தின் மகளேநீ துள்ளி வா!
விலையுயர் முத்தும் வேழவெண் மருப்பும்
வயிற்றினில் தாங்கிநீ விரைந்து வா!
சந்நணுடவியைச் சாடிவா! ஓடிவா!

★ ★

குங்குமம் முறித்துநீ பொங்கி வா!
சங்கின மலரநீ சிரித்து வா!
தடம்பணை தவழநீ நடந்து வா!
குளம்பல நிறப்பநீ குழைந்து வா!
இருகரை வாரமும் திருமகள் உரையுளாய்ப்
பண்ணுமப்புண்ணிய தாமிரபன்னியொடு
நீ சேர வா! நேரே வா!
பொங்கி வா! இங்கு வா!

★ ★

இனியநீர்ப் பெருக்கேநீ இறங்கி வா!
'இழும்' எனநீ இழிந்து வா!
வண்ணப்பூ வாடையது போர்த்து வா!
கல்லிடைப் பிறந்து போந்து
கடலிடைநீ கலக்க வா!
தொல்லையில் ஒன்றே யாகினும் ஆகி
துறை தொறும்நீ பரக்க வா!
மடமயில் நடம்பயில் தடம்பணை தவழவா!

★ ★

உம்பர் உலகுக்கோர் ஏணியே வா!
மணியொடு முத்தநீ ஏந்தி வா!
மாமலர்த் தாரினைப் புனைந்து வா!
பூவிலைத் துகிலை யுடுத்து வா!
உளியமும் வேழமும் நீ உருட்டி வா!
பலவின் முதுசுளை பறித்து வா!.
மெள்ள வா! துள்ளி வா!!
குற்றுலத் தருவியேநீ குதித்து வா!!!

"ஊருக்குப் போய்ச் சேர்ந்ததும் தலைக்கு ரூ. 20 அனுப்புவதாக ஜகந்நாத ஸ்வாமி பேருக்கு ஒரு பத்திரம் எழுதிக் கொடுங்கள்" என்று பண்டா ஒரு பெரிய நோட்டுப் புத்தகத்தை நீட்டினார். அதில் ஒவ்வோர் ஏட்டிலும் ஆங்கில பாஷையில் ஜகந்நாத ஸ்வாமி பேருக்கு "ஆன் டிமாண்ட்" பத்திரம் எழுதப்பட்டு கீழே அணுத் தலையும் ஒட்டப்பட்டிருக்கிறது...பத்திரத்தைப்படித்த போது என் கதிகலங்கிவிட்டது. வட்டியுடன் கூடப் பணம் அனுப்பத் தவறினால் ஜகந்நாதஸ்வாமி ஆணையாக இன்னின்ன நரகத்துக்கு போவார்கள் என்பதாக அதில் எழுதியிருப்பதைப் படித்ததும் நான் இப்பத்திரத்தில் கையொப்பமிடுவதைவிட, ஐந்து ரூபாய் ரொக்கமாக கொடுத்துவிடுவதே மேல் என்று தீர்மானித்தேன்.

★ ★

'அஸ்பெஸ்டாஸ்' கூரையில் நெருப்புக்கூடப் பிடிக்காது என்கிறார்கள். என்ன அநியாயம்! திரிபுரர்களுடைய காலத்தில் 'அஸ்பெஸ்டாஸ்' கண்டுபிடிக்கப்பட்டிருந்தால், சிவபெருமானுடைய நெற்றிக்கண் கூட அவர்களை ஒன்றும் செய்திருக்க முடியாது. ஒரு வேளை தமிழ் நாட்டு நக்கீரர் அஸ்பெஸ்டாஸ் உடை தரித்திருந்தாரோ என்னவோ?

★ ★

"என்ன டாக்டரே! சௌக்யமா? முகம் ஏன் ஒருவிதமாய் வாட்டமுற்றிருக்கிறது?" என்று கேட்டேன்!

"சௌக்யத்துக்கென்ன குறைவு? நான் மட்டுமல்ல, ஊரிலேயே எல்லோரும் சௌக்யம். முகம் வாட்டமுறுவதற்குக் கேட்பானேன்....... ஊரிலே வியாதியே கிடையாது, இது காலரா வரவேண்டிய காலம், ஆயினும், அதை காணவேகாணோம். டாக்டர்களுக்கு உறுதுணையான மலேரியா கூட மலைவாசம் செய்யப் போய்விட்டது. ஒருவருக்கும் ஒரு வயிற்றுவலி கூடக் கிடையாது. மாதம் பிறந்து முழுமையாக மூன்று ரூபாய் கூட பில் போட்டு அனுப்பவில்லை. இந்த மாத காலட்சேபம் எப்படி நடக்கப் போகிறதோ?" என்றார்.

ஊரிலே காலரா, வைசூரி முதலியவை வந்தால், காளித் தாய்க்கும், மாரியம்மனுக்கும் கொண்டாட்டம். வைத்தியர்களுக்கு அள

நாடகம் பாடசாலை மாணவிகளால் பள்ளிக்கூடக் கட்டிடத்தில் நடத்தப் பட்டது. கட்டிடம் என்ருல் கட்டிப் போட்டு வைக்கும்இடம் என்று பொருள் செய்து கொள்ளலாம். நாடகம் நடந்த ஒரு மணி நேரத்துக்குள், அப்பாடா! நாடகம் எப்போது முடியும்? வெளியில் எப்போது புறப்படலாம்? என்று ஆகி விட்டது. 'ஐயோ பாவம்! ஒரு மணி நேரம் நமக்கு இங்கே உட்கார்ந்திருக்க இவ்வளவு கஷ்டமாக இருக்கிறதே ஆயி ரம் பெண் குழந்தைகள் இந்த கட்டடத் துக்குள் உட்கார்ந்து தினம் ஆறு மணி நேரம் எப்படித்தான் கஷ்டப்படுகிருர் களோ' என்று அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது. ஆனல் நான் எதற் காக அந்த இட நெருக்கடியில் ஒரு மணி நேரமும் உட்கார்ந்திருந்தேனென் ருல், முதலாவது வெளியேற வகையில் லாதபடி பெண் குழந்தைகள் வழியை அடைத்துக் கொண்டு உட்கார்ந்திருந் தார்கள்; இரண்டாவது, நாடகமும் நன்ருக இருந்தது! —ரா. கி.

("வரதட்சிணையில் பாதி" என்ற கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.)

வில்லாத பூரிப்பு. ஆனல் கொசு தேவிக்கு இன்னும் ஏன் கோவில் கட்டப்படவில்லை? இந்த கைங்கர் யத்துக்கு யாரேனும் ஒரு ஆஸ்திக பிரபு முன்வருவாரென நம்புகி றேன்.

★ ★

"பொல்லாத பத்திரிகாசிரியர்கள் கட்டுரைகளைப் பிரசுரிக்காவிட்டால் என்ன செய்வது?" என்று கேட் பாயானல் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா சிசுபாலனுடைய நூறு குற்றங்க ளைப் பொறுத்ததைப்போல நீயும் நூறு கட்டுரைகள் பிரசுரிக்கப்படா மல் போகும் வரையில் பொறுமை யுடன் அனுப்பிக்கொண்டிரு. அதற் குப் பிறகு அவர்களை பழி வாங்குவ தற்கு பின் கண்ட வழிகளை கையா ளலாம்.

1. நீயே சொந்தப் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்துவிடு அல்லது
2. "பத்திரிகைகளுக்கு எழுதுவதில் வெற்றி பெறுவது எப்படி?" என்ற பெயருடன் ஒரு புத்தகம் எழுதி பிரசுரித்துவிடு.

★ ★

மிஸ்டர் டிம்பனுக்குத் தமிழ் டாக்கி உலகத்தில் ரொம்பவும் பிர சித்தி ஏற்பட்டிருந்தது. அவருக்குத் தமிழ் தெரியாது. சங்கீதம் தெரி யாது. கண் பார்வை கொஞ்சம் கம்மி. காது சிறிது மந்தம்—ஆகவே தமிழ் டாக்கி டைரக்டராவதற்கு வேண்டிய எல்லா அம்சங்களும் அவரிடம் பொருந்தி யிருந்தன வென்று சொல்லவேண்டாமல் லவா?

★ ★

உலகிலேயே செவிக்கினிய குரல் எந்தப் பிராணியுடையது என்று என்னைக் கேட்டால் கழுதையி னுடையது என்று சொல்வேன். நீங்கள் நகைக்கலாம். ஆனல் கழு தையினுடைய கத்தலைப்போல சிறந்த சகுனம் வேறு இல்லை என் பது உங்களுக்குத் தெரியுமா? வாழ் நாளில் காரியசித்தி பெறுவதற்கே காரணமாக இருக்கும் கழுதையின் குரல் ஏன் இனியதினும் இனிய தாக இருக்காது? கர்த்தப சுரத்தின் தனிப் பெரும் சிறப்பு இதுவே

யாகும். வாழ்க்கையில் அடிக்கடி தோல்வியடைந்து கஷ்டப்படுவோர் நான் சொல்வதைக் கேளுங்கள். கழுதைகள் நிறைய வளர்க்கும் சலவைத் தொழிலாளர்கள் வீட்டுக்குப் பக்கத்தில் சென்று குடியிருங்கள். நீங்கள் காரியசித்தி பெறுவது திண்ணம்.

★ ★

நான் சிறையிலிருந்தபோது என்னுடைய தாயாரும் சித்தியும் என்னை 'இண்டர்வியூ' பார்க்க வந்தார்கள். கால்களில் 'காப்பும் சங்கிலியும்' குலுங்கக் குறுக்குக் கோடுபோட்ட குட்டைக் கைச்சட்டையையும் முழங் காலுக்கு மேல் அதே துணியில் நிஜாரும் தரித்து அழகான கோலத்தில் வந்தபோது அவர்களுக்கு முதலில் என்னை அடையாளமே தெரியவில்லை.

"அம்மா நான் நகை போட்டுக் கொள்வதில்லை என்று நீ குறைப்பட்டாய் அல்லவா? இதோ பார் காப்பும் சங்கிலியும்!" என்றேன்.

★ ★

ஒரு சமயம் கல்கி அவர்கள் என், எஸ். கிருஷ்ணனுடைய வீட்டுக்குச் சென்றிருந்தார். கிருஷ்ணன், கல்கியை நாற்காலியில் உட்காரச் சொல்லிவிட்டு "என்ன சாப்பிடுகிறீர்கள்? காப்பி கொண்டுவரச் சொல்லட்டுமா? அல்லது டீ கொண்டுவரச் சொல்லட்டுமா?" என்று கேட்டார்.

கல்கி அவர்கள் சற்று யோசித்துவிட்டு "டீயே *மதுரம்! என்றார்.

* இது சிலேடைக் குறிப்பு. கிருஷ்ணனுடைய துணைவியின் பெயர் மதுரம்.

★

With the compliments of :

GUEST, KEEN, WILLIAMS, LTD.,

CALCUTTA, BOMBAY, MADRAS,

NEW DELHI AND BANGALORE.

★

# எழுத்தாளர் நட்சத்திரம்

துமிலன்

ரா. கி. ஓரளவு மாநிறமாக இருப்பார். உடல் பூஞ்சையாக இருப்பதுபோல் காணப்படுவார். அவர் நரம்புகள் நன்ருக முறுக் கேறியவை. மூக்கு கூர்மையாக வும் நெற்றி அகலமாயுமிருக்கும். தலை மயிரை 'அமெரிகன் கிராப்' சாஸ்திரப்படி வாரிவிட்டுக் கொள் வார். வகிடு எடுத்துக் கொள்வதற் கும் பொறுமை இராது. வாரி விட் டுக் கொள்வாரென்ருல், பல சமயங் களில் தலையில் தண்ணீரைத் தெளித்துக்கொண்டு தலைமயிரைக் கையாலேயே அழுத்திப் படியும்படி செய்துகொள்வார்.

முழுக்க முழுக்கக் கைபட்டுத் தயாரிக்கப்பட்ட கதர் வேஷ்டி, பனியன், சட்டை இவற்றையே தரித்திருப்பார். பனியனது கீழ் பாகத்தில் இரண்டு பைகள் இருக் கும், இவற்றை திறக்க மேலே 'ஃபிளாப்' வேறு. கோலிக்குண்டு அளவு பொத்தான் இருக்கும், ஒன் றில் சில காகிதங்களையும் இன் னென்றில் மணி பர்ஸையும் திணித்து வைத்திருப்பார். பணப் பையை எடுக்கும்போது எப்பொழு தும் சிறிய சர்க்கஸ் வித்தை நடக் கும். மேலே போட்டிருக்கும் ஷர்ட் டைத் தூக்கி முகவாய்க்கட்டை யிடுக் கில் வைத்துப் பிடித்துக் கொள்ளச் செய்வார். கதர்ப் பொத்தான், துவா ரத்திற்குள்ளிருந்து வராமல் சத்தி யாக்கிரஹம் செய்யும். அதைக் கொஞ்சம் வேகமாக இழுத்தால் கையோடு வந்துவிடும். அதற்காக அதை தாஜா செய்து வெளிவரச் செய்துவிட்டு பணப்பையை வெளி யில் எடுப்பார்.

தம்முடைய வேட்டி சட்டை முத லியவற்றிற்குத் தாமே சவர்க்காரம் போட்டுத் தாமே துவைப்பார். வேஷ்டியை அலசிப் பிழிந்த பிறகு ஒவ்வொரு பக்கத்தையும் கொசுவி, படாரென்று சப்தம் வரும்படி உத றுவார். பிறகு ஏதாவது பாட்டுப் பாடிக்கொண்டே, கொடியில் உலர்த்தப் போவார். வேட்டியின் இரண்டு பக்கமும் சரிசமமாக இருக் கும்படி நன்ருக இழுத்து விடுவார். வேட்டியில் ஒரு சுருக்கம் என்ருல், ஒரு சுருக்கம்கூட இல்லாதிருக்கும் படி இழுத்து இழுத்து விடுவார். இதற்குள் இன்னெரு தேசிய கீதம் ஆரம்பமாகிவிடும். இந்தத் துணிகள் உலர்த்தும் சடங்கு முடிவதற்குள்

ஐந்தாறு பாட்டுக்கள் பாடியாகி விடும். அவருடன் ஒரே வீட்டில் சேர்ந்து குடியிருந்த நான் இந்தப் பாட்டுக்களைக் கேட்பதினின்றும் தப்பமுடியாது.

வேறு வழியில்லை, பேசாமல் படுக்கையில் படுத்துக்கொண்டுதானாக வேண்டும் என்ற உடல் நிலைமை ஏற்பட்டாலொழிய அவரால் வேலை செய்யாதிருக்க முடியாது...யோசனைகள் தோன்றுவதற்காக அங்கேயும் இங்கேயும் நடந்துகொண்டிருப்பார். ஊஞ்சலாடிக் கொண்டே யோசனை செய்வார். நல்ல யோசனை தோன்றிவிட்டாய் கீழே காலை அழுத்துவது பலமாக இருக்கும். சில சமயம் நான் அவர் பக்கத்தில் உட்கார்ந்திருக்கும்போது ஸ்கூட்டரில் முதல் முறை ஏறும் கர்நாடகப் பெண்ணைப்போல நடுங்கிக்கொண்டு சங்கிலியைப் பலமாகப் பிடித்துக் கொண்டிருப்பேன். சில சமயம் ஊஞ்சலாட்டத்தின்போது பாட்டுக்கள் கிளம்பும்.

வியாதியை அவர் கொண்டாடுவதில்லை, ஆனால் வியாதி அவரைக் கொண்டாடியது; ஆஸ்துமாவியாதி, அந்த வியாதி கடுமையாக இருக்கும் போது, அவர் எழுதும் தலையங்கங்கள், கட்டுரைகள் மிகவும் காரசாரமாக இருக்கும், "கல்கி கொன்று விட்டாண்டா!" என்று அவருடைய விரோதிகளும் புகழ்ந்து கூறும் சில படைப்புக்கள் அவர் வியாதியால் துன்புறும்போது எழுதப்பட்டவையாகும்.

அவருடைய நெஞ்சம் வைரம் பாய்ந்தது. அவர் வாழ்க்கையில் வெற்றிப் பாதையில் மேன்மேலும் சென்றுகொண்டிருந்தபோது சிலர் அவர்மீது கற்களை விட்டெறிய ஆரம்பித்தார்கள். ஆனால் அவை எல்லாம் திரும்ப அவர்கள்மீதே பன்மடங்கு வேகத்துடன் திரும்பச் சென்று தாக்கின, விவாதம் என்றால் அவருக்கு உயிர். அது அவருக்கு எழுதுவதில் உற்சாகத்தையும் உடல் பலத்தையும் அதிகரித்து வந்தது.

ஒரு பிரபல தமிழ்த் தினசரியின் ஆசிரியரான ஒரு நண்பர் சொன்னார்: "கல்கி என்கிற திரு ரா. கிருஷ்ணமூர்த்தி பெரிய எழுத்தாளர் மட்டுமல்ல. அவர் எழுத்தாளர்களுள் ஒரு சினிமா ஸ்டார் மாதிரி."

உண்மை! அவரிடம் தனிப்பட்ட கவர்ச்சிகரம் இருந்துகொண்டு எல்லாரும் அவரைப்பற்றி வியக்கச் செய்துகொண்டிருந்தது. ★

> திருச்சி சிறையில் பெரிய வசதிக் குறைவு என்று சொல்லக் கூடியதாயிருந்தது தண்ணீர்ப் பஞ்சம் தான். ஆனால் இந்தத் தண்ணீர்ப் பஞ்சம் காரணமாக ராஜாஜியிடம் ஒரு அரிய பாடத்தைக் கற்றுக் கொள்ள முடிந்தது. ஒரே ஒரு பக்கட் தண்ணீரைக் கொண்டு எப்படிச் சுத்தமாக ஸ்நானம் செய்து, துணிதோய்த்து முடிக்கலாமென்பதை ராஜாஜி தம் உதாரண ரூபத்தில் கற்றுக் கொடுத்தார்.
>
> —ரா. கி.
>
> மூன்றுமாதம் கடுங்காவல்

# த ண் ணீ ர்

(வண்ணை முத்து)

★

| | | |
|---|---|---|
| கண்ணில் | காணு | திருந்திடும் |
| காணும் | படியும் | தோன்றிடும் |
| மண்ணில் | உருண்டும் | ஓடிடும் |
| மலைக்கல் | போலும் | மாறிடும் |

| | | |
|---|---|---|
| உனக்கு | மேலும் | கீழவும் |
| உனது | இரத்தம் | தன்னிலும் |
| தினமும் | உண்ணும் | உணவிலும் |
| தேடிக் | குடிக்கும் | பொருளிலும் |

| | | |
|---|---|---|
| எங்கும் | நிறைந்து | காணுமே |
| ஈரம் | கொண்டு | தோன்றுமே |
| பொங்கும் | நெருப்பை | அணைக்குமே |
| புனிதத் | தண்ணீர் | என்பமே. |

*With the compliments*

*of*

*Wyeth*

**WYETH LABORATORIES LIMITED**

STEELCRETE HOUSE, DINSHAW WACHA ROAD,

**BOMBAY-1.**

# கல்கி பேசுகிறார்

தஞ்சை ஜில்லாவில் மணல்மேடு என்ற கிராமத்தில் 1899ஆம் வருடத்தில் நான் பிறந்தேன். ஹிந்து குடும்பத்திலே பிராமண சாதியிலே வடமவகுப்பிலே பிறந்தேன். பள்ளிப் படிப்பு திருச்சியில். பத்திரிகை உலகில் புகுந்து சேவை செய்ய வேண்டும் என்ற ஆசை நீண்டநாளாக உண்டு. என் கைநாடியைப் பிடித்துப் பார்த்த டாக்டர் டி.எஸ். எஸ். ராஜன், நான் 'புத்திசாலி' என்று கண்டுபிடித்து, என்னை சென்னைக்கு மூட்டைகட்டி அனுப்பி வைத்தார். திரு வி, கல்யாணசுந்தர முதலியார் அவர்களுக்குச் சிபாரிசு கடிதம் அனுப்பினார். நவசக்தியில் சேர்ந்தேன். பிறகு 'தும்பி'யாக இருந்து 'தமிழ்த் தேனீ'யாக மாறி ரீங்காரம் செய்து கடைசியில் 'கல்கி'யானேன்.

எனக்கு கர்நாடகம், லாங்கூலன், அகஸ்தியன், ரா. கி., யமன், விவசாயி, பெற்றோன் என்ற புனைப்பெயர்கள் உண்டு.

எனக்கும் ராஜாஜிக்கும் அறிமுகமான சம்பவம் ருசிகரமானது. நான் திருச்சி தேசியக் கல்லூரிப் படிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு தேச சேவைக்குப் புறப்பட்டபோது, நான் எழுதிய துண்டுப் பிரசுரம் ஒன்றைப் படித்துப் பார்த்துவிட்டு, ஸ்ரீ ஸி. ஆர். ரொம்பவும் பாராட்டினார். பின்பு திருச்சி காங்கிரஸ் ஆபீஸில் (மாதம் ரூபாய் 30 இல்) எனக்கு குமாஸ்தா உத்யோகம் கிடைத்தது. ஆனால் எனக்கு அந்த முப்பது ரூபாய் சம்பளம் அதிகம் என்று சொல்லி, "உனக்கு ரூ. 25 போதாதா? நீ ஒண்டிக் கட்டைதானே?" என்று என்னோடு ஸ்ரீ ராஜாஜி அவர்கள் சண்டைக்கு வந்தார்கள். அப்படிப்பட்ட சண்டைக்காரரோடு நான் ஆச்சர்யகரமாகப் பழகினேன். பழகப்பழக, வெறுப்பு, விருப்பாகமாறி, அவரது மேதாவிலாசம் புரிந்தது. இன்றும் அவரிடமிருந்து வசவு எனக்குக் கிடைக்குமே தவிர, வாழ்த்து என்பது கிடையவே கிடையாது.

நான் எழுதிய கதைகளுள், "எது எனக்குப் பிடித்தது?" என்று பலர் கேட்கிறார்கள். இந்தக் கேள்வி மிகவும் கஷ்டமானதுதான், எனக்குப் பிடித்தது சில சமயங்களில் வாசகர்

### கல்கியின் தமிழ்

கல்கியின் எழுத்துக்களில் கதைகள் மிகவும் சிறப்புள்ளவை. ஆனாலும் மற்றவைகளும் வெகு பொறுப்புள்ளவை. அவருடைய அரசியல் எழுத்து மிகவும் அறிவுடையது. அபிப்பிராயங்களில் பேதமுடையவர்களும் அவர் எழுதும் ஆதாரங்களையும் தர்க்கரீதியையும் அலட்சியம் செய்துவிட முடியாது.

பொருளாதாரத் துறையிலும் நாணய மாற்று வித்தைகளிலும் அவர், நிபுணர்களுடைய பாடங்களைப் படித்தவர் என்றாலும், அவற்றின் நுணுக்கங்களைத் தெள்ளிய முறையில் கல்வியறிவு குறைந்தவர்களுக்கும் புரியும்படி எழுதக் கூடியவர். ஏன்? கல்விஅறிவு மிகுந்த என்னுடைய பல நண்பர்களும் நாணய மாற்றுச் சிக்கல்களை கல்கியினுடைய கட்டுரையிலிருந்துதான் சிக்கெடுத்துப் பார்த்து தெரிந்துகொண்டதாக என்னிடம் கூறியிருக்கிறார்கள்.

எழுத்தாளர் தொழில்முறையில் சொந்த முயற்சிகளால் மகத்தான வெற்றியடைந்தவர் கல்கி.

—நாமக்கல் வெ. ராமலிங்கம பிள்ளை.

களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம் வாசகர்களுக்குப் பிடிக்கும் என்று நினைத்தது சில சமயங்களில் அவர்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம். ஆனால் ஓர் எழுத்தாளன் தன்னை மகா மேதாவியாக நினைத்துக் கொண்டு சுயபுராணக் குப்பைகளைக் கிளறி, பக்கம் பக்கமாக எழுதுவதைவிடத் தலைவலி வேறு இருக்கமுடியாது.

பொதுவாகப் பொது ஜனங்களுக்குப் பிடிக்கும் அரசியல்தான் பத்திரிகை அரசியலுமாகும். ஆனால் நாம் சொல்லும் விஷயத்தைப் புரியும்படிச் சொல்வதில்தான் நமது சாமர்த்தியம் அடங்கி யிருக்கிறது. தினப் பத்திரிகைகளில் வரும் விஷயங்களைச் சுருக்கமாக கதைபோல எடுத்து விளக்கி, நமது அபிப்பிராயத்தைத் தெளிவாகச் சொல்லிவிட வேண்டும். அதில்தான் பத்திரிகையின் முன்னேற்றம் அடங்கியிருக்கிறது.

எழுத்தாளர் உலகில் நான் யாரையும் விரோதித்துக் கொள்வதில்லை. என்னை யாராவது விரோதி என்று எண்ணிக்கொண்டு அவஸ்தைப்பட்டால் அதற்கு நான் என்ன செய்வது?

என்னுடைய பொழுதுபோக்கு, மற்ற சகோதரப் பத்திரிகாசிரியர்கள், எழுத்தாளர்களுடன் பேசுவது, எழுதுவது.

எனக்கு ரொம்பப் பிடித்தமான நண்பர்—என்னையும், என்னுடைய எழுத்தையும் பார்த்து, பல்லை நற நறவென்று கடிப்பவர்தான்.

என்னுடைய ஆசை, தாம்பரத்திற்குப் பக்கத்திலுள்ள முடிச்சூர் என்னும் கிராமத்திற்கு 'விர்' ரென்று காரில் பறந்துபோய், சற்று நேரம் நிம்மதியாக இருந்துவிட்டு வருவதுதான்.

எனக்குப் பிடிக்காத நேரம் செவ்வாய்க்கிழமை இரவுதான், ஏன் என்று கேட்கிறீர்களா?... அன்றுதான் 'கல்கி'யின் தலையங்கம் எழுதப்பட்டு, இரவு முழுவதும் கண் விழிக்க வேண்டியிருக்கிறது. ★

(1948 இல் திரை உலகம் பத்திரிகைக்கு கல்கி அவர்கள் தம்மைப்பற்றி அனுப்பிய குறிப்பு.)

FOOD BECOMES MORE APPETISING
WHEN PREPARED WITH

# MAIDA, SOOJI AND ATTA

*Manufactured by:*

## CENTURY FLOUR MILLS LTD.,

**330, Thambu Chetty Street, Madras-1.**

Phone: **Office**: 21043 (3 lines)

Phone: **Mills**: 61701 & 62579

**Grams**: "Mathooran"

*WITH COMPLIMENTS*
*FROM*

# BAJAJ AUTO LIMITED

**BOMBAY-POONA-ROAD, POONA-19.**

MANUFACTURERS OF VESPA SCOOTERS AND
VESPA COMMERCIAL 3-WHEELER AUTORIKSHAS

**Bombay Office**: 134, DR. ANNIE BESANT ROAD.
WORLI, BOMBAY-18.

**Delhi Office**: 12–B, NETAJI SUBASH MARG,
DELHI–6.

# இலக்கியச் சிறப்பு

திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) அவர்களுக்குச் சொந்த ஊர் மாயவரம் பக்கத்திலுள்ள ஓர் கிராமம். மகுடபதியை வாசித்த பிறகு அவர் பிறந்து வளர்ந்து சுகதுக்கங்களை அனுபவித்த இடம் கோயமுத்தூர் ஜில்லா என்று சொல்லத் தோன்றுகிறது.

ஆசிரியர் கல்கி, ஏதோ சொற்பகாலந்தான் கவுண்டர்கள் நாடாகிய கொங்கு நாட்டில் வாழ்ந்திருக்கிறார். மக்களோடு இதயங்கலந் தவருக வாழ்ந்திருக்கிறார். மக்களோடு மாத்திரமல்ல; கொங்கு நாட்டு நிலத்திலும் புழுதியாடத் திளைத்திருக்கிறார்.

இந்த அபூர்வமான இதயப் பண்பு காரணமாக, கதையில் வருகிற பாத்திரங்களும், மரங்களும் செடிகளும் வீடுகளும் கொங்குநாட்டு மண்ணிலிருந்தே முளைத்துச் செழித்து வளர்கின்றன. . . எந்த விதத்திலும் பாத்திரங்களையும் களங்களையும் கொங்கு நாட்டைவிட்டுப் பெயர்த்து எடுக்க முடியாது. வேறு ஒரு ஜில்லாவில் நட்டுவைக்க முயன்றால் பயன் இராது.

உண்மையான இலக்கியத்திற்கு இதுதான் லட்சணம்.

தாமஸ் ஹார்டி என்ற பேர்பெற்ற நாவலாசிரியர் டஜன்கணக்கில் நாவல்கள் எழுதியிருக்கிறார். எல்லாவற்றிற்கும் களம் இங்கிலாந்திலுள்ள ஒரு ஜில்லாதான். அகல உழவில்லை அவர், ஆழ உழுதார். நல்ல மேனி கண்டது.

நம்முடைய 'கல்கி' ஆசிரியர் வடநாடெல்லாம் சுற்றித் திரிந்தவர், பம்பாய், பஞ்சாப், வங்காளம் எல்லாம் அவருக்குத் தெரியும். அங்குள்ள மக்களையும் இப்பேர்ப்பட்டவர்கள் என்று தெரியும். ஆனால் உணர்ச்சியோடு ஒட்டுவது தமிழ்நாடு மண்தான். அதிலிருந்துதான் உண்மையான தமிழ் இலக்கியப் பயிர் உண்டாக்கக் கூடும். அற்புதமான நல்ல பயிரும் உண்டாகி யிருக்கிறது.

மகுடபதி என்ற நவீனத்திற்கு டி. கே. சிதம்பரநாத முதலியார் வழங்கிய முகவுரையில் ஒரு பகுதி இது.

# புலி ராஜா

[கல்கி அவர்கள் 'லாங்கூலன்' என்ற புனைப்பெயரில் எழுதிய இந்தக் கதை ஜெர்மன் மொழியில் "இந்தியச் சிறுகதைகள்" தொகுப்பில் வெளிவந்தது. அந்த நூலுக்குப் பெயரே "புலி ராஜா" என்று பிரசுரகர்த்தர்கள் கொடுத்தார்கள்.]

## 1

நமது கதாநாயகர் பிரதிபந்தபுரம் மகாராஜா அவர்களை, ஹிஸ் ஹைனஸ் ஜமேதார்-ஜெனரல், கிலேதார்-மேஜர், சத வியாக்ர ஸம்ஹாரி, மகாராஜாதிராஜ விசுவ புவன ஸம்ராட், ஸர் ஜிலானி ஜங் ஜங் பகதூர், எம்.ஏ.டி.,ஏ.வி.டி.சி., ஸீ.ஆர்.ஸி.கே. என்றும் சொல்வதுண்டு. 'புலி ராஜா' என்று சுருக்கமாகச் சொல்வதும் உண்டு. அவருக்குப் 'புலி ராஜா' என்ற பெயர் ஏன் வந்தது என்பதைத்தான் இங்கே சொல்ல முன்வந்திருக்கிறேன்; ஆனால் முன்வருவதுபோல் வந்துவிட்டுப் பின்வாங்கும் உத்தேசம் எனக்குக் கொஞ்சம்கூடக் கிடையாது. 'ஸ்டுகா' பாம்பர் விமானம் வந்தாலும் நான் பயப்படப் போவதில்லை. 'ஸ்டுகா' தான் என் கதைக்குப் பயந்து ஓடும்படியிருக்கும்.

புலி ராஜாவைப் பற்றி மிகவும் முக்கியமான ஒரு விஷயத்தை முதலிலேயே சொல்லிவிடுவது அவசியமாகிறது. ஏனெனில், அவரைப் பற்றிப் படிக்கும்போது, அப்பேர்ப்பட்ட அஸகாய சூரரைக் கண்ணால் பார்க்க வேண்டுமென்ற ஆசை எல்லாருக்கும் அளவில்லாமல் உண்டாகிவிடும். ஆனால் அந்த ஆசை நிறைவேறுவதற்கு வழி கிடையாது. பரதன் ராமனிடம் தசரதரைக் குறித்துச் சொன்ன பிரகாரம், உலகிலே பிறக்கும் ஜீவர்களெல்லாம் கடைசியாக எந்த இடத்துக்குப் போய்ச் சேருகிறார்களோ, அங்கே நமது புலி ராஜாவும் விஜயமாகிவிட்டார். சுருங்கச் சொன்னால், 'புலி ராஜா' இறந்து போனார்!

அவர் எப்படி இறந்து போனார் என்பது ஒரு அதிசயமான விஷயம். அதைக் கதையின் கடைசியிலேயே சொல்ல வேண்டும். ஆனால் அவருடைய மரணத்தில் ஒரு பெரிய விசேஷம் என்னவென்றால், அவர் பிறந்த காலத்திலேயே, அவர் ஒரு நாள்

முதல் புலியைக் கொன்றதும் மகாராஜாவுக்கு ஏற்பட்ட குதூகலத்துக்கு அளவில்லை. சமஸ்தானத்தின் ஜோசியர் தலைவரைக் கூப்பிட்டு அனுப்பினர், செத்த புலியைக் காட்டி, "இப்போது என்ன சொல்கிறீர்?" என்று கேட்டார்,

"மகாராஜா இந்தமாதிரியே 99 புலிகளைக் கொன்று விடலாம்; ஆனல்..." என்று ஜோசியர் இழுத்தார்.

"ஆனல் என்ன? தைரியமாகச் சொல்லும்!"

"ஆனல், நூருவது புலி விஷயத்தில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்,"

"சரி, நூருவது புலியையும் கொன்றுவிட்டால் அப்புறம்?"

"அப்புறம் என்னுடைய ஜோசியப் புஸ்தகங்களையெல்லாம் கிழித்து நெருப்பு வைத்துவிட்டு..."

"வைத்துவிட்டு?..."

"...தலையில் கிராப்பு வைத்துக் கொண்டு இன்ஷூரன்ஸ் கம்பெனி ஏஜெண்டாகப் போய்விடுகிறேன்!" என்று ஜோசியர் சம்பந்தமில்லாமல் முடித்தார்.

## 3

பிரதிபந்தபுரம் சமஸ்தானத்தின் காடுகளிலிருந்த புலிகளுக்கெல்லாம் அன்றுமுதல் கொண்டாட்டந்தான்.

மகாராஜாவைத் தவிர வேறு யாரும் புலி வேட்டை ஆடக் கூடாது என்று உத்தரவு பிறந்தது. தப்பித்தவறி யாராவது ஒரு புலியின்மேல் கல்லை விட்டெறிந்தால் கூட. அப்படிப்பட்ட ராஜத் துரோகத்தைச் செய்தவனுடைய சொத்துக்களெல்லாம் பறிமுதல் செய்யப் படுமென்று தண்டோரா போடப் பட்டது.

மகாராஜா நூறு புலிகளை முழுசாகக் கொன்ற பிறகுதான் மற்றக் காரியங்களில் கவனம் செலுத்துவது என்று கங்கணம் கட்டிக் கொண்டார். அவருடைய உத்தேசம் நன்கு நிறைவேறியும் வந்தது.

அபாயங்கள் அவருக்கு நேரிடாமல் இல்லை. சில தடவை, துப்பாக்கிக்குறி தவறிப் புலி அவர்மேல் பாயவும், அதனுடன் கைகலந்து சண்டை போடவும் நேரிட்டது. ஒவ்வொரு தடவையிலும், அவர் தான் கடைசியில் வெற்றி பெற்ருர்.

இன்னொரு சமயம் அவருடைய சிம்மாசனத்துக்கே ஆபத்து வருவதாயிருந்தது. ஒரு பெரிய பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் பிரதிபந்தபுரத்துக்கு விஜயம் செய்தார். அவருக்குப் புலிவேட்டையில் ரொம்பப் பிரியம், அதைக் காட்டிலும், தாம் கொன்ற புலிக்குப் பக்கத்தில் நின்று புகைப்படம் எடுத்துக் கொள்வதில் அதிகப் பிரியம். வழக்கம்போல் அவர் பிரதிபந்தபுரம் சமஸ்தானத்திலும், புலி வேட்டையாட விரும்பினர். ஆனல் மகாராஜா கண்டிப்பாக மறுத்துவிட்டார். "வேறு என்ன வேட்டைக்கு வேணுமானலும் ஏற்பாடு செய்

தமிழகத்திற்கு முற்றிலும்
நம்பகமானதொரு
சரக்குப் போக்குவரத்து நிறுவனம்

சரக்குப் போக்குவரத்துத் துறையில்
எங்கள் பணி சிறக்க
தங்கள் ஆதரவை நாடுகிறோம்




**ABT பார்சல் சர்வீஸ்**

(Prop: ஆனைமலைஸ் பஸ் டிரான்ஸ்போர்ட் பிரைவேட் லிமிடெட், பொள்ளாச்சி.)

டாக்டர் நஞ்சப்பா ரோடு, **கோயமுத்தூர்-1**



தந்தி : " சஞ்சீவி "   டெலக்ஸ் : 262.   போன் : 23366 (3 லைன்)

ABT/OSR.

கிறேன். பன்றி வேட்டையா? ஆடுங்கள். எலி வேட்டையா? நடத்துங்கள். கொசு வேட்டையா? இதோ தயார். ஆனல், புலி வேட்டை மட்டும் இங்கேமுடியாது" என்ருர் மகாராஜா.

"துரைதான் புலியைக் கொன்று ஆகவேண்டுமென்று அவசியமில்லே. மகாராஜாவே கொல்லலாம், செத்த புலிக்குப் பக்கத்தில், கையில் துப்பாக்கியுடன் நின்று போட்டோ எடுத்துக்கொள்வது தான் துரைக்கு முக்கியம்" என்று மேற்படி பிரிட்டிஷ் உத்தியோகஸ் தரின் காரியதரிசி சமஸ்தான திவான் மூலமாகச் சொல்லியனுப் பினர். இதற்கும் மகாராஜா சம்மதிக்கவில்லே. இப்போது கொஞ்சம் இடங்கொடுத்து விட்டால், அப்புறம் இன்னும் சில பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் புலி வேட்டைக்கு வந்து சேரலா மல்லவா?

இப்படி ஒரு பெரிய ஆங்கில உத்தியோகஸ்தரின் விருப்பத்துக்கு குறுக்கே நின்றதன் பயனுக, மகா ராஜாவின் கையைவிட்டு ராஜ்யமே போய்விடுமோ என்று பயம் உண்டாயிற்று.

இதைக் குறித்து மகாராஜாவும் திவானும் கலந்தாலோசித்தார்கள். உடனே கல்கத்தாவிலுள்ள ஒரு பெரிய இங்கிலீஷ் நகைக் கம்பெனிக்குத் தந்தி போயிற்று: "வைர மோதிரங்களில் சில உயர்ந்த மாதிரிகள் அனுப்பிவைக்கவும்" என்று.

அவ்விதமே வைர மோதிரங்கள் சுமார் ஐம்பது தினுசுகள் வந்தன. அவற்றை அப்படியே மகாராஜா மேற்படி பிரிட்டிஷ் உத்தியோகஸ் தரின் தர்மபத்தினிக்கு அனுப்பி வைத்தார். துரைசானி அம்மாள் ஏதாவது ஒன்றிரண்டு பொறுக்கிக் கொண்டு பாக்கியைத் திருப்பி அனுப்பிவிடுவாளென்று மகாராஜா வும் திவானும் எதிர்பார்த்தார்கள்.

ஆனல், சற்று நேரத்திற் கெல்லாம் துரைசானியிடமிருந்து பதில் வந்துவிட்டது: "நீங்கள் அனுப்பிய பரிசு மோதிரங் களுக்காக மிகவும் வந்தனம்."

இரண்டு நாளேக்கெல்லாம் நகைக் கம்பெனியாரிடமிருந்து மூன்று லட்சம் ரூபாய்க்குப் 'பில்' வந்தது. மூன்று லட்சம் ரூபாய் போனலும், சிம்மாசனத்துக்கு ஆபத்தில்லாமல் தப்பியதுபற்றி மகாராஜாவுக்குச் சந்தோஷந்தான்.

## 4

மகாராஜாவின் புலி வேட்டை விரதம் நன்கு நிறைவேறி வந்தது. பத்து வருஷ காலத்தில் எழுபது புலிகள் வரையில் வேட்டையாடிக் கொன்றுவிட்டார். அதற்குப் பிறகு ஒரு பெரிய இடையூறு ஏற்பட்டது. பிரதிபந்தபுரம் காடுகளில் புலிகளே அற்றுப்போய் விட்டனபோல் தோன்றியது. புலிகள் ஒருவேளே கருத்தடை முறைகளேக் கையாண்டனவோ, அல்லது 'ஹரிகரி' செய்துகொண்

டனவோ, அல்லது வெள்ளைக்காரன் கையினால்தான் சாக வேண்டுமென்று ஆசைப்பட்டுக் கொண்டு நாட்டைவிட்டு ஓடிப் போயினவோ, தெரியவில்லை.

மகாராஜா ஒருநாள் திவானைக் கூப்பிட்டார். "திவான் சாகிப், இன்னும் முப்பது புலி இந்தத் துப்பாக்கிக்கு இரையாகித் தீர வேண்டுமென்று உமக்குத் தெரியுமா, இல்லையோ" என்று கேட்டார்.

திவான் துப்பாக்கியைப் பார்த்து நடுநடுங்கிக் கொண்டே, "மகாராஜா! நான் புலியில்லை..." என்றார்.

"நீர் புலி என்று எந்த முட்டாள் சொன்னது?"

"இல்லை, நான் துப்பாக்கி இல்லை" என்றார் திவான்.

"நீர் புலியுமில்லை, துப்பாக்கியும் இல்லை, திவான் சாகிப்! உம்மைக் கூப்பிட்ட காரணம்வேறு. நான் கல்யாணம் செய்துகொள்வதென்று தீர்மானித்துவிட்டேன்" என்றார் மகாராஜா.

திவானுக்கு உளறல் இன்னும் அதிகமாகிவிட்டது. "மகாராஜா! ஏற்கெனவே எனக்கு இரண்டு மனைவிகள் இருக்கிறார்கள்; உங்களையும் கல்யாணம் செய்து கொண்டு..."

"சட், என்னங்காணும் உளறுகிறீர்? உம்மை எதற்காக நான் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன்? எனக்கு வேண்டியது புலி..."

"மகாராஜா! வேண்டாம், யோசனை செய்யுங்கள். உங்கள் குலத்து முன்னோர்கள் கத்தியைக் கல்யாணம் செய்துகொண்டார்கள். நீங்கள் வேண்டுமானாலும் துப்பாக்கியைக் கல்யாணம் செய்து கொள்ளுங்கள். இந்த சமஸ்தானத்துக்குப் புலி ராஜா இருப்பது போதும்; புலி ராணி வேறு வேண்டாம்!"

காரிலிருந்து ராஜாஜியும் பிரதம மந்திரி நேருஜியும் இறங்கினார்கள். படைகளைப் பார்வையிட்டு விட்டு ராஜாஜி மேலே ஏறி வந்ததும் மவுண்ட் பாட்டன் தம்பதிகள் நெடுநாளைய சிநேகிதரை வரவேற்பது போல் அவரை வரவேற்றார்கள். மவுண்ட்பாட்டன் முதலில் ஒரு 'சல்யூட்' போட்டார்: அப்புறம் ஒரு கும்பிடு போட்டார்; அப்புறம் கையைப் பிடித்துக் குலுக்கினார்; அப்புறம் ஆலிங்கனமே செய்து கொண்டார். இரட்டைக் கவர்னர் ஜெனர்ல்களை அங்கு வந்திருந்த எல்லாரும் சூழ்ந்துகொண்டார்கள்.

அன்றிரவெல்லாம் நான் சரியாகத் தூங்கவில்லை, மறுநாள் ராமருக்குப் பட்டாபிஷேகம் என்ற செய்தியை அறிந்திருந்த அயோத்தி மக்களின் நிலையில் இருந்தேன். காட்டுக்குப் போய் வந்த பிறகு நடந்த இரண்டாவது ராம பட்டாபிஷேகத்தைக் குறிப்பிடுகிறேன். முதல் தடவை நாள் வைத்துத் தவறிவிட்டதால் இரண்டாவது முறை குறிப்பிட்ட பட்டாபிஷேக தினத்தைப் பற்றி அயோத்தி மக்களின் ஆர்வம் அதிகமாய் இருந்திருக்குமல்லவா?

—'கல்கி', (ஒன்பதாவது சாம்ராஜ்யம் என்ற கட்டுரையிலிருந்து.)

இதைக்கேட்ட மகாராஜா குபீரென்று சிரித்துவிட்டு, "புலியுமில்லை, துப்பாக்கியுமில்லை. மனுஷப் பெண்ணைத் தான் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன். தற்சமயம் எந்த சமஸ்தானத்தில் புலி இருக்கிறதென்று முதலில் கணக்குத் தயார் செய்யும். பிறகு, புலி இருக்கிற சமஸ்தானத்தில் ராஜ வம்சத்தில் கல்யாணத்துக்குப் பெண் இருக்கிறதா என்று பாரும்" என்றார்.

திவான் அப்படியே பார்த்தார். கடைசியில் மகாராஜாவின் விருப்பத்தின்படியே புலிகள் நிறைய உள்ள சமஸ்தானத்தில் பெண் பார்த்துக் கல்யாணமும் செய்து வைத்தார்.

மகாராஜா ஜங்ஜங் பகதூர் ஒவ்வொரு தடவை மாமனார் வீடு சென்றபோதும், ஐந்தாறு புலிகளை கொன்று எடுத்துக் கொண்டு வந்தார். இப்படியாக, மகாராஜா கொன்ற எல்லாப் புலிகளின் தோலும்—சரியாக 99 தோல்—அரண்மனை ஆஸ்தான மண்டபத்தில் சுவர்களை அலங்கரித்தன.

## 5

கடைசியில் நூற்றுக்கு இன்னும் ஒரு புலிதான் பாக்கி என்ற நிலைமை ஏற்பட்டதும் மகாராஜாவின் பரபரப்பு மிகவும் அதிகமாயிற்று. பகலில் அதே நினைவு; இரவில் அதே கனவு. இதற்குள்ளே, மாமனார் சமஸ்தானத்திலும் புலிப்பண்ணை வறண்டு போய்விட்டபடியால் புலிகள் அகப்படுவது மிகவும் பிரயாசையாய்ப் போயிருந்தது. ஆனாலும், இன்னும் ஒரு புலியைமட்டும் கொன்றுவிட்டால், அப்புறம் பயமே இல்லை. புலி வேட்டையையே விட்டுவிடலாம்.

ஆனால், இந்தக் கடைசிப் புலி விஷயத்தில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். காலஞ்சென்ற தலைமை ஜோசியர் என்ன சொன்னார்? 99 புலிகளை மகாராஜா கொன்றபோதிலும் நூறாவது புலி விஷயத்தில் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்!" உண்மைதான். புலி பொல்லாத மிருகம்; ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும். ஆனால், அந்த நூறாவது புலிக்கு எங்கே போகிறது? புலி கிடைப்பது புலிப்பால் கிடைப்பதைவிடக் கஷ்டமாகிவிட்டதே?

மகாராஜா இப்படிப்பட்ட கவலையில் ஆழ்ந்திருந்தபோது, அந்தக் கவலையைப் போக்கக்கூடிய ஒரு அருமையான சந்தோஷச் செய்தி வந்தது. அந்தச் சமஸ்தானத்திலேயே மலைக்கிராமம் ஒன்றில், திடீர் திடீரென்று சில ஆடுகள் காணாமல்போய் வந்தன. "முழு ஆடு விழுங்கிகள்" என்று பெயர் பெற்ற காதர் மியான் சாகிபுவையும், வீராசாமி நாய்க்கரையும் விசாரித்து அவர்கள் பொறுப்பாளிகள் அல்ல என்று தெரியவந்ததும்.

புலிதான் வந்திருக்க வேண்டும் என்று நிச்சயமாயிற்று. சில கிராம வாசிகள் ஓடிப்போய் மகாராஜாவிடம் தெரிவித்தார்கள். அந்தக் கிராமத்திற்கு மூன்று வருஷ வரி, வாய்தா, குவிட்ரென்ட், ஜபாடந்தி, புறம்போக்குப் பட்டி ஒன்றுமே கிடையாது என்று மகாராஜா தெரிவித்துவிட்டு, உடனே வேட்டைக்குக் கிளம்பினார்.

புலி இலேசில் அகப்படவில்லை வேண்டுமென்று மகாராஜா கையில் அகப்படக் கூடாதென்றே அது ஒளிந்து கொண்டிருந்ததாகத் தோன்றியது. மகாராஜாவோ, புலி அகப்பட்டாலொழியக் காட்டை விட்டு வரமாட்டேனென்று பிடிவாதம் பிடித்தார். அதோடு, நாளாக ஆக மகாராஜாவின் கோபமும் பிடிவாதமும் அதிகமாகி வந்தன. அதன் பயனாய் அனேக உத்தியோகஸ்தர்களுக்கு வேலை போய்விட்டது!

ஒருநாள் ரொம்பக் கோபம் வந்தபோது, மகாராஜா திவானைக் கூப்பிட்டு, "சமஸ்தானத்தில் நில வரியை உடனே இரண்டு பங்கு செய்யுங்கள்" என்றார். திவான் "பிரஜைகளுக்கு அதிருப்தி உண்டாகும், மகாராஜா! அப்புறம் நம் சமஸ்தானத்திலும் ஸ்டேட் காங்கிரஸ் ஏற்பட்டுவிடும்" என்றார். "அப்படியானால், உம்முடைய வேலையை ராஜிநாமா செய்துவிட்டு போம்!" என்றார் மகாராஜா.

> **கல்கி** தமிழுக்கு நல்ல சேவை செய்கிறார் என்று எல்லாரும் சொல்கிறார்கள். **மகுடபதி**யை வாசித்ததும் என்ன தோன்றுகிறது என்றால் தமிழ்தான் அவருக்குச் சேவை செய்கிறது என்று சொல்லத் தோன்றுகிறது. நம்முடைய கண்ணுக்குத் தோன்றக்கூடிய காட்சிகள், அனுபவிக்கக்கூடிய காட்சிகள் எல்லாம் தெள்ளத் தெளிந்த தமிழ்மூலமாக நம்முன் வந்து நிற்கின்றன, சாமான்யமாகத் தெருவில், திண்ணையில், அடுக்களையில் வழங்கும் சொல்லுக்கு என்ன என்ன சக்தி யெல்லாமிருக்கிறது என்று வியக்கத் தோன்றுகிறது, மனதில் நிகழும் அபூர்வமான நிகழ்ச்சிகளைப் பளிங்குக் கூட்டில் வைத்துக் காட்டியமாதிரி காட்டுகிறது ஆசிரியரது தமிழ்,
>
> —1943 இல் மகுடபதி என்ற நவீனத்திற்கு டி.கே.சி. வழங்கிய முகவுரைல் ஒரு பகுதி.

இதற்குமேல் மகாராஜாவுக்குப் புலி அகப்படாதிருந்தால் விபரீதந்தான் என்று தீர்மானித்துக் கொண்டு வீட்டுக்குப் போனார் திவான். அங்கே சென்னை பீப்பிள்ஸ் பார்க்கிலிருந்து வாங்கிக் கொண்டுபோய் இரகசியமாய் வைத்திருந்த புலியைப் பார்த்ததுந்தான் அவருக்கு உயிர் வந்தது.

அன்று இரவு நடுநிசியில் ஊரெல்லாம் அடங்கியபிறகு, திவானும் அவருடைய வயதுமுதிர்ந்த மனைவியும் மேற்படி புலியை இழுத்துக் கொண்டு வந்து மோட்டாரில் ஏற்றினார்கள். 'திவான்' தாமே மோட்டாரை ஓட்டிக் கொண்டு

போய், மகாராஜா வேட்டையாடிக் கொண்டிருந்த காட்டுக்குப் பக்கத்தில் புலியை இறக்கினர்; மோட்டாரிலிருந்து இறங்க மாட்டேனென்று சத்தியாக்கிரகம் செய்த அந்தப்புலியைப் பிடித்து இழுத்துக் கீழே தள்ளுவதற்குள் திவானுக்கு மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கி விட்டது!

மறுநாள் மகாராஜாவின் முன்னால் மேற்படி கிழப்புலியானதுவந்து, "எஜமானே! என்ன ஆக்ஞை?" என்று கேட்பதுபோல் நின்றது. மகாராஜா அளவிறந்த உற்சாகத்துடன் துப்பாக்கியை எடுத்துக் குறி வைத்துச் சுட்டார். உடனே புலி சுருண்டு விழுந்தது.

"நூறுவது புலியைக் கொன்றுவிட்டோம்; விரதம் நிறைவேறிவிட்டது!" என்ற மகத்தான குதூகலம் மகாராஜாவின் மனதில் தோன்றிற்று. அந்த நூறுவது புலியை, தமது தலைநகரில் ஊர்வலமாகக் கொண்டுவரும்படி கட்டளையிட்டுவிட்டு, மகாராஜா மோட்டாரில் ஏறி விரைந்து முன்னால் சென்றார்.

அவர் போனபிறகு, மற்ற வேட்டைக்காரர்கள் புலியின் அருகில்சென்று பார்த்தார்கள். புலியும் கண்களைப் பேந்தப்பேந்த விழித்து அவர்களைப் பார்த்தது! புலி சாகவில்லையென்றும், அதன் மேல் குண்டே பாயவில்லையென்றும் அவர்கள் கண்டார்கள். குண்டு சமீபத்தில் போன அதிர்ச்சியினாலேயே அது அப்படி மூர்ச்சையாகி விழுந்திருந்தது! வேட்டைக்காரர்கள் யோசனை செய்தார்கள். குண்டு தவறிப்போன செய்தி மகாராஜாவுக்குத் தெரியக் கூடாது. தெரிந்தால் தங்களுடைய உத்தியோகத்துக்கு ஆபத்து என்று அவர்கள் தீர்மானித்தார்கள். அவர்களில் ஒருவன் புலிக்கு ஓர் அடி தூரத்திலிருந்து குறி தவறாமல் அதைக் கொன்று தீர்த்தான்.

பிறகு, மகாராஜாவின் கட்டளையின்படி, அந்தச் செத்தப் புலியை நகரில் ஊர்வலம் விட்டுக்கொண்டு போய்க் கடைசியில் அதைப் புதைத்து, சமாதியும் எழுப்பினர்கள்.

★ ★

மேற்கூறிய விசேஷ சம்பவம் நடந்து சில தினங்களுக்குப் பிறகு மகாராஜாவின் குமாரனுக்கு மூன்ருவது பிறந்த தினக் கொண்டாட்டம் நடந்தது. இதுவரையில் புலி வேட்டையிலேயே கவனமாயிருந்த மகாராஜ பட்டத்து இளவரசனைப் பற்றிக் கொஞ்சமும் கவனிக்கவில்லை. இப்போது அவருடைய கவனம் குழந்தையின்மீது சென்றது. பிறந்த தினத்தன்று குழந்தைக்கு ஏதாவது பரிசு கொடுக்க வேண்டுமென்று ஆசைப்பட்டார். பிரதிபந்தபுரம் கடைத் தெருவுக்குப் போனர். கடைகடையாகத் தேடியும் அவருக்கு ஒன்றும்

கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு பொம்மைக் கடையில் ஒரு சின்ன மரப் புலியைப் பார்த்தார். "இது தான் சரியான பரிசு" என்று உடனே தீர்மானித்து விட்டார்.

அந்த மரப் புலியின் விலை இரண்டே காலணுதான். ஆனால், மகாராஜா கேட்கும்போது அவ்வளவு குறைந்த விலை சொன்னால் நிச்சயம் அவசரச் சட்டத்தின் கீழ்த் தண்டனை கிடைக்குமென்று தெரிந்த கடைக்காரன், "மகா ராஜா! இது ரொம்ப ரொம்பக் கலைத் திறமை பொருந்திய பொம்மை; விலை முந்நூறு ரூபாய் தான்!" என்றான்.

"ரொம்ப சந்தோஷம்! யுவ ராஜாவின் பிறந்த தினக் கொண்டாட்டத்துக்கு இது உன்னுடைய காணிக்கையாகயிருக்கட்டும்", என்று சொல்லிவிட்டு, மகாராஜா அதை எடுத்துச் சென்றார்.

யுவ ராஜாவின் பிறந்த தினத்தன்று, தகப்பனாரும் குழந்தையும் அந்தச் சின்னஞ் சிறு மரப் புலியை வைத்துக் கொண்டு விளையாடினார்கள். யாரோ பட்டிக் காட்டுத் தச்சன் செய்த பொம்மை அது. ஆகையால், அதன் மேலெல்லாம் சிலாம்பு சிலாம்பாய் நின்றது. மகா ராஜா அதைக் கையில் வைத்துக் கொண்டு விளையாடிய போது வலது கையில் ஒரு சிலாம்பு குத்தியது. இடது கையால் சிலாம்பைத் தட்டி எறிந்து விட்டு மகாராஜா மேலும் விளையாடிக் கொண்டிருந்தார்.

சிலாம்பு குத்திய இடத்தில் மறு நாள் சின்னக் கொப்புளம் புறப்பட்டது.

இரண்டு நாளையில் அது பெரிய சிரங்காயிற்று. நாலு நாளைக்கெல்லாம் கை முழுவதும் புரையேறி விட்டது.

சென்னைப் பட்டணத்திலிருந்து பெரிய ஸர்ஜன்கள் மூன்று பேர் வரவழைக்கப்பட்டார்கள்.

அவர்கள் கூடி ஆலோசித்து, "ஆபரேஷன் செய்ய வேண்டியது தான்" என்று தீர்மானித்தார்கள்.

ஆபரேஷன் நடந்தது.

மூன்று ஸர்ஜன்களும் ஆபரேஷன் செய்துவிட்டு வெளியில் வந்து பின்வரும் செய்தியை தெரிவித்தார்கள் :

"ஆபரேஷன் வெற்றிகரமாய் நடந்தது; மகாராஜா காலமாகி விட்டார்!"

இவ்விதமாக நூறாவது புலியாவது கடைசியில் புலி ராஜாவின் மேல் வஞ்சம் தீர்த்துக் கொண்டது.

———

# மோட்டார், சாலைப் போக்குவரத்துக்குத் தொண்டுபுரியும் நிறுவனங்கள்

★

டி. வி. சுந்தரம் ஐயங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட்
மெட்ராஸ் ஆட்டோ சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்
சுந்தரம்ஸ் பிரைவேட் லிமிடெட்
சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்
சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்
சதர்ன் ரோடுவேய்ஸ் பிரைவேட் லிமிடெட்
மதராஸ் மோட்டார் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
இந்தியா மோட்டார் பார்ட்ஸ் & அசெஸரீஸ் லிமிடெட்
சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட்
தி டின்னவேலி மோட்டார் பஸ் சர்வீஸ் கம்பெனி பிரைவேட் லிமிடெட்
சுந்தரம் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்
சிங்கர்—டி. வி. எஸ். லிமிடெட்
திருச்சி ஸ்டீல் ரோலிங் மில்ஸ் லிமிடெட்
சுந்தரம் பாஸனர்ஸ் லிமிடெட்
டார்ஷன் புராடக்ட்ஸ் லிமிடெட்
வீல்ஸ் இந்தியா லிமிடெட்
லூகாஸ் – டி. வி. எஸ். லிமிடெட்
பிரேக்ஸ் இந்தியா லிமிடெட்
சுந்தரம் கிளேய்ட்டன் லிமிடெட்

# சிறை வாசம்

[தனிநபர் சத்தியாக்ரஹத்தில் பங்கெடுத்துக்கொண்ட ரா. கி. அவர்களுக்கு மூன்றுமாதக் கடுங்காவல் தண்டனை கிடைத்தது, அவரை திருச்சி சிறைக்கு அழைத்துச் சென்றார்கள். சிறைவாச அனுபவத்தை அவர் 'மூன்றுமாதக் கடுங்காவல்' என்ற தலைப்பில் சில கட்டுரைகளாக எழுதினார். அந்தக் கட்டுரைத் தொகுப்பிலிருந்து சில பகுதிகளை இங்கு தருகிறோம்.]

என்னைப் போன்றவர்களுக்கு 'மூன்று மாதம் சிறைவாசம்' என்றால் அது மூன்று மாதந்தான்; ஒன்பது மாதம் என்றாலும் அது ஒன்பது மாதந்தான். ஆனால் ஸ்ரீ சத்தியமூர்த்திக்கோ 'ஒன்பதுமாதச் சிறை' என்பது 'ஒன்பது வருஷச் சிறை' என்றே சொல்லவேண்டும். இதன் காரணங்களாவன: (1) அவருடைய தேக அசௌக்கிய நிலைமை (2) அரசியல் சம்பந்தமான பொது கூட்டங்கள், வாதப்பிரதிவாதங்கள் இல்லாமல் வாழ்க்கை நடத்துவது அவருக்கு நரக வேதனையாகத் தோன்றுவது (3) குடும்பத்தில் அவருக்குள்ள பற்றுதல் (4) நல்ல பொருள்களில் அவருக்குள்ள அபிமானம்.

ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு, அவருடைய தேகத்திலுள்ள மற்ற உபாதைகள் ஒருபுறமிருக்க தூக்கமில்லாத நோய்தான் ரொம்பவும் துன்புறுத்திற்று. இந்த நோயை அவருடைய மனக்கவலை அதிகமாக்குகிறது என்பது அநேகருடைய அபிப்பிராயம். மனக்கவலை என்றால், தேசத்தின் அரசியல் நிலைமைபற்றிய கவலைதான். ராஜாஜியைப்போன்ற சிலர் சிறைக்குள் வந்ததும் வெளிவிவகாரங்களை அடியோடு மறக்க முயன்று வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். இந்த ஆத்மசாதனம் வெகு சிலருக்குத்தான் கைகூடும். ஸ்ரீ சத்தியமூர்த்தி சிறைக்குள் வந்தபிறகும் இடைவிடாமல் நாட்டின் அரசியல் நிலைமையைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பவர்.

அவருக்குக் கொஞ்சம் உத்சாகம் பிறக்கவேண்டுமானால், "பார்த்தீர்களா? ஆல்பிரட் நாக்ஸ் என்ன அயோக்கியத்தனமாகப் பேசியிருக்கிறான்" என்று இப்படி ஏதாவது சொல்லவேண்டும். உடனே, "ஆமாம், ஏன் பேசமாட்டான்? நாம் எல்லாம் இங்கே வந்து ஜெயிலுக்குள்ளே உட்கார்ந்து அத்தைப்

பாட்டிகளைப் போல ராமாயணம் படித்துக்கொண்டிருந்தால், அப்படித்தான் பேசுவான், இப்போது மட்டும் இந்தியசட்டசபையில் நான் இருந்தால், அந்த ஆல்பிரட் நாக்ஸின் பல்லை உடைப்பேனா, மாட்டேனா?" என்பார்.

நம் எல்லோருக்கும் பந்துமித்திரர்களிடம் ஆசையுண்டு; மனைவி மக்களிடம் பற்றுதலும் உண்டு. ஆனால் ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு அவருடைய ஏக புதல்வியிடம் உள்ள வாஞ்சையைபோல நான் பார்த்ததேயில்லை. 'இன்டர்வ்யூ'வுக்கு அவருடைய புதல்வி வந்துவிட்டதாகத் தெரிந்ததும் அவர் தமது அறையிலிருந்தபடியே 'லக்ஷ்மி' என்று கூப்பிட்டுக்கொண்டு கிளம்புவார். அப்போது அவருடைய நடை ஓட்டமாகத்தான் இருக்கும். கன்றின் குரலைக்கேட்டு கனிந்து வரும் பசுவின் ஞாபகம், பார்ப்பவர்களுக்கு வராமலிராது.

இன்னும், வாழ்க்கையில் இன்பமளிக்கும் பொருள்களில் அவருக்கு ரொம்ப ஆசை. சங்கீதம், நாட்டியம், நாடகம்– இவைகளில் ரொம்பப் பற்றுதல், பூமாலை, வெற்றிலை, சந்தனம் முதலிய பொருள்களிலும் அப்படியே.

"சூபரின்டெண்டை, ஒரு காரியம் கேட்கலாம் என்றிருக்கிறேன்; நீ என்ன சொல்கிறாய்?" என்று ஒரு நாள் கேட்டார்.

"நான் சொல்வதென்ன? பேஷாய்க் கேளுங்கள்!" என்றேன்.

"கே. பி. சுந்தராம்பாள் திருச்சிக்கு வரப்போவதாகக் கேள்வி. இங்கே வந்து நமக்கு ஒரு கச்சேரி செய்துவிட்டுப் போகட்டுமே!" என்று சொன்னபோது அவருடைய முகத்தில் உத்சாகம் ததும்பிற்று.

"முதல்தரமான யோசனை; அப்படி ஏதாவது ஏற்பாடு செய்யுங்கள். நல்ல கச்சேரிகேட்டு ரொம்ப நாளாச்சு; பக்கவாத்தியத்திற்கு ஆலங்காடு சுந்தரேசய்யரும் மதராஸ் வேணுநாய்க்கருந்தானே?" என்றேன் நான்.

"ஆனால் கொஞ்சம் யோசிக்க வேண்டும். வெளியில் இருக்கிறவன்களெல்லாம், நாம் இங்கே ஷோக்காய் சங்கீதக்கச்சேரி கேட்டுக்கொண்டு குஷியாக இருக்கிறோம் என்று வம்பளப்பான்கள்" என்றார்.

"அப்படி ஷோக்காய் இருக்கலாம் என்று ஆசைப்பட்டுக் கொண்டாவது அந்த வம்புக்காரன் ஜெயிலுக்கு வரட்டுமே?" என்றேன்.

திருச்சி சிறையில் ஸ்ரீ சத்தியமூர்த்தியின் வாழ்க்கையை சில காலம் பார்த்தபிறகு அவரிடம் எனக்கிருந்த மதிப்பு பன்மடங்கு பெருகியது. அதே சமயத்தில் 'அவரை சிறைக்கு அனுப்புவது மிகவும் குரூரமான காரியம் என்ற எண்ணமும் உண்டாயிற்று.

* * *

திருச்சி சிறையில் எனக்கு மிகவும் அதிசயமளித்த விஷயம் ராஜாஜியின் ஸம்ஸ்கிருதப்பாஷைப் புலமைதான்! இராமாயண-பகவத் கீதை வகுப்புக்களில், நல்ல ஸம்ஸ்கிருத ஞானமுள்ளவர்கள் சிலர் இருந்தார்கள். ஸ்ரீ மல்லிகார்ஜுனடு என்ற ஆந்திர சகோதரர் ஸம்ஸ்கிருதத்தில் எம். ஏ. பட்டம் பெற்றவர். 'மகா மகோபாத்தியாய குப்புசாமி சாஸ்திரிகளின் மாணாக்கர் நான்' என்று பெருமையுடன் சொல்லிக்கொள்வார். நமது வட ஆற்காடு எம். எல். ஏ. ஸ்ரீ டி. ராமலிங்க ரெட்டி இன்னொரு ஸம்ஸ்கிருத எம். ஏ. பட்டதாரி, இன்னும் ஸ்ரீ கே. சந்தானம், ஸ்ரீ அனந்தசயனம் அய்யங்கார், சித்தூர் ஸ்ரீ ராமகிருஷ்ண ராஜு, முதலியோர் சிறந்த ஸம்ஸ்கிருத பாண்டித்யமுள்ளவர்கள். இவர்கள் எல்லாம் சந்தேகப்பட்டு, "அர்த்தம் இப்படியா, அப்படியா?" என்று தர்க்கம்செய்து மண்டையை உடைத்துக்கொள்ளும் சமயங்களில் எல்லாம் ராஜாஜி சரியான அர்த்தத்தை காரணத்துடன் கூறி சமாதானம் பண்ணிவைப்பார்.

இந்த ஆச்சரியத்தினால் தூண்டப்பட்டு ஸ்ரீமல்லிகார்ஜுனடு, ராஜாஜியின்மேல் 'பஞ்ச ஸ்லோக குசுமாஞ்சலி' என்று ஐந்து ஸம்ஸ்கிருத சுலோகங்கள் பாடிவிட்டார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

* * *

இன்பத்துக்கும் துன்பத்துக்கும் இருப்பிடம் மனம்தான் என்பது பெரியோர்கள் கண்ட உண்மை ஆகவே மனதில் உத்சாகம் இருந்தால், சிறைவாழ்க்கையை ஒருவாறு உத்சாகத்துடனும் சந்தோஷத்துடனும் அனுபவிக்கலாம். ஆனால் சிறை வாழ்க்கை என்றால் எல்லாம் குதூகலமாகவே இருக்கும் என்று எண்ணக் கூடாது. 1940-ஆம் வருஷம் டிசம்பர் மாதத்தில் நான் ஒரு கதை எழுதியிருந்தேன், 'விநாயகத்தின் விடுதலை' என்பது தலைப்பு. விநாயகம் என்பவர் ஒரு 'கௌரவ' ஜெயில் விசிட்டர். அவர் ஒரு கனவு காண்கிறார். சத்தியாக்கிரஹத்தில் சேர்ந்து சிறைக்குப் போகிறார்-கனவில்தான் விடுதலை எப்போது வரும் என்று தவித்துக் கொண்டிருக்கிறார். கடைசியில் ஒருநாள் விடுதலை வருகிறது. விடுதலை ஆனதும் சிறையின் வாசலிலேயே அவரை, மறுபடியும் பாதுகாப்புச் சட்டத்தின்படி கைது செய்கிறார்கள். உடனே அவர் பிராணன்போய்க் கீழே விழுந்துவிடுகிறார்! தூக்கத்திலிருந்து விழித்தெழுந்ததும், அவர் சிறை விசிட்டர் வேலையை ராஜினாமா செய்கிறார்.

திருச்சி சிறைக்கு நான் போன புதிதில் ஒருநாள், நண்பர் கிருஷ்ண சாமிபாரதி மேற்படி கதையைப் பற்றி பிரஸ்தாபித்தார். "உங்கள் கதை வெளியான அதே சமயத்தில்

இங்கே அதேமாதிரி ஒரு சம்பவம் நடந்தது. ஆகையால் கதை ரொம்ப ரொம்ப ஆச்சரியமளித்தது" என்றார்.

"அது என்ன?" என்று கேட்டேன்.

"பாலதண்டாயுதம் தெரியும் அல்லவா?" என்றார்.

"தெரியாது. ஆனால் பெயரைக் கேட்டிருக்கிறேன். சிதம்பரத்தில்..."

"ஆமாம், ஆமாம். அண்ணாமலை சர்வகலாட்டாசாலை சம்பவங்களில் பெயர் வாங்கியவர்தான். ஆனால் அவருக்கு இங்கே ரொம்ப நல்ல பெயர்..."

"அவர் இங்கே இருக்கிறாரா, என்ன?" என்று ஆவலுடன் கேட்டேன்.

"இப்போது இல்லை. போன மாதம் வரையில் இருந்தார். இங்கே அவர் ராஜாஜிக்கு ரொம்ப அத்யந்த சிஷ்யராகிவிட்டார்" என்றார்.

நான் நிமிர்ந்து உட்கார்ந்து "அப்புறம்?" என்றேன்.

"உங்களுக்குத் தெரியுமோ என்னமோ? அவர் சிறைக்கு வருவதற்குக் கொஞ்சநாளைக்கு முன்புதான் கல்யாணம் செய்துகொண்டார். அவருடைய மனைவி காலேஜ் மாணவி. அவரை 'இன்டர்வியூ' பார்ப்பதற்காக அந்தப் பெண் ஒரு சமயம் இங்கே வந்திருந்தாள், புது மணம் புரிந்தவள்; அதிலும் காதல் கல்யாணம். ஒரே சோக நாடகந்தான்..." என்றார்.


*WITH COMPLIMENTS FROM*

★

★

★

★

SANDOZ INDIA LIMITED

**NEW DELHI**

"கடைசியில் நாடகம் சுலபமாகத் தானே முடிந்தது?" என்று கேட்டேன்.

"அதுதானே இல்லை!" என்றார் பாரதி. அவர் சொன்னார்: "பாலதண்டாயுதம் சிறையிலிருந்து விடுதலையான பிறகு வாழ்க்கை நடத்துவது பற்றி என்னவெல்லாமோ பிளான் போட்டுக்கொண்டிருந்தார். தெரிந்தவர்களிடமெல்லாம் 'கொஞ்ச நாளைக்கு நான் அரசியலில் கலந்துகொள்ளப் போவதில்லை' என்று சொல்லிக்கொண்டிருந்தார். எல்லோரும் இதை ஆமோதித்தார்கள். 'கொஞ்ச நாளைக்கு மனைவியுடன் நிம்மதியாய் இல்வாழ்க்கை நடத்துங்கள்' என்று சொன்னார்கள். சென்னையில் ஏதாவது உத்தியோகம் சம்பாதிப்பதைப் பற்றியும் அவர் யோசித்துக்கொண்டிருந்தார். ராஜாஜியிடம் யாருக்கோ சிபாரிசுக் கடிதம்கூட வாங்கிக் கொண்டார். விடுதலை நெருங்க நெருங்க அவர் தவித்த தவிப்பையும் அடைந்த பரபரப்பையும் பார்க்கவேண்டுமே? விடுதலைக்கு முதல்நாள் அவர் தரையில் நடக்கவேயில்லை. ஒவ்வொருவராய்ப் போய் விடைபெற்றுக் கொண்டார். இராத்திரி ஒரு நிமிடங்கூட கண் மூடியிருக்க மாட்டார் என்றே நினைக்கிறேன்" பாரதி, கதையைச் சொல்லிவந்து முக்கியமான இடத்தில் நிறுத்தினார்.

கதையின் முடிவைத் தெரிந்து கொள்ள எனக்கிருந்த பரபரப்பைச் சொல்லிமுடியாது "மறுநாள் விடுதலையாயிற்றோ இல்லையோ?" என்றேன்.

"விடுதலை ஆயிற்று..."

"பின்னே என்ன?"

"கொஞ்சம் பொறுங்கள். மறுநாள் பொழுது விடிந்தது. ஜெயில் கதவு திறந்தது. பாலதண்டாயுதம் மலர்ந்த முகத்துடன் எல்லாரிடமும் விடைபெற்றுக்கொண்டு வெளியில் போனார். அவரை வரவேற்பதற்கு அவருடைய மனைவி சிறைவாசலில் தயாராகக் காத்துக்கொண்டிருந்தாள். புருஷனும் மனைவியும் சந்தித்துப் பேசிக்கொள்வதற்குள் சில போலீஸ் அதிகாரிகள் வந்தார்கள். பாலதண்டாயுதத்தை அழைத்துக்கொண்டுபோய் சாலையில் நின்றுகொண்டிருந்த போலீஸ் வண்டியில் ஏற்றினார்கள். பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அவரைக் கைதுசெய்து வேலூர் ஜெயிலுக்கு கொண்டுபோவதாகத் தெரிந்தது. அப்போது சிவில் ஜெயிலைச்சுற்றி தட்டி வைத்துக் கட்டவில்லை. நாங்கள் எல்லோரும் உள்ளிருந்தபடி பார்த்துக்கொண்டுதான் இருந்தோம். ஆகா! அந்தப் பரிதாபக் காட்சியை நான் மறக்கவே முடியாது."

பாரதி ரொம்ப உருகிப்போய் இதையெல்லாம் சொல்லி வந்தார். என்னுடைய மனமும் கசிந்து விட்டது. இந்த நிஜக்கதை, கற்பனைக்கதைகளை எல்லாம் தூக்கியடிக்கிறதே என்று நினைத்தேன்.

"பாவம்! அந்தப் பெண் என்ன செய்யப்போகிறுளோ தெரியாது. இத்தனை நாளும் திருச்சியில் ஸ்ரீ இரத்தினவேலுத் தேவர் வீட்டில் இருந்தாளாம். அடிக்கடி இங்குவந்து 'இண்டர்வ்யூ' பார்க்க வாவது முடிந்தது. இனிமேல் எப்படியோ? இந்தத் தம்பதிகளைப் பற்றி இங்கே பரிதவிக்காதவர்கள் கிடையாது. ஆகையால்தான் உங்களுடைய 'விநாயகத்தின் விடுதலை' எங்களுக்கு அவ்வளவு சுவாரஸ்யமாக இருந்தது..."

"நிறுத்தும் ஐயா, பாரதி! ரொம்ப ரொம்ப வருணிக்கிறீரே!" என்று ஒரு குரல் கேட்டது. இப்படிச் சொன்னவர் பாகனேரி. ஆர். வி. ஸ்வாமிநாதன். கதையின் கடைசிபாகத்தை அவர் கேட்டிருக்க வேண்டும்.

"என்ன அப்படிச் சொல்கிறீர்கள்?" என்று கேட்டேன்.

"ஆமாம்! பின்னே என்ன? ரொம்ப ரொம்பப் பிரமாதமாக பாரதி கதைவிடுகிருரே? பாலதண்டாயுதம் மட்டும் அப்படி என்ன பிரமாதயான தியாகம் செய்து விட்டது? இங்கே வந்திருக்கிற ஒவ்வொருவரும் தியாகம் பண்ணி விட்டுத்தான் வந்திருக்கிருர்கள். நமக்கெல்லாம் பெண்டாட்டி பிள்ளைகள் கிடையாதா?" என்று சக்கைப்போடுபோட்டார்.

அந்தச் சமயம் விஷயத்தை அப்படியே விட்டுவிட்டு வேறு காரியங்களைப் பார்க்கத் தொடங்கினேம். பிறகு விசாரித்தபோது ஸ்வாமிநாதனுக்கு சென்ற வருஷத்தில் கல்யாணம் நடந்தது என்றும், அவர் சிறைக்கு வந்தபிறகு தகப்பனுர் ஆனுர் என்றும் தெரிந்து கொண்டேன்...பிறந்த குழந்தையைப் பார்க்கமுடியாமல் மாதக் கணக்கில் சிறையில் அடைபட்டுக் கிடப்பது என்ருல், யாருக்குத்தான் ஆத்திரம் ஏற்படாமல் இருக்கும்? அந்த ஆத்திரத்தைத்தான் ஸ்ரீ ஸ்வாமிநாதன் மேற்கண்டவாறு வெளிப்படுத்தினுரே தவிர, மற்றப்படி பாலதண்டாயுதம் விஷயத்தில் அவருக்கு எவ்வித அதிருப்தியும் இல்லை என்று தெரிந்தது.



# SOUTH INDIA VISCOSE LIMITED, COIMBATORE

**MAN MADE FIBRES**
**FOR QUALITY YOU CAN COUNT ON**
**SOUTH INDIA VISCOSE PRODUCTS**

**RAYON YARN** Rated among the best—comparable to imported yarn. Available in 75, 100, 120 & 150 Deniers Bright. Cones, Hanks & Cakes.

**STAPLE FIBRE** Superb in quality 1.5 D X 1.5"

The uniform excellence of South India Viscose Products is the result of collaboration with one of the World renowned producers, SNIA VISCOSA, Italy: up-to-date machinery; and latest manufacturing technique.

*For further particulars, please contact:*

SOUTH INDIA VISCOSE LIMITED, P.B. No. 1396
**6/114, Race Course, Coimbatore-18.**

Grams: "VISCOSE" COIMBATORE.
Phone: 23206, 23207, 23208 CBT
Telex: No. 042-210 'VISCOSE CB'



*WITH BEST COMPLIMENTS FROM*

★

# NESTLE'S PRODUCTS (INDIA) LTD.

★

**BOMBAY ★ CALCUTTA ★ DELHI**

**MADRAS ★ MOGA**

# மடுக்கரை நாடகம்

(கி. ராமநாதன்)

★

கவியொன் றெழுதக் காகிதம் எடுத்துப்
புவியின் எழிலைக் கவியில் புனைய
முயன்றேன் யானும் இயல வில்லை
பயின்ற யாப்பும் பறந்து சென்றது. (1)

காவை நோக்கியோர் பாவை சென்ருள்
கோவைப் பழமென கொஞ்சு மிதழாள்
பார்புகழ் கார்குழல் சீர்மிகு சிறப்புடன்
பார்ப்பார் இல்லை, ஊர்ப்புறம் ஏகினுள். (2)

முல்லை மொட்டே முத்துப் பற்களும்
முல்லை மலர்களை முடிதனில் சூடிய
விஞ்சிய எழிலாள் கொஞ்சும் விழியாள்
மஞ்சள் பூசிய நுதலில் திலகம். (3)

அங்க மெல்லாம் தங்க அணிகள்
எங்குதான் செல்கிருள் என்றுயான் ஏங்கவும்
மடுக்க ரையோரம் நடந்தாள், அங்கே
அடுத்து நானும் விரும்பியே தொடர்ந்தேன். (4)

குதித்தே கும்எழில் கூடிய நங்கையும்
மதிப்புடை நடையுடன் மாண்பு விச்சுடன்
மேற்குத் திசையில் பாஸ்கரன் அமர
தெற்குத் திசைநல் தென்றலும் தவழ, (5)

அமர்ந்தனள் அங்கே ஆசனம் ஒன்றில்
“எவருமே இங்கிலை ஆண்டவ” என்று
நன்றிகள் இறைக்கு நவின்றே அவளிடம்,
சென்றேன் மெள்ள; செத்தது என்நா, (6)

நின்று மயங்கினேன், தயங்கித் தயங்கியே
பின்பு மெள்ள பகர்வா யுன்பெயர்,
என்று யானும் வினவிய உடனே,
“இன்றோர் கூத்தினில் நடிக்கிறேன் யானும், (7)

ஒப்பனை எப்படி” என்றென் தோழன்
“செப்புவாய்” என்றே கேட்டனன்! அந்தோ
கனவா நனவா என்னஏ மாற்றம்!
மனதால் தொடுத்ததிம் மடுக்கரை நாடகம். (8)



# எத்தனை பிறவி எடுத்தாலும்

'தூன்'

கலியாணி கல்யாணம் செய்து கொண்டு விட்டாள் என்பதைக் கேட்ட மேலநல்லூர், ஊரிலே பூகம்பம் வந்தது போல் அசங்கிப் போயிற்று.

கலியாணி இதுவரை ஏன் மணம் செய்துகொள்ளவில்லை என்று, அவள் இழந்த சுகங்களைத் தாம் இழந்தது போல, அந்த ஊர் பாட்டிகளும், மாணவிகளும், கன்னியரும் பேசிக் கொண்டிருந்தது போக நாற்பது வயதில் ஒரு நாயகனை அவள் தேடிக்கொண்டு ஊருக்கு வந்ததும், ஊரார் அதற்காகச் சந்தோஷப்படாமல், ஏன் இவள் இப்படி மணந்து கொண்டாள் என்ற கேள்விக்குறி மாலையை மனதில் தரித்துக் கொண்டனர்.

கண்டதும் காதல்படக் கூடிய அழகு படைத்தவள்தான் கலியாணி அவள் யுவதியாக இருக்கையில் நடு வெயிலில் நடந்து சென்றாலும் கீழே நிழல் விழாத ஒளியழகு படைத்தவள் என்று ஊரில் பேசிக் கொண்டனர். படிப்புக்கும் குறை வில்லை, சொத்துக்கும் பஞ்சமில்லை. பெண்ணுக்கு மணம் செய்து கொள்ள இன்னம் மனம் வரவில்லையே என்று வாடியே பெற்றோர் பரமபதம் ஏகினர். அவள் அண்ணு சுந்தரராமன் பம்பாயில் பெரிய வேலையில் இருந்தான். கலியாணிக்கும் மணம் வேண்டாம் என்று சொல்லக்கூடிய உடற் கூறு பங்கமோ குறைபாடோ இல்லை. காதல் கதைகள் படித்தால் கட்டங்களை மிகவும் ரசிப்பாள். சினிமாவில் காதல் கட்டங்கள் வந்தால்தான் அவளுக்குப் பிடிக்கும்.

பிறகு ஏன் கல்யாணி கல்யாணம் செய்து கொள்ள வில்லை என்பது ஊரார் பிரச்னையாக இருந்து வந்தது. இப்போது, ஏன் பண்ணிக் கொண்டாள், அப்படித்தான் செய்து கொண்டாளே ரக்ஷா பந்துவை ஏன் பார்த்து பிடித்தாள் என்பது பிரச்னையாகி விட்டது.

திருமணம் செய்து கொண்டுவந்த தம்பதிகள் ஊரில் எல்லாவீட்டுக்கும் சென்று பெரியோர்களை வணங்கி ஆசி பெற்று வந்தனர். ஆனல் கலியாணியை 'ஏண்டி, இப்படி கலியாணம் செய்துகொண்டு வந்தாய்' என்று கேட்க ஒருவருக்கும் தைரியம் வரவில்லை, அவள் பணக்காரி, துடுக்குக்காரி, அவள் தயவு எல்லாருக்கும் வேண்டும்.

அவள் படித்தவள், வேலைக்குப் போகவில்லை, வீட்டில் சமைத்துச் சாப்பிட்ட நேரம் போக ஏதோ படித்துக் கொண்டிருப்பாள், ஊராருக்கு அவளிடம் ஒரு பயம் மரியாதை இரண்டும் இருந்தன.

புது தம்பதிகள் சந்தோஷமாகத் தான் காணப்பட்டனர், அடிக்கடி இருவரும் வீட்டு வண்டியைக் கட்டிக்கொண்டு பார்வதிபுரம் போய், படம் பார்த்துவிட்டு வருவார்கள். வரும்போது பட்சணங்கள் வாங்கி வருவார்கள். வாசலில் கோலம் போட வந்தாலும், தெருக் குளத்தில் குளிக்க வந்தாலும், புதுமணப் புத்தழகு கலியாணியின் முகத்தில் சுவலிக்கும். தாலிக்கு அவள் மரியாதையுடன் மஞ்சள் பூசும் அழகை குளத்தில் குளிக்கும் இதரப் பெண்கள் வீட்டில் போய் அத்தியாயம் அத்தியாயமாய் அரட்டை அடிப்பார்கள்.

ஒரு மாதமாகியும் ஊரார் ஆச்சரியத்தின் வீரியம் அடங்கியபாடில்லை, ஆனாலும் கலியாணியை ஏன் இவனைக் கொண்டாய் என்று கேட்கவும் தைரியம் பிறக்கவில்லை,

கலியாணிக்கு ஊரார் சாடையாகப் பேசிக்கொள்வதிலிருந்து அவர்களுடைய மனதில் உறுத்திக்கொண்டிருப்பது என்ன என்று புரியவாரம்பித்தது.

தாய் தகப்பனில்லாது தனியாக மேலநல்லூரில் வாழும் பணக்காரப் பெண் ஒருத்தி முன்பின் தெரியாத, தன்னைவிட ஐந்துவயது இளையவன் ஒருவனை மணந்துகொண்டு வந்தால் யார்தான் ஊரில் இதைப்பற்றிச் சிந்திக்காமல் இருக்க முடியும்—அதுவும் கலியாணியின் கணவன் கட்டமுகன் அல்ல, காசுக்காரனும் அல்ல என்பதை ஊரார் புரிந்துகொண்ட பிறகு! கல்வியிலும் அவன் கலியாணிக்கு இரண்டுபடிக் குறைவே.

ஆணும் பெண்ணும் சரி நிகர் சமானம், இல்லை ஆணுக்குப் பெண் மேல் என்கிற இந்த யுகத்தில்கூட, தன்னைவிடத் தன் கணவன் எந்த விதத்திலும் உயர்வாகத்தான் இருக்கவேண்டும் என்று, நவீனப் பெண்கள் எண்ணுவதை கலியாணி தகர்த்தெரிந்து, பெண் தன்னைவிட எதிலும் தாழ்ந்தவரைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று முதல் எடுத்துக்காட்டாக விளங்க இப்படிச் செய்தாளோ என்று அறுவடையை வயலில் மேற்பார்வை செய்துகொண்டிருந்த ஆதிபூதமும் சோதிகாந்தமும் பேசிக்கொண்டிருந்ததாக அவள் காதில் விழுந்தது. அவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள். "என்ன கலி, சிரித்துக் கொள்கிறாய்" என்று கலியாணியின் கணவன் ரக்ஷாபந்து கேட்டான்.

"உங்களை நான் எப்படிக் கலியாணம் செய்துகொண்டேன், ஏன் வரித்தேன் என்று ஊரார் கவலைப் படுகிறார்கள். அவர்களுக்குப் புரியப் பண்ணுவது எப்படி என்று எனக்குக் கவலை."

"இந்த ஜன்மத்தின் கலியாணத்தைப்பற்றியா அல்லது போன ஜன்மத்தின் கலியாணத்தைப் பற்றியா?" என்று அவன் கேட்டான்.

"போனஜன்மத்தில் நான் உங்கள் மனைவி என்பது நினைவிருக்கிறதே தவிர போன ஜன்மத்தில் எப்படி நீங்களும் நானும் கூடினேம் என்பது எனக்கு இன்னும் நினைவு வரவில்லை, உங்களுக்குத்தான் போன ஜன்ம நினைவு கொஞ்சங்கூட இல்லை. ஏன் நேத்திக்கு நான் சொன்னது இன்னைக்கு மறந்து போகிறது" என்று செல்வமாகக் கூறினள் கலியாணி. ரக்ஷாபந்துவின் மீது தலையைச் சாய்த்து—

கொண்டைமீதிருந்த மல்லிகை வேணி ரக்ஷாபந்துவை இந்த உலகத்தை அப்படியே மறக்கச் செய்து நட்சத்திர தளவரிசையிட்டு பூப்பந்தல் போட்ட, அப்பாலுக்கும் அப்பால் உள்ள உலகில் சஞ்சரிக்கும் கனவை ஊட்டியது.

ரக்ஷாபந்துவுக்குப் போன ஜன்மம், அடுத்த ஜன்மம், ஆத்மா வேறு உடம்பெடுத்தல் இதில் எல்லாம் நம்பிக்கை கிடையாது. இந்த ஜன்மத்தில் எப்படியாவது சுகமாக இருந்தால் போதும். செல்வம், அழகிய மனைவி இத்தியாதி சுகங்களுடன்.

"இப்படியேதான் போன ஜன்மத்திலும் நீங்கள் இருந்தீர்கள்" என்று கலியாணி அடிக்கடி அவனிடம் கூறுவாள்.

"இப்படியே எனக்கு ஜன்மம் என்று ஒன்று உண்டானல் ஏழேழு ஜன்மம் எடுத்தாலும் நல்ல அழகுள்ள மனைவியும், திரவியமும் கிடைத்தால் போதும். அதைவிட என்ன வேண்டும்", என்று ரக்ஷாபந்து கூறுவான்.

"நல்ல அழகிவேண்டும் என்கிறீர்களே தவிர நானே வேண்டும்என்று என்னையே அடைய நீங்கள் முயலுவதில்லை. அப்படி முயன்றல் எனக்கு உங்களை ஒவ்வொரு ஜன்மத்திலும் தேடிப் பிடிப்பது எவ்வளவு சுலபமாக இருக்கும்?" என்பாள் கலியாணி கொஞ்சலாக.

கலியாணி ஒவ்வொரு ஜன்மத்திலும் இவரையே கணவனக அடைய வேண்டும் என்று தினம், எந்த மதத்தில் அவதரித்தாலும் அந்தத் தெய்வத்தைவேண்டிக்கொள்வாள்: தினந்தோறும் இந்த ஜன்மத்தில் வேண்டிக்கொள்கிருள், போன ஜன்மத்தில் அப்படியே வேண்டிக் கொண்டாள்.

ரக்ஷாபந்து கடந்த ஜன்மத்தில் அப்படி ஒன்றும் பெரிய புண்ணியங்கள் செய்து விடவில்லை, பாபம் செய்யாமலுமில்லை. ஆகையால் மாடாய், பறவையாய், புழுவாய் கணவன் பிறந்தாலும் தானும் மாடாய், பறவையாய், புழுவாய் பிறந்து அவன் ஒருவனையே புணர்தல் வேண்டும் என்றே அவள் பிரார்த்தனை செய்தாள்.

With the best compliments from:

I. C. I. (India) PRIVATE LTD.,

NEW DELHI

you're cooler with a **Rallifan**



**M/s. RALLIS INDIA LIMITED**

1. HANUMAN ROAD, ★ NEW DELHI-1

இந்த ஜன்மாவில் கலியாணிக்கு நாற்பது வயது வரையினும் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற சிந்தையே இல்லாத காரணம் அவளுக்கு அவளுடைய உள்ளத்தில் காதல் நாதத்தை மீட்கக் கூடிய, கடந்த ஜன்ம கணவனின் இந்த ஜன்ம உருவத் தரிசனம் கிடைக்காமல் இருந்ததே காரணம்! அவள் மனம் மட்டும் கெட்டுப் போன எதையோ தேடுவது போன்று அல்லல் பட்டுக் கொண்டிருக்கும்.

கடந்த ஆண்டு அவள் திருமூலக் குடித் திருவிழாவிற்குப் போயிருந்தாள், அம்பாள் சன்னதியில் அவள் நமஸ்காரம் செய்து எழுந்தாள். அவள் முன் நின்று கொண்டிருந்தான் ஒருவன். தேடிக் கொண்டிருந்த பொருள் தென்பட்டுவிட்ட உள்ளவெழுச்சி கலியாணிக்கு ஏற்பட்டது.

இவனைத்தான் அவள் நாற்பது ஆண்டுகளாகத் தேடி வந்திருக்கிறாள் அவள். நினைவின் திரை விலகியது.

போன ஜன்மத்தில் ரக்ஷாபந்து வேலவந்தானில் வீரப்பனாக இருந்தான், அவள் சின்னக்கண்ணுவாக இருந்தாள், அவன் கலப்பையை தோளில் போட்டுக் கொண்டு வயலுக்குப் போகும் அழகு கலியாணியின் கண் முன் நின்றது. வீரப்பன் சின்னக்கண்ணுவை, அவளுடைய மூன்று ஏகர் நிலம், அழகு இவைகளுக்காகத்தான் மணம் செய்து கொண்டான். கிடைத்த மூன்று ஏகராநிலத்தை பயிரிட்டு பாடுபட்டு நன்கு வாழ்ந்தான். அப்போதும் அவனுக்கு போன ஜன்மம், புனர் ஜன்மம் போன்ற பேச்சுகளே பிடிக்காது. உண்டு, உடுத்து, குலவி வாழ்ந்து கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்ற தத்துவம் அவனுடைய சித்தாந்தம்.

"உங்களையே எத்தினை சன்மம் எடுத்தாலும் கட்டிக்கணும் என்கறதே என் ஆசை" என்பாள் சின்னக் கண்ணு.

"அடே செய்! இப்ப ஒண்ணு குடுன்னு, அடுத்த சன்மம், போன சன்மம் என்கிறுயே" என்பான், அவளை ஆர்வத்துடன் அணைந்து வீரப்பன்.

அந்த சன்மத்தில் சின்னக் கண்ணு இறந்து போய் ஐந்து ஆண்டுகள் கழித்து வீரப்பன் செத்துப் போனுன்.

"என்னை விட்டு எங்கு ஓடுகிறீர்கள் உங்களைத் தேடித்தானே அலைகிறேன்" என்றுள் கலியாணி, பிராகாரத்தில் ரக்ஷாபந்துவை தொடர்ந்து சென்று.

அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். கண் கொள்ளா அழகு கொண்ட—ஆனால் நடு வயதான—மாது ஒருத்தி அன்பு சொட்டும் கண்களால் தன்னை நோக்குவதைக் கண்டான்.

"என்ன சொல்லுகிறீர்கள்?"

"போன ஜன்மாவில் நீங்கள் என் புருஷன். இந்த ஜன்மாவில் உங்களை அடையவேண்டும் என்று இதுவரை தவம் செய்து வந்திருக்கிறேன்"

அவன் முகம், அசடு தட்டியது. அவன் முப்பத்தியைந்து வயது வரை சம்பாத்தியம் போதாது என்று மணம் செய்து கொள்ளாமல் இருந்தவன். இப்படி திடீரென்று பணக்காரிபோல் தோன்றும் ஒருத்தி அவனை வழிமடக்கிப் பேசினுல் அவளுக்கு மூளைக் கோளாறோ என்ற பயம் தான் வந்தது அவனுக்கு!

"போன ஜன்மத்தில் வேலவந்தான் குடியானத் தெருவில் நாம் இருந்த வீட்டைக் காட்டுகிறேன் வாருங்கள். வீட்டு வாசலில் பூவரச மரம் இடது புறம், வலது புறம் முருங்கை மரம். நீங்கள் வைத்திருந்த மாட்டு ஜோடியில் ஒன்றுக்கு ஒரு கொம்பு கிடையாது."

அவனுக்கு ஜன்மாந்திரங்களில் நம்பிக்கை யில்லாவிலும் தனக்கு ஒரு நாளைக்கு சுக்கிர தசை அடிக்கப் போகிறது என்று ஜோஸ்யர் சொல்லி யிருந்ததில் இத்தனை நாள் ஏற்படாத நம்பிக்கை ஒன்று இப்போது திடீரென்று ஏற்பட்டது!

இவள் உண்மையில் பயித்தியம் இல்லை என்று தீர்மானம் செய்து கொண்டு விட்டான். இவளை ஏற்பதில் அழகு, பொருள் இரண்டும் கிடைக்கும், இந்த உபத்திரவமான பிரம்மச்சாரி வாழ்வும் தொலையும் என்று ரக்ஷாபந்து கணக்கிட்டான்.

"இங்கே, வா: அம்மா இப்படி உட்காருங்கள்" என்று மரியாதை, மரியாதை இல்லாத சொற்கள் இரண்டையும் கலந்து பிரயோகித்தான்.

"இப்படி வந்து உட்காரு, அப்படின்னு சொல்லுங்கள்" என்று திருத்தினுள் கலியாணி.

இருவரும் பிராகாரத்தில் ஒரு ஓரமாக உட்கார்ந்தனர். திருமூலக்குடிக்கு இருவருமே புதிதாகையால் பிராகாரத்தில் போனவர்கள் இவர்கள் தம்பதிகள் என்று அவர்கள் மனதில் திருமணம் செய்து வைத்துவிட்டு போய்விட்டனர்.

கலியாணி அப்படி ஒன்றும் டைத்தியமில்லை: வெகு நாள் கன்னியாக இருந்து விட்ட கோளாறு. கலியாணமானுல் சரியாகிவிடும் என்ற தீர்மானத்துக்கு ரக்ஷாபந்து வந்தான். பிராகார சம்பாஷணையின் சுற்றி வளைத்த சல்லாபத்தில் அவளுடைய நீடித்த கன்னிப்பருவக் கோளாறை—அவன் மணந்து மாற்றிவிடும் புண்ணியத்தைக் கட்டிக் கொள்வதுடன், கொஞ்சம் சொத்தையும் சுகத்தையும் அனுபவிக்கலாமே என்ற சபலம் அவனைப் போல கொள்கை படைத்தவனுக்கு ஏற்பட்டது ஆச்சர்யமில்லை!

" கலியாணத்தை இரகசியமாக உங்கள் ஊரிலும் இல்லாமல் என் ஊரிலும் இல்லாமல் வேறு எந்த ஊரிலாவது செய்து கொள்ள வேண்டும்" என்றான் ரக்ஷாபந்து ஊரார் திருமணத்தை நாறவடித்து விட்டால் என்ன செய்வது என்ற பயம் அவனுக்கு.

"உங்கள் சொல் தவற மாட்டேன்" என்றாள் கலியாணி.

திருமணம் நடந்த ஒரு மாதத்துக்கெல்லாம் ரக்ஷாடந்து ரகசியமாக வேலவந்தான் சென்று கலியாணி கூறிய த்ங்கள் பூர்வசன்ம விவரங்களைப் பற்றி உளவறிந்தான், அவள் சொன்னவை யானவும் உண்மையாகப்பட்டது.

" தான் வீரப்பனாக இருந்திருக்க முடியும் என்று ஒப்ப அவன் மனம் இடங் கொடுக்கவில்லை. ஆனால் கலப்பை மாடு பூவரச, முருங்கை மரம் விவரங்கள் கணக்காக இருப்பதையும் மறுக்க முடியவில்லை.

" எப்படி இருந்தால் என்ன ஒவ்வொரு சன்மத்தில் இப்படி மனைவியும், சொத்தும் கிடைத்தால் போதாதா? கொஞ்சம் அவளுக்கு வயது கூட இருந்தால் என்ன? இப்படி நல்ல பெண்ணும் சொத்தும் கிடைக்கும் என்பதற்காக ஜென்மம் எடுப்பதில் நம்பிக்கை வைத்தால் போச்சுது, என்ன மோசவாகிவிடும்" என்ற முடிவுக்கு வந்தான் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றிருக்கும் இந்த ஞானி ரக்ஷாபந்து.

★

WITH BEST COMPLIMENTS FROM

**THE PREMIER AUTOMOBILES LIMITED**

**BOMBAY**

★

*Manufacturers of:*

**Dodge, Plymouth and Fiat Cars**

**Dodge and Fargo Trucks**

PREMAIR AND AIRTEMP ROOM AIRCONDITIONERS

# என்னைக் கவர்ந்த கல்கி

**கி. கஸ்தூரி ரங்கன்**

கல்கி என்ன எழுதினார் என்று கேட்பதை விட எதை எழுதாமல் விட்டார் என்று கேட்பதே பொருத்தம். சரித்திர நாவல்கள் முதல் சினிமா விமர்சனம்வரை கல்கி எழுதினார். நயம்பட, சுவைபட, கனிமையுடன் பழகு தமிழில் எழுதினார். அவர் எழுதிய ஒவ்வொரு நாவலும், ஒவ்வொரு கதையும், ஒவ்வொரு கட்டுரையும், நெஞ்சை அள்ளும் படைப்புகள்.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது; கல்கியுடன் எனக்குக் கிட்டிய முதல் அனுபவம்.

மற்ற சராசரித் தமிழ் வாசகர்களைப் போலவே நானும் எட்டு வயது முதல் தமிழ் படிக்க ஆரம்பித்துவிட்டேன். அப்போது வடுவூராரும் ஆரணியாரும் இங்கிலீஷ் துப்பறியும் கதைகளை தமிழாக்கிப் பரப்பிக்கொண்டிருந்த காலம். அவர்களுடைய நாவல்களை சென்னை லைப்ரரிகளில் தேடிப் பிடித்துப் படிப்பது என் பொழுதுபோக்காக இருந்தது. இனி ஏதும் பாக்கியில்லை என்ற சமயத்தில்தான் கல்கியின் அறிமுகம் எனக்குக் கிட்டியது. கல்கிப் பத்திரிகையில் சிவகாமியின் சபதம் தொடங்கியது. முதன்முதலாகப் பத்திரிகையில் தொடர் கதை படிக்க ஆரம்பித்தது அப்போதுதான்.

துப்பறியும் நாவலாசிரியர்களுடன் கல்கியை ஒப்பிடும்நோக்கம் எனக்கு இல்லை. இங்கே கல்கியின் எழுத்து தமிழ் நாட்டில் தோன்றி வளர்ந்த காலத்தையும், இளம் வாசகனின் மனதில் கல்கியின் முதல் பரிச்சயம் எத்தகைய மாற்றத்தையும், உணர்வையும் ஏற்படுத்துகிறது என்பதையும் எடுத்துக்காட்டவே இதைக் குறிப்பிடுகிறேன்.

ஏன்! கல்கி எழுதிக்கொண்டிருந்த காலம்வரை மற்ற எந்த நாவலாசிரியரும், சிறு கதை எழுத்தாளரும் என் கவனத்தை ஈர்க்கவில்லை. என்னைப்போல் இன்றும் பல நூறு வாசகர்களை கல்கி தன் எழுத்து மூலம் வசியப் படுத்தி வைத்திருக்கிறார் அல்லவா?

கல்கியின் கதா பாத்திரங்கள் ஒவ்வொரு வாசகனின் உள்ளத்திலும் ஏறி நடமாடும் சக்தி பெற்றவை. கல்கியைப் போல் பாத்திரத்துக்கு உயிர் கொடுக்கும் சக்தி எத்தனை எழுத்தாளர்களுக்கு இருக்கிறது?

ஆண்டுகள் பலவாகியும் அன்று படித்தபோது தோன்றிய உணர்வு களை, இன்றும் கல்கியின் படைப்பு கள், வாசகன் உள்ளத்தில்தோற்று விக்கின்றன. சிவகாமியும் நாகநந்தி யும், நரசிம்ம பல்லவனும், வந்தியத் தேவனும், சாதாரண படைப்புகள் அல்லவே!

கல்கியின் வெற்றி வெறும் சரித் திராசிரியர் என்ற வகையில் மட்டு மல்ல, அவருடைய 'அலை ஓசை' வசனத்தில் எழுதப்பட்ட பெருங் காவியம்; சீதாவும் ராகவனும் உயிர்த்துடிப்புள்ள படைப்புகளே. இன்னும் கல்கி சினிமா விமரிசனம் எழுதினர்; அரசியல் கட்டுரைகள் எழுதினர். அவை ஒவ்வொன்றும் பிறர் பின்பற்றி எழுதத் தூண்டும் தன்மை பெற்றவை. இப்போது தமிழில் பல விதங்களில் சரளமான நடையில் எழுதப்படும் கட்டுரைக ளுக்கு கல்கியின் படைப்புகள் முன்னேடியாக இருந்தன.

கல்கி மேனுட்டு இலக்கிய உத்தி களைத் தமிழில் கையாண்டார். (இதைத்தான் காப்பியடித்தார் என்று சில விமர்சகர்கள் சொல்கி ருர்களோ! என்னய்யா? அப்படிப் பார்க்கப் போனல் இந்த விமர்சகர் களும் மேனுட்டு விமர்சன உத்தி யைத்தான் பின்பற்றுகிருர்கள், ஏனைய இவர்களும் 'காப்பி' என்ற பழிக்கு ஆளாக வேண்டியதுதான்)

தமிழில் நாவலும் சிறுகதையும் சிறு முளையாகச் சிரமப்பட்டு எழுந்து வளர்ந்த போது கல்கி அவற்றை ஊட்டமும் செழிப்பும் உள்ள விருட்சமாக வளர்த்து விட்டார். கல்கியால் தான் தமிழ்க் குடும்பங்களில் தமிழ் தழைத்தது.

எடுத்தவுடனேயே படிக்கத் தூண்டி முடிக்கும் வரை சுவை குன்ருமல் வாசகனின் கவனத்தை ஈர்க்கும் வகையில் எழுதுவது கல்கி கையாண்ட தனிப்பட்ட உத்தி. இது எல்லா எழுத்தாளருக்கும் கைவருவதில்லை. இன்று விமர்சனக் கழுகுகள் சிறந்த படைப்பாளராகப் போற்றும் பெரும்பாலான கதாசிரி யர்களின் படைப்புகளில் இந்த அம்சம் ஓரளவுக்குக் கூட இல்லை. கல்கி இந்த உத்தியைத் திறமை யுடன் ஆண்டதுமின்றி, அவரைப் பின்பற்றும் எழுத்தாளர்களுக்கு எளிதில் கைவரும் வண்ணம் அதை உருவாக்கி வைத்தார். அதனுல்தான் படிப்பவர்களைக் கவரும் வகை யில் எழுதும் எழுத்தாளர்கள் பெருகி அவர்களின் படைப்புக்களை ஆர்வத்துடன் படிக்கும் வாசகர் களும் பெருகி வருகிருர்கள்.

பாட்டுக்கு ஒரு பாரதி என்ருல், வசனத்துக்கு கல்கிதான். அவருக் கும் அவருடைய வாசகருக்கும் உள்ள தொடர்பு வெறும் இலக்கிய உறவு மட்டுமல்ல, வாசகனை மகிழ்ச்சியிலாழ்த்தி, சோகத்தில் தள்ளி, பரவசப்படுத்தி, சிலிர்க்க வைத்து அவனைப் பல்வேறு உணர்ச்சி கட்டங்களில் செலுத்தும் திறமை உள்ள கல்கி ஒவ்வொரு வாசகனுக்கும் ஒரு வாழ்க்கை அனுபவம்!

★

# ஜரூரத் ஹை

ஏ. வி. குப்புஸ்வாமி

ஜரூரத், என்பது ஹிந்துஸ்தானி பதம். "அவசியம்", என்பது அதன் பொருள். 'ஜரூரத் ஹை', என்ற இருபதத் தொடருக்கு 'அவசியம் இருக்கிறது', அவசியம்தான் என்பது அர்த்தம். 'ஜரூரத் ஹை' என்ற வாக்கியம் முற்றுப்புள்ளியுடன் முடிந்தால் அவசியம் தான் என்ற பொருள் தருகிறது. ஆனால் முற்றுப்புள்ளிக்குப் பதிலாகக் கேள்விக்குறியில் முடிந்தால் 'அவசியம் இருக்கிறதா?" "அவசியம் இல்லை போல் தோன்றுகிறதே"! என்ற பதில்களை அதே தொடர் உணர்த்துகிறது.

1946இல் பிரிட்டிஷ் காபினெட் மிஷன் தில்லிக்கு விஜயம் செய்து, தேசியத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருந்த சமயம். அதற்காகக் காந்தியடிகள் தில்லிக்கு வந்திருந்தார்கள். ரீடிங் ரோட் அருகில் இருந்த ஹரிஜனக்காலனியில் காந்தியடிகள் தங்குவதற்கு வசதிகள் செய்யப்பட்டிருந்தன.

தில்லித் தமிழ்ச் சங்கம் துவங்கி அப்போது சில மாதங்களேயாயிருந்தன. சங்கத்தின் அலுவலகத்திற்கு என்று ஓர் கட்டடம் உதவ வேண்டும் என்று தில்லி அரசாங்கத்திற்கு மனு செய்து கொண்டிருந்தோம். மிகுந்த முயற்சிகளின் பயனாக, புது தில்லியின் முக்கியப் பகுதியான கன்னாட் வட்டத்தில் ஒரு சிறு கட்டடத்தைச் சங்கத்திற்கு வாடகைக்கு அளிக்கும்படி சர்க்கார் அன்புடன் உத்தரவு அனுப்பினார்கள். ஆண்டுக்கு வாடகை ரூபாய் ஒன்று மட்டுமே தரவேண்டும்.

மையமான ஓரிடத்தில் இடம் கிடைத்ததும், அதில் காலஞ்சென்ற தேசபக்தர் சத்தியமூர்த்தி அவர்களின் நினைவாக ஓர் இலவச வாசகசாலையும் புத்தகாலயமும் துவக்க வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டது.

சங்கத்தின் முதல் காரியதரிசியாக நான் அச்சமயம் பணியாற்றி வந்தேன். சத்தியமூர்த்தி அவர்களின் நினைவாக ஆரம்பிக்கும் வாசகசாலையைக் காந்தியடிகள் திறந்து வைக்க இசைவாரென்றால் அது எவ்வளவு சிறப்பாக அமையும் என்று நான் எண்ணினேன். இந்த

யோசனையை ஏற்றுக்கொண்ட சங்கத்தின் நிர்வாகக் கமிட்டியாரும், காந்தியடிகளைப் பார்த்து இந்த விண்ணப்பத்தை அவரிடம் சமர்ப்பித்துக் கொள்ள என்னையே பணித்து விட்டார்கள்.

அரசியல் பேச்சு வார்த்தைகள் தீவிரமாக நடைபெற்று வந்த அந்த சமயத்தில் காந்தியடிகளுக்கு அவகாசம் கிடைப்பது அருமையாயிருந்தது. சுமார் பத்து நாட்கள் தினமும் முயன்றும் அவரது காரியதரிசிகள் அவருடன் ஓரிரு நிமிஷ நேரப் பேட்டியும் தருவதற்கு இசையவில்லை. இருப்பினும், அந்நாள் சங்கத் தலைவர் திரு. சுப்பிரமண்யன் அவர்கள் முயற்சியின்பேரில் ஒரு நாள் அடிகளுடன் பேசுவதற்கு எங்களுக்கு ஒரு சில நிமிஷங்கள் கிடைத்தன.

"தாங்கள் வந்திருந்து சத்திய மூர்த்தி நினைவு இலவச வாசகசாலையைத் திறந்து வைக்க வேண்டும்", என்று கேட்டுக்கொண்டதற்கு காந்திஜீ 'ஜரூரத் ஹை' என்று மறுமொழியளித்தார். அதற்குப் பதில் கூறுவதற்கு நா எழும் முன்னர் அந்த அறைக்குள்ளே, ஸர்தார் படேல், மௌலானா ஆஸாத் முதலிய தலைவர்கள் வந்து காந்தியடிகளுடன் பேச்சு ஆரம்பித்து விட்டனர்.

காந்தியடிகள் அளித்த 'ஜரூரத் ஹை,' என்ற பதிலுக்குப் பின்னர் முற்றுப்புள்ளி துவனிக்கிறதா அல்

"UNICHEM LABORATORIES LTD.,

A TRUSTED NAME IN PHARMACEUTICALS.

UNICHEM LABORATORIES LTD.

BOMBAY-60.

லது கேள்விக்குறி துவனிக்கிறதா என்ற ஐயம் தீருவதற்குமுன் தலைவர்களுடன் சம்பாஷணை குறுக்கிடவே மேற்கொண்டு விஷயத்தை அடிகளிடம் விண்ணப்பித்துக்கொள்ள அவகாசம் அன்று அமையவில்லை.

முற்றுப்புள்ளியென்றால்--மிகவும் அவசியமான பணிதான், நான் வந்து பங்குகொள்வதும் அவசியம்-என்று காந்தியடிகள் இதுபற்றி கருதுகிறார் என்று கொள்ளலாம்; ஆனால் வினாக்குறியுடன் மறுமொழி முடிந்திருந்தால் இச்சமயத்தில் திறப்பு விழாவிற்காக நான் வரவேண்டியது அவசியம் தானா, வேறு ஏற்பாடு செய்துகொள்ளக் கூடாதா, என்ற குறிப்பு அம்மறுமொழியில் அமைகிறது. முற்றுப்புள்ளியா, கேள்விக் குறியா என்ற சந்தேகத்தை காந்தியடிகளிடமிருந்துதான் நாம் தீர்த்துக்கொள்ள முடியும். ஆனால் "இதற்கென அடிகளை மற்றுமொரு முறை சென்று தொந்திரவு செய்ய வேண்டியதில்லை" என்று தலைவர் திரு. சுப்பிரமண்யன் சொல்லிவிட்டார்.

காந்தியடிகளால் திறக்கப் படவேண்டும் என்று ஆர்வப்பட்ட மனம், அடுத்தபடியாக வேறு எவரையும் தேடுவதற்கு இசையவில்லை. ஆதலால், காந்தியடிகளின் திரு உருவப்படத்தை வைத்துப் பூமாலையிட்டு, ஓர் நன்னாளில் சத்தியமூர்த்தி நினைவு வாசக சாலையை ஆரம்பம் செய்தோம்.

தேசபக்தர் சத்தியமூர்த்தியவர்களின் ஞாபகச் சின்னமாக தில்லித் தலைநகரிலே திகழ்ந்து வரும் இந்த இலவச வாசகசாலை, சென்ற இருபது ஆண்டுகளாகச் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றது. தமிழர், தமிழரல்லாதார் தினமும் ஐம்பது, அறுபது பேருக்குக் குறையாமல் இந்த வாசகசாலைக்கு வந்து, பத்திரிகைகள், சஞ்சிகைகள் முதலியவைகளைப் படித்துப் பயன் துய்த்து வருகிறார்கள். ★

### மத்தாப்பு

மத்தாப்பூவா, அல்லது மத்தாப்புவா? இந்தச் சந்தேகம் பலருக்கு உண்டாகிறது. சிவப்புப்பூப்போலவும், பச்சைப் பூப்போலவும், சிறிய சிறிய சுடர்ப்பூப் போலவும் மத்தாப்புக்களைக் குழந்தைகள் கொளுத்திக் களிக்கிறார்கள். சிவப்பு மத்தாப்பு, பச்சைமத்தாப்பு, பூமத்தாப்பு என்று மூன்றுவகை மத்தாப்புக்களைப் பார்க்கிறோம். ஆமாம்! மத்தாப்பு என்றால் பொருள் என்ன?

மத்தாப்பு என்பதுதான் சரியான சொல் 'மஹதாப்' என்று ஹிந்தியில் வழங்குகிறார்கள். மஹதாப் என்ற சொல்லுக்கு ஒளி என்று பொருள். ஒளி கொடுப்பதினால் தீபாவளி மத்தாப்பையும் மஹதாப் என்று சொல்கிறார்கள். அதுவே மத்தாப்பு என்று தமிழில் வந்துவிட்டது

எஸ். ஸ்ரீனிவாஸன்

# ?

பூர்ணம் விசுவநாதன்

(பலவீனமான இதயமுள்ளவர்கள் இதைப் படிக்காமலிருப்பது நல்லது.)

"அதோ, அந்தப் புதருக்கிடையில் அது என்ன?"

எங்களில் ஒருவன் அடித்தொண்டையில் பேசிக்கொண்டு தெருவுக்கப்பால் கையைக் காட்டினான். நாங்கள் திகிலுடன் பார்த்தோம். எதிரே, தெருவின் அந்தப் பக்கமிருந்த பாழ் மைதானத்தில், இரண்டு புதர்களுக்கிடையே வெள்ளையாக ஏதோ தெரிந்தது. திகைப்புடன் உற்றுப் பார்த்த எங்களுக்கு அந்த வெள்ளை உருவம் லேசாக நகர்ந்ததும் தெரியவே விழி பிதுங்க நின்றுவிட்டோம். எவனோ ஒருத்தன் புதர்வழியே நகர்ந்து கொண்டிருந்தான் என்பது நிச்சயப்பட்டு விட்டது. அது நிச்சயப்படுவதற்காகவே காத்திருந்ததுபோல் அந்த மைதானத்தின் பல இடங்களில் வெள்ளை வெள்ளையாக ஆட்கள் நகருவது தெரிந்தது. எங்கள் இதயமே உறைந்து போயிற்று. நிச்சயமாய் எங்கள் காலனியைத் தாக்குவதற்கு ஏகப்பட்டபேர் திரண்டுவந்து அந்த மைதானத்தில் அங்கங்கே மறைந்து கொண்டிருந்தார்கள் என்பது தெரிந்தபோது எங்கள் மனம் பட்டபாடு!

* * *

1947 செப்டெம்பர் தில்லி நகரம் முழுவதையும் திகில் பிடித்து ஆட்டிக்கொண்டிருந்த சமயம் அது. ஹிந்து முஸ்லிம் கலகங்கள் நகரையே உலுக்கி உருக்குலைத்துப் போட்டுவிட்டன. எங்கு பார்த்தாலும் ஒரே பதற்றமாயிருந்தது. பகலிலேயே எல்லோரும் நடுக்கத்தோடுதான் அலுவலகங்களுக்குப் போய் வருவார்கள் என்றால் இரவில் கேட்கவே வேண்டாம். இருட்டுவதற்குள் தத்தம் வீடுகளுக்குத் திரும்பி வந்துவிடுவார்கள். முன் கதவையும் பின்கதவையும் இறுக மூடித் தாழிட்டு விடுவதுடன், வீட்டுக்குள்ளேயும் எல்லோரும் சேர்ந்தே இருப்பார்கள். விளக்குகளை அணைத்து

விட்டுப் படுத்தாலோ, வெளியிலிருந்து விசித்திரமான சத்தங்கள் கேட்பது போலத் தோன்றும். நெடுந்தூரத்தில் ஏதாவது லாரி சென்றுல்,ஏகப்பட்ட கலக்காரர்கள் ஒரேயடியாக கோஷம் செய்துகொண்டு எங்கள் வீடுகளைத் தாக்க வருவதுபோல எண்ணிக் கலவரப்படுவோம் நகரின் பற்பலபகுதிகளில் நடந்தது, நடக்காதது, நடக்கப்போவதுஎல்லாவற்றையும்பற்றி பகலில் ஏராளமான வதந்திகளைக் காதில் ஏற்றிக்கொண்டு வந்து படுத்தால் தூக்கம் ஒழுங்காக வந்துவிடுமா? கேட்ட வதந்திகளின் தொடர்ச்சியாக விழிப்புதான் நம்மை வாட்டிக் கொண்டிருக்கும். யார் வீட்டிலாவது படாரென்று கதவைச் சாத்திஞல் இங்கே நமக்குத் தூக்கி வாரிட்போடும். விளக்குகளை அணைத்தபின் எங்கேயாவது காற்றில் ஒரு சிறு காகிதம் சலசலத்தால்கூட உடலும் மனமும் ஒருங்கே நடுங்கும். மனிதனின் குணக்கேடு காரணமாக மனிதனுக்கு ஏற்பட்ட ஒரு விந்தையான நிலை இது. இரவு முழுவதும் வீடுகளிளெல்லாம் ஜகஜ்ஜோதியாக விளக்குகளை எரித்த வண்ணம் அனைவரும் ஒரே இடத்தில் கூடி உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்க மாட்டோமா என்று தோன்றும்.

முதல் நாலைந்து நாட்களுக்கு இப்படி எல்லோரும் அவரவர் வீட்டுக்குள் அடைந்து கிடந்து கிலியை வளர்த்துக்கொண்ட பிறகு தான் அங்கங்கே ஊர்க்காவல்படை அமைக்கும் யோசனை வந்தது. இதன்படி காலனியின் எங்கள் பகுதியிலும் படை அமைத்துக் கொண்டோம். முறை வைத்து 'ட்யூடி' பார்ப்பதற்கேற்றவாறு படையை மூன்று பிரிவுகளாகப் பிரித்துக்கொண்டோம். ஒவ்வொரு பிரிவிலும் பத்துப் பதினைந்து இளைஞர்கள்; ஒவ்வொருவர் கைக்கும் ஒரு பெரிய தடிக்கம்பு. ஆனல் தடிக்கம்பிலிருந்து மனத்துக்குள் தைரியம் பாய்ந்துவிடுமா? தடிக்கம்புக்கும் மனத்துக்கும் தொடர்பில்லாததால் உடலோடு கம்பும் சேர்ந்து நடுங்கினதுதான் மிச்சம். இருந்தாலும் நாலு நாலு பேராகச் சேர்ந்து ரோந்து போகும்போது அவ்வளவு பயம் இருக்காது. இரவு பத்து மணிமுதல் மறுநாள் காலை ஐந்து மணிவரை காவல் ட்யூடி. ஒவ்வொருவருக்கும் வாரம் இரண்டு முறைதான் இந்தப் பொறுப்பு வருமாதலால் எல்லோரும் அதை உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டார்கள்.

இவ்வாறு எழுந்த வீரர் படையின் ஓர் அணி அன்றிரவு இரண்டு மணியளவில் ரோந்து சுற்றிக் கொண்டிருந்தபோதுதான், துவக்கத்தில் குறிப்பிட்ட மயிர்க்கூச்செறியும் அனுபவம் ஏற்பட்டது. அந்த அணியில் நானும் இருந்தேன்.

புதர் மண்டிக்கிடந்த மைதானம் நாங்கள் நின்றிருந்த இலக்கிலிருந்து கிட்டத்தட்ட நூறு கஜ

தூரத்திலிருந்தது. தில்லி நகரத்து வீதி விளக்குகளில் அடங்கியிருந்த பளிச்சென்ற இருட்டை நம்பிக் கொண்டுதான் கலகக்காரர்கள் அந்தப் புதர்களில் மண்டிக் கிடந்தார்கள்போலும்! குனிந்தவாறு அவர்கள் பதுங்கி பதுங்கி நகர்ந்ததை முதலில் நாங்கள் நாலு பேர்தான் கண்டுபிடித்தோம். இந்த நாலுபேர்மட்டும் முன்னேறி சென்று பகைவரைத் தாக்கி அடி வாங்கிக்கொண்டு ஓ வென்று அலறியவாறு பின்வாங்கி ஓடி வருவதில் என்ன பிரயோசனம்? அதனால் ஒன்று செய்தோம். எங்களில் இரண்டுபேர் அங்கேயே மறைவில் நின்றவாறு கலகக்காரர் களைக் கண்காணித்துக் கொண்டிருப்பது, பாக்கி இரண்டு பேரும் விடுவிடென்றுபோய், ஊர்க்காவல் படையின் அன்றைய அணியைச் சேர்ந்த மற்ற பன்னிரண்டு ஆட்களையும் அங்கங்கேயிருந்து இந்த இலக்குக்கு கொண்டு சேர்ப்பது என்று தீர்மானித்தோம்.

பகைவருக்கு அருகாமையில் நின்று, அனாவசியமாக குண்டுக்கு இலக்காகி உயிரைவிட்டு ஒன்றுக்கும் உபயோகமில்லாமல் மறைந்து போவதைக்காட்டிலும், நம் தரப்புக்கு மேற்கொண்டு ஆட்களைக் கொண்டுசேர்த்து வலுவூட்டுவதில் தான் எனக்கு அதிக நம்பிக்கையுண்டு. ஆகவே நானும் இன்னொருவனுமாகப் பரபரப்புடன் புறப்பட்டுச் சென்று அங்கங்கே வீணாக ரோந்து சுற்றிக்கொண்டிருந்த ஆட்களையெல்லாம் அழைத்து வந்தோம். எங்கள் கூட்டத்தில் எங்களுக்குப் பழக்கமான இரண்டு முகங்கள் சட்டென தென்படவே உற்றுப் பார்த்தோம். அட பாவி! எங்கள் ரோந்து இலக்கில் நாங்கள் நிறுத்திவிட்டு வந்திருந்த இரண்டு 'தொத்தல்' பயல்களும் பயந்து நடுங்கிக் கொண்டு கும்பலில்வந்து சேர்ந்திருந்தார்கள். கலகக்காரர்கள் இந்தச் சமயம் பார்த்து ஓடிவிட்டிருந்தால் என்ன செய்வது?

காலை எட்டிப்போட்டு நடந்து—அதேசமயம் எல்லோரும் முதல் இலக்குக்கு வந்து சேர்ந்தோம். அங்கேவந்து மறைவிலிருந்தவாறு மைதானத்தைப் பார்த்த பிறகு தான் எங்களுக்கு மூச்சுவந்தது. கலகக்காரர்கள் மைதானத்தில் தான் இன்னமும் பதுங்கிக் கிடந்தார்கள். எங்கள் அணியைச் சேர்ந்த மற்றவர்கள், நாங்கள் காட்டிய வெள்ளை உருவங்களைக் கண்டு வெலவெலத்துப் போய்விட்டார்கள். ஒருத்தன், குரலில்லாத புகைச்சலுடன், மைதானத்தில் தெரிந்த வெள்ளை உருவங்களை எண்ணிமுடித்து "முப்பத்தைந்து" என்று அறிவித்தான். உடனே இன்னொருவன் "நம் கண்ணுக்குத் தெரிவதுமட்டும் முப்பத்தைந்து என்றால். தெரியாதது எத்தனையோ!" என்று சொல்லி எங்களைச் சிந்திக்கவைத்தான்.

மைதானத்துக்கும் எங்களுக்கும் நூறுகஜ தூரம் இருந்தும், எங்கள் பேச்சுக்குரல் பகைவரில் யாருக்கும் கேட்டுவிடக்கூடாது என்பதற்காக எல்லோரும் இருட்டிலேயே நெடுந் தூரம் நகர்ந்துசென்று பேச ஆரம் பித்தோம். வந்திருந்த பேராபத்தை எப்படிச் சமாளிப்பது என்பது பெரும் பிரச்னையா யிருந்தது. எங்கள் மொத்தத்தொகை பதினாறு தான். எங்களில் முக்கால்வாசிப் பேருக்கு, சூரியனின் சாட்சியுடன் தான் தைரியமாயிருக்கத் தெரியும். இவர்களை வைத்துக்கொண்டு நேரடியாகப் போரில் குதிப்பது முட்டாள் தனம் என்பதை எல்லோரும் சட்டென ஒப்புக் கொண்டார்கள். அப்படியென்றால் வழியென்ன?

பத்து நிமிடநேரம் நடந்த நெடிய ஆலோசனைக்குப்பிறகு ஒரு முடிவு ஏற்பட்டது. அதன்படி, எங்களில் நாலுபேர் காலனியின் நாலாபக்கத் துக்கும் விரைந்துசென்று, படை யினர் அனைவரையும் தூக்கத்தி லிருந்து எழுப்பி அழைத்து வந்தார் கள். கிட்டத்தட்ட ஐம்பது பேர் கூடிவிட்டோம். காலனி வாசிகளில் மற்றெல்லோரும்—ஆண் பெண் அனைவரும்-குழந்தைகள் தவிர— விழித்துக் கொண்டு விட்டார் களாதலால், நடுவயதுக்காரர்கள் சிலரும் எங்களோடு வந்துசேர்ந்து கொண்டார்கள். பெண்களும் கிழவர்களும் தத்தம் வீடுகளிலேயே விழித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் யாரும் விளக்கேற்றக் கூடாது என்று நாங்கள் விதித் திருந்ததால் எல்லோரும் கும்மிருட் டிலேயே மனத்துக்குள் பிரார்த் தனை செய்தவாறு கண்முழித்தார் கள்.

எத்தனைபேர் கூடினாலும் துப்பாக்கியோ பீரங்கியோ விமானங்களோ இல்லாமல்நாங்கள் தெருவைக் கடந்து மைதானத் துக்குள் புகுந்து பகைவரை நேரடி யாகத் தாக்குவது இயலாத காரியம் என்பதை முதலிலேயே ஒப்புக் கொண்டுவிட்டோம். ஊர்க்காவல் படையினர் என்ற முறையில் விநியோகமாகியிருந்த தடிக்கம்பு கள் தாம் எங்கள் கைகளில் பிடிபட் டிருந்தன; வேறு ஆயுதங்கள் இல்லாத நிலையில், அசட்டுதைரியம் காட்டி வம்பை விலைக்கு வாங்கக் கூடாது என்று முடிவாயிற்று... கடைசியில் அந்த யோசனையைச் சொன்னது யார்என்பது இப்போது தெளிவாக நினைவில்லை. இருந் தாலும் அது ஒன்றுதான் சரியான யோசனையாக எல்லோருக்கும் படவே, உடனே அதை நிறை வேற்ற முற்பட்டோம்.

பாழ் மைதானத்துக்கு மிக அரு காமையில் ஒரு கட்டிடம் உண்டு. அதில் குடியிருந்தவர், கலவரம் காரணமாக கொஞ்ச நாட்களுக்கு எங்கள் பகுதியில் ஓர் உறவின ருடன்வந்து தங்கியிருந்தார். அந்த இரவில் எங்கள் கூட்டத்துடன் அவரும் நின்றுகொண்டிருந்தார்.

அவருடைய வீட்டுக்குச் செல்ல மைதானம் சம்பந்தப்படாத வழி ஒன்று உண்டு. மைதானத்தில் இருப்பவர் எவருக்கும் தெரியாமல் வேறு பக்கமாக அந்த வழியில் அவ் வீட்டை அடைந்துவிடலாம்.

புதிய யோசனையின்படி, நாலு நாலுபேராக நாங்களனைவரும் அந்த வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தோம். கட்டிட வேலைக்காக எங்கள் பகுதியில் குவிக்கப்பட்டிருந்த பெரும்பெரும் கற்கள் எங்கள் கைகளில் இருந்தன. வீட்டுக்கார நண்பர், மொட்டை மாடிக்குச்செல்லும் கதவைச் சத்தமின்றித் திறந்துவிட்டார். பேச்சு மூச்சில்லாமல் எல்லோரும் மொட்டை மாடியை அடைந்தோம்.

யாரும் எழுந்துநின்று மைதானத்தைப் பார்க்கக்கூடாது என்று எங்களுக்கு உத்திரவு. உட்கார்ந்தவாறே லேசாகத் தலையை நீட்டிப் பார்த்தால் கீழே ஒரே மைதானம் இருபது அடி தூரத்தில் தெரிந்தது; ஆகையால் எழுந்து நிற்க அவசியம் இல்லை. நாங்கள் என்ன செய்யவேண்டும் என்பதை எங்கள் தலைவர் தெளிவாகக் கூறியிருந்தார். எங்கள் காலனி விழித்துக்கொண்டிருந்தது என்பதைக் கலகக்காரர்களுக்கு உணர்த்தி விரட்ட அதைத்தவிர வேறு வழியில்லை என்று தோன்றியதால் நாங்கள் அதற்கு ஒப்புக்கொண்டிருந்தோம்.




WHITE HORSE SOAP
ஒயிட் ஹார்ஸ் சோப்
వైట్ హార్స్ సోప్

Grams: MURSOKS  Phone: Factory: 51388, Office: 53358

Regd. No. 141241

**WHITE HORSE SOAP**

*A Superfine Soap*
*For Silk and Linen Wash*

*Manufacturers*

**D. BANGARU CHETTY,**

NATIONAL INDUSTRIES
220. T. H. Road, Tondiarpet.
MADRAS-21.

கிழே மைதானத்தில் அந்தக் கும்பிருட்டிலும் புதர்களுக்கு நடுவே ஏராளமான கலகக்காரக் கள் ஒளிந்து ஒளிந்து நகர்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் குறிப்பாக ஒரே திசையை நோக்கி நகராமல் நாலாபக்கத்திலும் பரவிக் கொண்டிருந்தார்கள். எங்களுக்கு இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. இவர்களுடைய நோக்கம்தான் என்ன? புரியாமல் தவித்தோம்.

இந்தத் தவிப்பு நெடுநேரம் நீடிக்காமல் எங்கள் தலைவர்தான் காப்பாற்றினுர். "எல்லோரும் ரெடியாயிருங்கள்" என்று அடித் தொண்டையில் கூறிவிட்டு, அவர், இரண்டு விநாடிகள் டைம்கொடுத்த பின், திடீரென்று தம் கைகளி லிருந்த இரண்டு கற்களேயும் மைதானத்தை நோக்கி வீசினுர். உடனே நாங்களனைவரும்-சுமார் எழுபது பேரும்-ஆளுக்கு இரண்டு கற்களாக வீசினேம். கிட்டத்தட்ட நூற்றைம்பது பெருங்கற்கள் ஒரு மழையாகவே மைதானத்தில் பட படவென்று விழுந்தது எங்களுக்கு கேட்டது. நாங்கள் தலையைக் குனிந்துகொண்டோம்.

மறுகணம் சடசடவென்று ஆயிரம் கால்கள் ஓடும் சத்தம் கேட்டது. தொண்டைக் குழிவரை ஏறிவந்த எங்கள் இதயத்தை ஒரு பெரிய விழுங்காகவிழுங்கி உள்ளே தள்ளினேம். ஆனுல் கீழே ஓடிய கால்கள் சத்தம் ஏதோ மாதிரி தொனிக்கவே எங்கள் தலைவர் மெள்ள அரை அளவுக்கு எழுந்து நின்று மைதானத்தைப் பார்த்தார்.

"அட கடவுளே" என்று அவர் போட்ட கூச்சலில் நாங்களெல் லோரும் வெருண்டுபோய் "ஆ" வென்றலறினேம். தலைவர் ஏளனக்குரலில் "எழுந்து நின்னு பாரய்யா ஒங்க கலகக்காரங்களை" என்று கத்தவே நாங்கள் வியப் புடன் எழுந்துநின்று பார்த்தோம்.

இந்த இடத்திலிருந்துஉங்களுக்கு வேறு யாராவது கதை சொன்னல் எவ்வளவு நன்ருயிருக்கும்! ஆனுல் நான் ஆரம்பித்த கதையை நான் தான் சொல்லி முடிக்கவேண்டும். இருந்தாலும் சொல்ல வெட்கமா யிருக்கிறது. கீழே எங்கள் கற்களை முதுகிலோ மண்ணிலோ ஏற்று விட்டு ஓட்டம் பிடித்தது இரண்டு கால் கலகக்காரர்களல்ல; நாலுகால் மேய்ச்சல் மாடுகள்! அவைதான் திடீரென்று விழுந்த கல்மாரியால் பதறிப்போய் இப்போது நாலுகால் பாய்ச்சலில் ஓடிக்கொண்டிருந்தன.

தில்லியில் இரவு வேளையில் மாடு கள் நூற்றுக்கணக்கில் அங்கங்கே மேய்ந்து கொண்டிருக்கும் என்ற விவரம் ஒருபுறம் இருக்கட்டும், ஆனுல் இந்த தில்லி இருட்டு இருக் கிறதே, அதை என்ன செய்தாலும் குற்றமில்லை. தில்லி சூரியனுக்கு சூடு எப்படி அதிகமோ, அதுபோல் தில்லி இருட்டுக்கு இருட்டு ஜாஸ்தி. இப்படியா மாட்டுக்கும் மனிதனுக் கும் வித்தியாசம் தெரியாதபடி கண்ணை மறைக்கும்? ★

# உலா

எஸ். ரங்கஸ்வாமி

பல வகைப் பிரபந்தங்களில் 'உலா'வும் ஒன்று. இது தமிழர் கையாண்ட ஒருவித கவிமார்க்கம். எந்த ஒரு விஷயத்தையும் புலவனே நேர்முகமாகக் கூறுவது அல்வளவு அழகு பெருது. அதுவும் சொல்லப்படும் விஷயம் ஒரு வீரனது புகழோ, அரசனது பெருமையாகவோ இருப்பின் அதை விரித்துரைக்கும் போது புலவன் எவ்வளவுக் கெவ்வளவு திரைக்குப்பின் நின்று பேசுகிருனே அவ்வளவுக்கவ்வளவு நல்லது. இந்த உண்மையை நன்குணர்ந்திருந்தனர் நம் பெரியோர்கள். புறப்பொருளில் அரசன், தலைவன் இவர்களது வீரமும், அகப்பொருளில் தலைவன் தலைவி தாம் மட்டும் துய்த்துணரும் 'சொல்லத் தெரியாத' காதல் இன்பமே அந்நாளைய புலவனின் பாட்டிற்குப் பெரும்பான்மையும் பொருளாக அமைந்து வந்ததால், தலைவனையோ அரசனையோ நேர்முகமாகவன்றி மற்றவர் வாயிலாகப் புகழ்ந்துரைக்கவும் அல்லது தலைவன் தலைவியினது அகநிலையைக் கோலமிடவும் பலவித கலாரூபங்களைச் சிருஷ்டித்து வைத்தனர். அவ்வித கலாரூபங்களில் 'உலா'வும் ஒன்று.

"உலா" வென்பது பவனி. அதாவது தலைவன் ஊர்வலம் வரும் பொழுது பேதை முதல் பேரிளம் பெண் வரையில் உள்ள எழுபருவ மகளிரும் அவனைக் கண்டு காமுற்றதாகப் பாடப்படுவது. இவ்வாறு காமுற்ற மகளிரது வாக்கும், உணர்ச்சிகளுமே தலைவனது குண விசேஷங்களை எடுத்துரைப்பனவாக விருக்கும்.

உலாவின் அமைப்பு இரண்டு எளிய பகுதிகளாகப் பிரிகிறது. பாட்டுடைத் தலைவனின் கீர்த்தி, வீரம், அவன் நீராடுதல், அலங்கரித்துக் கொள்ளுதல், பின் தனக்குரிய வாகனங்களில் ஊர்வலம் வருதல், அவனைச் சுற்றிலும் அவனுடன் செல்வோர்களது வரலாறு, பலவகை மகளிர் மன்னனைத் தரிசிப்பதும், காமுறுதலும் ஆகியவை முதற் பகுதியின் பாற்படும். உலா முழுவதுமே பாட்டுடைத் தலைவனின் கீர்த்தியைப் பாடினும், இம் முதற் பகுதியே—அதிலும் முதற்பாகமே—அவனுடைய வீரம், அவன் புரிந்த அரிய செயல்கள் போன்ற வரலாறுகளையும் இதர புற நிகழ்ச்சிகளையும் எடுத்துரைக்கப் பொருத்தமான இடமாக அமைகிறது. உதாரணமாக, குலோத்துங்க சோழனுலாவில் குலோத்துங்கன் திருச்சிற்

றம்பலத்திற்குச் செய்த திருப்பணிகளின் வரலாறுகளும், விக்கிரமசோழ னுலாவில் மன்னன் கங்க, ஈழ நாடுகளில் தன் ஆதிக்கத்தை நாட்டிய விஷயமும், இராசராசசோழனுலாவில் அவனது குறிப்பிடத்தக்கவைணவ புனருத்தாரணமும், குறிப்பிடப்பட்டாலும், இம்மூஉலாக்களிலுமே அரச ரது பட்டங்கள், கொடைகள் யாவும் முதலிலேயே கொடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

எப்படி முதற் பகுதியில் தலைதூக்கி நிற்பது புற வருணனையோ அதே போல இரண்டாம் அங்கம் முழுமையிலும், முதல் அங்கத்தின் இறுதியி லும் பிரதானமாக இருப்பது மன்னனின் அலங்கார வருணனையும், அதை விட அவனைத் தரிசிப்போரின் அக, புற நிலையுமே. இப்பகுதியில் முறையே, பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை பேரிளம்பெண் ஆகிய ஏழுவகை பருவ மகளிரது இயல்புகள், அவர்களது களியாட்டங்கள், அவர்கள் மன்னனைக் கண்ணுற்றதால் நேரும் விளைவு கள் இவை விரித்துரைக்கப்படும். இங்கு முக்கியத்துவம் அடைவது அக நிலையே.

இதிலிருந்து உலாவைக் கையாள முன்வரும் எந்தக் கவியும் புறப் பொருளை வரைதலில் மட்டுமன்றி அகநிலையைச் சித்திரிப்பதிலும் வல்லமை ஓருங்கே வாய்க்கப் பெற்றிருத்தல் வேண்டுமென்பது புலனுகிறது.

"பேசுமுலாவிற் பெதும்பை புலி" என்று போற்றப் பெற்றவர் கூத்தர். மாதர் நோக்கையும் அவரது வாக்கையும் ஒன்று சேர்த்துக் கூறுவது வழக்கம்—இவை இரண்டும் சிந்தையுள் நின்றளவில் இன்பம் பயக்கவல்ல இயல்பு காரணமாக, இத்தகைய பெருமை கொண்ட கூத்தர், உலாவை எப்படிக் கையாண்டார் என்று பார்ப்போம்.

"—மீதெலாம்
எண் கொண்ட தொண்ணூற்றின் மேலு மிருமூன்று
புண் கொண்ட வென்றிப் புரவலனும்"

என்றும்

"சென்னிப் புலியே றிருத்திக் கிரிதிரித்துப்
பொன்னிக் கரைகண்ட பூபதியும்"

என்றும் வீரனின் தீரத்தை முரசடித்த புலவனே—

"வருகின்ரு னென்று மணியணிகள் யாவும்
தருகென்ருள் வாங்கித் தரித்தாள்—விரிகோதை
சூடினுள் பைம்பொற் றுகிலுடுத்தாள் சந்தனச்சே
ருடினு(ள்) தன்பே ரணி யணிந்தாள்" (விக்ர. சோழனுலா)

என்று பாடி காதலன் வருகையை நோக்கிப் பதற்றமுறும் மங்கையுள்ளத் தையும் ஓவியம் தீட்டுகிருன்.

"முற்று முரணடக்கி மும்மடிப்போய்க் கல்யாணி
செற்ற தனியாண்மைச் சேவகனும்"

என்றும்

"பாடரவத் தென்னரங்க மேயாற்குப் பன் மணியால்
ஆடரவர் பாய லமைத் தோனும்"

என்றும் எவ்வளவு சுலபமாகச் சரித்திர நிகழ்ச்சிகளைக் கையாளுகின்ருனே, அதே எளிமையுடன்

"ஆனயோ தந்த முருகவே எல்லனிவன்
வேனில் வேள் கண்டீ ரென மெலிவார்—யானென்னும்
எண்ணுக் கிசைய வருமே யிவனென் பார்
கண்ணிற் கருணைக் கடலென் பார்"

என்று பெண்ணுள்ளம் கூறும் கதையையும் சொல்லுகிருர்.

உலாவிற்கு தங்கு தடையற்ற ஓட்டம் அவசியம். அது பல்வேறு பட்ட பொருள்களைக் கொண்ட செய்யுட்களின் வெறும் தொகுதியல்ல. தலைவனின் பிரதாபங்கள், பவனி வைபவம், மகளிர் மன்னன் அலங்காரம், பல பேர்களின் பலதிறப்பட்ட உணர்ச்சிகள் -இவைகளையே ஓர் உலா வரைந்தாலும் அதில் ஒரு விதத் தொடர்ச்சியும், தளராக் கவர்ச்சியும் அவசியம். ஊற்றுப் பெருக்கெடுத்தாற் போல் சொல், கருத்தும் பொங்கிப் புரண்டோட வேண்டும். இதையெல்லாம் நன்கு உணர்ந்திருந்த கூத்தர் பல யுக்திகளைப் பிரயோகிக்கிருர். பலமுறைகளைக் கையாளுகிருர். அவற்றில் ஒரிரண்டுடன் இங்கு திருப்தியடைய வேண்டியதுதான்.

ஓரிடத்திலேனும் முற்றுபெருது தொடர்ச்சியாகப் பாக்கள் செல்வதால் ஏற்படக்கூடிய சலிப்பைத் தவிர்க்க 'பன்னப் பன்ன' மொழியும் முறையைப் பிரயோகம் செய்கிருர்—

"எங்கோனே
மன்னனே மன்னர் பிரானே வரதோயனே
தென்னனே வானவனேச் செம்பியனே"

—இதெல்லாம்

யார்? எல்லாம் அந்தச் சோழனே. இத்த முறையிலேயே நடைமாற்றிக் கூறும்—

"தனியத் தனியத் தமரும் பிறரும்
பணியப் பணியப் பணிந்தனன்" (இராசராச. சோ. உலா)

என்பதும் பொருத்தமற்ற உதாரணமாகாது.

சுருண்டு சுருண்டெழுந்து கரையில் போய் மோதும் அலைகளை ஒக்கின்றது.

"ஆடாத தோகை யலராத புண்டரிகம்
பாடாத பிள்ளைப் பசுங்கிள்ளை—சூடத்
தளிராத சூதந் தழையாத வஞ்சி
குளிராத திங்கட் குழவி" (குலோ. சா. உலா)

போன்ற செய்யுட்களின் சந்தம். இத்தகைய சந்தம் படிப்போரின் இதயத்தையும் சுருட்டிச் சுருட்டித் தன்னுடன் எடுத்துச் செல்கிறது.

விரைந்து சுழலும் புறக்காட்சிகளை வரைய தங்கு தடையற்றுச் செல்லும் நடை எப்படி அவசியமோ அதுபோலவே அக நிலையைப் பிரதிபலிக்க புனல் நீரின் தெளிவும் தண்மையும் வேண்டும். இது எத்தகையதாய் இருத்தல் வேண்டும் என்று பார்க்கலாம்..... இராசராசனை உலாவின் போது காண்கிருள் பெதும்பை ஒருத்தி. அவனது அன்றைய அலங்காரம் அவள் கருத்தையழித்து விடுகிறது. கள் குடித்தாற் போல் வெறி தலைக் கேறுகிறது. உள்ளத்தில் ஓர் அளவிலா மகிழ்ச்சி, ஏன், பொங்கி வழியும் மகிழ்ச்சி என்றும் சொல்லாம். அது வெளிச் செய்கைகளால் வெளிப்பட்டுத்தானே ஆக வேண்டும்? என்ன செய்கிருள் அவள்?

"கற்றுடன்
அன்ன நடக்க நடந்தா ளருங்கிள்ளை
பின்ன ருடன்பேசப் பேசினுள் - இன்னிசையாழ்
பாடவதனுடனே பாடினுள் பைந்தோகை
ஆட வதனுடனே யாடினுள்"

With the compliments from:

★

Indian Detonators Limited,
HYDERABAD-18 (A.P.)

இதற்குள் தன் நினைவு அவளுக்கு வருகிறது. நாணமும் அதனுடனே பின் தொடர்கிறது—

—"கூடிய

நல்லிள மாளுேக்க நோக்கினு(ள்) நாணிரம்பி
முல்லை முகிழ்க்க நகை முகிழ்த்தாள்" (இராசராச சோழனுலா)

...இதுவரை பார்த்ததிலிருந்து 'உலா' எவ்வளவு அழகியதொரு கலாரூபம் என்பது விளங்கும். புறப்பொருளும், அகப்பொருளும் ஒன்றுடன் ஒன்று உறவாடி நிற்கும் இந்த தனிப்பட்ட கலாரூபம், ஒரு தலைவனின் வீரம், கீர்த்தி அழகு இவைபோன்ற புறப்பொருளை மறைமுகமாக இன்பம் பயக்கும் வகையில் எடுத்துரைக்க எவ்வளவு அனுகூலமானது என்பதும் தெரியப்படும். பண்டைப் புலவரிடையே ஒரு கவர்ச்சிகரமான கவிமார்க்கமாய் 'உலா' இருந்து வந்ததில் அதிசயமேதுமில்லை. இத்தகைய உலாக்களை கம்பராமாயணம், சீவகசிந்தாமணி போன்ற நூல்கள் தம்முள்ளே அமைத்து நலம்பெற பயன் படுத்திக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற் கூறியவற்றிலிருந்து 'உலா'விற்கு ஓர் அரசனே, வீரனேதான் தலைவனுக இருக்க முடியும் என்று எண்ணுதல் தவறு. அரசர்கள் வீரர்கள் மீதன்றி தெய்வங்கள் மீதும் ஆசிரியர்கள் மீதும், பேருபகாரிகள் மீதும் உலாக்கள் பாடப்பட்டுவந்திருக்கின்றன. சேரமான் பெருமான் நாயனுரின் 'ஆதியுலா'வும், தத்துவராயரின் 'வினேதனுலா'வும் இத்தகைய உலாக்களே.

'உலா'வின் பொதுவமைப்பு எடுத்துக் காட்டப்பட்டது. இதிலிருந்து உலாக்கள் யாவுமே ஒன்றைப்போல் மற்றொன்று அச்சடித்தாற்போல் உயிரற்றுக் காட்சியளிக்கும் என்று நினைக்கக் கூடாது. 'உலா'வில் மட்டுமன்றி, எல்லாக் கலாரூபங்களிலும் தமிழர் அதன் வரம்பைத் திட்டமாக நிர்ணயித்திருந்தனர். ஆனுல் புலவர்கள் தத்தம் ஆற்றலுக்கும் பொருளுக்கும் ஏற்ப சிற்சில மாறுதல்களை உண்டாக்கிக் கொள்வதே கவிமரபாய் இருந்துவந்தது. இத்தகைய மாறுதல்களே உலாக்கள் யாவும் ஒரேவகையான பொதுவமைப்பைப் பின்பற்றினும் சலிப்புத் தட்டாத சுவாரஸ்யமான அமைப்பைக்கொள்ள உதவின. ஒவ்வொரு கலாரூபத்திற்கும் அததன் அமைப்பைத் திட்டமாக நிர்ணயித்திருந்தது காரணமில்லாமலல்ல. வேறு இலக்கியங்களில் கலைஞனின் சுய ஆற்றலுக்கும் திருஷ்டிக்கும் விட்ட ரூப அமைதியைத் தமிழர் தமக்கென உறுதியாக்கிக் கொண்டனர்.

★

# இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு

வே. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்.

**வ**ருகின்ற 1968-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 3-ம் நாள் முதல் 10-நாள் வரை சென்னைத் திருநகரிலே நடைபெறவிருக்கும் உலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கைப் பற்றி நீங்கள் முன்னமேயே அறிந்திருக்கக் கூடும். களிப்புக் கடலிலே நன்மையெல்லாம் ஆழ்த்த இருக்கும் இக்கருத்தரங்கின் பொதுச்செயலாளர் என்னும் முறையிலே, நான் அதன் சிறப்பினை ஒரு சிறிது எடுத்துக் காட்ட விரும்புகின்றேன்,

2. சென்ற 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் கோலாலம்பூரிலே சீரும் சிறப்புமாக நடைபெற்ற முதலாவது தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு, தமிழர்களின் உள்ளங்களிலே இன்றும் ஒளிவீசிக்கொண்டுள்ளது. ஓயாது உழைத்துவரும் உலகத் தமிழாராய்ச்சிக் கழகம், மாட்சிமிக்க மலேசியா அரசின் அருந்துணை கொண்டு அம் முதல் மாநாட்டைச் செல்வனே நடத்தி முடித்த செய்தியெல்லாம் நாம் நன்கு அறிவோம், முதல் மாநாட்டில் முதன்மையான இடம்பெறும் பெருநோக்குடன், அன்றைய முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்களின் தலைமையிலே தமிழகத்திலிருந்து ஐம்பது பேர்களைக்கொண்ட பிரதிநிதிக்குழு கலந்து கொண்டது. இப்பெருங் குழுவைத் தமிழகத்தின் பண்பாட்டுப் படை என்றுகூடக் குறிப்பிடலாம். கோலாலம்பூரில் கூடிய உலகப் புலவர் கூட்டம், தமிழ் இலக்கியத்தின் பெருமையைத் தரணிக்கு எடுத்து உணர்த்தியது; அது மட்டுமல்லாமல், அங்கு நிகழ்த்தப்பெற்ற ஆராய்ச்சி உரைகளில், தமிழகத்தைப்பற்றி நமக்கு அன்றுவரை கிடைத்திராத அரிய சரித்திரக் குறிப்புகளெல்லாம் வந்து குவிந்தன. நம் அருந்தமிழ் மொழியின் திருந்திய சொற்கள், பிலிப்பைன், மலாயா முதலிய மொழிகளிலே கலந்து உறவாடுவதையும் கேட்டு மகிழ்ந்தோம். முன்னைய முதலமைச்சர், அம்மாநாட்டில் உரையாற்றிய போது, அடுத்த உலகத் தமிழாராய்ச்சிக் கருத்தரங்கைத் தமிழகத்திலே நடத்த வாரீரென விடுத்த அன்பழைப்பு ஏற்றுக் கொள்ளப்பெற்றது. இன்று நாம் இரண்டாவது கருத்தரங்கின் நுழைவாயிலிலே, பணியாற்ற விழைந்து நிற்கின்றோம்.

3. இரண்டாவது மாநாட்டை எண்ணும்போது உள்ளத்தின் உவகை துள்ளி எழுகின்றது. எத்தனையோ கனவுகள் தோன்றுகின்றன. அவை நனவுகளாகும் என்னும் நம்பிக்கை நமக்குண்டு. தமிழின் பெருமை

யும் தமிழன் பெருமையும் பழம்பெருமைகள் என எண்ணிய காலம் ஓடத் தொடங்கிவிட்டது. தமிழன் இன்று தலைநிமிர்ந்து வாழக் கற்றுக் கொண்டான். தொல்காப்பியத்தையும் திருக்குறளையும் சிலப்பதிகாரத்தையும் பெற்றுத் திகழும் தமிழன், தலைகுனிய வேண்டுவதில்லையே! ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எண்ணற்ற பெரும்புலவர்கள் தமிழகத்தில் வாழ்ந்தார்கள் எனக் கூறுவது பழம்பெருமையாக இருந்தாலும் ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர்கூட நம்மிடையே பெரும்புலவர்கள் வாழ்ந்து வந்தார்களென்பதை நாம் மறத்தல் இயலாது. தமிழன் இன்று தன் பெருமையை தானே உணர்ந்துகொண்டான். தமிழன் அன்று முச்சங்கங்களைக்கண்டான். அதன் பிறகு, உறங்கிய இடைக்காலம் போனபின், மீண்டும் சிறு சிறு சங்கங்களைக் கண்டான், இன்றோ உலகத் தமிழறிஞர் அனைவரையும் ஒன்று திரட்டும் அரும்பணியில் ஈடுபடக் கற்றுக் கொண்டான்!

4. உலகம் மிக விரிந்தது. ஆனால் தமிழ் நிலமோ சிறு பரப்பு. இப் பரந்துபட்ட உலகம் தமிழ்மொழியைப் போற்றக் காரணமென்ன? பிற நாட்டு நல்லறிஞரைத் தன்பால் ஈர்க்கும் ஆற்றலைத் தமிழன்னை எவ்வாறு பெற்றாள்? உலகிலுள்ள பெரும் பகுதிகளில் தங்கள் அரசியல் ஆணை செல்லத்தக்க வாய்ப்பினைப் பிற மொழிக்காரர்கள் பெற்றுள்ளார்கள். அத்தகைய வாய்ப்பு தமிழனுக்கு இல்லை. இருந்தும் தமிழைப் பிறநாட்டார் விரும்பிக் கற்கின்றார்கள்! ஏன்? தமிழின் தொன்மைக்காகவும் வளத்திற்காகவும் பிறநாட்டார் தமிழைப் பயில்கின்றார்கள் என்று சொன்னால், இக் கூற்று ஓரளவே பொருந்தும். ஆனால் உண்மையான காரணமாகவும் ஒரே ஒரு காரணமாகவும் விளங்குவது தமிழன்னை பெற்றுள்ள தனித்த இனிமையேயாகும்; இனிமைக்கெல்லாம் இனிமையாக விளங்குவது தமிழ்மொழி. தேனருந்த வண்டுகள் வலம் வருதல் போல், உலகத் தமிழறிஞர்கள் வருகின்ற ஜனவரியில் வளமார் சென்னையில் வந்து கூடுவார்கள்.

5. இரண்டாவது மாநாட்டின் வேலைகள் விரைந்து நடைபெற்று வருகின்றன. மாநாட்டு வேலைகளை மேற்கொள்ள செயற்குழுவும் ஏனைய குழுக்களும் அமைக்கப்பெற்றுள்ளன. மாநில முதலமைச்சர் மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள் செயற்குழுவின் தலைவராக விளங்குகின்றார். கல்வி அமைச்சர் மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் துணைத் தலைவர்களில் ஒருவராகத் திகழ்கின்றார். உலகத் தமிழாராய்ச்சிக் கழகமும் தமிழக அரசும் இணைந்து இம்மாநாட்டை அமைத்து வருகின்றார்கள். தமிழ்மொழியைத் தன் மூச்சாகக் கொண்டுள்ள தமிழகஅரசின் அருந்துணை இருக்கும்போது, மாநாடு வெற்றிநடை போடும் என்பது திண்ணம். அரசு அளிக்கும் நிதியுதவி ஒருபுறமிருக்க, அருந்தமிழ் மக்களும் அள்ளி அள்ளித் தருவார்களென்றும் நம்பிக்கை கொண்டுள்ளோம். மாநாட்டுச் செலவுகளுக்கு ஏறக்குறைய பத்து இலட்சம் ரூபாய் தேவையாகும். தமிழர்கள் எங்கிருந்தாலும் மாநாட்டு அலுவலக முகவரியை** நோக்கிப் பொற்காசுகளை வீசுவார்களென நம்புகின்றோம்!

** 27—A சௌத்ரி காலனி, சென்னை-34.

6. உலகிலுள்ள எல்லாப் பல்கலைக்கழகங்களுக்கும் அழைப்பு அனுப்பியுள்ளோம். தமிழ் கற்றுத் தமிழ்போற்றிவரும் பேரறிஞர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளோம். ஏறக்குறைய இருபத்தைந்து அயல் நாடுகளிலிருந்து இருநூறு பிரதிநிதிகளுக்குமேல் இம் மாநாட்டில் பங்கு கொள்வார்களென எதிர்நோக்குகின்றோம். மாநாடு எனப் பத்திரிகைகள் பொதுவாகக் குறிப்பிட்டாலும், அஃதொரு ஆராய்ச்சிக் கருத்தரங்காகத் தான் விளங்கும். ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் பல்வேறு நாட்டறிஞர்களும் படித்துக்காட்டுவார்கள். இலக்கியக் கலையில் மட்டும்தான் பழந்தமிழறிஞர்கள் கருத்துச் செலுத்தினார்கள் என்ற தவறான எண்ணம் பரவியுள்ளது. இசை, நாடகம், கல்வெட்டு, கட்டடம், தத்துவம், சமயம், மருந்து, நீர்ப்பாசனம், பொறியியல் ஆகியகலைகளிலும் தமிழர்கள் தங்கள்பங்கினைச் செலுத்தியுள்ளார்கள். இவை குறித்தெல்லாம் ஆராய்ச்சிக் கட்டுரைகள், தக்கவர்களால் படிக்கப்பெறும். தென்கிழக்கு ஆசியாவிலே, தமிழர்கள் பண்பாட்டுத் தூதுவர்களாக விளங்கிய செய்தியெல்லாம் தெரிவிக்கப் பெறும்.

---



தில்லித் தமிழ்ச் சங்கத்துக்கு 1947-ல் கல்கி விஜயம் செய்தார். திருவாட்டி ராஜலக்ஷ்மி ராகவன் (வலதுகோடி) அவ்வாண்டு தமிழ்ச் சங்கத்தின் தலைவராய் இருந்தார். இடது பக்கத்திலிருந்து நாலாவதாய் நிற்பவர் துவக்கக்காரியதரிசி, திரு. ஏ. வி. குப்புஸ்வாமி.

7. சென்னை நகரம் உலக அறிஞர்களுக்கு ஏற்கனவே அறிமுகமான எழில் நகரம். செயல்முறை மிகுந்த சென்னை நகரம். அது வரலாற்றுச் சிறப்புடைய பொன்னகரம். வள்ளுவர், வள்ளலார் போன்ற பேரொளிகள் வாழ்ந்து போற்றிய தொன்னகரம். ஞானத்தின் திருவுருவாம் ஞான சம்பந்தரின் பாடல்களைப் பெற்ற நன்னகரம். இத்தகைய பெருநகரிலே உலகப் பேரறிஞர்கள் கூடி, தமிழ்மொழியின் பெருமையை உலகுக்கு அறிவிக்கப் போகின்றார்கள். உள்ளத்தில் இன்ப அலை மோதி, எழுச்சி பெறுகின்றது. மாநாடு நடைபெறும் நாட்களிலே சென்னை நகரம் புதுப் பொலிவு பெற்று விழாக்கோலம் பூண்டு நிற்கும். வீடெல்லாம், வீதியெல்லாம் திருக்குறள் முழங்கும். இல்லங்களையெல்லாம் குறட்பாக்கள் எழுதப் பெற்ற அட்டைகள் அணி செய்யும். தொட்டனைத்தூறும் அறிவுக்கேணியான குறள், நம்பண்பாட்டை நமக்கு நினைவூட்டும். தோரணங்கள் வரிசை வரிசையாய்த் தொங்கும். இன்னிசை எங்கும் கேட்கும். சென்னை நகரின் நெஞ்சம் போன்ற 'மலைப்பாதை'யிலே (*Mount Road*) தமிழர்களின் அறிவுப்படை அணிவகுத்து உலா வரும். பிறநாட்டுப் பேரறிஞர் கண்ணுறக்கண்டு களிப்படைவர். பொருட்காட்சிகள், சித்திரக்காட்சிகள் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேலாகப் பண்பாட்டில் சிறந்து, உலகுக்கு அப்பண்பாட்டை வழங்கிய தமிழர்களின் வாழ்க்கை, தக்கவாறெல்லாம் படம்பிடித்துக் காட்டப்பெறும். இவற்றிற்கெல்லாம் மேலாக, நம் அருமை முதலமைச்சர் மாண்புமிகு அண்ணாதுரை அவர்கள் அறிவித்துள்ளதுபோல, நெஞ்சை அள்ளும் காவிரிப்பூம்பட்டினத்தின் கவினுறு காட்சி மீண்டும் அமைத்துக்காட்டப்பெறும். ஒவ்வொரு மாலையும் தமிழர்களின் பல்வகைப்பட்ட கலைகளையும் பண்பாட்டையும் விளக்கக் கூடிய கலா நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட விருக்கின்றன. கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்து குவியும் விருந்தினர்கள் தமிழகத்தின் பழம்பெரும் சாதனைகளையும் நவீன முன்னேற்றங்களையும் நேரில் கண்டு களிக்க, கருத்தரங்கு முடிந்த பிறகு ஒரு வார காலத்திற்கு ஒரு பண்பாட்டுச் சுற்றுலா (**Cultural Tour**) வும் உருவாக்கப்பட்டு வருகிறது.

8. நம் பண்டைய பாவலர் கணியன் பூங்குன்றனார், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் உயர்ந்த கொள்கையை அருளிச்சென்றார். இக்கொள்கை கோலாலம்பூர் மாநாட்டில் கொஞ்சித் தவழ்ந்தது. சென்னை மாநாட்டிலும் இக்கொள்கையே ஆணிவேராய் அமையும் என்று சொல்லவும்வேண்டுமோ? சங்க காலமே நம் பொற்காலம். அப்பொற்காலம் மீண்டும் நம் ஆயுட்காலத்தில் தோன்றியுள்ளது! நம் நல்வினையை எண்ணி எண்ணி நாம் மகிழ்கின்றோம். உலகத் தமிழறிஞர் தமிழின்பம் துய்க்க ஓடி வருகின்ற மாநாட்டைப்பற்றி, நாம் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே!



# தில்லித் தமிழர்களும் கோவில்களும்

டி. ஜி. அனந்தஸ்வாமி

## அன்றும்—இன்றும்

தில்லியில் தமிழர்கள் ஐம்பது வருஷகாலமாக வாழ்ந்து வருகிருர்கள். நான் 1923-ல் ஒரு சர்க்கார் அலுவலகத்தில் சேர்ந்தபோது, ஸிம்லாவிலும் தில்லியிலுமாக ஐந்நூறு மதராஸிக் குடும்பங்களே இருந்தன. 1931 முதல் இந்தியா சர்க்கார் நடத்திய பரீட்சைகளின் பயனாக ஆண்டுதோறும் நூறு குடும்பங்கள் சேர்ந்தன. 1939–ல் இரண்டாவது உலகப்போர் ஆரம்பித்ததுமுதல் மதராஸிகள் கூட்டமும் அதிகரித்தது. மதராஸிகள் என்ருல் பொதுவாகத் தென்னாட்டவர்களே. தமிழர், மலையாளிகள், தெலுங்கர், கர்நாடகர் எல்லோரையும் மதராஸியென்றே அந்த ஊர் ஜனங்கள் கூப்பிடுவார்கள். சுதந்திரம் வந்தது, லாஹூரும், கராச்சியும் பாகிஸ்தான் பங்கில் போயின. அந்த நகரங்களில் இருந்தவர்களும் தில்லியில் வந்து சேர்ந்தார்கள். சுதந்திர இந்தியாவின் அரசாங்க நிறுவனங்கள் நாளுக்கொன்ருய்ப் பெருகின; தமிழர்களும் நாலாபக்கங்களிலிருந்து வந்து குவிந்தனர். இன்றைக்கு மதராஸிக் குடும்பங்கள் 30,000-க்குமேல் இருக்கும். இவர்களில் அரசாங்கச் சிப்பந்திகள் வெளிநாட்டுத் தூதுவர்கள் அலுவலக சிப்பந்திகள், வியாபாரிகள், தொழிலாளிகள் பலர் இருக்கின்றனர்.

அன்று ஸிம்லாவில் ஒரு மதராஸ் கிளப்பும் தில்லியில் ஒரு தென்னிந்திய அஸோஸியேஷனும் இருந்தன. இன்ருே பலப்பல நிறுவனங்கள்—ஒவ்வொரு மொழிக்கும் ஒன்று அல்லது இரண்டு நிறுவனங்கள். மலையாளிகள், தெலுங்கர், கன்னடியர் எல்லோரும் தம்தம் இனத்தாரையே அங்கத்தினர்களாகக் கொண்ட ஸ்தாபனங்களை ஏற்படுத்தி விட்டார்கள்.

அன்று இரண்டே பஜனைக்கூட்டத்தார்கள் இருந்தார்கள். ஒரு கட்சியினர் இராம பக்தர்கள்; மற்ருெரு கட்சியினர் கிருஷ்ண பக்தர்கள். ஒரு கூட்டத்தார் ராம நவமியும், சீதா கல்யாணமும் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். மற்ருெரு கூட்டத்தார் கிருஷ்ண ஜயந்தியும், ருக்மிணி கல்யாணமும், ராதா கல்யாணமும் கொண்டாடுவார்கள். இன்ருே பேட்டைதோறும் பஜனை ஸமாஜங்கள். பேட்டைதோறும் கல்யாணங்கள். அன்று சிறுசிறு குழாங்கள் நாமஸங்கீர்த்தனம் செய்வார்கள். இன்ருே பஜனைக்காரர்கள் எண்ணிலடங்காது. அன்று பாகவதர்கள் ஸந்தர்ப்பனை

களுக்கு முன்னூறு பேர்களுக்கதிகம் வாரார். இன்றோ ஆயிரத்துக்கு மேல் கூடுகிறார்கள். அரிசிப் பஞ்சமிருந்தாலும் உஞ்சவிருத்தி பண்ணிப் பிடி அரிசிமுதல் மூட்டை அரிசிவரை நிர்வாகஸ்தர்கள் சேர்த்துவிடுகிறார்கள். பாகவதர்கள் தவிர தரித்திர நாராயணர்களுக்கும் உணவு கிடைக்கிறது.

தமிழன் எங்கிருந்தாலும் தன் பழக்க வழக்கங்களையும் ஆசாரங்களையும் கைவிடாதிருப்பது நாடறிந்த விஷயம். அன்று ஸிம்லாவிலும் தில்லியிலும் கோயில்கள் இருந்தன—ஸிம்லாவில் வங்காளிகள் காளிகோயில் இருந்தது.—ஜாகோ மலைமேல் அனுமார்கோயில் இருந்தது. தில்லியில் கௌரிசங்கர் கோயிலும் புதுதில்லியில் மகாதேவர் கோயிலும் இர்வின் ரோட் சிவன் கோயிலும், ஹனுமார் கோயிலும் இருந்தன. அவைகள் இன்றும் இருக்கின்றன. எத்தனை கோவில்கள் இருந்தாலும் அவைகளில் தமிழ்நாட்டு வழக்கப்படி அர்ச்சனைகள், அபிஷேகங்கள் திருவிழாக்கள் இல்லையே என்று ஒரு குறை தமிழர்களுக்கு இருந்தது. இன்றுபோல் நினைவிருக்கிறது எனக்கு- இர்வின் ரோட் சிவன் கோயிலில் தமிழகத்துப் பார்ப்பனர்கள் சிவராத்திரியன்று இரவு முழுவதும் வேத கோஷத்துடன் சிவனுக்குக் குடங்குடமாய் நீரும், சந்தனமும், பாலும், தைலமும், விபூதியும் அபிஷேகம் செய்யத் தொடங்கியது. அன்றுமுதல் அந்தச் சிவனுருக்கு நல்லதசை ஏற்பட்டது. அவரை அண்டியிருக்கும் பூஜாரிகளுக்கும் அவர்கள் பைகள் நிறையப் பணமும் கிடைத்தது—இன்றும் கிடைக்கிறது.

நம்நாட்டுக் கோயில்கள்போல் தில்லியில் கட்டவேண்டும் என்று அந்நாளிலேயே பலருக்கு ஆசை இருந்திருக்கலாம். ஆனால் பணத்துக்கு எங்கே போவது என்று வாளா இருந்தனர் என்றே சொல்லவேண்டும்.

அன்னிய அரசாங்கத்தார் கோயிலும் தர்மசாலையும் கட்டக்கொடுத்த நிலத்தில் இன்று மந்திர் மார்க்கத்தில் நம் உயர்நிலைப் பள்ளியும் தென் இந்தியா கிளப்பும் பிரகாசிக்கின்றன. கோயில் கட்டும் சகாப்தம் ஆரம்பிக்கவேண்டுமென்று 1953-ல் ஈச்வரனுக்குத் தோன்றிற்றுப் போலும். ஒரு தென்னிந்திய தனவந்தர் மனத்தில் வித்தையூன்றினார். அவருடைய செலவில் பெருமுயற்சியாலும் அனேகம் தமிழர்களின் உதவியாலும் இர்வின் ரோட் சிவன் கோவில் பிராகாரத்தில் அவருடைய மூத்த மகனுக்கு ஒரு கோயில் எழுப்பப்பட்டது. சாத்திர விதிப்படி ஸ்தாபனமும் குடமுழுக்கும் சான்றோர்களால் செய்யப்பட்டது. அந்த விநாயகருக்குப் பக்தர்கள்மேல் கிருபையுண்டாயிற்று. தன்னைப்போல் மற்ற தெய்வங்களுக்கும் கோவில்கள் தில்லியில் உண்டாகவேண்டும், என்று நிச்சயித்தார். "தில்லியோ நாளுக்குநாள் விரிந்துகொண்டு வருகிறதே. என் சிறு கோயில்மட்டும் போதுமா—என் தேவிகளோடு பக்தர்கள் காணவேண்டாமோ" என்று முதலில் நினைத்திருக்கவேண்டும். அவர் ஆஸ்திகர்கள் மனத்தைக் கலக்கியிருக்க வேண்டும். அதன் பயன் தான் ஸரோஜினி நகரிலே ஸித்திதேவி, புத்திதேவியுடன் விநாயகர் வீற்றிருக்க ஒரு அழகான கோவில், 1963-ல் கட்டப்பட்டது. தமிழக மாநிலத்தில் உள்ள பெரிய தேவாலயங்களும், மடங்களும் பணத்தை



கற்பக விநாயகர் கோயில்

வாரி வழங்கினார்கள். கோயிலில் பூஜைகள், அபிஷேகங்கள், வேதம் ஓதுதல், தமிழ்ப்பாசுரம் பாடல் முதலியன ஒழுங்காய் நடக்கின்றன. வட நாட்டவர்களும் தரிசனத்துக்கு வருகிறார்கள், சம்ஸாரிட்: பிள்ளையார் தான் அவர்களுக்குப் பிடிக்கும்.



உத்தரஸ்வாமி மலை

போட்டியிடுவது மனிதர்களுக்குமட்டும் அல்ல தெய்வங்களுக்கும் இயற்கை என்றே சொல்லவேண்டும். "அண்ணா தில்லிக்குப் போனால் நானும் ஏன் போகக் கூடாது" என்று சுவாமி மலை ஸ்வாமிக்குத் தோன்றிற்று. "டெல்லி சலோ" என்று மயில்வாகனத்துக்கு ஆணையிட்டார். முருகனடியார் சபையொன்று முளைத்தது. நிதி திரட்டியது. அரசாங்கத்தினர் ஒரு குன்றை கொடுத்தார்கள். ஆகாய விமானத்தில் செல்பவர்க்கு அருள் செய்யவோ—பாலம் விமானக் கூடத்தருகே வேல் நாட்டக் கட்டளையிட்டார். "தமர்தமர்" என்ற குன்றே "உத்தரஸ்வாமி

மலை". அங்கு ஸ்கந்த சஷ்டி, கிருத்திகை முதலிய விசேஷ தினங்களில் ஊரெல்லாம் கூடுகிறது. பக்தர்கள் காவடி எடுக்கிறார்கள்; சிலருக்கு ஆவேசமும் வரும். 15 லக்ஷம் ரூபாய்ச் செலவில் ஒரு ஆலயம் கட்ட முயற்சிகள் நடக்கின்றன.

சிவனாருடைய மக்களிருவரும் தில்லிக்குப் போய்விட்டார்களே—நாம் மட்டும் தென்னாட்டிலேயே இருக்கலாமோ என்று வெங்கடேச்வரப் பெருமாளுக்கும் சீனிவாசப் பெருமாளுக்கும் தோன்றவே அவர்களும் ராம கிருஷ்ணாபுரம் பேட்டையில் இடங்கள் பிடித்துவிட்டார்கள். மத்திய அரசாங்கம் வெகு முன்யோசனையோடு ஸரோஜினி நகர், வினயநகர், நேதாஜி நகர் என்ற மாதிரி "ராமகிருஷ்ணா நகர்" என்று பெயரிடாமல் "ராமகிருஷ்ணாபுரம்" என்று பேட்டைக்குப் பெயர்வைத்ததை மெச்ச வேண்டும்.

வித்யா தேவியில்லாவிட்டால் மனிதர்கள் புத்தி மழுங்கிவிடுமே குருவில்லாவிட்டால் அக்ஞானம் தொலையாதே என்று ஜகத்குரு சிருங்கேரி சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அண்மையில் ஸ்ரீசாரதாம்பாளுக்கும் ஆதி சங்கரருக்கும் எழுப்பப்பட்ட கோயிலுக்குக் கும்பாபிஷேகம் செய்வித்தார்கள்.

இன்னும் உடுப்பி ஸ்ரீகிருஷ்ணனுக்கு ஒரு கோயிலும் தில்லியிலே கட்டப்போகிறார்கள்.

சபரிமலை ஐயப்பன்—ஹரிஹர புத்திரன். "எனக்கு மலையில்லாவிட்டாலும் குற்றமில்லை என்னை அன்புடன் விளித்து நமஸ்கரித்து அன்னதானம் செய்யும் பக்தர்களிருக்கிற இடம்தான் வேண்டும்" என்று சொல்லி பக்தர்களை ஊக்குவிக்கிறார். "அவருக்கும் ஒரு கோயில் எழுப்புவோம்" என்று தில்லித் தமிழர்களும் மலையாளிகளும் சொல்லுகிறார்கள். அரசாங்கமோ கோயில்களுக்கு இடமில்லை என்று சொல்வதில்லை. தில்லி ராமகிருஷ்ணாபுரம் உத்தர காஞ்சீபுரமாய் மாறிவிடுமோ?

அடுத்த தலைமுறை தில்லித் தமிழர்கள் அங்குள்ள கோயில்களுக்கு ஸ்தல புராணங்கள் எழுதுவார்களென்றே தோன்றுகிறது. தற்காலம் அற்புதங்கள் நடக்கின்றன, கேட்ட வரங்களை தெய்வங்கள் கொடுக்கிறார்கள். பள்ளிப் பையன்கள் கற்பகவினாயகருக்குச் சிதறு தேங்காய் போடாமல், கொழுக்கட்டையே கொடுக்கிறார்கள். தேங்காய்விலை அவ்வளவு அதிகம்; நிறைய தலையில் குட்டிக்கொண்டு வினாயகரை மகிழ்ச்சிக்கிறார்கள். பக்தர்களோ பரவசமாய்ப் புகழ்பாடுகின்றார்கள். அப்படி பாடப்பட்ட கற்பகவினாயகர் பஞ்சரத்தினத்தையும் உத்தரஸ்வாமி மலைப்பதிகத்தையும் மகிழ்ச்சியுடன் அடுத்துவரும் பக்கங்களில் படிக்கலாம்.



## புது தில்லி : சரோஜனி நகர் அமர்ந்த

## கற்பக விநாயகர் பஞ்ச ரத்தினம்

(13—2—66-ல் சன்னிதியில் அரங்கேற்றியது)

காசிவாசி. நடேசன்

★

"கலைஞன் வருக ! திருமாளும்
கலைமா தவளும் கழல்பணியும்
தலைவன் வருக ! பாரதத்தின்
தலைமை நகராம் தில்லிதனில்—,
உலைவில் புகழார் சரோஜாநகர்
ஓங்க ஒளிரும் ஒண்தளிவாழ்
மலைவில் ஞானக் கற்பகமே
வருக வருக வருகவே !" (1)

"எந்தை வருக ஏரம்பன்
இனிதே வருக ! எலியூர்ந்து
தொந்தி வயிறும் முறக்காதும்
துலங்கக் கருணை சுரந்துநடம்—
விந்தை யாகச் செயும்ஞான
விகடன் வருக ! விக்கினங்கள்
பந்தம் நீக்கு கணபதியே
பரிந்து வருக வருகவே !" (2)

"பூதன் வருக புவனமெலாம்
புரப்பான் வருக ! பொங்குகண
நாதன் வருக ! இடர்தீர்க்கும்
நல்லான் வருக ! நறைக்களிரும்
வேதன் வருக ! பிரணவத்துள்
மெய்யன் வருக ! விளங்குநிர்த்த
பாதன் வருக ! ஞானகண
பதியே வருக ! வருகவே !" (3)

"சாந்தன் வருக ! கணேசன் எனும்
சதுரன் வருக ! சக்திபெற்ற
வேந்தன் வருக ! முருகன்நின்று
வேண்ட வள்ளி தனைக்கூட்டும்
எர்ந்தல் வருக ! வக்ரதுண்டன்
இன்றே வருக ! இயல்ஆபத்
ஏந்தன் வருக சரோஜகண
பதியே வருக ! வருகவே !" (4)

"நேசன் வருக ! நேசிப்பார்
நினையு முன்னே துலங் கிதய
வாசன் வருக ! தில்லிநகர்
வளர்வான் வருக ! மாயவிக்ன
ராசன் வருக ! நடேசகவி
நறிய தமிழைக் காத்தருளும்
போசன் வருக ! கணபதியாம்
போதன் வருக ! வருகவே !" (5 )



# உத்தர சுவாமிமலைப் பதிகம்

"துறைவன்"

★

கோல மாமயில் ஊர்ந்திடும் குழகன் குணம்நல்லார்
வேல வாமுரு காவெனப் பரவும் வியன்சோதி
சீல நான்மறைச் செம்பொருள் ஒன்றாய்த் திரள்ஞான
பால னார்உறை உத்தரச்சுவாமிப் பசுங்குன்றே (1)

துன்னவர் அஞ்சும் இந்திரப் பிரத்தத் சொல்லூருள்
பொன்னொளிர் திருமால் மந்திரம் வடபால் பொலிவெய்தத்
தென்னகச் செல்வர் போற்றிடுங் குமரச் செவ்வேள்தான்
மன்னியக் கோயில் உத்தரச்சுவாமி மாண்குன்றே (2)

கறுவிய அவுணர் விறல்கெடுத் தருளும் கடிவேலன்
நறுமலர் மார்பன் பழமுதிர் சோலை நன்னாடன்
குறுமுனி செய்யும் தமிழொலி அமுதங் கொண்டாடும்
அறுமுக னமரும் உத்தரச்சுவாமிச் செழுங்குன்றே (3)

அருமை நாச்சியர் இருவரை யுகந்த அருள்வள்ளல்
கரும வெற்பினைக் காய்ந்திடும் அற்புதக் கந்தன்காண்!
பிரப னாதியர் தொழுதிடும் ஞானப் பிழம்பான
பரமன் வாழ்தரும் உத்தரச்சுவாமிப் பரங்குன்றே (4)

வள்ளி மணாளன் குஞ்சரி கேள்வன் மணவாளன்
தெள்ளிய ஞானப் பழமென வானோர் நிதமேத்தும்
பிள் யன், அடியவர் வெந்துயர் தீர்க்கும் பெருமான்தன்
புள்ளி மயூர உத்தரச்சுவாமிப் பூங்குன்றே (5)

கண்ணுக் கினியவன் கமழ்மலர் வேவ்கைக் கான்வள்ளிப்
பெண்ணுக் கினியவன், அடியவர் உள்ளம் பித்தேற்றும்
பிண்ணவர் தலைவன், நம்தம் திரா வினைதிரத்
தண்ணளி காட்டும் உத்தரச்சுவாமித் தடங்குன்றே (6)

செல்வர் இராம கிருட்டின புரத்தார் சிறப்பெய்த
மல்கும் வளநகர் மன்னிய மாந்தர் வாழ்வுயர
நல்வழி யருளும் நாயகன் முருகன் நலமெல்லாம்
பல்விதம் நல்கும் உத்தரச்சுவாமி எழிற்குன்றே (7)

திருப்பரங் குன்றும் சீரலை வாயும் சிந்திப்பார்
விருப்பெழும் ஏரகம் பழமுதிர் சோலை விரிசோதிப்
பருப்பதத் தணிகை நல்லருள் பொங்கும் பழனிமலை
ஒருமித் துயர்ந்த உத்தரச்சுவாமி ஒண்குன்றே (8)

எங்கிருந் தாலும் பணியுநர் நெஞ்சில் இடையின்றித்
தங்கிடுங் குமரன் பன்னிரு தோளன் சண்முகனே
செங்கதிர் நீல வானிடை மெல்லச் சேர்ந்தாற்போல்
பொங்கிடும் அருளோன் உத்தரச்சுவாமிப் பைங்குன்றே (9)

தந்தையும் தாயும் உடன்பிறந் தோரும் தகவாளர்
பந்தமும் துணையும் நமக் வ ன்ன்றோ? பணிவார்தம்
சிந்தையில் நன்றாய் அமர்ந்து புகுந்து சுடரேற்றி
முந்தருள் புரிவான் உத்தரச்சுவாமி முதுகுன்றே (10)


## திருமண உதவி நற்பணி

(ஸ்மார்த்த பிராமணர்களுக்கு மட்டும்)

ஜாதக பரிவர்த்தனை, ஜாதகப் பொருத்தம் பார்க்க, திருமண ஏற்பாடு முதலிய உதவிகளுக்கு அணுகுக :

**டி. ஜி. அனந்தஸ்வாமி**

ரிஜிஸ்டர்டு டிரேட் மார்க் ஏஜண்ட்

38, ஐந்தாவது டிரஸ்ட் குறுக்குத் தெரு,
மந்தைவெளிப்பாக்கம் : : சென்னை—28.

தில்லி தமிழ்ச் சங்கத்திற்கு எங்கள் வாழ்த்துக்கள்

தி மேட்டூர் கெமிகல் அண்ட் இன்டஸ்டிரியல் கார்பொரேஷன் லிமிடெட்,
மேட்டூர் அணை ஆர். எஸ். செலம் ஜில்லா

உற்பத்தியாளர் : காஸ்டிக் சோடா, ஸ்திர பிளீச்சிங் பௌடர், குளோரின் திரவம், ஹைட்ரோ குளோரிக் அமிலம், பொடாசியம் குளோரேட், கால்சியம் குளோரைடு, வனஸ்பதி, சுத்திகரிக்கப்பட்ட தாவர எண்ணெய், சோப்பு வகைகள்.

★

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் :

சேஷஸாயி பிரதர்ஸ (பிரைவேட்) லிமிடெட்.,
திருச்சிராப்பள்ளி.

*தில்லி பிரதிநிதி :*
ரா. சக்கரவர்த்தி M.A., B.L.,
E. 3/1, ஜாண்டிவாலன் எக்ஸ்டென்ஷன்
நியூ லிங்க் ரோடு, தபாற்பெட்டி எண். 89,
புதுதில்லி-1,

*தொலைபேசி எண் : 568684* *தந்தி : "காமதேனு"*



ஹரிஜன ஆலயப் பிரவேசத்தின்போது
ஜே. சிவசண்முகம் பிள்ளையுடன் கல்கி.

# அரிசியா கோதுமையா . . . ?

**எஸ். சுப்பிரமணியன்**

"உங்களது உணவுப் பழக்கத்தை மாற்றிக் கொள்ளுங்கள்" என்ற அறிவுரைகளுக்கு இப்போது பஞ்ச மில்லை, சைவ உணவை விட்டு, அசைவ உணவை ருசித்துப் பாருங்க ளேன் என்று கூறும் தலைவர்கள் ஒரு புறம். ஏன் தானியங்களைத் தின்று தடுமாறுகிறீர்கள், காய்கனி களை உண்டு களிக்கலாமே என்று கூறும் தோழர்கள் ஒரு புறம். இன்னும் சிலர், நாட்டில் உள்ள அரிசிப் பற்றுக்குறையை மிகைப் படுத்தி, அரிசியைக்கட்டிக்கொண்டு அல்லல் படுவதைவிட, போஷாக்கு சக்தி சற்று அதிகம் கொண்டுள்ள கோதுமையை உபயோகியுங்கள், என்று கூறிகின்றனர்.

அரிசிக்கும் கோதுமைக்கும் நாட் டில் பற்றுக்குறை இருப்பதும், அரி சியைவிடக் கோதுமை சற்று அதிக அளவில் வெளியில் கிடைப்பதும், நாட்டில் பெரும்பான்மையோர் கோதுமையை உபயோகிப்பவர்க ளாக இருப்பதும் மறுக்கமுடியாத உண்மைகள். இருந்தாலும், அரி சியை உபயோகித்து வருபவர்களை கோதுமையை உபயோகியுங்கள் என்று கூறி, அவர்கள் பழக்கத்தை மாற்றுவதில் பல நிர்ப்பந்தங்கள் இருக்கின்றன, அவை யாவன : கோதுமையை உண்பதற்குத் தகுதி யாக்கத் தேவைப்படும் பக்குவங்கள் முதலில் கவனிக்கப்பட வேண்டும். கோதுமையை முதலில் மாவாக்கிய பிறகுதான் அந்த மாவை, ரொட்டி செய்வதற்கான பக்குவம் செய்ய முடியும். பின்னர், நெய் முதலியன சேர்க்கத் தேவைக்குத் தக்கபடி உணவாக்க வேண்டும். வட இந்திய சப்பாத்தி உணவு தென்னிந்தியா வில் அதிகம் அறியப்படாமலேயே இருப்பதும் ஆச்சரியம்தான், ஆனால், இதற்கு மாறாக, அரிசியை உண வாக்குவதற்கு எந்தவித சிரமத்தை யும் மேற்கொள்ள வேண்டியதில்லை. நீருடன் சேர்த்துக் கொதிக்க வைத் தால் அது சோறாகி விடுகிறது.

தற்காலத்தில் இந்தியாவின் எல் லாப் பகுதிகளிலும் ரொட்டி உப யோகிக்கப்பட்டு அது பிரபலமாகி யிருக்கிறது, இருந்தாலும், ஒரு வங் காளியோ அல்லது கேரள நண் பரோ, தனது அன்றாட உணவில் ஒரு பாகமாக ரொட்டியைச் சேர்த் துக் கொள்வதில் சிறிது தயக்கத் தைத்தான் காட்டுவார். அவர்களில் எவரைப் பொறுத்தமட்டிலும் ஒரு கவளம் சோற்றுக்கு ஒரு ரொட்டி ஈடாகாதுதான். தவிர, அரிசியைப் பயன்படுத்தி எவ்வளவு வகைக ளான உணவு வேண்டுமோ தயாரிக் கலாம். உணவைப் பலவகைகளாக்கி உண்ணும் பழக்கம் பெற்றவர்கள் அரிசிப் பற்றை விடுவதற்குத் தயங் கத்தான் தயங்குவார்கள். ரொட் டியை உபயோகிப்பதென்றால் முத லில் வெண்ணெய் வேண்டியிருக் கிறது. வெண்ணெய் விற்கிற விலை

யில் எல்லோரும் வெண்ணெயைத் தடவிய ரொட்டி சாப்பிட முடியுமா? சரி, மாமிச உணவுக்கு மாற்றுவது நல்லது என்று கூறுவதும் அதிக விலை காரணமாக, நடைமுறைக்கு படியாததாக இருக்கிறது. இந்தியாவின் தெற்கிலும் கிழக்கிலும் உள்ள அரிசிப் பழக்க உணவாளிகள், அரிசிப்பற்றை விடுவது அவ்வளவு எளிதல்ல. ஆனால் அதற்கு மாருக, கோதுமையை வழக்கமாக உபயோகிப்பவர்கள் கோதுமையின் மீது அவ்வளவு பற்றுதலை வைத்திருப்பதில்லை.

மேலை நாடுகளில்கூட, அரிசியை அளவோடுதான் உபயோகிக்கிருர்கள். அரிசியை உபயோகிக்க வேண்டியதற்குப் பதிலாக உருளைக் கிழங்கை உபயோகித்து அரிசிச் சக்திக்கு ஈடுசெய்கிருர்கள், ஆனால் அரிசி சாப்பிடுபவர்களோ, அரிசியை விடுவதற்கு இசையாததோடுகூட, குறிப்பிட்ட, தனக்குப் பழக்கமான, வகை அரிசியையே தொடர்ந்து பெற்று உண்பதில் மகிழ்ச்சி அடைகிருர்கள். உதாரணமாக, தாய்லாந்து மக்கள் விரும்பி உண்ணும் அரிசி வங்காளிகளிடமும், தென் ராஜயத்தினர்களிடமும் அவ்வளவு பிரபலமாக இருப்பதில்லை. தனக்குத் தேவையானதை விரும்பிப் பெறுவதில் ஆசிய மக்கள் காட்டும் அவ்வளவு தீவிரத்தை மேலை நாட்டு மக்கள் காட்டுவதில்லை என்றுதான் பொதுப்படையாகக் கூற வேண்டும்.

இவ் வழியில், ஒருவகை அரிசியிலிருந்து மற்ருெரு வகைக்கு மாற்றுங்கள் என்று கூறி, அதன் பலனைப் பெறுவதற்கே தொடர்ந்து பிரசாரம் தேவைப்படுகிறது. முன் காலத்தில் கல்கத்தாவிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் விளைந்த அரிசி வகை இங்கே இந்தியாவில் வேறு இடங்களில் விரும்பப்படாததால் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது என்று ஆங்கிலக் கலைக்களஞ்சியம் கூறுகிறது. 1943–ம் ஆண்டு பஞ்சத்தில்கூட வங்காளிகள் பர்மா அரிசியை விரும்பி ஏற்கவில்லையாம். வெளி மண்ணில் விளைந்த அரிசியை விட, வெறும் வயிற்ருேடு இருப்பதை வரவேற்கும் மனப்பான்மை, நகைக்கத் தக்கதாக இருந்தாலும் கூட, இது உண்மை. கசப்பானதே. இருப்னும், தற்போது நாம் இறக்குமதி செய்யும் அமெரிக்க அரிசி இந்தியாவில் எந்த பகுதியிலும் ஏற்கப்படுவதைப் பார்க்கும்போது நமக்கு சற்று ஆறுதல் ஏற்படுகிறது. ஆனால், வெளிநாட்டு இறக்குமதி அரிசி எத்தனை நாட்களுக்கு இங்கே உயிர்களைக் காப்பாற்றும்? எவ்வளவு அரிசி நமக்கு தொடர்ந்து கிடைத்துக்கொண்டிருக்கும்.

மேலை நாட்டவர்கள் அரிசியையோ அல்லது கோதுமையையோ அறவே உணவுப் பட்டியலிலிருந்து நீக்க முன்வரலாம். ஆனால் ஏழை நாட்டு மக்கள் நிச்சயம் முன் வர மாட்டார்கள். ஏழை நாட்டு மக்களுக்குத் தேவையான உணவுச் சத்துக்கள் அனைத்தும், கோதுமையைவிட அரிசியில் மூன்றில் இரண்டு பங்கு நிறைவாக விளங்குவதாக கலிபோர்னியா ஸ்டேன் போர்டு பல்கலைக் கழகம் ஆராய்ந்திருக்கிறது. உணவுச் சக்திகளில் ஒன்ருன புரதத்தைப் பெற காய்கறிகளையும், மாமிச உணவையும் உபயோகியுங்கள் என்று கூறுவதைக் கேட்கும்போது நன்ருகத்தான் இருக்கிறது, ஆனல், இவற்றை எங்கிருந்து பெறமுடியும்; கிடைத்தாலும் அவற்றின் விலையை எண்ணும்போதுதான் உற்சாகம் போய் விடுகிறதே?

அரசாங்கம் செய்து வரும் உணவுப் பழக்க மாற்ற பிரசாரம் நாளுக்கு நாள் பலமாகி வருகிறது. ஆனால், இத்தகைய பிரசாரங்கள், அவசியமான பொருள்களுக்கு விலைக்கட்டுப்பாடு இல்லாவிட்டால், பயனற்றவை ஆகிவிடும். அரிசி எளிய விலைக்குக் கிடைக்கிறது என்ற காரணத்தாலும் அரிசியை உபயோகிப்பவர்கள் மாற்றத்திற்குத் தயங்குகின்றனர். இதனாலேயே, தென் ராஜ்யங்களிலும் கிழக்கிலும், கோதுமை உணவு எதிர்பார்த்த அளவுக்கு பிரபலமாகவில்லை. கோதுமையை மாவாக்குவதற்கு முதலில் இயந்திரங்கள் வேண்டும். கிராமத் தொழிலாகத் திட்டமிட்டு கோதுமையை மாவாக்கி உபயோகிப்பதை விரிவு படுத்தினாலும், இந்தத் தொழில் தவிர்க்க முடியாத காரணங்களுக்காக மந்தமடைந்தால், உடனே அரிசி மீண்டும் தன் இடத்தைத் தானாகவே தேடிக் கொள்ளும்.

சிலோனிலும், மலேயாவிலும் அரிசிப் பற்றுக்குறையின் போது வேறு உணவு வகைகளைக் கொண்டு நிறைவு செய்தது போன்ற முறை எல்லா இடங்களுக்கும் பொருந்தாது. அதிக அளவுக்கு மக்கட்பெருக்கம் உள்ள இடங்களில் விளைச்சல் குறைவாகத்தான் இருக்கும். இதனால், சோளம் போன்ற தானிய வகைகள், உபரி விளைச்சல் உள்ள இடங்களிலிருந்துதான் பெற வேண்டி வருகிறது. பர்மாவிலும் தாய்லாந்திலும் குறைந்த விலையுள்ள தினை தானியவகைகள் உள்நாட்டு உபயோகத்திற்கு வைத்துக் கொள்ளப் பட்டு அதிக விலையான அரிசி ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. இதனால். அவர்களது உணவுப் பழக்கமும் மாறுபட்டது, ஆனால், கொரியாவிலோ, அங்குள்ள மக்கள் தினை தானிய வகைகளை உட்கொண்டு தாங்கள் பயிரிடும் அரிசியை அப்படியே ஏற்றுமதி செய்கிறார்கள். சிறிதுகாலம் கொரியாவை ஆண்டுவந்த ஜப்பானியர். கொரியாவில் அரிசியை அதிகம் உபயோகிப்பதை ஊக்குவிக்க தினை வகைகளின் மீது அதிக வரிகளை விதித்தனர். கோதுமையைப் பொருத்த மட்டில் பிரான்ஸும் கொரியாவின் கொள்கையையே பின்பற்றுகிறது.

நாம் இன்றைய நிலையை வைத்துத்தான் இவ்விஷயத்தைப் பற்றி ஆராயவேண்டும். இந்தியாவில் இப்போது அரிசியோ, கோதுமையோ எதுவும் உபரியாக இல்லை. இரண்டுமே இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. ஆகவே அரிசியா அல்லது கோதுமையா என்ற பிரச்னையே ஏதாவது ஒன்று அதிக அளவில் கிடைக்கும்போது தான் தோன்றமுடியும். அப்போது தான் ஒன்றிலிருந்து மற்றதற்கு மக்கள் தானாக மாறவும் முடியும். அதுவரை, கோதுமை அல்லது அரிசி இரண்டிலிருந்து ஏதாவது ஒன்றுக்கு அடியோடு மாறுவது என்பது பொருளற்ற ஓர் பேச்சு. இந்தியாவில்கூட அனேக மாநிலங்களில் அரிசி, கோதுமை இரண்டும் பயிரிடப்பட்டால்கூட, தினைவகைகளே பெரும்பாலும் உணவுக்கு ஏற்கப்படுகின்றன. இதனால், நாடு இன்று இருக்கும் உண்மைநிலையை மனத்தில் கொண்டு. அரிசியா அல்லது கோதுமையா என்ற முழக்கத்தை விட்டுவிட்டுத் தினை தானிய வகைகளை மேலும்மேலும் தமது உபயோகத்திற்குக் கொண்டுவர முயற்சி செய்வதுதான் வரவேற்கத் தக்கதோர் யோசனை. ★

With best compliments from

# TEKSONS PRIVATE LIMITED

*H.O.:* MODI CHAMBERS
FRENCH BRIDGE,
BOMBAY-4.

*Works:* P.O. Box 20
MAJIVADA,
THANA.

Largest manufacturers of Radiators, oil coolers
Inter Coolers, After Coolers, High
Pressure Hose, Low Pressure
and Brake Hoses.

**VISITING DELHI ?**

★

*THEN*
*REMEMBER US FOR*
Excellent Boarding and Lodging
SOUTH INDIAN STYLE
**The South Indian**
**Boarding House**
AND FOR
Clean, Wholesome, Delicious
North and South Indian Dishes

★

MODERN COFFEE HOUSE
*(Opp. TELEPHONE EXCHANGE)*
**CONNAUGHT CIRCUS,**
**NEW DELHI.**
Phone No. 48188 Grams: "SIBHOUSE"

★

**"MANZIL RESTAURANT"**

FOR

SOUTH INDIAN DISHES
132, SAROJINI MARKET,
*VINAY NAGAR*
**NEW DELHI-23.**

★



*A two-dimensional carving from Sanchi, showing human, animal and vegetable forms.*

Health is a precious gift from the bounty of Nature. And Science helps preserve this gift with modern drugs and pharmaceuticals.

MSD MERCK SHARP & DOHME OF INDIA LIMITED

CASMSD-18

## INDEX TO ADVERTISERS


| NAME | PAGE |
|---|---|
| Amrutanjan | 83 |
| A. B T. Parcel | 137 |
| Ambal Snuff | 114 |
| Arbor Acres | 53 |
| Arooran | 117 |
| Automobile Products | 111 |
| Bajaj Auto | 131 |
| Bliss & Cotton | 3 |
| Binny | 2nd Cover |
| Carborundum | 103 |
| Century Flour | 131 |
| Cynamid | 59 |
| Dalmia Cement | 3 |
| Escorts | 115 |
| Graphite | 75 |
| Guest, Keen, Williams | 124 |
| Harvey A. & F. | 101 |
| Hoechst | 3rd Cover |
| Hindustan Times | 2 |
| Hindustan Motors | 105 |
| I. C. I. | 157 |
| Indian Detonators | 175 |
| Jeewanlal | 2 |
| Madras Aluminium | 1 |
| Mangalore Beedi | 89 |
| Manzil Restaurant | 192 |
| Mettur Chemicals | 188 |
| Merck Sharp | 193 |
| Mitran | 51 |
| Nestles Products | 151 |
| Premier Automobiles | 160 |
| Rallies India | 157 |
| Sandoz | 148 |
| South India Viscose | 151 |
| South Indian Boarding | 192 |
| Sundaram Iyengar, T. V. | 144 |
| Suhrid Geigy | 93 |
| Swastik | 56 |
| Synbiotics | 93 |
| Tata Industries | 108 |
| Teksons | 192 |
| Unichem | 164 |
| Voltas | 85 |
| White Horse | 170 |
| Wyeth | 128 |
| Zenith | 69 |

# தில்லித் தமிழ்ச் சங்கம்

## 1967-ஆம் ஆண்டுச் செயற்குழு

★

| | |
|---|---|
| தலைவர்: | திரு. கே. வி. வெங்கடாசலம் |
| துணைத்தலைவர்: | ,, ஆர். சிங்காரசுந்தரம் |
| நிருவாகத் துணைத்தலைவர்: | ,, அ. வி. குப்புஸ்வாமி |
| பொதுச் செயலாளர்: | ,, ரா. விஸ்வநாதன் |
| இணைச் செயலாளர்: | ,, சி. என். ரங்கநாதன் |
| பொருளாளர்: | ,, ஆ. ந. நாகராசன் |
| வட்டாரச் செயலாளர்கள்: | ,, சு. ஜெயராம் (கரோல்பாக்) |
| | ,, பி. ஆர். வேங்கடகிரி (சரோஜினிநகர் |
| | ,, வீ. செ. கந்தசாமி (இராமகிருஷ்ணபுரம்) |
| | ,, பீ. பி. ஜீவன்ராவ் (லோதி காலனி) |
| | ,, ஆர். ஆர். சாரி (மோதிபாக்) |
| உறுப்பினர்கள்: | ,, சாலை இளந்திரையன் |
| | ,, எஸ். சீனிவாசன் |
| | ,, ஆர். எஸ். வெங்கடேசன் |
| | ,, வை. நாராயணசாமி |
| | ,, வீ. என். சுப்பராவ் |
| நூலக நிர்வாகிகள்: | ,, சேது கிருஷ்ணமூர்த்தி |
| | ,, எஸ். ரெங்கராசன் |
| | ,, ஏ. எஸ். ராஜகோபாலன் |
| | ,, டி. வி. ஜெயராம் |
| தணிக்கையாளர்கள்: | ,, எஸ். எஸ். வேங்கடராமன் |
| | ,, கே. கே. சுந்தரமூர்த்தி |
| 'சுடர்' நிர்வாக ஆசிரியர்: | ,, தி. கோ. அனந்தஸ்வாமி |

# நன்றி

நமது சுடரின் 16-வது மலர் இது. இதை அமரர் கல்கி (ரா. கிருஷ்ணமூர்த்தி) நினைவு மலராக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். பேராசிரியர், சிறுகதைச் சிற்பி, நாவலாசிரியர். திரு. கல்கியைப் பற்றி பல பெருமக்கள் எழுதியிருக்கிறார்கள். தலைநகரிலும் தமிழகத்திலும் உள்ள எழுத்தாளர்களின் படைப்புக்களையும் மலரில் சேர்த்திருக்கிறோம்.

விஷயதானம் செய்த பெரியோர்களுக்கெல்லாம் எங்கள் நன்றி உரித்தாயது.

மூவர்ண பிளாக் செய்து தமது செலவிலேயே அட்டையை அச்சடித்துக்கொடுத்த கல்கி அதிபர் திரு. டி. சதாசிவம் அவர்களுக்குச் சங்கம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு சங்கத்தின் அன்புகனிந்த நன்றியை மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வழக்கம்போல் பல நிறுவனங்கள், வியாபாரிகள், மலருக்கு விளம்பரங்கள் கொடுத்து உதவியிருக்கிறார்கள். அவர்களுக்கும் விளம்பரங்க சேகரித்துத்தந்த குழுவினர், திருவாளர். ரா. விசுவநாதன், எம். பா சுப்பிரமணியன், எஸ் ஜயராம் அவர்களுக்கும் சங்கத்தின் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

'சுடர்' ஆசிரியக் குழுவில் பணியாற்றிய திருவாளர்கள் ஏ. வி. குப்ப ஸ்வாமி, ஆர். எஸ். வெங்கடேசன், எஸ். சினிவாஸனுக்கும் சங்கத்தின் பாராட்டுகளை வெளியிடுகிறோம்.

மலரில் இடம்பெற்றுள்ள படங்கள் பலவற்றைக் கல்கியின் புதல்வர் கி. ராஜேந்திரன் அன்புடன் கொடுத்து உதவினர். அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

திருவாளர்கள் தி. கோ. அனந்தசுவாமியும், கே. எஸ். ஜம்புநாதனும் சுடருக்கான அச்சகவேலைகளைச் சென்னையில் வெகு ஊக்கத்துடன்செய்து உதவினார்கள். அவர்களுக்கும், மலரை அழகாக அச்சிட்டுத் தந்த மயிலாப்பூர் 'ஆர்ஜி' அச்சகத்தாருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

செயற்குழு

தில்லித் தமிழ்ச் சங்கம்

13826

# தமிழகம் மறக்கவில்லை

கல்கி அவர்களை வாழும்போது போற்றிப் பாராட்டிய தமிழர்கள் அவரை மறக்கவில்லை. அவர் மறைந்த சில வருஷங்களுக்குள்ளே காலஞ்சென்ற திரு. ஸி. ஆர். சினிவாசன் அவர்கள் தலைமையில் ஒரு குழு, கணிசமான நிதிதிரட்டிச் சென்னை சர்வகலாசாலையில் ஆண்டுதோறும் தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள் நடத்த ஏற்பாடு செய்தது.

சென்னை மியூஸிகல் அகாதெமிக்கு, திரு. டி. சதாசிவம் நிதி வழங்கி, ஆண்டுதோறும் சங்கீத விழாவின்போது 'கல்கி' நினைவாக சிறந்த இளம் வித்வாம்சினி ஒருவருக்குப் பரிசளிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்.

பாதசாரிகளாய்ப் பழனிமலை ஏறுபவர்கள் வழியில் இளைப்பாற கல்கி பெயரால் ஒரு படி மண்டபமும் திரு டி. சதாசிவம் கட்டியிருக்கிறார்.

---

Printed and Published by Sri T. G. Anantaswami for Delhi Tamil Sangam, New Delhi. Printed by Arjee Printers, 126, R.H. Road, Mylapore, Madras-4.

Pharmaceuticals
Veterinary Products
Pesticides



ECHST PHARMACEUTICALS LIMITED

ABAD • BOMBAY • CALCUTTA • DELHI • MADRAS • KATHMANDU (NEPAL)

# தில்லித் தமிழ்ச் சங்கம்

★ தனது வெற்றிப் பாதையில் இருபத்தொரு ஆண்டுகளைக் கடந்து இருபத்திரண்டாம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள இச்சங்கம், தலைநகர்த் தமிழர்களின் பிரதிநிதியாகத் தலை நிமிர்ந்து நிற்கிறது.

★ தமிழ்ப்பொழிவுகள், தமிழ்விழாக்கள், இலக்கிய வகுப்புக்கள் மற்ற மொழியினருக்குத் தமிழ் வகுப்பு முதலியவற்றைச் சிறப்பாக நடத்தியும் சிறந்த நூல்களை வெளியிட்டும் தலை நகரில் தமிழ்ப் பணிபுரிகிறது.

★ வட இந்தியாவிலேயே மிகப்பெரிய தமிழ் நூல்நிலையத்தையும் பலருக்குப் பயன்படும் சத்தியமூர்த்தி படிப்பகத்தையும் நடத்தி வருகிறது.

★ 1971-ல் நடைபெற இருக்கும் வெள்ளிவிழாவின்போது நிலையான தமிழ்ப்பணிகள் சிலவற்றைச் செய்யத் திட்டமிட்டு, அதற்குத் தமிழ்ப் பெருமக்களின் அன்பையும் ஆதரவையும் வேண்டி நிற்கிறது.



Wrapper Printed at Kalki Press, Madras - 10